
திருமந்திரக் கதைகள் – 8
கே.வி.குணசேகரம்

# என்னுரை

*இன்று யாழ்ப்பாணத்தில் விமர்சன உரையைப் பெறுவது மிகவும் சிரமம். திருமந்திரம் இரண்டாயிரம் பக்கங்களை (A4 தாளில்) உடையது. இதை வாசிக்கத் தயாராக யாரும் இல்லை. அதனால் விமர்சன உரை இல்லாமலே எனது ஆக்கங்கள் வெளியிடப்படுகின்றன. வெளியிடப்பட்ட பின்பும் விமர்சிப்பார் இல்லை. அணிந்துரை தருவோர் தாம் மிகமிக அறிவாளிகள் என்று நினைக்கின்றனர். நூல்களை வாசிப்போர் இல்லாத நாட்டில் அணிந்துரையை வாசிப்பது யார்? அணிந்துரை மூலம் குறைநிறைகளைக் கண்டு கொள்ளலாம். பின் அவற்றை நீக்கலாம். அதற்காகத்தான் விமர்சனங்களை எதிர்பார்த்தேன். நான் எழுதுபவை வேறு யாராலும் எழுதப்படாதவை. அதனால் இலட்சக்கணக்கானோர் ஆர்வத்துடன் வாசிக்கின்றனர்.*

*திருமந்திரம் மனித வாழ்வின் அனைத்தையும் கூறுகிறது. காமம், காதல், கரு உற்பத்தி, குழந்தைப்பேறு, நோய்கள், நோய் தீர்த்தல் பற்றிய தகவல்கள் யாவும் மிக விரிவாகக் கூறப்பட்டுள்ளன. திருமந்திரம் சமயநூல் அல்ல. சிவனைத் தலைவனாகக் கொண்டு உலகியலைக் கூறுகிறது. அதனால் நான் இன்றைய சமூகத்தில் நடைபெறுபவற்றையே எழுதி வருகிறேன். சமூகத்தில் நடைபெறும் விடயங்களைக் கதைகளாக எழுதியுள்ளேன். வாசித்துப் பயனடையுங்கள்.*

*வணக்கம்.*

**Nf. tp. FzNrfuk;**


திருமந்திரக் கதைகள் - 8
கே. வி. குணசேகரம்
P. Yalin

# திருமந்திரக் கதைகள்

## எட்டாந் தந்திரம்

### (சுப்பிராகமம்)

### உடலிற் பஞ்ச பேதம்

**2083 காயப்பை யொன்று சரக்குப் [1]பலவுள**
**மாயப்பை யொன்றுண்டு மற்றுமோர் பையுண்டு**
**காயப்பை குள்நின்ற கள்வன் புறப்பட்டால்**
**மாயப்பை மண்ணா மயங்கிய வாறே.**

"சிவனடியார்களே, உடம்பாகிய மெய்ப்பையினுள் உயிர் கலந்து நிற்கிறது. அக் காயப்பை ஒன்று. அதனுள்ளே ஊன் முதலாகிய சரக்குகள் பல உள்ளன. இதனை மாயையின் காரியம் என்ற பொருளில் மாயப்பை என்றும், நிலையில்லாதபை என்றும் கூறுவர். உடம்புள் இன்னொரு பை உண்டு. அது உடம்பின் உள்ளே உள்ளம் முதலியவற்றைக் கருவியாகக் கொண்டு, ஓர்த்துணரும் ஆருயிர் ஒன்று உண்டு. அவ்வுயிரை உடலாகக் கொண்டு, அவ்வுயிருக்கும் தோன்றாதவாறு கள்வன்போல மறைந்து நின்று இயைந்து இயக்கும் பேருயிராகிய சிவபெருமானும் உடம்பில் உள்ளான். அச் சிவபெருமான் தனக்கு உடலாகிய உயிரோடு இவ் உடம்பில் இருந்து வெளியேறினால் இம்மாயப்பை மண்ணோடு மண்ணாகக் கலந்து விடும்."

"சிவனடியார்களே, சிவன் கோவிலில் அன்று, பிரதோஷத்திற்கான பூசை நடைபெற்றது. பக்தர்கள் பலர் சிவனை வணங்கிக் கொண்டிருந்தனர். கதிரேசன் யாரும் எதிர்பாராதபடி மயங்கிவிட்டார். சிவனடியார்கள் பதைபதைத்தபடி அவரைத் தூக்கிகொண்டு வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப் புறப்பட்டனர். அப்போது கதிரேசன் சுய நினைவடைந்தார். தன்னைச் சுற்றிப் பலர் நிற்பதைக்கண்டு, மிகவும் அமைதியாகச் சொன்னார்; யாரும் பயப்படாதீர்கள். உடம்பு மாயப்பை. எப்போது வேண்டுமாலும் அப்பைக்குள் குடியிருக்கும் உயிரும், உயிரை உடலாகக் கொண்ட சிவபெருமானும் அம் மாயப்பையை விட்டு வெளியேறிவிடுவர். இதைப் பலரும் உணர்வதில்லை. உணர்ந்தவர்கள் கவலையோ, பயமோ கொள்ளவதில்லை. நான் சிவனின் அடிமை. அவன் என்னை விட்டு இப்போதைக்கு வெளியே செல்ல மாட்டான். நீங்கள் சென்று சிவனை வழிபடுங்கள் என்றவர் என்றார்" சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**2084. அத்தன் அமைத்த உடலிரு கூறினிற்**
**சுத்தம தாகிய சூக்குமஞ் சொல்லுங்காற்**
**சத்த பரிச உருவ ரசகந்தம்**
**புத்திமா னாங்காரம் புரியட்ட [2]காயமே.**

"சிவனடியார்களே, கதிரேசன் சுயநினைவை இழந்ததும், நல்லைநாதன் பதறிப்போனார். கடந்த சில நாட்களாகக் கதிரேசன் உணவைச் சரிவர உண்ணவில்லை. வைத்தியரிடம் செல்லலாமென்றால் அவர், சிவன் தான் வைத்தியநாதன் அவன் வைத்தியம் பார்ப்பான்" என்றார். அதனால் நல்லைநாதன் பதட்டப்பட்டார். அதை அறிந்த கதிரேசன் சொன்னார்; "நல்லை, பதட்டப்படாதை, பதட்டம்தான் எல்லாத் தவறான செயல்களுக்கும் மூலகாரணி. அன்னையோடு கூடிய அத்தனாகிய சிவபெருமான் அமைத்த மாயாகாரிய உடம்பு இருவகைப்படும். ஒன்று அனைத்துயிர்களுக்கும், கருவின்றித் திருவுள்ளத்தால் பிறப்பித்தளித்த பிறப்புடம்பு. இவ்வுடம்புக்குக் காரணம் மல ஆற்றல் மட்டும்தான். அம்மலவாற்றலை அகற்றும் பொருட்டுக் கண், கை முதலிய புறக்கருவிகளுடன், கூடிய புறத்தொழிலுக்கு ஏற்றவாறு, அமைத்துக் கொடுக்கும் உடம்பு சிறப்புடம்பாகும். பிறப்புடம்பை நுண்உடம்பென்றும் சிறப்புடம்பைப் பருவுடம்பென்றும் கூறுவர். நுண்உடம்பு வீடுபேறு அடைதல் அல்லது பேருழிக்காலம் வரைக்கும் அழியாதிருக்கும். பருவுடம்பு வினைப்போகத்திற்கேற்ப மாறி மாறி பிறந்து இறந்து செயலாற்றும். இதுவே தாய், தந்தையர் கருவாயிலாகத் தந்தது. இது அழிந்து மண்ணோடு மண்ணாவது. அப்படியான உடம்புக்காகக் கவலை கொள்ளாது அகவுடம்பை மேம்படுத்து. அது மேம்பட்டால் இவ்வாறான துன்பங்கள் வராது என்றவர்" என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**2085. எட்டினில் ஐந்தாகும் இந்திரி [1]யங்களும்**
**கட்டிய மூன்று கரணமு மாயிடும்**
**ஒட்டிய பாசம் உணர்வது வாகவே**
**கட்டி யவிழ்த்திடுங் கண்ணுதல் [2]காணுமே.**

"சிவனடியார்களே, நுண்ணுடம்பு ஓசை, உறு, ஒளி, சுவை, நாற்றம் எனும் பூத முதலாகிய தன்மாத்திரை ஐந்தும், இறுப்பு, எழுச்சி, மனம் மூன்றும் ஆகிய எட்டினுள் தன்மாத்திரை ஐந்தும், புலன் அல்லது இந்திரியம் என்று சொல்லப்படும். மனம், எழுச்சி, இறுப்பு ஆகிய மூன்றும் அகப்புறக்கலன் அல்லது அந்தக்கரணம் என்று சொல்லப்படும். இவை ஆருயிர்களைத் தொன்மையிலே ஒட்டியுள்ள ஆணவ ஆற்றல் அகலுவதற்கு ஆருயிருக்கு இயற்கையாக உள்ள உணர்வை எழுப்புதல் வேண்டும். அதன் பொருட்டு மேற்சொன்ன எட்டையும் கட்டு மலமாகச் சேர்த்தருளினன்கண்ணுதற் கடவுள். அக்கடவுளே மெய்யுணர்வு உண்டானவர்களின் எல்லாக் கட்டுக்களையும் அவிழ்த்து அகற்றியருளுவன்" என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**2086. இரதம் உதிரம் இறைச்சிதோல் மேதை**
**மருவிய வத்தி வழும்பொடு மச்சை**

**பரவிய சுக்கிலம் பாழாம் உபாதி**
**உருவம லாலுடல் ஒன்றென லாமே.**

“சிவனடியார்களே, சுயநினைவை இழந்த கதிரேசன் சுயநினைவடைந்து எழும்பினார். எனினும் அவரால் நடக்க முடியவில்லை. அதைக் கண்ட நல்லைநாதன் சொன்னான்; “கதிரேசு நீ பலவீனப்பட்டுவிட்டாய். எதற்கும் வைத்தியனைச் சந்திப்பது நல்லதென்றபோது, கதிரேசன் சொன்னார்;” எனக்கு எனது உடலின் நிலை தெரியும். வழக்கமாகக் காலயில் ஒரு கோப்பை பால் குடிப்பேன். இன்று குடிக்கவில்லை. அத்துடன் பிரதோஷமாகையால் காலை உணவையும் உண்ணவில்லை. இவ்வுடம்பு பாழாகிய மாயையின் காரியமாக வந்தது. இவ்வுடம்பு சாரம், செந்நீர், ஊண், கொழுப்பு, எலும்பு, மூளை, சுக்கிலம் ஆகிய ஏழு பொருட்களால் உருவானது. இந்த ஏழு பொருட்களின் கலப்புத்தான் உடல் என்று அறிந்து கொண்டால் இவ்வுடம்பை ஒரு பொருள் என்று யாரும் மதித்து மகிழ மாட்டார். இது தெரியாத நீ எனது உடம்பைப் பொன்னுடம்பு என்றா எண்ணுகிறாய். எப்போ, சிவன் அழைப்பான். அப்போது சென்று சிவனோடு கலந்திருப்பேன் என்று கவலைப்பட்டுக் கொண்டிருக்கின்றேன். நீ நெடுங்காலம் வாழ என்கிறாய் என்று சிரித்தார்” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**2087. ஆரே அறிவார் அடியின் பெருமையை**
**யாரே அறிவார் அங்கவர் நின்றது**
**யாரே அறிவார் அறுபத்தெட் டாக்கையை**
**யாரே அறிவார் அடிக்காவ லானதே.**

“சிவனடியார்களே, கதிரேசன் நல்லைநாதனுக்கும் சொன்னார்; “எதைப் பற்றியும் நான் கவலைப்படுவதில்லை. அவ்வாறிருக்க நீ ஏன் என்னைப்பற்றிக் கவலைப்படுகின்றாய். யாரைப்பற்றியும் யாரும் கவலை கொள்ளத் தேவையில்லை, ஏனென்றால் கவலைப்படுவதால் எதையும் சாதிக்க முடியாது. உடல்தான் பலவீனமடையும். உனக்குச் சொன்னாலும் புரியாது. நீயாயும் உணர்ந்து கொள்ள மாட்டாய். திருவருளின் துணையில்லாமல் திருவடியின் பெருமையை அறியும் தன்மை உள்ளவர் யார்? சிவபெருமான் உயிர்களுடன் கலப்பால் பிரிப்பின்றிக் கலந்து நிற்பவன். அவ்வாறு அவன் நிற்கும் தன்மையையும் உணர்பவர் யார்? நீ உணர்ந்திருந்தால் இவ்வாறு நடந்து கொள்வாயா? மாயையின் காரியத்தின் காரியத்தை அறுபதாகக் காண்கின்றனர். இவற்றின் விரிவைச் சிவனால் எழுதப்பட்ட சிவஞானவிளக்கத்தில் தெரிந்து கொள்ளலாம். உயிர்களின் சிறந்த உயர்ந்த உடல் சிவபெருமானது உடலாகும். இதுவே நடமாடும் கோவிலாகும்; இதை உணராதவர்கள் தான் உடலின் பெருமைகளைத் தெரியாது அல்லற்படுகின்றனர். உடலது பெருமைகளைத் தெரிந்தோர் அதைப்பற்றிச் சிறிதும் கவலைப்படமாட்டார்கள் என்றவர்” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

2088. **எண்சா ணளவால் எடுத்த வுடம்புக்குட்**
**கண்கால் உடலிற் கரக்கின்ற கைகளிற்**
**புண்கால் அறுபத்தெட் டாக்கை புணர்க்கின்ற**
**நண்பால் உடம்புதன் னாலுடம் பாமே.**

"சிவனடியார்களே, எறும்பும் தன்கையால் எண்சாண் என்று கூறும் முறைப்படி அவரவர் உடம்பு அவரவர் கையளவுக்கு எண் சாணேயாகும். அத்தகைய உடம்பில் அறிதற்கருவி செய்தற்கருவியாகிய கண், கால் முதலிய உறுப்புக்களும், இவ்வுறுப்புக்களின் ஊடே கலந்து நின்று தொழிற்படுகின்ற புலன்களாகிய இந்திரியங்களும், புறக்கருவிகள் அறுபதும், அகப்புறக்கருவிகள் எட்டும் ஆகிய அறுபத்தெட்டும் கூடியது தான் வாழ்க்கை. அகக்கருவியென்பது காலம், ஊழ், உழைப்பு, உணர்வு, விழைவு, மருள் பருவுடல், நுண்ணுடல், போர்வையுடல், முதலுடல் என்பன. இவ்வுடம்பு நான்கு வகைப்படும். அவை பருவிடல், நுண்ணுடல், போர்வையுடல், முதலுடல் என்பனவாகும். ஒரு புடையொப்பாக பழுவுடல் பூதம் ஐந்து, பொறி பத்து ஆகப் பதினைந்தாகும். நுண்ணுடல் புலனாகிய தன்மாத்திரை ஐந்து, மனம், எழுச்சி, இறுப்பு மூன்று ஆக எட்டாகும். போர்வையுடல் குணம், விழைவு, உணர்வு, உழைப்பு, ஊழ், ஊழி என்னும் ஆறாகும். முதலுடல் தூமாயை ஒன்றாகும்" என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

2089. **உடம்புகள்[1] நாற்கும் உயிராய சீவன்**
**ஒடுங்கும் பரனோ டொழியாப் பிரமங்**
**கடந்தொறு நின்ற கணக்கது காட்டி**
**அடங்கியே அற்றது ஆரறி வாரே.**

"சிவனடியார்களே, உடம்பு நால்வகைப்பட்டது. அதற்கு உயிராக விளங்குகிறது சீவன். அச்சீவன் எப்பொழுதும் பேருயிராகிய சிவனுடன் ஒடுங்கியிருக்கும். அச்சிவன் ஒருவனாக இருந்து எல்லா உயிர்களிலும் நிறைந்திருக்கிறான். இதற்கு உதாரணம் சூரியனது நிழலாகும். உடம்பும் அதன்கண் காணப்படும் உயிரும் கதிரவனின் நிழலான கடவுளும் முப்பொருளாக நிற்கும் முறைமையினைத் திருவருள் கைவரப் பெற்றவரே அறிவார். ஏனையோர் அறியமாட்டார்கள்"

"சிவனடியார்களே, கதிரேசன் நல்லைநாதனுக்குச் சொன்னார், "நல்லை உடம்பை இயக்குவது சீவனான உயிர். அதற்குள் ஒருவனான சிவன் கலந்திருப்பதால் எல்லாவற்றையும் அவன் சமமாகவே நினைக்கின்றான். வெளித்தோற்றத்தைப் பார். உருவ அமைப்பும், அங்கங்களின் அமைப்பும் ஒரு மாதியாகவே உள்ளன. உள்ளத்தில் குடிகொண்டிருக்கும் ஆணவம் தன்னையும் உணர வைப்பதில்லை. தன்னுள் இருக்கும் சிவனையும் உணர்ந்ததில்லை. அப்படியிருக்க எப்படி அது பிறரை உணரும், மதிக்கும். இதனால் தான் பிரச்சினைகள், துன்பங்கள், நோய்கள் என்பன உண்டாகின்றன.

மனதைக் கட்டுப்படுத்தியவனுக்கு எல்லாம் புரியும். மற்றவர்களது மனதையும் புரிய முடியும். இவை புரியாமையால் தான் எல்லோரும் துன்பப்படுகின்றனர். இவ்வளவு காலமும் என்னோடு கூட இருந்த உனக்கு என்னைப் புரிந்து கொள்ள முடியவில்லை என்றவர்" என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**2090. ஆறந்த மாகி நடுவுடன் கூடினால்**
**தேறிய மூவாறுஞ் சிக்கென் றிருந்திடும்**
**கூறுங் கலைகள் பதினெட்டுங் கூடியே**
**ஊறும் உடம்பை உயிருடம் பெண்ணுமே.**

"சிவனடியார்களே, வழிகள் ஆறு முடியினை உடையன. அவை எழுத்து, சொல், மறை, தத்துவமாகிய மெய்கள் (உடல்) உலகம் கலைகள் என்பனவாம். முன்னுள்ளவை மூன்றும் சொல்லுலகு என்றும், பின்னுள்ளவை மூன்றும் பொருள் உலகு என்றும் கூறப்படும். இவ்வழிகளின் நடுவாகத் திகழும் மெய்ப்பொருள் சிவபெருமான். அச்சிவத்துடன் கூடினால் பதினெட்டும் கூடினார் வழியொழுகும். கூடுதல் என்பது இடையறாது ஐந்தெழுத்தை ஓதுதலாகும். இது ஐந்து கலைகளை உடையது. அவை நீங்கல், நிலைப்பித்தல், நுகர்வித்தல், அமைதியாக்கல், அப்பாலாக்கல் என்பனவாகும். பதினெட்டென்பது வளிபத்தும் நுண்ணுடம்பு எட்டுமாகும். இவற்றுடன் நன்றாக ஊறிக் கலந்து புடைபெயரும். அவ்வுடம்புதான் உயிர் உடம்பாகும்" என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**2091. மெய்யினில் தூல மிகுத்த முகத்தையும்**
**பொய்யினிற் சூக்கம் பொருந்தும் உடலையுங்**
**கையினில் துல்லியங் காட்டும் உடலையும்**
**ஐயன் அடிக்குள் அடங்கும் [1]உடம்பே.**

"சிவனடியார்களே, புறத்தே தோன்றுவது பருமை மிக்க பருவுடம்பாகும். அகத்தே இழுப்பது நுண்ணுடம்பாகும். உழைப்புக்கு விளக்கம் தருவது முதலுடம்பாகும். இதற்குக் காரணமாக உள்ள மாமாயையின் கண் சிவபெருமான் ஒடுங்குவன். அம் மாமாயை உடம்பு சிவபெருமானின் திருவடியில் ஒடுங்கும்" என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**2092. காயுங் கடும்பரி கால்வைத்து வாங்கல்போற்**
**சேய விடமண்மை செல்லவும் வல்லது**
**காயத் துகிற்போர்வை யொன்றுவிட் டாங்கொன்றிட்டு**
**ஏயு மவரென்ன ஏய்ந்திடுங் [2]காயமே.**

"சிவனடியார்களே, பகைவரை வருத்தும் தன்மையுள்ள பாய்மாவாகிய குதிரை அண்மையான இடத்திற்கு மட்டுமல்லாமல் மிகவும் தொலைவான இடத்திற்கும் செல்லும் வல்லமை மிக்கது. அதுபோல ஆருயிரும் தன்னை மூடியிருக்கும் துகிலால்

ஆகிய போர்வையைப் போன்றுள்ள உடம்பை வினைக்கீடாக ஒன்றுவிட்டு ஒன்று பற்றிப் பிறக்கும் துயிற்போர்வை பழுதுற்றால் அதனை நீக்கி விட்டு மற்றோர் போர்வையினைப் பெற்றுக் கொள்வது போன்றதாகும். இங்கு மனம் குதிரையாகக் கொள்ளப்பட்டுள்ளது. அது காற்றை விட வேகமானது. அதன் வேகத்தை யாராலும் கணிப்பிட முடியாது. ஒரு இமைப்பொழுதில் அது உலகை வலம் வந்துவிடும். அதற்குக் கடிவாளமிட வேண்டும். அதற்காகத்தான் மனதைக் குதிரையோடு ஒப்பிட்டனர். கடிவாளமிடாத குதிரை அடங்கமாட்டாது. கடிவாளமிட்டால் அது அடங்கி நடக்கும். நல்லை நாதனின் பேரன் ஐரோப்பிய நாடொன்றில் வசிக்கிறான். நல்லைநாதன் சொல்வார் தான் அவனின் மேல் அளவில்லாத அன்பு வைத்துள்ளேன். அதனால் அவனை நினைத்து அவன் வசிக்கும் ஊரிற்குச் சென்று அவனுடன் கதைத்து விட்டு வருவேன் என்பார். உயிரின் போர்வை தான் உடம்பு. நாம் உடைகள் பழுதடைந்ததும் புது உடையை வாங்குவது போல் உயிரும் உடல் பழுதடைந்ததும் இன்னொரு உடலில் புகுந்து கொள்ளும்" என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**2093. நாக முடலுரி போலுநல் லண்டச**
**மாக நனாவிற் கனாமறந் தல்லது**
**போகலு மாகும் அரனரு ளாலேசென்**
**றேகு மிடஞ்சென் றிருபயன் [1]உண்ணுமே.**

"சிவனடியார்களே, ஆருயிரானது ஓர் உடம்பை விட்டு மற்றோர் கருவுடம்பை வினைக்கீடாக எடுக்கும். அதற்கிடையில் இருவினைப் பயனுள் தீவினைப் பயனின் ஒரு பகுதியை விண்ணுலகில் நுகரும். அவ்வாறு அவ்வுயிர்கள் ஆண்டு அனுபவிக்கும் போது தாம் செய்த வினை வகைகளையும் அதன் பயன்களையும் எண்ணி எண்ணித் துன்பப்படாது. இதுபோலவே நல்வினைப் பயனை அனுபவிப்பது பற்றி தெரிய வரவில்லை. தேவர்கள் நல்வினைப் பயன்களை அனுபவிக்கும் பொழுது செருக்கடைவதால் தக்கனைப் போன்ற துன்பங்களை அனுபவித்தனர். இந்நிலையில் தேவர்களுக்கு உணர்த்துவாரும் ஊட்டுவாரும் இல்லை. ஆனால் உலகில் வாழும் உயிர்களுக்கு உணர்த்துவாரும் ஊட்டுவாரும் காணப்படுவதால் காணப்படுகின்றனர். உயிர்கள் மீண்டும் நிலவுலகில் பிறக்கும்போது முன்பு நடந்தவற்றை அவைகள் மறந்து விடுகின்றன" என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**2094. உண்டு நரக சுவர்க்கத்தில் உள்ளன**
**கண்டு விடுஞ்சூக்கங் காரண மாச்செலப்**
**பண்டு தொடரப் பரகாய யோகிபோற்**
**பிண்டம் எடுக்கும் பிறப்பிறப் [1]பெய்தியே.**

"சிவனடியார்களே, ஆருயிர் இருவினைப் பயனை அனுபவிப்பதற்காக துறக்கப்படாத உடலைத் துறந்து வெந்தூதுவரோடு இறக்கும். இறந்த இரு

உலகங்களில் ஒன்றிற்குச் செல்லும். அவை சுவர்க்கம், நரகம் என்பனவாம். சுவர்க்கம் இன்ப உலகு. அங்கு இருவினைப் பயனையும் கண்டு பயனை அனுபவிக்கும். அங்கு வினையின்படி அனுபவித்து முடிந்ததும் வேறொரு உடம்பிற் புகும். அகத்தவத்தார் போல ஏறி வந்து பிறக்கும்" என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**2095. தானவ னாகிய தற்பரந் [2]தாங்கினோன்**
**ஆனவை மாற்றிப் பரமத் தடைந்திடும்**
**ஏனை யுயிர்வினைக் கெய்து மிடஞ்சென்றும்**
**வானும் நிலனும் புகுந்தும் வருந்துமே.**

"சிவனடியார்களே, சிவனை நினைத்து சிவமாகி நிற்கும் சிவகுரு தானவனாகிய தற்பரம் தாங்கினோனாவான். அவன் பிறப்பிற்குக் காரணியான ஆணவ கன்ம மாயைகளை அறவே அகற்றிச் சிவபெருமானின் திருவடியை அடைந்து இன்புறத்துணை புரிந்து வேண்டுவன செய்தருள்வன். அவ்வுயிர் சிறப்பெய்தி இம்மையிலேயே பேரின்பம் பெற்று வாழும். அவ்வுயிர் தான் சிறப்பான உயிராகும். அச்செவ்விவாயாத பிறப்புயிர் செய்வினைப் பயனை அனுபவிப்பதற்கிடமாகிய வான் சென்று அனுபவிக்கும். பின் மண்ணுலகத்தில் வந்து பிறந்தும் வருந்தும்" என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**2096. ஞானிக்குக் காயஞ் சிவமே தனுவாமஞ்**
**ஞானிக்குக் காயம் உடம்பே யதுவாகும்**
**மேனிற்கும் யோகிக்கு விந்துவும் நாதமும்**
**மோனிக்குக் காயமுப் பாழ்கெட்ட [3]முத்தியே.**

"சிவனடியார்களே, ஞானத்திற் சரியை என்று சொல்லப்படும் அறிவிற் சீலத்தாருக்கு ஆண்டானாகிய சிவனே உடம்பாவான். அறிவின் நோன்பினருக்கு அருளோன் உடம்பாவான். அறிவிற் செறிவினர்க்கு அன்னையும் அந்தனுமாகிய விந்துவும் நாதமும் உடம்பாகும். அறிவின் அறிவினராம் மோனிக்கு உம்பொத்த உயிர்நிலை முப்பாழ் என்று சொல்லப்படும். ஆணவம், கன்மம், மாயை மூன்றும் கடந்த சிவபெருமான் திருவடிப்பேறு கிடைக்கும். இந்நான்கும் முறையே அகலிடத்தார் ஆசாரத்தை அகலுதலும், தன்மை மறத்தலும், தன்மாயைக் கெடுதலும், தலைவன் பால் தலைப்படுதலும் ஆகிய திருநெறிகள் நான்கும் திருவாகும்" என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**2097. விஞ்ஞானத் தோர்க்கா ணவமே மிகுதனு**
**எஞ்ஞானத் தோர்க்குத் தனுமாயை தானென்ப**
**அஞ்ஞானத் தோர்க்குச் கன்மந் [1]தனுவாகும்**
**மெஞ்ஞானத் தோர்க்கு சிவதனு மேவுமே.**

“சிவனடியார்களே, ஆணவ மலம் மட்டும் உடையவர் விஞ்ஞானகலர் ஆவர். இச்சொல் மேலறிவால் கட்டற்றவர் எனப் பொருள் தரும். இவர்கள் கன்மம், மாயை என்ற இரண்டினதும் தொடர்பு அற்றவர்கள். இவர்களுக்குப் பிணிப்பாகிய உடம்பு ஆணவம் மட்டுமே. ஆனால் ஆவணமே மிகுந்த உடம்பென்பர். விஞ்ஞானத்தை அடுத்ததாகிய அஞ்ஞானத்தோர் இருமலங்களால் கட்டுப்பட்டவர்கள். அவர்களுக்கு ஆணவம் கன்மம் என்ற இரு மலங்கள் பிணிப்புற்றுள்ளன. குறைந்த ஞானத்தையுடைய மும்மலங்களாலும் கட்டுப்பட்டவர்களுக்கு ஆணவம், கன்மம், மாயை என்ற மும்மலங்களும் பிணிப்பாகும். திருவடியுணர்வு கைவரப் பெற்றோருக்கு சிவனடியே உடம்பாகும்” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**2098. மலமென் றுடம்பை மதியாத ஊமர்**
**தலமென்று வேறு தரித்தமை கண்டீர்**
**நலமென் றிதனையே நாடி யிருக்கிற்**
**பலமுள்ள காயத்திற் பற்றுமிவ் வண்டத்தே.**

“சிவனடியார்களே, மாயாகாரியமாகிய தமது உடம்பை மிகுந்த மதிப்புக்குரிய பொருளாகப் பலரும் மதிப்பர். உண்மையாக நோக்கின் அவ்வுடல் பிணிப்புறுத்து மலமாகும். மலம் தள்ளத்தக்க ஒரு பொருள். அதனால் உடம்பை மலமென்று மதியாதவர் ஊமராவர். ஊமர் என்பது பகுத்தறியும் உணர்வு இல்லாதவர் எனவும் பொருள் தரும். இது மெய்யுணர்வுவில்லாதவர்களைக் குறிக்கும். இவர்கள் ஆறறிவுள்ள மனிதர்களாகப் பிறந்தும் மிருகங்களைப் போலவே வாழ்கின்றனர்”.

“சிவனடியார்களே அன்று ஊரில் வாழ்ந்த பெரும் பிரமுகரின் மகளுக்குத் திருமணம் நடைபெற்றது. பட்டணத்தில் உள்ள பெரும் பெரும் பிரமுகர்கள் எல்லோரும் அத்திருமண விழாவுக்கு வந்திருந்தனர். அங்கு வந்திருந்த பெண்கள் தமது தகுதியைப் பிறருக்கு காட்டுவதற்காகப் பல ஆயிரம் ரூபா செலவு செய்து தம்மை அலங்கரித்திருந்தனர். சரஸ்வதி ஒரு பெரும் பிரமுகரின் மனைவி. பெரும் கோடீஸ்வரி. திடீரென்று அவளுக்கு வயிற்றுக்கோளாறு வந்தது. அவள் அதை உணருமுன்பே மலமும் சலமும் வெளியே வந்துவிட்டன. அருகில் உள்ளவர்கள் மூக்கைப் பொத்தியவாறு ஓடிச் சென்றனர். நல்லைநாதன் சொன்னார்,” இது தான் உடம்பு. இதைப் பெரிதாக மதித்து என்னென்ன அலங்காரம் செய்தாலும் அது தனது இயல்பைக் காட்டிவிடும் என்று சிரித்தார்” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**2099. நல்ல வசனத்து வாக்கு மனாதிகள்**
**மெல்ல விளையாடும் விமலன் [1]அகத்திலே**
**அல்ல செவிசத்த மாதி மனத்தையும்**
**மெல்லத் தரித்தார் முகத்தார் பசித்தே.**

“சிவனடியார்களே, தூய்மையான நினைவும், அன்பான மொழியும், சிவச் செயல்களைச் செய்யும் தன்மையும் மிக்கவர்களின் உள்ளம் திருவுள்ளமாகும். அவ்வுள்ளத்தில் சிவபெருமான் மகிழ்வுடன் இருந்து செயலாற்றுவான். இவ்வாறு உள்ளம் இருப்பதற்கு காரணம் அவர்கள் எவ்வேளையிலும் சிவ சிவ என்ற தமிழ் மறையை ஓதுவதேயாகும். அத்துடன் சிவனடியார்களைப் போற்றி அவர்களுக்கு உதவிகள் செய்வதுமாகும். அவர்கள் என்றும் செல்வர்களாக இருப்பர். தீய நினைவும் செயலும் உடையவர்களின் உள்ளத்தில் சிவன் விளக்கமுறான். அதனால் அவர்கள் என்றும் வறியவர்களாகவே இருப்பார்கள். அவர்களுக்குப் பிச்சையிடவும் யாரும் விரும்ப மாட்டார்கள்”

“சிவனடியார்களே, சுந்தரலிங்கம் பெருங் குடிகாரன். அவன் குடித்து விட்டு வந்து கோவிலடியில் அடிக்கடி குழப்பம் செய்வான். அவன் சோம்பேறி. வேலை செய்யாது இரந்துண்பான். காலையில் எழுந்து வீடு வீடாகச் சென்று பிச்சை எடுப்பான். அவ்வூரில் யாரும் அவனுக்குப் பிச்சையிடமாட்டார்கள். அன்று அவனுக்கு கோரப்பசி. முதல் நாள் பகல் நன்றாகக் குடித்துவிட்டு வீதியோரம் விழுந்தவன் மறுநாள்க் காலையில் தான் எழுந்தான். பசி வயிற்றைக் கிள்ளியதால் அவன் வீடு வீடாகச் சென்றபோதும் யாரும் உணவு கொடுக்கவில்லை. அதனால் கதிரேசனது வீட்டுக்குச் சென்றான். கதிரேசன் சொன்னார்; ‘குடித்துவிட்டுக் கோவிலில் குழப்பம் செய்வதோடு சிவநிந்தனை செய்யும் உனக்கு உணவு தருவது பாவம். இன்று வந்து விட்டாய் தருகிறேன். இனிமேல் இந்தப் பக்கம் வராதே. சிவநிந்தனை செய்பார்களைக் காணக்கூடாது. சிவநிந்தனை செய்வதோடு சிவனடியார்களைப் பரிகசிக்கும் உன்னைத் தண்டித்தல் வேண்டும் என்பதற்காகத்தான் யாரும் உனக்குப் பிச்சையிடுவதில்லை. சிவனும் சிவனடியார்களும் உனக்கு என்ன துன்பம் செய்கின்றனர். காரணமின்றி ஏசிவிட்டு அவர்களிடம் பிச்சை கேட்டால் தருவார்களா? பசியால் வாடுபவனுக்கு உணவு கொடுப்பது சிவனுக்கு கொடுப்பதைப் போன்றது. நீ சிவத்துரோகி இனிமேல் இங்கு வராதே என்று அதட்டிக் கூறியவர்” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

## 2. உடல்விடல்

**2100. பண்ணாகுங் காமம் பயிலும் வசனமும்**
**விண்ணாம் பிராணன் விளங்கிய சத்தமும்**
**புண்ணாம் உடலிற் பொருந்து மனத்தையும்**
**அண்ணாந்து பார்க்க அழியும் உடம்பே.**

“சிவனடியார்களே, கதிரேசன் இரப்பவர்களுக்கு இல்லை என்று ஒருபோதும் சொல்லாதவர். அத்துடன் பசியென்று சொன்னால் வீட்டில் உணவில்லாவிட்டாலும்தானே சமைத்துக் கொடுப்பார். அப்படியானவர் அவ்வாறு சொன்னதைக் கேட்ட நல்லைநாதன் அதிர்ந்து போனான். அதை உணர்ந்த கதிரேசன் சொன்னார்; சுந்தரலிங்கம் உடலில் வலு உள்ளவன் குடித்து விட்டுப் பலரைத் தாக்குவது எனக்குத் தெரியும். அப்படியானவன் இரந்து உண்பதைப் பொறுத்துக் கொள்ளலாம். ஆனால் சிவநிந்தனை செய்வதைப் பொறுக்க முடியாது. பசியால் உயிர் போனாலும் அதைப் பற்றிக் கவலை கொள்ளல் ஆகாது. இனிமையான சொல்லையும், சிறந்த உயிர்ப்பு நிறைந்த செயலையும் இவற்றுடன் பொருந்தும் மனதையும் கொண்டுள்ளது. துன்பம் நிறைந்த இந்த உடம்பு அவ்வுடம்பில் தங்கும் உயிர் அவற்றின் வழி உலகிடைச் செல்லாது அதைக் கொண்டு நல்ல செயல்களைச் செய்வித்தல் வேண்டும். அதாவது சிவபெருமானது திருவடியினைத் தூய மனத்துடன் நினைக்க வேண்டும். போற்ற வேண்டும். புகழ வேண்டும். அவ்வாறு செய்பவர்களுக்கு உடம்பின் மேல் இருக்கும் பற்று அழியும். இவன் அதைச் செய்ய வேண்டாம். சிவநிந்தனை செய்யாமல் இருந்தாலே போதும். இவன் நேற்றுக் குடித்துவிட்டு ரவீந்திரனை ஏசினவனாம். அத்துடன் நன்றாக குடித்து விட்டு வீதியில் கலாட்டா செய்தவன். அப்படியானவனுக்கு எப்படி உணவு கொடுப்பது என்று கேட்டவர்” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**2101. அழிகின்ற வோருடம் பாகுஞ் செவிகண்**
**கழிகின்ற காலவ் விரதங்கள் தானம்**
**மொழிகின்ற வாக்கு முடிகின்ற நாடி**
**ஒழிகின்ற ஊனுக் குறுதுணை யில்லையே.**

“சிவனடியார்களே, சாப்பிட்டுக் கொண்டிருந்த சுந்தரலிங்கம் சாப்பிட்ட வாழையிலையை எடுத்துச் சென்று வெளியே வீசி விட்டு வந்து சொன்னான், “ஐயா காலையில் ஒருபோதும் இல்லாதவாறு எனக்குப் பசித்தது. அதனால் இக்கிராமத்தில் உள்ள வீடுகள் பலவற்றிற்குச் சென்றேன். யாரும் உணவு தரவில்லை. பலர் ஏசிக் கலைத்தனர். சிலர் நாயை அவிழ்த்து விட்டனர். அப்போது தான் எனக்கு எனதுநிலை புரிந்தது. குமாரசாமி கெட்டவன், குடிப்பவன், கலகம் செய்பவன். அவன் ஒரு நாள் வீதியில் விபத்துக்குள்ளானபோது யாரும் அவனைக் கவனிக்கவில்லை. தற்செயலாக அவ்வழியால் வந்த நீங்கள் அவனைத் தூக்கப் பலரும் வந்து உங்களுக்கு உதவியவர்கள். அதனால் தீயவருக்கும் நீங்கள் உதவுவீர்கள் என்று நினைத்து வந்தேன். நீங்கள் கடவுள் இனிமேல் நான் திருந்தி நல்லவனாக வாழ விரும்புகிறேன்” என்று கூறி அவரது கால்களில் விழுந்து கும்பிட்டான். அப்போது கதிரேசன் சொன்னார், “சுந்தரா, உடம்பை விட்டு உயிர் நீங்கும் காலத்தில் செவி, கண் முதலிய உறுப்புக்கள் செயலற்று அழிந்து விடும். அக்காலத்தில் செய்யும் தானத்தினாலும் நோன்பினாலும் எந்தப் பயனும் ஏற்படமாட்டாது. அவ்வேளை உயிருக்கும் உடலுக்கும் உறுதுணையாக

இருப்பது சிவபெருமானே. அவனை ஐந்தெழுத்தால் ஆராதித்தல் வேண்டும். அதுபோல வாழுங்காலத்திலும் சிவனே துணை. சிவனை நிந்தித்தால் பசிக்கு உணவும் கிடையாது என்பதை உணர்ந்துள்ளாய். இனியாவது திருந்தி வாழ் என்றவர்" என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

2102. **இலையா மிடையில் எழுகின்ற காமம்**
**உலைவாய நெஞ்சத்து மூழ்கும் உளத்துத்**
**தலையாய மின்னுடல் தாங்கித் திரியுஞ்**
**சிலையாய சித்தஞ் சிவமுன் [1]னிடைக்கே.**

"சிவனடியார்களே, கதிரேசன் சுந்தரலிங்கத்திற்குச் சொன்னார் "நீ திருந்துவதாகச் சொன்னதால் சொல்கிறேன். இல்லை என்று சொல்லும்படியான இடையை உடைய அழகான பெண்களிடத்துக் கொள்ளும் காமமும் மனிதனைக் கெடுத்துச் சீரழிக்கும். அது பிறவிகளை அதிகரிக்கும். நீ பெண்களுடன் தொடர்பு வைத்திருப்பவன். அதை விட்டுவிடு. நல்லவர்களுக்கு உடம்பு பாரமானதாகவே இருக்கும். அவர்கள் உடம்பை மின்னலுக்கு ஒப்பிடுவர். மின்னல் தோன்றி மறைவதைப் போல உடம்பும் தோன்றி மறையும் தன்மையானது. அதனால் அவர்களின் மனம் கல்லாகிச் சிவனிடத்தே நிலைத்து நிற்கும். அதனால் அவர்கள் இம்மையிலும் மறுமையிலும் சிறப்புற்று வாழ்வர். அவர்களது பிறப்பும் அறும் என்றவர்" என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

## 3. அவத்தை பேதம்

2103. **ஐயைந்து மத்திமை யானது சாக்கிரங்**
**கைகண்ட பன்னான்கிற் கண்டங் கனாவென்பர்**
**பொய்கண் டிலாத புருட னிதயஞ்சுழுனை**
**மெய்கண் டவனுந்தி யாகுந் [2]துரியமே.**

"சிவனடியார்களே, புருவ நடுவின் கண் அறிதற்கருவி ஐந்து செய்தற் கருவி ஐந்து, வளிபத்து, அகப்புறக் கலன் நான்கு, ஆள் ஒன்று ஆகிய இருபத்தைந்து கருவிகள் தொழிற்படும். இந்நிலை நனவு நிலையாகும். அண்டத்தில் வளிபத்து, அகப்புறக் கலன் நான்கு, ஆகிய பதின்நான்கு கருவிகள் செயற்படும். இந்நிலை கனவு நிலையாகும். நெஞ்சில் எண்ணமும் ஆளும் ஆகிய இரு கருவிகள் செயற்படும். இந்நிலை உறக்கநிலையாகும். கொப்பூழின் கண் நிலைத்தவனாகிய ஆள் தொழிற்படும். இந்நிலை பேருறக்க நிலையாகும். பேருறக்க நிலையென்பது துரிய நிலையாகும். பொய்கண்டிலாத குருடன் என்பது ஏனைய புறக்கருவிகளும் அகப் புறக்கருவிகளும்

போல தொழிற்படுவதால் தொடப்பட்டும் ஏனைய காலங்களில் விடப்பட்டும் வருவதன்றி எங்கும் நீங்காது இணைந்து நிற்பதாகும்” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**2104. முப்பதோ டாறின் முதல்நனா ஐந்தாகச்**
**செப்பதி னான்காய்த் திகழ்ந்திரண் [1]டொன்றாகி**
**அப்பதி யாகும் நியதி முதலாகச்**
**செப்புஞ் சிவமீறாய்த் தேர்ந்துகொள் ளீரே.**

“சிவனடியார்களே, அருஞ்சைவர் மெய்முப்பத்தாறினுள் ஒன்றில் தொழிற்படும் ஆருயிர் நாளும் ஐம்பாடு எய்தும், அவற்றுள் முதல் நிலையாகிய நனவு நிலை ஐந்து வகைப்படும். அவை நனவில் நனவு, நனவிற் கனவு, நனவில் உறக்கம், நனவில் பேருறக்கம், நனவில் உயிர்ப்படங்கல் என்பனவாகும். அந் நனவில் மூன்று வருமாறு. நனவில் உறக்கம், நனவில் பேருறக்கம், நனவில் உயிர்ப்படங்கல் என்பனவாகும். அந் நனவில் இரண்டு வருமாறு. நனவில் பேருறக்கம், நனவில் உயிர்ப்படங்கல் என்பனவாகும். அந் நனவில் ஒன்று உயிர்ப்படங்கல். இரண்டு ஒன்று என்பதனைக் கூட்டி மூன்றாகவும் தனித்தனியே இரண்டாகவும், ஒன்றாகவும் கொள்ளப்பட்டன. மண் முதலாகச் சிவ மெய் ஈறாகக் கூறப்படும் மெய்கள் முப்பத்தாறு இவையனைத்தும் சிவபெருமானின் திருவாணைப்படி ஒழுங்காக நடைபெறும் நியதியாகும்” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**2105. இந்திய மீரைந் தீரைந்து மாத்திரை**
**மந்திர மாய்நின்ற மாருதம் ஈரைந்தும்**
**அந்தக் காரணம் ஒருநான்கும் ஆன்மாவும்**
**பந்தவச் சக்கரப் பாலது வாகுமே.**

“சிவனடியார்களே, பருவுடல், நுண்ணுடல் ஆகியவற்றைக் கூறுங்கால், அழிதற்கருவியாகிய ஓசை, உறு, ஒளி, சுவை, நாற்றம், என்னும் ஐம்புலன்களையும் ஏற்றுக்கொள்ளும் செவி, மெய், கண், நாக்கு, மூக்கு என்னும் பொறிகள் ஐந்தும், செய்தற் கருவிகளான பேசல், நடத்தல், கொடுத்தல், கழித்தல், இன்புறல் என்பவற்றைச் செயற்படுத்தும் நாக்கு, கால், கை, குதம், கருவாய் என்ற ஐந்தும் ஆகிய இந்திரியங்கள் பத்தும் அவற்றால் செயற்படுத்தப்படும் ஓசை, உறு, ஒலி, சுவை, நாற்றம் ஆகிய ஐந்தும் மாத்திரைகளாகும். அறிவு வளியாகிய உயிர்க்காற்று, மலக் காற்று, தொழிற் காற்று, ஒலிக் காற்று, நிரவுக் காற்று, ஆகிய வளி ஐந்தும் தொழிற் வளியாகிய தும்மற் காற்று, விழிக் காற்று, கொட்டாவிக் காற்று, இயைக் காற்று, வீசும் காற்று ஆகிய வளி ஐந்தும் கூடிப் பத்தாகும். அந்தக்கரணமென்னும் அகப்புலன் எண்ணம், மனம் எழுச்சி இறுப்பு என நான்காகும். இதைச் சித்தம், மனம், அகங்காரம்,

புத்தி என்று கூறப்படுகிறது. ஆன்மா என்று சொல்லப்படும் . ஆள் ஒன்று. எல்லாமாக முப்பத்தைந்தாகும் ” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**2106. பாரது பொன்மை பசுமை யுடையது**
**நீரது வெண்மை செம்மை நெருப்பது**
**காரது மாருதங் கறுப்பை யுடையுது**
**வானகந் தூம மறைந்துநின் [1]றார்களே.**

“சிவனடியார்களே, நிலத்தின் வண்ணம் (நிறம்) பொன்மை, அது மினுமினுப்பான பசுமையானது. நீரின் வண்ணம் வெண்மை, நெருப்பின் வண்ணம் செம்மை, காற்றின் வண்ணம் கருமை, வானத்தின் வண்ணம் புகைமை. இவற்றுள் நிலம், நீர், நெருப்பு ஆகிய மூன்றும் வெளிப்படத் தோன்றுபவை. காற்றுத் தொழிலால் புலனாவது வானம், உய்த்துணர்வால் புலனாவது” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**2107. பூதங்கள் ஐந்தும் பொறியவை ஐந்துளும்**
**ஏதம் படஞ்செய் திருந்த புறநிலை**
**ஓது மலங்குண மாகுமா தாரமோ**
**டாதி யவத்தைக் கருவிதொன் னூற்றாறே.**

“சிவனடியார்களே, ஐம்பூதங்களும் பொறிகள் ஐந்தும் குற்றம் எய்துமாறு இருந்த புறநிலைக்கருவிகள். இவற்றால் நிகழும் குணம் செயல்கள் மலத்தின் காரணமாகச் செய்யப்படுகினற்ன. இவற்றை அடிப்படையாகக் கொண்டு விரிந்த கருவிகள் அறுபது” .

## கருவிகள் அறுபது

| | கூறு | |
|---|---|---|
| நிலம் | மயிர், தோல், எலும்பு, நரம்பு, தசை | 5 |
| நீர் | நீர், குருதி, மூளை, கொழுப்பு வெண்ணீர் | 5 |
| தீ | ஊண், உறக்கம், உட்கு, உடனுறைவு, மடி | 5 |
| வளி | ஓடல், இருத்தல், நடத்தல், இடத்தல், தத்தல் | 5 |
| வெளி | வெகுளி, இவறண்மை, மயக்கம், செருக்கு, பொறாமை | 5 |
| செய்தற்கருவி | பேசல், நடத்தல், உழைத்தல், கழித்தல், மகவு பெறல் | 5 |
| அறிவு வளி | உயிர்காற்று, மலக்காற்று, தொழிற்காற்று, ஒளிக் காற்று, திரவக்காற்று, | 5 |

| | | |
|---|---|---|
| தொழில் வளி | தும்மற்காற்று, விழிக் காற்று, கொட்டாவிக் காற்று, இமைக் காற்று, வீசுங் காற்று, | 5 |
| நாடி | இடப்பால் நரம்பு, வலப்பால் நரம்பு, நடு நரம்பு, இடக்கண் நரம்பு, வலச்செவி நரம்பு, உள்நாக்கு நரம்பு, இடச்செவி நரம்பு, வலக்கண் நரம்பு, கருவாய் நரம்பு, எழுவாய் நரம்பு, | 10 |
| ஓசை | நுண்ணோசை, நினைவோசை, மிடற்றோசை, செவியோசை, | 3 |
| முப்பற்று | பொருட்பற்று, புதல்வர்ப்பற்று, பொய்யுலகப்பற்று | 3 |
| முக்குணம் | அமைதி, ஆட்டு, அழுந்தல் | 3 |
| | | 60 |

என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**2108. இடவகை சொல்லில் இருபத்தஞ் சானை**
**படுபர சேனையும் பாய்பரி ஐந்தும்**
**உடையவன் மத்திமை யுள்ளுறு நால்வர்**
**அடைய நெடுங்கடை ஐந்தொடு நான்கே.**

"சிவனடியார்களே, ஆருயிர்கள் ஐம்பாடு எய்தும் இடவகைகள் ஐந்தாகும். அவை நனவு, கனவு, உறக்கம், பேருறக்கம், உயிர்ப்படங்கல் என்பனவாகும். இவற்றில் உயிர்ப்படங்கல் விடுத்து ஒழிந்த நான்கிலுமுள்ள கருவிகளை உருவமாக ஓதி அருள்கின்றனர். இருபத்தைந்து கருவிகள் யானையை ஒத்தன. பேசல், நடத்தல், கொடுத்தல், கழித்தல், இன்புறல் கருவிகள் விரைந்து செல்லும் காலாட்களாகும். ஓசை, ஊறு, ஒளி, சுவை, நாற்றம் என்பன மிகவும் விரைந்து செல்லும் குதிரைகளாகும்.

மிடற்றோசை உள்ளிட்ட ஓசைகள் நான்கும் அமைச்சனை ஒக்கும். இந்த நான்கும் மடங்குதலே அப்பால் நிலையாகும்” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**2109. உடம்பும் உடம்பும் உடம்பைத் தழுவி**
**உடம்பிடை நின்ற உயிரை அறியார்**
**உடம்பொ டுயிரிடை [1]நட்பறி யாதார்**
**மடம்புகு நாய்போல் மயங்குகின் றாரே.**

“சிவனடியார்களே, பிறப்புக் காலம் தொட்டு ஒடுக்கக்காலம் வரை மாறாதிருக்கும் நுண்ணுடல் ஓய்வின்றித் துன்பப்படும். இவ் உடம்பானது இருவினைக்கீடாக அடுத்தடுத்துப் பிறப்பெடுக்கும். பருவுடம்பைத் தழுவி இவ் இரு உடம்புகளுள்ளும் இவற்றிற்கு வேறாக ஓர் உயிர் உண்டு. அவ்வுயிர் இவற்றைக் கருவியாகக் கொண்டு உலகின் பற்றுக்களை அறுத்து சிவபெருமானின் திருவடியை அடைந்து பேரின்பம் பெறுவதற்காகச் சிவனால் உடம்பு கொடுக்கப்பட்டது. இவ் உண்மையை உணர்வதே உடம்பில் தங்கியிருக்கும் உயிரின் நிலைப்பாடாகும். இதையறியாதவர்கள் எச்சில் சோற்றுக்கு அலையும் நாய் போல அலைந்து மயங்குகின்றனர்’’ என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**2110. இருக்கின்ற வாறொன் றறிகிலர் ஏழைகள்**
**முருக்கு மசபையை மற்றி முகந்து**
**கருக்கொண்டு காமாரி சார முகந்தேர்ந்து**
**உருக்கொண்டு தொக்க உடலொழி [2]யாதே.**

“சிவனடியார்களே, மெய்யறிவில்லாத கோழைகள் உடம்பகத்தே தங்கியிருக்கும் சிவனை அறியமாட்டார்கள். தம் தன்மையையும் அறியமாட்டார்கள். இவ் வுடம்பினைச் சிவநினைவால், திருநீறு சிவமணி பூணலால் சிவனடியாராகிய சிவவுடலாக அமைத்துக் கொள்ளலாம். அவ்வாறு அமைத்துக் கொண்டால் பிறப்பு இறப்புக்களை அறுக்கும் பெருமறை ‘சி’ கரமாகும். இதனைப் பேசாமறை என்பர். இப் பேசாமறையே ‘அசபை’ என ஓதப்பெற்றது. அதனால் இறப்புப் பிறப்புக்களை ஒழிக்கலாம். சிவனது திருவடியை அடையக் காரணமாகிய நன்மையமைந்த நன்னெறி நான்மையினைக் கருவாகக் கொண்டு அவற்றின் வாயிலாக சிவனது திருவடியை அன்புடன் தொழுதால் சிவவுருக்கொண்ட உடல் அழியாது, திருவடியை அடையும். இததை உணராதவர்கள் உலக இன்பங்களில் ஈடுபாடு கொண்டு சிற்றின்பத்தை நாடித் தமது பொன்னான வாழ்நாளைப் பாழாக்குகின்றனர்” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**2111. ஒளித்திட் டிருக்கும் ஒருபதி னாலை**
**அளித்தனன் என்னுள்ளே ஆரியன் வந்து**
**அளிக்குங் கலைகளி னாலறு பத்தும்**
**ஒளித்திட்டு வைத்தான் ஒடுங்கிய [1]சித்தே.**

“சிவனடியார்களே, விறகில் தீபோலவும், பாலில் நெய்போலவும், மறைந்து நின்று அருளுபவரான சிவபெருமான் ஒரு பதி என்று ஓதப்பெற்றவன். அவன் அருளிய பொருளும் நெறியும் நந் நான்காகும். அவை முறையே அறம், பொருள், இன்பம், வீடு எனவும் சீலம், நோன்பு, செறிவு, அறிவு எனவும் கூறப்படும். இவற்றை அளித்தருளியவன் என்னுள்ளே ஆரியன் என்னும் ஆசானாய் எழுந்தருளியுள்ளான். ஆசானான சிவகுரு உள்ளிருந்து உணர்த்தும் கலைகள் அறுபத்து நான்கு. அக்கலைகளின் வாயிலாக எண்ணத்தின் கருவி சித்தம் சிவன் திருவடியன்றி வேறெதையும் எண்ணாது ஒடுங்குமாறு செய்தருளினன். திருவடியில் அடங்கி இருக்கவும் அருள் புரிவான்” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**2112. மண்ணினில் ஒன்று மலர்நீரு மங்காகும்**
**பொன்னினில் அங்கி புகழ்வளி யாகாயம்**
**மன்னு மனோபுத்தி யாங்காரம் ஒரொன்றாய்**
**உன்னில் முடிந்ததொரு பூத [2]சயமே.**

“சிவனடியார்களே, மண்ணும், அதில் பொருந்தி நிற்கும் நீரும், பொன்போலக் காணப்படும் தீயும், புகழ்மிக்கதாகிய வளியும், புலல்மிக்கதாகிய வானமும் நிலைபெற்றுள்ள மனம், இறுப்பு, எழுச்சி ஆகிய எட்டும் அவ் அவற்றின் தன்மையுடன் ஓரொன்றாய் நினைத்து உண்மையை உணர்ந்தால் பூதவெற்றி நிறைவடையும். பூத வெற்றி என்பதும், பூதசுத்தி என்பதும் ஒன்றாகும்” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**2113. முன்னிக் கொருமகன் மூர்த்திக் கிருவர்**
**வன்னிக்கு மூவர் வதுமைக்கு நால்வர்**
**கன்னிக்குப் பிள்ளைகள் ஐவர்மு னாளில்லை**
**கன்னியைக் கன்னியாக் காதலித் [1]தானே.**

“சிவனடியார்களே, ஐம்பூதங்களுள் முதற்கண் நிற்பது வானம். இதன் கண் விளங்கும் பண்பு ஓசை ஒன்றே. அவ்வொன்று ஒரு மகன் என ஓதப்பெற்றது. அதுபோல வளியாகிய காற்றின் கண் நிற்பன ஓசை, ஊறு என்னும் இரண்டும் ஆகும். தீயிடத்து ஓசை, ஊறு, ஒளி என்னும் மூன்றும் ஆகும். நீரினிடத்து ஓசை, ஊறு, ஒளி, சுவை என்னும் நான்கும் ஆகும். நிலத்திடத்து ஓசை, ஊறு, ஒளி, சுவை, நாற்றம் என்னும் ஐந்துமாகும். சிவபெருமானுடைய உன்னித்துப் பொருந்தும் உன்முகத்தில் முன் நாட்களில் இவை இங்ஙனம் கலந்து விரிவு எய்துவதில்லை. கன்னியாகிய மாமாயையைத் தனது வைப்பாற்றற் கன்னியாகச் சிவபெருமான் காதலித்தருளினார். அதனால் இவ்வுலகம் நிகழ்ந்து வருகின்றது” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**2114. கண்டகன வைந்தும் கலந்தன தானைந்து**
**சென்றுண்ட நான்கும் ஒருங்கே உணர்ந்தபின்**
**பண்டைய தாகிப் பரந்த வியாக்கிரத்து**

**அண்டமுந் தானாய் அமர்ந்துநின் [1]றானே.**

"சிவனடியார்களே, கனவின் உண்டாகும் நிலைகள் ஐந்து கலந்துள்ள மெய், வாய், கண், மூக்கு, செவி என்னும் புலன்கள் ஐந்து. அகப்புறக் கலன்களாகிய எண்ணம், மனம், எழுச்சி, இறுப்பு என்னும் அந்தக்கரணம் நான்கு. இவற்றின் உண்மைத் தன்மைகளைத் திருவருளினால் உணர்ந்தபின் தொன்மையதாய் அண்டமெங்கும் பரந்துள்ள புலி போன்ற பாய்ச்சலும் பற்றும் உள்ள இடையறாத வேக நடைவாய்ந்த மனம், சிவபெருமானின் திருவடியின்கீழ் அடங்கிற்று. அவ்வாறு அடங்கிய மனம் உடையவன் அத்திருவடியையே விரும்பி நின்றனன்" என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

2115. **நின்றவன் நிற்கப் பதினாலிற் பத்துநீத்து**
**ஒன்றிய அந்தக் கரணங்கள் நான்குடன்**
**மன்று கலந்த மனைவாழ்க்கை வாதனை**
**கன்றிய கண்டத்திற் கண்டான் கனவதே**

"சிவனடியார்களே, மேற்சொன்னபடி நின்றார். நிற்க, அங்ஙனம் நில்லாதவர்கள் இருவகையான பொறிகள் பத்தும், கலன்கள் நான்குமாகிய பதினான்கில் பொறி பத்தையும் விட்டுப் பொருந்திய எண்ணம், மனம், எழுச்சி, இறுப்பு என்னும் அகப்புறக் கலன்கள் நான்குடன் புறத்து, மனைவாழ்க்கையின் கண் பயின்று வந்துள்ள பசைத் தொடர்பால் கழுத்தினிடத்தில் கனவு கண்டனர்" என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

2116. **தான மிழந்து தனிபுக் கிதயத்து**
**மான மழிந்து மதிகெட்டு மாலாகி**
**ஆன விரிவறி யாவவ் வியத்தத்தின்**
**மேனி யழிந்து சுழுத்திய [2]தாகுமே.**

"சிவனடியார்களே, கனவின் நிலைக்களமாகிய கண்டத்தைவிட்டுக் கீழிறங்கி, நெஞ்சத்திடத்து தனியே புகுந்து, உலகியற் பெருமையும், அறிவும் அழிந்து உயிர் நிற்கும் அங்கு உயிருக்கு மயக்கம் ஒன்றே உடன் நிற்கும். அங்கு அமைதி, ஆட்சி, அழுந்தல் என்னும் மூன்று குணங்களும் வெளிப்படாது அடங்குநிலை அவ்வியத்தம் அதனையெ விரிவானது, அறியாத அவ்வியத்தம் என்று சொல்லப்படும்" என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

2117. **சுழுனையைச் சேர்ந்துள மூன்றுடன் காட்சி**
**கெழுமிய சித்தம் பிராணன்றன் காட்சி**
**ஒழுகக் கமலத்தின் உள்ளேயிருந்து**
**விழுமப் பொருளுடன் மேவிநின் [1]றானே.**

“சிவனடியார்களே, உறக்க நிலைக்களமாகிய நெஞ்சத்தின்கண் எண்ணமும், உயிர்ப்பும், ஆளும் ஆகிய மூன்று கருவிகளும் தொழிற்படும். பேருறக்க நிலைக்களமாகிய கொப்பூளின் கண் உயிர்ப்பும், ஆளும் ஆகிய இரண்டு கருவிகள் செயற்படும். உயிர்ப்படங்குதலாகிய மூலத்திடத்து ஆள் மட்டும் தொழிற்படும். இங்கு ஆருயிர் ஆள் என்னும் கருவியுடன் கூடி மூலப்பகுதி என்னும் திரிபுணர்ச்சிப் பண்பை நுகர்ந்து கொண்டிருக்கும். இவ் உண்மை அவ்வுயிர் விழித்தெழுந்தபின் இன்புறத்துயின்றேன் என்று சொல்வதன் மூலம் அறிந்து கொள்ளலாம். அவ்வியத்தமாகிய மூலப்பகுதி மாறுபாட்டுணர்வை செய்யும் என்னும் என்ற உண்மையை சிவஞானசித்தியார் என்னும்நூல் கூறுகின்றது என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**2118. தானத் தெழுந்து தருக்குந் துரியத்தின்**
**வானத் தெழுந்துபோய் வையம் பிறகிட்டுக்**
**கானத் தெழுந்த கருத்தின் தலையிலே**
**ஊனத் தவித்தைவிட் டூமனின் றானே.**

“சிவனடியார்களே, பேருறக்கமாகிய தூரியத்தின் கண் ஆருயிர் எழுந்து தருக்குறும். உள்ளமானது எழுந்து உலகம் பின்னிடும்படியாக வேகமாகச் செல்லும். சென்று ஓசையுடன் மூலத்திடத்து ஊமனாகிய ஆருயிர் குறைவுடையதாகிய அறியாமைப் பண்பைச் செய்யும் மூலப்பகுதியின் செயலையும் விட்டு அம் மூலப்பகுதியுடன் மட்டும் தனித்து நிற்கும்” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**2119. ஊமை யெழுத்தொடு பேசும் எழுத்துறில்**
**ஆமை யகத்தினில் அஞ்சும் [1]அடங்கிடும்**
**ஓமய முற்றது வுள்ளொளி பெற்றது**
**நாமய மற்றது நாமறி யோமே.**

“சிவனடியார்களே, ஊமை எழுத்தென்பது பேசாத எழுத்தாகும். ‘ம்’ மெய்யெழுத்துக்கள் உயிரைச் சார்ந்தன்றி ஒலியாது. அதனால் அவை ஊமை எழுத்து எனப்படும். இம்மகரம் ஓமொழியின் கண்ணுள்ளது. பேசும் எழுத்து அகர, உகரங்கள் ஆகும். இந்த அகர, உகரங்கள் மகரத்தோடு பொருந்தி ஓம் என ஆகும். இவற்றில் ‘அ’ ஆற்றலையும் ‘உ’ அறிவையும் குறிக்கும். ஆற்றல் சக்தி. அறிவு சிவம். ஆமையானது தனக்கு இடர் நேரும்போது கால் இரண்டு, கை இரண்டு, தலை ஆகிய ஐந்து உறுப்புக்களையும் உள்ளே இழுத்துக் கொள்ளும். ஏனைய நேரத்தில் வெளிப்படுத்தி நல்லன புரியும். அதுபோல ஆருயிரும் இவ் ஓ மொழிச்சிறப்பால் ஐந்து உறுப்புக்களையும் தீமையின்போது அடக்கி, நல்லவற்றைச் செய்தல் வேண்டும். அப்போது அவ்வுயிர் ஓமொழிவதுமாகி இருப்பதால் தன்னறிவாகிய அகன்றுவிடும். இதுவே நாமமற்ற நன்நிலையாகும்” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

2120. **துரிய மிருப்பதுஞ் சாக்கிரத் துள்ளே**
**நரிகள் பதினாலு நஞ்சுண்டு செத்தன**
**பரிய புரவியும் பாறிப் பறந்தது**
**துரிய மிறந்திடஞ் சொல்லவொண் ணாதே.**

"சிவனடியார்களே, பேருறக்கமாகிய துரியம் இருப்பது நனவாகிய சாக்திரத்தின் உள்ளேயாகும். நரிகள் என்று சொல்லப்படும் அறிதற்கருவிகள் ஐந்தும், செய்தற் கருவிகள் ஐந்தும், அகக்கலன்கள் நான்கும் கூட்டினால் பதின்னான்காகும். இக்கருவிகள் பதின்னான்கும் ஆருயிர் புறத்துப் பரவாமையான் நுகர்ச்சியின்றி நஞ்சுண்டது போல அடங்கின; அப்பொறிகள் புலன் கொள்ளும் புலன்கள் பத்தும் குதிரையை ஒத்துத் தொடர்பின்றிப் பறந்து உயிர்ப்படங்கலாகிய துரியாதீதத்து நிகழும் நிலையில் இன்ப நிலையினை இன்ன தன்மைத்தென்று சொல்ல முடியாது" என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

2121. **மாறா மலமைந்தான் மன்னு மவத்தையின்**
**வேறாய மாயா தநுகர ணாதிக்கிங்கு**
**ஈறாக தேஎவ் வுயிரும் பிறந்திறந்து**
**ஆறாத வல்லினை யாலடி யுண்ணுமே.**

"சிவனடியார்களே, ஆருயிர் திருவடிப்பேறு எய்தும் வரை விட்டு நீங்காது ஒட்டி நிற்கும் மலம் ஐந்தும், மாறா மலம் எனப்படும். இவை ஆருயிர்களின் ஐம்பாட்டிலும் உடன் நிற்கும். இவை நீங்காமையால் மாயா காரியமாகிய உடல், கலன் முதலியவற்றை இன்னும் வேறாகப் பெறுதல் வேண்டும். ஆகையால் உடலில் ஈறு ஏற்படமாட்டாது. அதனால் எத்தகைய உயிரும் பிறந்து இறந்து ஆறாத வல்வினையால் அடியுண்டு துன்புறும்" என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

2122. **உண்ணுந்தன் னூடாடா தூட்டிடு மாயையும்**
**அண்ணல் அருள்பெற்ற முத்திய தாவது**
**நண்ண லிலாவுயிர் ஞானத்தி னாற்பிறந்**
**தெண்ணுறு ஞானத்தின் நேர்முத்தி [1]எய்துமே.**

"சிவனடியார்களே, நுகர்விக்கப்பட வேண்டிய மாயா காரியங்கள் திருவருள் கைகூடும் வரை அழியமாட்டாது. சிவபெருமானின் திருவருளைப் பெற்றால், வீடுபேறு கிடைக்கும். மாயையின் தொடர்பை அறுத்த உயிர்கள் பிறந்தாலும் அப்பிறப்பு திருவடியுணர்வாகிய சிவஞானப் பிறப்பாகும். அப்பிறப்பின்கண் திருவடியுணர்வால் நேர் முத்தியாகிய மீளாத திருவடிப் பேறு கிடைக்கும்" என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

2123. **அதிமூட நித்திரை யாணவ நந்த**
**அதனா லுணர்வோ னருங்கன்ம முன்னித்**
**திதமான கேவல மித்திறஞ் சென்று**

**பரமாகா வையவத் தைப்படு வானே.**

“சிவனடியார்களே, ஆருயிர்களுக்கு ஆணவமிகுதியால் அதிமூட நிலையான உறக்கநிலை உண்டாகும். அதனால் அவ்வுயிர் இருவினைக்கு ஈடான கன்மங்களையே நினைக்கும். நினைத்து கீழலவத்தை என்ற கீழான நிலையை அடையும். இறுதியில் அது சிறப்புநிலை இல்லாத ஐம்பாட்டினை எய்தும்” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

“சிவனடியார்களே, ஆதவன் பொறியியலாளன் எனினும், குடிகாரன். அவன் சிவபக்தனான துரைசிங்கத்தை ஒருநாள் குடிவெறியில் தாக்கிவிட்டான். அதை மேலதிகாரிக்குப் புகாரிட விருப்பமில்லாத துரைசிங்கம் கதிரேசனுக்கு வந்து சொன்னபோது, அவர் சொன்னார்; மகனே நீ சிவனடியவன், கோபம் கொள்ளாதே, யோசித்துப் பார். வினையின் காரணமாகப் பிறப்புண்டாகிறது. அதன் பலன்தான் வாழ்க்கையில் இன்ப துன்பமாக வந்தடைகின்றன. படித்தாலும் ஆணவமிடுக்குள்ளவன் எதையும் ஆராயாது செய்வதால் அவனை அதிமூடன் என்று எமது சமயம் சொல்கிறது. ஆதவன் பெரும் பணக்காரன், அவன் மனைவி பெருந் தொழில் அதிபர். பணம் அளவுக்கதிகமாக இருப்பதால், அவன் பணத்தால் எதையும் செய்துவிடலாமென்ற நினைப்பில் வாழ்கிறான். அதனால் அக்குடும்பத்தை ஊரில் யாரும் மதிப்பதில்லை; துட்டரைக் கண்டால் தூர விலக வேண்டும் என்று ஊரவர்கள் நினைக்கின்றார்கள். அதனால் யாரும் அவனோடு எதுவும் பேசாது விலகிச் சென்று விடுவர். அவனோடு பேச முடியாது. பேசினால் முரட்டுத்தனமாகப் பேசுவான். காவல்துறை அதிகாரிகள் அவனது கையாட்கள். அவன் யாரையும் மதிக்கமாட்டான். நியாயத்தை உணரவும் மாட்டான். அதனால் சிவனிடம் முறையிடு எல்லோரும் அப்படித்தான் செய்கின்றனது என்றவர்.” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**2124. ஆசான்முன் னேதுயில் மான வகர்தமைத்**
**தேசாய தண்டால் எழுப்புஞ் செயல்போன்று**
**நேசாய வீசனு நீடாண வத்தரை**
**ஏசாத மாயாடன் னாலே [1]எழுப்புமே.**

“சிவனடியார்களே, நல்ல ஆசான் கற்பிக்கும்போதும், நன் மாணாக்கர் சிலர் உறங்கவும் செய்வர். பேரருள் உள்ள ஆசான் அந் நன்மாணாக்கரை இனிமையாகப் பேசி, எழுப்புவன் எழும்பாதவிடத்து சிறு கோலின் நுனியில் பூக்களைக்கட்டி மெதுவாக வருடி எழுப்புவான். அதனைத் தேசாய தண்டு என்பர். அதுபோலச் சிவபெருமானும் ஆணவப் பிணிப்பினைப் போக்குவதற்கான செயல்களில் ஈடுபடாத ஆருயிர்களை குற்றமற்ற தூமாயை என்று சொல்லப்படும் கைக் கருவியால் எழுப்பியருளச் செய்வன். அவ்வாறு செய்வது அவ்வுயிர்களின் மீது அவன் வைத்த பேரன்பேயாகும்.”

“சிவனடியார்களே, கதிரேசன் துரைசிங்கத்திற்குச் சொன்னார்; “மகனே சிவபெருமான் தான் படைத்த உயிர்கள் அனைத்தும் பேரின்பமடைவதற்காகத் தனது

திருவருளை வந்தடைய வேண்டும் என்ற விருப்பத்தால் பல செயல்களைச் செய்வான். ஆணவ வல்லிருளில் அகப்பட்டுத் திமிராக நடந்து கொள்பவர்களைத் திருத்துவதற்காக அவன் தூமாயை என்னுங் கருவியின் துணையால் அவர்களைப்பிணிப்பில் இருந்து விடுவிப்பான். அதை அவர்கள் உணர்ந்த பின்புதான் செயற்படுவர். ஆதவனின் அதிகாரப் போக்கு அதிகரித்த வண்ணம் இருக்கிறது. காலப்போக்கில் அது அடங்கும். நீ கவலைப்படாதே என்றவர் " என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**2125. மஞ்சொடு மந்தா கினிகுட மாமென**
**விஞ்சறி வில்லோன் விளம்பு மிகுமதி**
**எஞ்சலி லொன்றெனு மாறென இவ்வுடல்**
**அஞ்சுனு மன்னவனன் றேபோ மளவே.**

"சிவனடியார்களே, நீரும், நீர்க்குடமும் போலச் சிறந்த அறிவில்லாதவன் இறப்பு மெய்யாகிய புத்தியையும், அதன் இயைந்நியங்கும் ஆருயிரையும் கூறுவன். அங்ஙனம் கூறுபவன் இரண்டையும் ஒன்றென்றே கூறிவிடுகின்றனன். அது பொருந்தாது. இவ்வுடல் ஐம்புலன்களை நுகரும். ஆருயிர் நீங்கினால் தனித்துக் கிடக்கும். அவ்வுயிர் நீங்கும் அளவுமே சேர்ந்திருக்கும். தண்ணீரும் குடமும் நீங்கினாலும், மீண்டும் சேர்ந்து கொள்ளும். உயிர் நீங்கினால் மீண்டும் அது உடலுடன் சேராது" என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**2126. படியுடை மன்னவன் பாய்பரி ஏறி**
**வடிவுடை மாநகர் தான்வரும்**
**அடியுடை ஐவரும் அங்குறை வோருந்**
**துடியில்லம் பற்றித் துயின்றனர் தாமே.**

"சிவனடியார்களே, உடம்பைத் தனதாகக் கொண்டு அதை ஆளும் உயிர் இடையறாது இயங்கிக் கொண்டே இருக்கும். அது மனமாகிய குதிரையின் மீது ஏறி அழகுமிக்க அகநகரின் கண் வலம் வருகிறது. அப்போது அறிதற் கருவிகளாக செவி முதல் ஐந்தும், செய்தற் கருவி முதலிய பிற கருவிகளும் புடைபெயராது உறங்கிக் கிடக்கும். அவற்றின் இடமாகத் துடித்துக் கொண்டிருக்கும் இதயம் துடியில்லமாகும்" என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**2127. நேரா மலத்தை நீடைந் தவத்தையின்**
**நேரான வாறுன்னி நீடு நனவினில்**
**நேரா மலரமந்து நேரே தரிசித்து**
**நேராம் பரத்துடன் நிற்பது நித்தமே.**

“சிவனடியார்களே, ஐம்மலங்களின் பிணிப்பால் செம்பொருளை அறியாது துன்பப்படும் ஆருயிர்க் கிழவன் மாறாப் பிறவியில் தள்ளும். அம் மலங்களைத் திருவருளால் ஐம்பாட்டில் காண்பர். காண்பதென்பது நோயால் ஆற்றலை இழந்தவர், அவ் ஆற்றலின் குறைபாட்டை இயலாமை ஆகிய தம் குறைபாட்டில் வைத்து, உணர்வது போன்றது. அதுபோல ஆருயிர்களும் ஐம்பாடாகிய ஐந்தவத்தையில் தம்மையும் செம்பொருளான சிவனையும் உணர்வதாகிய இன்பம் இழந்து துன்பங்களில் வருந்தும் என்பதாகும். அம்மலங்கள் நேரானவாறு நினைப்பதற்கு இடம்பெருகிய நனவினில் ஆகும். நேராவது விட்டு நீங்குவது நனவினில் அவ்வுண்மையை அருளால் கண்டவர் சிவத்துடன் கலந்து என்றும் இன்புறுவர். இதுவே நிலைபெற்ற உலைவில்லாத இன்ப வாழ்க்கையென்பர்” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

## மத்திய சங்கிராவத்தை

**2128. சாக்கிர சாக்கிரந் தன்னில் திரோதாயி**
**சாக்கிர சொப்பனந் தன்னிடை மாமாயை**
**சாக்கிரந் தன்னிற் சுழுத்திதற் காமியஞ்**
**சாக்கிரந் தன்னில் துரியத்து [2]மாயையே.**

“சிவனடியார்களே, நனவின் நனவு என்று சொல்லப்படும் நிலையிலே திரோதாயி தொழிற்படுத்தும், திரோதாயி நடப்பாற்றல், இதுவே நடப்பாற்றல். நனவில் நிகழும் கனவில், கனவில் தூமாயைத் தெமாடர்பினராவர். நனவின் உறக்கத்தாக கன்மத் தொடர்பினராவர். நனவில் பேருறக்கத்துத் தூ மாயைத் தொழிலினராவர்” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**2129. மாயை எழுப்புங் கலாதியை மற்றதின்**
**நேய விராகாதி ஏய்ந்த துரியத்துத்**
**தோயுஞ் சுழுனை கனாநனா வுந்துன்னி**
**ஆயினை னந்தச் சகலத்து ளானே.**

“சிவனடியார்களே, தூமாயையானது உயிர்ப்படங்கலாகிய துரியாதீத நிலையில் உழைப்புக்கருவியாகிய கலாதியுடன் அடங்கி நிற்கும். பேருறக்கத்தின் கண் விளைவுக் கருவியாகிய அராகம் முனைக்கும் உறக்கமாகிய சுழுனையின் கண் உணர்வுக் கருவியாகிய வித்தை முனைத்துக்கூடும். கனவு நிலையில் உழைப்பு முனைத்துக்கூடி உடல் மெய்யாகிய மூலப்பகுதிக்கருவிகள் இருபத்தைந்துடன் தொழிற்படும். நனவு நிலையுடன் எல்லாக் கருவிகளுமாகிய முப்பந்தைந்து கருவிகளுடன் தொழிற்படும்” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**2130. மேவிய அந்தகன் விழிகட் குருடனா**
**மாமயின் முன்னடி காணு மதுகண்டு**
**மேவுந் தடிகொண்டு [1]சொல்லும் விழிபெற**

**மூவயி னான்மா முயலுங் [2]கருமமே.**

“சிவனடியார்களே, ஆணவ மலத்திற்குட்பட்டவன் அறிவுக் கண் இழந்தவன். முகக் கண் இல்லாத குருடனைப் போன்றவன். அப்போது அருளுடையவன் ஒரு கோல் கொடுப்பான். அது தான் அப்போது செய்யத் தக்கது. அதுவே அக் குருடனது விழைவாகிய பற்றுக் கோடாகும். குருடனுக்குக் கோல் வேண்டும் என்ற எண்ணம் கோலைப் பெறுமுன் ஏற்படுவதில்லை. ஆனால் நடக்க வேண்டும் என்ற ஆசை உண்டாவது இயல்பு. அவ் இயல்பால் அவன் கோலைப் பெற நினைக்கிறான். விழியோடு ஒத்துச் சொல்லப்படும் தடியினைக் கொண்டு பொருந்தும். அதுபோல ஒரு மலம் உடையவர், இரு மலமுடையவர், மும்மலங்களையுமுடையவர் ஆகிய முத்திறத்தினருக்கும் பண்டு தொட்டு ஒட்டியுள்ள ஆணவக் குருடு நீங்குவதற்குத் துணையாக மாயா காரிய உடம்பாகிய கோலினைச் சிவபெருமான் படைத்துக் கொடுத்து அருளுகின்றனன். இவ்வுடம்பு பெற்றதும் முத்திறத்து உயிர்களும் தத்தம் கருமங்களிலும் முயலும். இந்த உடல் மாயா காரியமானது; இதை உயிர்கள் பெறுவதன் நோக்கம் அவ்வுயிர்கள் தம்மீது படிந்துள்ளறு ஆணவ மலப்பிணியை நீக்குவதற்கேயாம். இதை யாரும் உணர்வதில்லை. குருடன் கோலுடன் செல்வது போல உயிர் உடலுடன் சென்று தன்னை மலங்களிலிருந்து விடுவித்தல் வேண்டும்.” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**2131. மத்திம மொத்த சிலந்தி வலயத்துள்**
**ஒத்தங் கிருந்து உயிருண்ணு மாறுபோல்**
**அத்தனும் ஐம்பொறி யாடகத் துள்நின்று**
**சத்த முதல்ஐந்துந் தானுண்ணு [1]மாறே.**

“சிவனடியார்களே, சிலந்தியானது தனது வாயால் தன் உடம்பிலிருந்து நூலை இளைக்கின்றது. அதனால் வலையை உண்டாக்கித் தனக்கு வேண்டிய உணவைப் பெற்றுக்கொள்கிறது. மேலும் தான் தங்குவதற்குரிய கூடும் அமைத்துக் கொள்கிறது. அவ்விடத்தை மத்திமம் என்று சொல்லப்படுகிறது. அது போலச் சிவபெருமானும் ஆருயிர்கள், இருவினைக்கீடாக ஆடுதல் புரியும் இடமாக உடம்பை அமைத்தருளியுள்ளான். அவ்வுடலில் இருந்து உயிர் ஆட்டம் புரியும். அத்தனாகிய சிவபெருமானும், ஐம்பொறிகளுடன் சேர்ந்த உடம்பின் அகத்தே அவ்வுயிர் ஐம்புலன்களையும் அனுபவித்தற் பொருட்டு, தானும் உடனிருந்து காட்டிக் காண்பன். ஆகவே சிவபெருமானும் அவ்வுடம்பின் அகத்தே உயிர்க்குள் உயிராகத் தங்கி அருளுகின்றனன். தன்னைத் தாங்கும் தகுதியையும், அதற்கு அவனே அளித்தருளினன். சிவனடியார்களே உயிர்களுக்கு உடம்பைக் கொடுத்து, ஐம்புலன்களையும் அதனுள் அடக்கித் தானும் கூட இருந்து செயற்படுத்துகிறான். இந்த உண்மையைப் புரியாதவர்கள் தான் தாம் தாம் எல்லாவற்றிற்கும் காரணகர்த்தா என்கின்றனர். கதிரேசன் எல்லாம் சிவன் செயல், அவன் சொல்கின்றான் நான் செய்கின்றேன் என்றார்.

ஆதவன் நான் கற்றலின் பொறியியலாளன். நான் எனது அறிவால் யாவற்றையும் செய்கின்றேன். அது எனது திறமை என்கிறான். அண்மையில் அவனின் தலைமையில் கட்டப்பட்ட கட்டிடம் ஒன்று இடிந்து விழுந்துவிட்டது. அதற்குக் காரணம் சீரற்ற வானிலை என்கிறான். இது தான் ஆணவத்திற்கும், ஆன்மிகத்திற்கும் உள்ள வித்தியாசம்" என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**2132. வைச்சன் வச்சு வகையிரு பத்தஞ்சு**
**முச்சு முடனணை வானொரு வன்னுளன்**
**பிச்சன் பெரியன் பிறப்பிலி என்றென்று**
**நச்சி யவனருள் நானுய்ந்த [2]வாறன்றே.**

"சிவனடியார்களே, சிவபெருமான் ஆருயிர்கள் உய்யும் பொருட்டுவேண்டுவார் வேண்டும் திருக்கோலங் கொண்ட திருவுருவங்கள் இருபத்தைந்து ஆகும். அவற்றை வைச்சன வாகிய அச்சுவகை என்பர். அவற்றின்கண் அவன் அமர்ந்திருந்து அருளிச் செய்வான். அவன் அனைத்துயிர்களிடத்தும், அனைத்துப் பொருள்களிடத்தும் பேரன்பு பூண்ட பித்தன். மன்னவர், விண்ணவர் அனைவருக்கும் அவரவர் தகுதிக்கேற்ற வகையில் பெருமையளிப்பவன். பிறப்புக்களற்ற அவனைத் திருமுறைகளால் பாடிப் பணிகின்றவர்கள் நச்சுவராவர். சிவபெருமான் தன்னைப் பாடிப் பணிபவர்களுக்கு இனியவனாவான்."

"சிவனடியார்களே, சிவபெருமானின் திருக்கோலங்கள் இருபத்தைந்து. இதில் எந்தவொன்றையாவது வணங்கினால், அவன் அதில் தோன்றி வரமளிப்பான்" என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**2133. நாலா றுடன்புருட னற்றத் துவமுடன்**
**வேறான ஐயைந்து மெய்ப்புரு டன்பரங்**
**கூறா வியோமம் பரமெனக் கொண்டனன்**
**வேறான நாலேழு வேதாந்த தத்வமே.**

"சிவனடியார்களே, உடன் மெய் இருபத்து நான்கும் ஆன்ம தத்துவம் எனப்படும். இவற்றுடன் ஆளின் சிறப்பு நிலையையும், சேர்த்தால் இருபத்தைந்தாகும். சிறப்புநிலை குறிப்பதே 'புருடன் நற்தத்துவம்' என்பதாகும். உணர்வு மெய் ஏழாகும். உணர்த்து மெய்யினை 'வியோமம்பரம்' என்று சொல்வர். அஃது ஐந்து மெய்யாகும். இம் மூன்றும் கூடிய மெய் முப்பத்தாறாகும். அதுவே அருஞ்சைவர் தத்துவம்" என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**2134. ஏலங்கொண் டாங்கே இடையொடு பிங்கலை**
**கோலங்கொண் டாங்கே குணத்தி னுடன்புக்கு**

**மூலங்கொண் டாங்கே முறுக்கிமுக் கோணிலுங்**
**காலங்கொண் டானடி காணலு மாகுமே.**[1]

"சிவனடியார்களே, நாடிகள் பத்தினுள்ளும் சிறப்புடையன இடப்பால் நாடியும் வலப்பால் நாடியாகிய பிங்கலையுமாகும். அவ்வுயிர்ப்புக் கோலத்தின் ஆருயிர் உலவும். மூலத்திடத்துள் புகும். அங்கிருந்து எல்லா நாடிகளையும் எழுச்சி பெறச் செய்யும். இதுவே முறுக்குதல் எனப்படும். அகத்தே காணப்படும் மூன்று மண்டலங்களிலும் விரவித் தனது உண்மையைக் காண்பிக்கும். அங்ஙனம் காணப்படும் ஆருயிர் சிவபெருமானின் திருவடியைச் சாரும். சிவபெருமான் மாயா காரியங்களை உண்டாக்குவதற்காகத் தானே தன் திருவருளைக் கொண்டு, காலமெய்யாகத் திகழ்வன். அதனால் காலங்கொண்டானென அழைக்கப்படுகிறான்" என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**2135. நாடிகள் பத்தும் நலந்திகழ் வாயுவும்**
**ஓடிய காலில் ஒடுங்கி யிருந்திடுங்**
**கூடிய காமங் குளிக்கும் இரதமும்**
**நாடிய நல்ல மனமும் உடலிலே.**

"சிவனடியார்களே, நாடிகள் பத்தும், உயிர்ப்புப் பயிற்சியால் நடு நாடி வழியாகச் சென்று ஒடுங்கும். அப்போது மிகுந்த இன்பமும் அனுபவிக்கும். சுவையும் சிவபெருமானை நல்ல மனதுடன் தினமும் நினைக்கும் நற்புண்ணியமும் கிடைக்கும். இவ் நன்மைகள் உடலில் நிகழும்" என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**2136. பத்தொடு பத்துமோர் மூன்றும் பகுதியும்**
**உய்த்த துரியமும் உள்ளுணர் காலமும்**
**மெய்த்த வியோமமு வேலைத் துரியமுந்**
**தத்துவ நாலே ழெனவுன்னத் தக்கதே.**[1]

"சிவனடியார்களே, அறிதற்கருவிகள் ஐந்தும், செய்தற் கருவிகள் ஐந்தும் இவற்றுக்குரிய புலன்கள் பத்தும், அகப் புறக்கலன்கள் நான்கும், தனியாளாகிய ஆள் ஒன்றும், காலம் ஒன்றும் வியோமம் என்று சொல்லப்படும். ஆண்டான் ஒன்றும், மேலைத்துரியம் அல்லது திருவருட் பேருறைவு என்று சொல்லப்படும். அத்தன் என்று சொல்லப்படும் சிவனும் ஆகிய இருபத்தெட்டு மெய்களும் வேதாந்த மெய்நெறித் தத்துவங்களாகும்" என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**2137. விளங்கிடு முந்நூற்று முப்பதோ டொருபான்**
**தளங்கொ ளிரட்டிய தாறு நடத்தால்**
**வணங்கிடு மைம்மலம் வாயு வெழுந்து**
**விளங்கிடு மவ்வழி தத்துவ நின்றே.**

"சிவனடியார்களே, விளக்கம் மிக்க முந்நூறும், முப்பதைப் பத்தினால் பெருக்கவரும் முந்நூறும், இரண்டுஞ் சேர்ந்து அறுநூறுமாகும். இரட்டியதாறு என்பது

ஆறை ஆறால் பெருக்குவது. அது முப்பத்தாறையும் அறுநூறால் பெருக்க இருபத்தோராயிரத்து அறுநூறு ஆகும். இதுதான் நாம் ஒரு நாளைக்கு விடும் உயிர்ப்பாகும். உயிர்ப்பென்பது சுவாசம். இவற்றுள் நம்மகத்துள்த் தங்குவது ஏழாயிரத்து இருநூறாகும். இக்கணக்கின்படி ஒரு நாளைக்குச் செலவாகும் உயிர்ப்பு இருபத்தோராயிரத்து அறுநூறு. இவற்றுள் நம்மகத்துள்த் தங்குவது ஏழாயிரத்து இருநூறு. மிகுதி பதின்நான்காயிரத்து நானூறு நமது வாழ்நாளாகிய இருப்பு உயிர்ப்பில் இருந்து நாள்தோறும் செலவாகிறது. அதனால் வாழ்நாள் மிகவிரைவில் முடிந்துவிடும். அவ்வாறு நேராமல் இருப்பதற்கு உயிர்ப்புப் பயிற்சியைத் தினமும் செய்தல் வேண்டும். உயிர்ப்புப் பயிற்சி என்பது, யோகாசனம். பொன்னையும், பொருளையும் தேடுவதுபோல உயிர்ப்பைத் திறந்த வெளியில் நன்றாக நிமிர்ந்து இருந்து காற்றை உள்ளே இழுத்துச் சேமித்து வைத்துப் படிப்படியாக விடுதல் வேண்டும். இதை ஆச்சிரமத்தில் வந்து கற்றுக் கொள்ளலாம்" என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**2138. நாலொரு கோடியே நாற்பத்தெண் ணாயிர**
**மேலுமோ ரைந்நூறு வேறா யடங்கிடும்**
**பாலவை தொண்ணூறோ டாறுட் படுமவை**
**கோலிய ஐயைந்து ளாகுங் குறிக்கிலே.**

"சிவனடியார்களே, நான்கு கோடியே நாற்பத்தெண்ணாயிரத்து ஐந்நூறு மெய்கள் சிறப்பாகக் காணப்படும். அவை அனைத்தும் தொண்ணூற்றாறு என்று கூறப்படும் மெய்களுள் அடங்கும். அவற்றையும் அடக்கிக் கூறினால் இருபத்தைந்து மெய்களுள் அடங்கும். மெய்கள் என்பது தத்துவங்கள்" என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**2139. ஆகின்ற தொண்ணூறோ டாறும் பொதுஎன்பர்**
**ஆகின்ற வாறா றருஞ்சைவர் தத்துவம்**
**ஆகின்ற நாலேழ்வே தாந்தி வயிணவர்க்கு**
**ஆகின்ற நாலாறை யைந்துமாயா வாதிக்கே.**

"சிவனடியார்களே, சிவபெருமானனின் திருவுள்ளக் குறிப்பினால், முதற்காரணமாகிய மாயையிலிருந்து, காரியமாகத் தோன்றும் மெய்கள் தொண்ணூற்றாறு. இத் தொண்ணூற்றாறினையும் பல்பேறு கொள்கைகளை-யுடையவர்களும் பொதுவாக ஒப்புக் கொள்கின்றனர். சிறப்பாக ஒப்புக்கொள்ளும் மெய்ம்முறையில் வேறுபடுகின்றனர். முப்பத்தாறு தத்துவங்கள் சைவர்களுக்குரியவை. இருபத்தெட்டுத் தத்துவங்கள் வேதாந்திகளுக்குரியவை. இருபத்து நான்கு தத்துவங்கள் வைணவர்களுக்குரியவை. இருபத்தைந்து தத்துவங்கள் மாயாவாதிகளுக்குரியவை" என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**2140. தத்துவ மானது தன்வழி நின்றிடில்**
**வித்தக னாகி விளங்கி யிருக்கலாம்**
**பொய்த்தவ மாமவை போயிடு மவ்வழி**
**தத்துவ மாவ தகரஎழுத் தாமே.**

"சிவனடியார்களே, முப்பத்தாறு தத்துவங்களின் உண்மையைத் திருவருளால் உணர்ந்து இவை அனைத்தும் நாமல்லவென்றும், நம்மால் ஆக்கப்பட்டன அல்ல என்றும், சிவபெருமானால் ஆக்கி அளிக்கப்பட்ட இரவற் பொருளென்றும் நினைத்து, மெய்யுணர்வுடன் அவற்றைப் பேணி அவனது திருத்தொண்டிற்கே ஒப்படைத்துத் தினமும் அவனை வணங்கித் திருத்தொண்டுகள் செய்து, அவன் நினைவாக வாழ்வோருக்கு அவை ஒளியாக வெளிப்பட்டுத் திகழும். அத்தகையோர் திருவடி உணர்வாகிய சிவஞானம் கைவரப் பெற்றோராவர்" என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**2141. அறிவொன் றிலாதன ஐயேழு மொன்றும்**
**அறிகின்ற என்னை அறியா திருந்தேன்**
**அறிகின்றாய் நீயென் றருள்செய்தார் நந்தி**
**அறிகின்ற நானென் றறிந்துகொண் [1]டேனே.**

"சிவனடியார்களே, முப்பத்தாறு தத்துவங்களும் அறிவில்லாத பொருட்களாகும். இவற்றோடு கலந்திருக்கும் ஆருயிர்கள் இவற்றின் உண்மையினை அறியாது இருக்கின்றன. அதனால் அவைகள் தம்மைப்பற்றியும் அறியவில்லை. சிவபெருமானாகிய நந்தி திருவருளால் இவற்றை உணர்த்தியருளினன். அம்முறையால் நான் அறிந்து கொண்டேன் என்று திருமூலர் கூறுகின்றார்" என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**2142. சாக்கிர சாக்கிர மாதி தனில்ஐந்தும்**
**ஆக்கு மலாவத்தை யைந்து நனவாதி**
**போக்கி யிவற்றொடும் பொய்யான வாறாறு**
**நீக்கி நெறிநின்றொன் றாகியே நிற்குமே.**

"சிவனடியார்களே, நனவின் நனவு முதலாகச் சொல்லப்படும் ஐம்பாடுகளும், புலம்புடன் கூடி எய்தும் ஐம்பாடுகளும், நனவு முதலாகச் சொல்லப்படும் ஐந்தும், தனக்கு வேறானவை என்றும் உண்மை கண்டுணர்ந்து நீங்கி நிலைபேறில்லாத முப்பத்தாறு மெய்களும், அங்ஙனமே வேறெனக் கண்டு நீங்கினோன் செந்நெறியில் நிற்பவனாவன்; அவன் திருவருளால் சிவத்துடன் ஒன்றி ஒன்றாகவே நிற்பன்" என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**2143. ஆணவ மாதி மலமைந் தலரோனுக்கு**
**ஆணவ மாதிநான் காமாற் கரனுக்கு**
**ஆணவ மாதிமூன் றீசர்க் கிரண்டென்ப**

**ஆணவ மொன்றே சதாசிவற் காவதே.**

"சிவனடியார்களே, ஆணவம், கன்மம், மாயை, மாயையாக்கம் நடப்பாற்றலாகிய திராதாயியாகிய மறைப்பாற்றல் என்னும் ஐந்து மலங்களும் நீங்கப் பெறாத நிலையில் உள்ளவன் அயன். மாயையாக்கம் ஒழிந்த ஏனைய நான்கு மலங்களும் நீங்கப் பெறாதவன் அரி. ஆணவம், கன்மம், திராதாயியாகிய மறைப்பாற்றல் ஆகிய மூன்றும் நீங்கப் பெறாதவன் அரன். ஆணவம் மறைப்பாற்றல் இரண்டும் நீங்கப் பெறாதவன் ஆண்டான். ஆணவம் மட்டும் நீங்கப் பெறாதவன் அருளோன்" என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

## அத்துவாக்கள்
## (வழிகள்)

**2144. தத்துவம் ஆறாது தன்மனு வேழ்கோடி**
**மெய்த்தகு வன்னம்ஐம் பானொன்று மேதினி**
**ஒத்திரு நூற்றிரு பான்நான்கெண் பானொன்று**
**வைத்த பதங்கலை யோரைந்தும் [1]வந்தவே.**

"சிவனடியார்களே, தத்துவங்கள் மண் முதல் சிவம் ஈறாக முப்பத்தாறு. மந்திரங்களின் முடிபுகள் எட்டு. அவை நம, சுவாகா, சுவதா, படு, வவுசற், வசட் என்பனவாகும். வன்னம் என்று சொல்லப்படும் எழித்தூக்கள் ஐம்பத்தொன்று உலகங்கள் இருநூற்று இருபத்து நான்கு, பதங்கள் (சொற்கள்) எண்பத்தொன்று. கலைகள் ஐந்து" என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**2145. நாடிய மண்டல மூன்று நலந்தெரிந்து**
**ஒடு மவரோ டுள்ளிரு பத்தைஞ்சுங்**
**கூடுவர் கூடிக் குறிவழி யேசென்று**
**தேடிய பின்னர்த் திகைத்திருந் தார்களே.**

"சிவனடியார்களே, உலகத்திலே நாடப்படும் மண்டிலங்கள் மூன்று. சிவகுருவினால் அவற்றின் நன்மைகளை அறிந்து வாழ்பவரிடம் கலந்து இருப்பது இருபத்தைந்து தத்துவங்களாகும். அவற்றுடனும் சிவகுருவின் உபதேச மொழியுடனும் சென்று காண்பவர்களுக்கு கருவிகள் எதுவும் தோன்றாது. அதனால் அவர்கள் திகைப்புற்றிருப்பாரை ஒப்பர்" என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**2146. சாக்கிர சாக்கிர மாதித் தலையாக்கி**
**ஆக்கிய தூல மளவாக்கி அதீதத்துத்**
**தாக்கிய வன்பான தாண்டவஞ் சார்ந்தது**
**தேக்குஞ் சிவமாதல் ஐந்துஞ் [1]சிவாயமே.**

“சிவனடியார்களே, நனவின் நனவினை முதற்கொண்டு பருவுடற்கண்ணுள்ள உச்சித் தொளையாகிய வெளிவரைநின்று அப்பால் அருள் வெளியின்கண் அருளப்பெறும் திருக்கூத்தினைக்கண்டு வழிபட்டு அதன்மேல் தூவாமெய்யின்கண் காணப்படும் சிவ மெய்கள் ஐந்தும் உணர்வுறுவர். அத்தகையவர்களுக்கு எல்லாம் சிவமயமாகவே இருக்கும்” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

## சுத்த நனவாதி பருவம்

**2147. நனவாதி தூலமே சூக்கப் பகுதி**
**அனதான் ஐஐந்தும் விந்துவின் சத்தி**
**தனதா முயர்விந்து தானின்று போந்து**
**கனவா நனவிற் கலந்ததிவ் வாறே.**

“சிவனடியார்களே, நனவு முதலாகச் சொல்லப்படும் பருமைப் பகுதியே நுண்மையான பகுதியும், அத்தன்மையவாகிய இருபத்தைந்து மெய்களும் தூ மாயை என்று சொல்லப்படும் மாமாயையில் இருந்து தோன்றியவையாகும். அவற்றுடன் கலந்து தொழிற்படும் ஆருயிரின் நிலை தூநிலையாகும். அந்நிலை நனவிற் கனவு போன்று காணப்படும்” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**2148. நனவில் அதீதம் பிறந்தார் கிடந்தார்**
**நனவில் துரியம் [2]நிகழ்ந்தார் தவழ்ந்தார்**
**நனவிற் சுழுத்தி நடந்தார் வளர்ந்தார்**
**நனவில் கனவோட னன்செய்தி யாமே.**

“சிவனடியார்களே, நனவின்கண் உயிர்ப்படங்கும் நிலையினை அடைந்தவர்கள் தூய நிலைக்கண் பிறந்தவராவர். அவர்களது நினைவுகளெல்லாம் திருவடியைச் சார்ந்திருக்கும். இதனை ஞானநிலம் என்பவர் தூய நனவிற் பேருறக்க நிலை நிகழ்ந்தவரது நிலையை ஒக்கும். நனவின் உறக்கநிலை தவழ்தாரோடு ஒக்கும். நனவின் கனவுநிலை வளர்ந்து நடந்தாரோடு ஒக்கும். நனவின் உறக்கநிலை தவழ்ந்தாரோடு ஒக்கும். நனவின் கனவுநிலை வளர்ந்து நடப்பரோடு ஒக்கும். நனவின் நனவுநிலை ஓடுபவர்களை ஒக்கும். இவையாவும் நற்றவங்களாகும்” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**2149. செறியுங் கிரியை சிவதத் துவமாம்**
**பிறிவிற் சுகயோகம் பேரருள் கல்வி**
**குறிதற் றிருமேனி குணம்பல வாகும்**
**அறிவில் சராசரம் அண்டத் [1]தளவே.**

“சிவனடியார்களே, தூயநிலைக் கண்ணுள்ளார். சாக்கிரத்தே அதீதத்தைப் புரியும் தபோதனர் ஆகையால் அவர் புரிந்தருளும் பொருந்திய நோன்புகள் சிவதத்துவங்களாகும். அதுபோலப் பிறிவில்லாத செறிவு திருவருட் செறிவாகும். அவரது திருமேனி திருவடியுணர்வின் அருள் விளக்கமாகும். அவரது அறிவு சிவபெருமானின் எண் குணங்களாகும். அவரது நிலை இயங்குதிணை நிலத்தினை வாழ் உயிர்கள் அனைத்திற்கும் இருப்பிடமாகும். அது அறிதற்கு அரியது” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**2150. தேசு திகழ்சிவஞ் சத்தி சதாசிவம்**
**ஈசன் நல்வித்தை இராகங் கலைகாலம்**
**ஆசகல் வித்தை நியதி மகாமாயை**
**ஆசில் புருடாதி ஆன்மாவீ [2]றாறே[3].**

“சிவனடியார்களே, திருவருள் நேரே தொழில்புரியும் இடம் சிவமெய் ஆகும். சிவமெய்யே சிவதத்துவமாகும். அவை அத்தன், அன்னை, அருளோன், ஆண்டான், ஆசான் என்பன. இவை தூமாயையின் கண் உள்ளன. தூமாயையின் தோற்றங்கள் பின்வருமாறு ஊழி, ஊழ், தொழில், அறிவு, விழைவு, ஆள். மருள் என ஏழாகும்” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**2151. ஆணவ மாயையுங் கன்மமு மாமலங்**
**காணு முளைக்குத் தவிடுமி யான்மாவுந்**
**தாணுவாய் யொவ்வாமற் றண்டுல மாய்நிற்கும்**
**பேணுவாய் மற்றுநின் பாசம் [1]பிரித்துமே.**

“சிவனடியார்களே, ஆணவம் உமியை ஒத்தது. மாயை தவிட்டை ஒத்தது. கன்மம் முறையை ஒத்தது. ஆருயிர் அரிசியை ஒத்தது. ஆவி கலப்புத் தன்மையால் சிவனுடன் புணர்ந்து பிரிவின்றி நிற்பினும் அரிசியை ஒக்குமேயின்றி சிவனை ஒக்காது. திருவருளால் உயிர்களது பாசங்களைவிட்டு விலகிச் சிறப்பை அருளும் சிவபெருமானின் திருவடிப் பெருமையை பேணுதல் வேண்டும்” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**2152. பசுக்கள் பலவண்ணம் பாலொரு வண்ணம்**
**பசுக்களை மேய்க்கின்ற ஆயன்ஒரு வண்ணம்**
**பசுக்களை மேய்க்கின்ற ஆயன்கோல் போடிற்**
**பசுக்கள் தலைவனைப் பற்றி [2]விடாவே.**

“சிவனடியார்களே, ஆருயிர்கள் பல. அவை பல்வேறு வகைப்பட்டன. எனினும் அவற்றின் அறிவு நிலை ஒன்று. அதாவது எல்லா உயிர்களும் சிவபெருமான் விளக்க விளங்கும் சிற்றறிவுடையவை. அவை ஆணவமலத்தின் பிணிப்பில் உள்ளன. அதற்கு உதாரணம் பசுக்கள் பல நிறத்தை உடையன. ஆனால் அவற்றின்பால் தூய வெண்நிறத்தை உடையது. இவ் ஆருயிர்களை இயக்கும் சிவபெருமான் ஒருவனே.

அவன் முற்றுணர்வினன். அதற்கு உதாரணம் பசுக்களை மேய்க்கும் ஆயன். அவன் மேய்த்தல் தொழிலுக்குரிய கோலைக் கீழே போட்டுவிட்டால் அப்பசுக்கள் மேய்ப்பவனைச் சூழ்ந்து நிற்கும். கோல் தான் அவற்றைச் செயற்படுத்தி ஒழுங்கமைப்பது" என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**2153. பருவூசி ஐந்துமோர் பையினுள் வாழும்**
**பருவூசி ஐந்தும் பறக்கும் விருகம்**
**பருவூசி ஐந்தும் பனித்தலைப் பட்டாற்**
**பருவூசிப் பையும் பறக்கின்ற வாறே.**

"சிவனடியார்களே, செவி, மெய், கண், வாய், மூக்கு என்ற ஐம்பொறிகள் தோற் பையாகிய உடம்பினுள் வாழ்கின்றன. அவ்வைந்தும் பறக்கும் காகங்களாக உருவகிக்கப்பட்டுள்ளன. அப்பொறிகள் ஐந்தும் இளைத்துக் களைத்து வருந்துமேயானால் பொறிகள் வலுவிழந்து இறந்துவிடும்" என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**2154. உடலிந் தியமனம் ஒண்புத்தி சித்தம்**
**அடலொன் றகந்தை அறியாமை மன்னிக்**
**கெடுமவ் வுயிர்மயல் மேலுங் கிளைத்தால்**
**அடைவது தானேழ் நரகத்து ளாயே.**

"சிவனடியார்களே, உடலில் காணப்படும் புறக்கலன்களாகிய பொறிகள் ஐந்தும், அகப் புறக்கலன்களாகிய எண்ணம், மனம், எழுச்சி, இறுப்பு என்னும் அந்தக்கரணங்கள் நான்கும் ஆணவத்தின் வழியாக நின்று அறியாமையைக் கொடுத்து ஆருயிரைக் கெடுக்கும். அப்போது ஆருயிராகிய கிழவர் பொறி வழிச் சென்று செய்வதறியாது தன்வயமிழந்து செய்யத்தாகாதவற்றைச் செய்து ஏழ் நரகத்தில் விழுந்து மீளாது துன்பப்படும். சாதாரணமாக இது தான் நடைபெறுகிறது. ஆதவன் நன்கு படித்தவன், பொறியியலாளன், தான் தான் பெரியவனென்று நினைத்து தான் நினைத்தபடி கட்டிடத்தைக் கட்டியதால் தான் அது இடிந்து விழுந்தது. அன்று வானிலை அவதான நிலையம் புயலோடு கூடிய மழை பெய்யும் என்று சொன்னதை ஆதவன் நம்பவில்லை. இயற்கையைக் கணிக்கமுடியாது. இவ்வாறு சொன்ன பலவேளைகளில் சரியான வெயில் எறித்தது. வெயில் எறிக்கும் எனும்போது மழை பெய்திருக்கு என்று கூறியவாறு செயற்பட்டான். அன்று இரவு இடியுடன் கூடிய மழையும் புயலும் வீசியதால் அவன் புதிதாகக் கட்டிய கட்டிடத்தின் பெரும்பகுதி இடிந்து விழுந்து விட்டது. இதற்குக் காரணம் ஆணவம். ஆணவம் மற்றவர் சொல்வதைக் கேளாது பொறிகளும் கட்டுப்படாது. அதனால் ஆதவனுக்கு பல இலட்ச ரூபா நட்டமேற்பட்டது" என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**2155. தற்றெரி யாத வதீதந்தற் காணவஞ்**
**சொற்றெரி கின்ற துரியஞ்சொற் காமியம்**
**பெற்ற சுழுத்திப்பின் பேசுறுங் காதலா**
**மற்றது வுண்டிக் கனநன வாதலே.**

“சிவனடியார்களே, ஆணவமயமான உயிர் தன்னை அறியாது நிற்கும். இந்நிலை அப்பால் நிலையாகும். அப்பால் நிலை துரியாதீத நிலை. ஆணவத்தின் ஆற்றாமையைக் குறைக்கும்பொருட்டு தொன்மையான கன்மத்தைச் சேர்த்து வைப்பான். அதனால் அது பேருறக்க நிலையாகும். பின் வினைக்குப் பற்றுக்கொடும், செய்தற்கிடனும் வினைப்பயனுமாகத் திகழும் மாயையினைப் பொருத்துவிப்பான். அந்நிலை உறக்க நிலையாகும். கனவு நனவு ஆகிய இரண்டின் கண்ணும் முறையே நுண்ணிய நுகர்வும், பாரிய நுகர்வும் உள்ளன. அதனால் அவ்விருநிலையும் நுகர்வு நிவைலயாகும்.”

“சிவனடியார்களே, ஆதவன் கட்டிடத்தைத் தொடர்ந்து கட்டும்படி பணித்தபோது மேற்பார்வையாளனான சங்கரன் காலநிலை சரியில்லாததால் கட்டிடத்தைக் கட்டாமல் விடுவோம் எனச் சொல்ல நினைத்தான். ஆனால் அவனது உதவியாளனான பாஸ்கரன் சொன்னான்; ‘அவர் யாரினது பேச்சையும் கேட்க மாட்டார். நீ சொல்லி மனவருத்தப்படாதே’ என்றதால் சங்கரன் சொல்லவில்லை. மறுநாள் கதிரேசன் சங்கரனுக்குச் சொன்னான்; ‘சங்கரா நீ சிவனடியான், உனக்கு யாவும் தெரியும். சிவபெருமான் ஆணவத்தை நீக்குவதற்காக ஊக்கத்தைச் சேர்ப்பிப்பான். அதன்பின் மாயையைப் பொருத்தவிப்பான். அப்போதாவது உயிர் தனது நிலையை உணருதல் வேண்டும். அப்படியிருந்தும் உணராதவர்களைத் திருத்த முடியாது. எல்லாவிடயங்களிலும் யாரினதும் சொற்களைக் கேளாமையால் தான் துன்பப்படுகின்றான். சாதாரணமான அறிவால் உணரலாம். இல்லாவிட்டால் சிவன் அறிவுறுத்தும்போது உணரலாம். அல்லது அனுபவங்களால் உணரலாம். இவற்றால் உணராதவர்கள் திருந்தமாட்டார்கள்” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**2156. நனவிற் கனவில்லை ஐந்து நனவிற்**
**கனவிலாச் சூக்குமங் காணுஞ் சுழுத்தி**
**தனலுண் பகுதியே தற்கூட்டு மாயை**
**நனவிற் றுரிய மதீதந் தலைவந்தே.**

“சிவனடியார்களே, நனவு நிலையில் கனவு வராது. அதனால் ஐம்பொறிகளும் செம்மையாகத் தொழிற்படும். நனவின்பேகாது கனவு நிகழாத உறக்கம் சுழுத்தி எனப்படும். அதில் மனம் முதலிய நுண்பொறிகள் தொழிற்படும். தன்னைச்

சார்ந்துள்ள மாயை என்னும் மூலப்பகுதியின் நுகர்வே பேருறக்க நிலையாகும். இது தன்னை வேறு என்று கருதிய நிலையாகும்."

"சிவனடியார்களே, பட்டப்பகலில் வேலை செய்து கொதண்டிருக்கும் நனவு நிலையில் கனவுகள் வராது. அப்பொழுது நம்பொறிகளும் நிதானமாக வேலை செய்யும். அந்த நிலையில் கனவு வராத உறக்கத்தைச் சுழுத்தி என்பார்கள். பகலிலும் நனவு நிலையில் கனவுகாணும் நிலை சிலருக்கு உண்டாகும்; தன்னை உயர்வாகக் கருதி மற்றவர்களை மதிக்காதுவிடல். தான் தான் எல்லாம் தெரிந்தவன் என்ற நினைவு. இது பகற்கனவாகும். பகற்கனவு காணாத நிலைதான் சுழுத்தி. ஆதவன் பகற்கனவு காண்பவன், பகற்கனவு காண்பவர்களை ஆணவம் எப்போதும் தன் பிடிக்குள் வைத்திருக்கும். ஆதவன் அப்படியானவன்" என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**2157. ஆறாறில் ஐயைந் தகல நனாநனா**
**வுறா மலைவிட வாகு நனாக்கனா**
**வேறான ஐந்தும் விடவே நனாவினில்**
**ஈறாஞ் சுழுத்தி யிதின்மாயை தானே.**

"சிவனடியார்களே, அருஞ்சைவர் மெய்கள் முப்பத்தாறு. அவற்றுள் உடன் மெய் இருபத்திநான்கு. உணர்வு மெய் ஏழு, ஆள் ஒன்றுமாக இருபத்தைந்து கருவிகளும், நீங்க எஞ்சியுள்ள உணர்த்து மெய் ஐந்தும், உணர்வு மெய்களுள் ஊழி, ஊழ், உழைப்பு, உணர்வு, உறுப்பு, மருள் என்னும் ஆறும் ஆகப் பதினொன்றும் நனவின் நனவில் தொழிற்படும். உவப்பு, விளைவு, அராகம், நனவின் கனவு, சாக்திரச் சாக்திரம், நனவின் கனவு உணர்த்தும் மெய் ஐந்தும் நீங்கியநிலை. ஊழி, ஊழ், உழைப்பு, உணர்வு, உறுப்பு, மருள் என்னும் உணர்வு மெய், ஆன் நீங்கிய ஆறும், தொழிற்படும். இதுவே நனவிற் கனவாகும். இவ்வாறு மிகவும் நுண்மையாக நிகழும் நிலை நனவின் உறக்கமாகும். நனவில் பேருறக்கம் மருளுடன் மட்டும் கூடி நிற்றல் ஆகும்" என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**2158. மாயையழல் வந்த புருடன் துரியத்தில்**
**ஆய முறைவிட் டதுவுந்தா னன்றாகிச்**
**சேயகே வலவிந் துடன்செல்லச் சென்றக்கால்**
**ஆய தனுவின் பயவில்லை யாகுமே.**

"சிவனடியார்களே, பேருறக்க நிலையாகிய துரியத்தில், ஆளுடன் மட்டும் அருளி நிற்கும். அதற்கப்பால் அந்நிலையையுங் கடந்து அப்பால் நிலையாகிய புலம்பின் கண் மாயையுடன் செல்லும். அவ்வாறு நிற்கும் நிலையில் மாயாகாரிய உடம்பு இருந்தும் வினை நிகழ்ச்சி இல்லாமையால் பயன் ஏதும் இல்லை" என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**2159. அதீதத் துரியத் தறிவனாம் ஆன்மா**
**அதீதத் துரிய மதனாற் புரிந்தால்**
**அதீதத் தெழுந்தறி வாகிய மானன்**
**முதிய அனலிற் றுரியத்து முற்றே.**

"சிவனடியார்களே, பேருறக்கத்தின் கண் ஆருயிர் கருவிகளுடன் கூடாமல் தன்னை வாய் அறிவாய் நிற்கும். அந்நிலையில் திருவருளின் துணையால், உறுதியாக நின்றால் அப்பால் நிலையில் கிளர்ந் தெழுந்த அறிவாகிய ஆருயிர் முதிய அனல் என்று சொல்லப்படும். சிவபெருமானாகிய பேரருள் சுடரில் சேர்ந்து நிலைபெற்று நிற்கும்" என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**2160. ஐயைந்து பத்துடன் ஆனது சாக்கிரங்**
**கைகண்ட ஐயைந்திற் கண்டங் கனாஎன்பர்**
**பொய்கண்ட மூவர் புருடன் சுழுனையின்**
**மெய்கண் டவனுந்தி மேவல் [1]இருவரே.**

"சிவனடியார்களே, ஆருயிர்கள் ஒவ்வொரு நாளும் எய்தும் நிலை ஐம்பாடு எனப்படும். அவற்றுள் நனவுநிலை புருவ நடுவாகும். அந்நிலையில் தொழிற்படும் கருவிகள் முப்பத்தைந்து. கனவு நிலை கருத்தின் கண்ணாகும். இங்கு தொழிற்படும் கருவிகள் இருபத்தைந்து. உறக்கநிலை நெஞ்சத்தின் கண்ணாகும். இங்கு தொழிற்படும் கருவிகள் மூன்று. பேருறக்கநிலை கொப்பூழின் கண்ணாகும். இங்கு தொழிற்படும் கருவிகள் மூன்று. பேருறக்கநிலை கொப்பூழின் கண்ணாகும். இங்கு தொழிற்படும் கருவிகள் இரண்டு. உயிர்ப்பு அடங்கும் நிலை மூலத்தின் கண்ணாகும். இங்கு தொழிற்படும் கருவி ஒன்று" என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**2161. புரியட் டகமே பொருந்தல் நனவு**
**புரியட் டகந்தன்னின் மூன்று கனவு**
**புரியட் டகத்தில் இரண்டு சுழுத்தி**
**புரியட் டகத்தொன்று புக்கல் துரியமே.[1]**

"சிவனடியார்களே, பூதங்கள் ஐந்து. மனம், எழுச்சி, இறுப்பு என்னும் மூன்றும் சேர்ந்தது நண்ணுடல். இவற்றைப் புரியட்டகம் என்பர். புரி என்பது பல சேர்ந்து பின்னலாய் ஒன்று போலக் காணப்படும். அது வைக்கோற் புரி, நூற்புரி போன்றது. இவ் எட்டும் சேர்ந்து தொழிற்படும் நிலை நனவாகும். கனவின்போது மனம் எழுச்சி, இறுப்பு ஆகிய மூன்றும் தொழிற்படும். உறக்கத்தின்போது எழுச்சியும், இறுப்பும் தொழிற்படும். பேருறக்கத்தின்போது எழுச்சி மட்டும் தொழிற்படும்" என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**2162. நனவின் நனவு புலனில் வாழக்கம்**
**நனவிற் கனவு நினைத்தல் மறத்தல்**

**நனவிற் சுழுத்தியுண் ணாடல் இலாமை**
**நனவில் துரிய மதீதத்து [2]நந்தியே.**

“சிவனடியார்களே, நனவின் நனவு என்பது பொறிகள் புலன்களிற் செல்லாது ஒடுங்கி இருக்கும் ஒன்மை நிலை. இது உலகத் தொழில்களில் ஒட்டாத நிலையாகும். நனவின் கனவு மனத்தின் இரண்டாவது தொழிற்பாடாகிய நினைத்தல் ஆகும். நனவில் உறக்கம் மறத்தல் ஆகும். நனவில் பேருறக்கம் எண்ணமாகிய மனதின் செயற்பாடாகும். இது மனதின் முதற் தொழிற்பாடாகும். நனவின் உயிர்ப்படங்கலின்போது எண்ணத்தில் தொழிற்பாடும் இல்லாது போகும்” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

2163. **கனவின் நனவுபோற் காண்டல் நனவாங்**
**கனவினிற் கண்டு மற்த்தல் கனவாங்**
**கனவிற் சுழுத்தியுங் காணாமை காணல்**
**அனுமாதி செய்தலி லான துரியமே.**

“சிவனடியார்களே, கனவின்போது நனவு போலக் காண்பது கனவின் நனவாகும். கனவிற் கனவென்பது கனவில் கண்டதை மறத்தலாகும். கனவில் உறக்கம் என்பது உறக்கநிலையில் எதையும் காணாமையாகும். கனவில் பேருறக்கம் உத்தேசமாகக் கனவு காணலாகும். உத்தேசம் என்பது பொருளுண்மையை மட்டும் காணுதல். உயிர்ப்படங்கும்போது எந்தச் செயலுதமின்றி நிற்றலாகும்.”

“சிவனடியார்களே, நல்லைநாதன் தான் இரவு கனவு கண்டதாகவும், அதன் பயனைக் கூறுமாறு என்னைக் கேட்டார். பொதுவாக நினைவுகள் தான் கனவுகளாக வரும். கதிரேசன் சிவனையும், திருவருளம்மையையும் அடிக்கடி கனவில் காண்பார். அவர் சிவனும் அம்மையும் தன்னை நிஜமாகச் சந்திக்க வந்ததாகக் கூறுவார். இது உண்மையில் நடைபெறுவது போல இருக்கும். உரையாடல்களும் இடம்பெறும். ரவீந்திரன் தான் ஏதோ கனவு கண்டேன். அது நினைவில் இல்லையென்று நேற்றுக் கூறினான். நமசிவாயகம் தனக்குக் கனவு வருவதில்லை என்றார். இது ஆழ்ந்த உறக்கம். எண்ணம், சிந்தனைகள் இல்லாது உறங்குவது. சிலர் பொருட்களைக் காண்பர். நீங்கள் சிவனுக்கு மணியொன்று வாங்கிக் கொடுப்பதாகக் கனவு கண்டதாகச் சொன்னீர்கள். இது உத்தேசக் கனவுக்கும், இப்படிக் கனவுகள் பல. நீங்கள் பலகாலமாகச் சிவனுக்கு ஐந்து மணிகள் உள்ள ஒரு கோர்வை மணி வாங்கிக் கொடுக்க வேண்டும் என்று சொல்வீர்கள். இன்னும் வாங்கிக் கொடுக்கவில்லை. அதுதான் நினைவில் நின்று கனவாக வருகின்றது என்றுசொன்னேன்” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

2164. **சுழுத்தி நனவொன்றுந் தோன்றாமை தோன்றல்**
**சுழுத்தி கனவதன் உண்மை சுழுத்தியிற்**
**சுழுத்தி யறிவறி வாலே [1]யழிகை**

**சுழுத்தித் துரியமாஞ் சொல்லறும் [2]பாழே.**

“சிவனடியார்களே, சுழுத்தி என்று சொல்லப்படும் உறக்கத்தின்போது நனவு ஒன்றும் தோன்றாமையாகும். உறக்கத்தில் கனவு என்பது தனது உண்மை மட்டும் தோன்றுதல். உறகடகத்தில் உறக்கம் என்பது சுட்டுணர்வும், சிற்றுணர்வும் அழிவடைதலாகும். அந்நிலை முற்றுணர்வால் ஏற்படுவதாகும். உறக்கத்தில் பேருறக்கம் என்பது பாழ் நிலையாகும்.”

“சிவனடியார்களே, உறக்கத்தின்போது கனவு ஒன்றும் தோன்றாமை பேருறக்கமாகும். இது முற்றும் துறந்த ஞானிகளின் உறக்கம். கண்கள் என்பது பற்றுடன் கூடிய நினைவுகள் நமசிவாயத்திற்குப் பற்றுக்கள் இல்லை. தான் சிவனோடு இருக்கிறேன். பின் ஏன் நான் சிவனை நினைக்க வேண்டும். மறந்தால் தானே நினைக்க வேண்டும் என்பார். இது மெய்யுணர்வு பெற்றநிலை” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**2165. துரிய நனவா [3]மிதமுணர் [4]போதந்**
**துரியக் கனவா மகமுணர் போதந்**
**துரியச் சுழுத்தி வியோமந் துரியந்**
**துரியம் பரமெனத் தோன்றிடும் தானே.**

“சிவனடியார்களே, துரியம் என்று சொல்லப்படும் பேருறக்கத்தின்போது, நனவாவது அனைத்து உயிர்களுக்கும் நோக்கக்கூடிய இன்பநிலையாகும். அது உறுதியினை அறியும் அறிவாகும். உறுதி என்பது பேருறக்கததில் தன்னை உணரும் உணர்வாகும். பேருறக்க உறக்கம் அருள்வெளியாகும். பேருறக்கத்தின் கண்தான் சிவனாகத் தோன்றுவதாகும். அதாவது சிவனில் ஒடுங்குதல், இதன்போது ஆடை, அணி, பூச்சு, பேச்சு முதலியவை மாறுபாடு அடைதல். மாறுதல் அடைந்த ஒருவனை அப்பெயரால் அழைப்பதை ஒக்கும். அனுமார் வேடமிட்டவனை அனுமார் என்பது போல, இது சார்பு பற்றிய செயற்கையேயன்றி இயற்கை ஆகாது” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**2166. அறிவறி கின்ற அறிவு நனவாம்**
**அறிவறி யாமை யடையக் கனவாம்**
**அறிவறி யவ்வறி யாமை சுழுத்தி**
**அறிவறி வாகு மான துரியமே.**

“சிவனடியார்களே, சிற்றறிவு திருவருளால் முற்றறிவாக ஒடுங்கி நின்று அவ் அறிவினன் அறிதல் அறிவின்கண் நனவாகும். அறிவிற்கனவு அவடவறிவினை அறிவது என்னும் எண்ணம் தோன்றாது. அவ் அறிவில் ஒடுங்கலாகும். அறிவுறக்கம் என்பது தன்னறிவு. அவ்வறிவின் பின்செல்வதால்அவ் அறிவால் தன்னை மறப்பதாகும். அறிவுப்

பேருறக்கம் என்பது பரமாகிய சிவமாய்த் தோன்றுவதாகும்" என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**2167. தானெங்கு மாயவ னைம்மலாம் தான்விட்டு**
**ஞானந் தனதுரு வாகி நயந்தபின்**
**தானெங்கு மாய்நெறி நின்றது தான் விட்டு**
**மேனந்தச் சூக்க மவைவன்ன மேலிட்டே.**

"சிவனடியார்களே, ஆருயிரின் உண்மைத்தன்மை எங்கும் பரவிநிற்கும் பெருநிலையாகும். அது சிவகுருவின் அருளினால் உண்டாகும். தான் 'எங்குமாயவன்' என்பதற்கு எங்குமாம் தன்மையை உடையவன் என்பது பொருள். சிவகுருவின் அருளால் தான் எங்குமாம் என்ற உண்மைநிலை தோன்றும். பெற்றதும் ஐம்மலப் பிணிப்பில் இருந்தும், நீங்கி உண்மை அறிவே தன்னுருவாக நிற்கும். அந்த நிலையினை அடைந்த பின்புதான் எங்குமாக இருக்கும். இயல்புண்மையை உணர்ந்து கொள்ளும். உணர்துந்ததும் ஐம்புல வேடர்களின் தொடர்பை அகற்றும். மேல் பொருந்தக்கூடிய நிலையை அடையும்" என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**2168. ஐயைந்து மாறுமோ ரைந்து நனாவினில்**
**எய்யு நனவு கனவு சுழுத்தியா**
**மெய்யும்பின் சூக்கமும் மெய்ப்பகுதி மாயை**
**ஐயமுந் தானவ னத்துரி யத்தனே.**

"சிவனடியார்களே, அருஞ்சைவர் மெய்கள் முப்பத்தாறு. அவற்றுள் உடல், மெய் இருபத்து நான்கு. ஆள் ஒன்று மொத்தமாக இருபத்தைந்து. மெய்களுள் இயைந்து தொழிற்படும் நிலை நனவுநிலையாகும். உணர்வு மெய் ஏழினுள் ஆள் ஒன்று ஒழிந்த ஊழி, ஊழ், உணர்வு, உழைப்பு, உவப்பு, மருண் என்னும் ஆறு மெய்கள் மட்டும் தொழிற்படும் நிலை கனவு நிலையாகும்.உணர்த்து மெய்யாகிய அத்தன், அன்னை, அருளோன், ஆண்டான், ஆசான் என்னும் ஐந்து மெய்களுடன் மட்டும் தொழிற்படும் நிலை உறக்க நிலையாகும். பேருறக்கத்தின்போது, நுண்ணுடலும் மூலப்பகுதியும் சேர்ந்த நிலையோடு ஆருயிர் நிற்கும். இந்நிலை துரியத்தன் நிலை எனப்படும்" என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**2169. ஈதென் றறிந்திலன் இத்தனை காலமும்**
**ஈதென் றறிந்தபின் ஏதும் அறிந்திலேன்**
**ஈதென் றறியும் அறிவை அறிந்தபின்**
**ஈதென் றறியும் இயல்புடை யோனே.**

"சிவனடியார்களே, பல ஊழிக்காலமாக உடம்போடு இருந்து வரும் உயிர்கள் உடம்பு உயிரல்ல, அது வேறானது. அதை உயிர் இயக்குகின்றது என்னும்

உண்மையை சில ஊழிகள் கடந்த பின்புதான் உயிருக்குப் புலனாகியது. அதுபோல உயிரை இலக்கும் பேருயிரான சிவபெருமான் ஒருவன் இழுக்கிறான் என்றும் அவன்தான் கடந்த பின்புதான் உயிரால் உணர்ந்து கொள்ள முடிந்தது. அவற்றையெல்லாம் அறிந்த பின்புதான் சிவபெருமானைப் பற்றி அறிந்தேன். அதை அறிந்த பின்பு வேறு எப்பொருளைப் பற்றியும் அறிய விரும்பவில்லை. உலகில் உள்ள எல்லாப் பொருட்களும் அவனுள்ளேயே அடங்கி நிற்கின்றன. இது ஒரு வீட்டின் மாடிக்கு ஏறும்போது ஏற உதவும் மாடிப்படிக்களைக் காண்பான் மாடிக்குச் சென்றதும் அம் மாடிப் படிகள் அவனுக்குத் தெரிவதில்லை. அது போல ஒருவன் தன்னை இயக்கும் மெய்ப்பொருள் சிவனென அப்பொருள் தானே காட்டக் கண்டபின் அது என்றே அறியும் சார்பறிவுடைய இயல்பினனாவான்" என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**2170. உயிர்க்குயி ராகிய வுருவா யருவாய்**
**அயற்புணர் வாகி யறிவாய்ச் செறிவாய்**
**நயப்புறு சத்தியும் நாதன் உலகாதி**
**இயற்பின்றி யெல்லாம் இருள்மூட [2]மாமே.**

"சிவனடியார்களே, சிவபெருமான் அனைத்துயிர்களுடனும் கப்பால் ஒன்றாக இருக்கின்றான். அந்நிலையில் உயிர்க்கு உயிராகிய உருவாகவும், அருவாகவும் விளங்கியருளுகின்றான். அவன் உயிருக்கு உயிராய் உயிரோடு நிற்கும்போது அருவன் எனவும், அவன் உடலாய் நிற்கும்போது உருவன் எனவும் கூறப்படுவன். அவன் பொருள் தன்மையில் வேறாக நிற்கும்போது அயர்புணர்வாக நிற்பவன். அப்போது அவன் அறிவாகவும், அறிவிற் பின்னிய செறிவாகவும் விளங்குவன். முதல்வனாகிய சிவன் முதல்வியாகிய அம்மையுடன் கலந்து வெளிப்பட்டருள்வன். ஆற்றலான சக்தியையும், அவனையும் அவனது திருவுள்ளக் குறிப்பினையும் உணரல் வேண்டும். அதனால்தான் உலகமும் உலகில் வாழும் உயிர்களும் ஓயாது இயங்கிக் கொண்டிருக்கின்றன. அவ்வாறு இல்லாவிட்டால் உலகம் யாவும் இருளில் மூழ்கிக் கிடக்கும்" என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**2171. சத்தி யிராகத்திற் றானல் லுயிராகி**
**ஒத்துறு பாச மலமைந்தோ டாறாறு**
**தத்துவ பேதஞ் சமைத்துக் கருவியும்**
**வைத்தனன் ஈசன் மலமறு மாறே.**

"சிவனடியார்களே, சிவபெருமான் தன்னைவிட்டு ஒருபோதும் நீங்காத சக்தியை உலக இயக்கத்தின் பொருட்டு விருப்புடன் தாங்கியபடி உள்ளான். உயிர் உடலை இயக்குவது போன்று சிவனும் சக்தியும் இயங்குகின்றனர். இந்நிலையில் சிவன் உயிராகவும், சிவையென்ற சக்தி உடலாகவும் சொல்லப்படுகிறது. சிவனே சக்தியைத்

தொழிற்படுத்துபவன். அப்போது உலகம் உண்டாகி உயிர்கள் உய்யும். அப்போது ஆருயிரோடு ஒட்டியிருக்கும் மலத்தை அகற்றுவதற்காக வினை, மாயை, மாயையாயக்கம், நடப்பாற்றல் அகிய நான்கையும் சிவன் கூட்டியருளுவான். அப்போது மலம் ஐந்தாகிறது. மெய்கள் முப்பத்தாறையும் படைத்துக் கூட்டிக் காத்தருளுபவன் சிவன். அதனால் மலம் அகலும்" என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**2172. சாக்கிரா தீதத்தி லாணவந் தன்னுண்மை**
**சாக்கிரா தீதந் துரியத்திற் றானுறச்**
**சாக்கிரா தீதத்தில் ஆணவந் தான்விடாச்**
**சாக்கிரா தீதம் பரனுண்மை தங்குமே.**

"சிவனடியார்களே, அப்பால் நனவு என்னும் சாக்கீரா தீதத்தில் ஆணவத்துடன் மட்டும் ஆருயிர் சேர்ந்து நிற்கும்நிலை புலம்பு நிலையாகிய தன் உண்மை நிலையாகும். அப்பால் நனவின் பேருறக்கம் சாக்கிராதீதத்துரியம். அந்நிலையில் ஆருயிர் தனது நிலையை உணரும். இந்நிலை ஆணவம் அகலாத நிலையாகும். ஆணவம் நீங்கிய அப்பால் நனவுநிலையில் திருவருளால் திருவடியுணர்வான பரனுடைய உண்மைநிலை வெளிப்பட்டுத் தங்கும். இதுவே தலைவன் ஒருவன் என்று உயிர்காணும் சிவரூபமாகும்" என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**2173. மலக்கலப் பாலே மறைந்தது சத்தி**
**மலக்கலப் பாலே மறைந்தது ஞானம்**
**மலக்கலப் பாலே மறைந்தனன் [1]தாணு**
**மலக்கலப் பற்றான் மதியொளி யாமே.**

"சிவனடியார்களே, ஆருயிரும் பேருயிராகிய சிவபெருமானும் தொன்மையில் இருந்தே சேர்ந்திருப்பினும், உயிர் மலக்கலப்பால் மறைக்கப்பட்டிருக்கும். அதுபோல மலக்கலப்பால் அறிவும் மறைந்திருக்கும். உயிரில் மனம் கலந்திருந்தால் தலைவனான சிவனும் மறைந்திருப்பான். திருவருளால் மலம் அகன்றால் உயிரின் அறிவு பூரண சந்திரன்போலப் பிரகாசிக்கும். இதற்காகத்தான் சிவபெருமான் பிறையைச் சூடியுள்ளான்." என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**2174. திகைக்கின்ற சிந்தையுள் சிங்கங்கள் மூன்று**
**நகைக்கின்ற நெஞ்சுள் நரிக்குட்டி நான்கு**
**வகைக்கின்ற நெஞ்சினுள் ஆனைக்கன் [2]றைந்து**
**பகைக்கின்ற நெஞ்சுக்குப் பாலிரண் டாமே.**

"சிவனடியார்களே, மீள செய்வதறியாது திகைக்க வைக்கின்ற எண்ணத்துள் காமம், வெகுளி, மயக்கம் என்னும் அதிமக மூன்றுள்ளன. அகப்புறக் கலனாகிய நெஞ்சினுள் எண்ணம், மனம், எழுச்சி, இறுப்பு என்னும் நரிக்குட்டிகள் நான்கு உள்ளன. அதுபோல நெஞ்சினுள் செவி, மெய், நோக்கு, நாக்கு, மூக்கு என்னும் யானைகள் ஐந்துள்ளன. இப்பகைப் பொருட்களான அதிமா, நரிமா, கரிமா என்னும் பன்னிரண்டும்

தங்கி நிறந்கும் நெஞ்சுள் ஆடுதலும், அடங்குதலும் ஆகிய இரு தொழில்கள் நடைபெறுகின்றன. இவற்றை முறையே ஓடுதல், ஒடுங்குதல் என்றுங் கூறப்படுகிறது” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**2175. கதறு பதினெட்டுக் கண்களும் பேபாகச்**
**சிதறி எழுந்திடுஞ் சிந்தையை நீரும்**
**விதறு படாமுன்னம் மெய்வழி நின்றால்**
**அதிர வருவவேதார் ஆனைவு மாமே.**

“சிவனடியார்களே, வளிகள் பத்தும், நுண்ணுடம்புக் கருவிகள் எட்டும் ஆகிய பதினெட்டும் இருவினைகள் முளைக்கும் கண்களாகும். இவை கதறி எழுவன. அவற்றுள் சிதறுண்டு எழும் நும் எண்ணமாகிய சிந்தையை அகற்றுதல் வேண்டும். அதுவும் நும் நிலை தொடரமுன்னம் நன்நிலை வழிநின்றால் கைகூடும். அவ்வினைகள் எல்லாம் நடுங்கும்படி வந்தருளுகின்ற சிவபெருமான் சிறிது வெளிப்பட்டு அருளுவன்” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**2176. நனவகத் தேயொரு நாலைந்தும் வீடக்**
**கனவகத் தேயுட் கரணங்க ளோடு**
**முனகத் தேநின் றுதறியுட் புக்கு**
**நினைவகத் தின்றிச் சுழுத்திநின் றானே.**

“சிவனடியார்களே, நனவின் கண் காணப்படும் கருவிகள் இருபது. அவை அறிதற்கருவிகள் ஐந்து. செய்தற் கருவி ஐந்து, அவற்றால் கொள்ளப்படும் புலன்கள் பத்து, இவைகளின் நனவின்போது செயற்படுவன. கனவின்போது அகத்தே தொழிற்படும் உட்கருவிகளுடன் ஆருயிர் செல்லும்போது நனவகத்துக் கருவிகள் விலகிவிடும். கனவகத்துக் கருவிகளும் குற்றம் உடையன போல உதறித்தள்ளி, நினைவும் ஒடுங்க உறக்கத்தில் நிற்கும்” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**2177. நின்றவன் ஆசான் நிகழ்துரி யத்தனாய்**
**ஓன்றி யுலகின் நியமாதிக ளுற்றுச்**
**சென்று துரியாதீ தத்தே சிலகாலம்**
**நின்று பரனாய நின்மல னாகுமே.**

“சிவனடியார்களே, இவ்வாறு நிற்கும் உயிர் திருவருளால் நனவிற் பேருறக்கத்தவனாய் உலகத்துடன் பொருந்திச் செய்ய வேண்டிய கடமைகளைச் செவ்வையாகச் செய்து முடித்தால் அப்பால் நனவிற் செல்ல முடியும். அப்போது அதன்கண் சில நாட்கள் உறைந்து நிற்றல் வேண்டும். சிவனின் திருவருளால் மலம் நீங்கித் தூய்மை எய்தும். ஆருயிர் பரனாய் நின்மலனான நிலையை எய்தும்” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**2178. ஆனவவ் வீசன் அதீதத்தில் வித்தையாத்**
**தானுல குண்டு சதாசிவ மாசத்தி**
**மேனிகள் ஐந்தும்போய் விட்டுச் சிவமாகி**
**மோன [1]மடைந்தொளி மூலத்த னாகுமே.**

“சிவனடியார்களே, தூய்மையடைந்த ஆருயிர் ஈசன் என்று அழைக்கப்படுவன். அவ்வுயிர் திருவடியுணவாய்த் திகழும். சிவ உலக இன்பங்களை அனுபவிக்கும். அருளோன் முதல் அயன் ஈறாகச் சொல்லப்படும் தூமாயை அருள் விளக்க வடிவங்களை எய்தும். திருவருளால் அவ்வடிவங்களை அகற்றி தூய சிவனாகி ஞானவரம்பான மோனநிலையை அடைந்து பேரறிப் பேரொளிப் பெருமுதல்வனாக விளங்கும்” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**2179. மண்டல் மூன்றினுள் மாயநன் னாடனைக்**
**கண்டுகொண் டுள்ளே கருதிக் கழிகின்ற**
**விண்டலர் தாமரை மேலொன்றுங் கீழாகத்**
**தண்டமுந் தானா யகத்தினுள் ளாமே.**

“சிவனடியார்களே, ஆருயிர்களின் உடலின் உள்ளே காணப்படும் மூன்று மண்டலங்களையும், சிவனின் அருளால் கண்டவர்கள் அம் மாயாக்கரிய உடலின் உரிமையாளர் சிவபெருமானென்பர். அவனை மாயா நன் நாடென்பர். அவனைத் தன் அகத்துள்க் கண்டவர்கண் அவனருளால் அவனைக் கண்டு மகிழ்வர். அத்துடன் மேலே விளங்கும் விரிந்த தாமரையாகிய ஆயிரம் இதழ்களையுடைய அருள்வெளித் தாமரையைப் பொருத்தி நிற்கும் அகத்தவத்தோருக்கு புறத்தே காணப்படும். அண்டம் முதலிய பொருட்கள் அனைத்தும் கண்ணாடியில் காணப்படுவது போன்று அகத்தே காணப்படும் தொலைநோக்கி வழியாகப் பார்ப்பது போல அவர்கள் அகத்தவத்தால் எல்லாத் அண்டங்களில் நடப்பவை அனைத்தையும் கண்டு கொள்வர்”

“சிவனடியார்களே உடல் நிரந்தரமில்லாதது. அது இரவல் பொருள். அதன் உரிமையாளர் சிவபெருமான் என்று, உணர்ந்த அகத்தவத்தோர் அண்டங்களில் நடைபெறுவனவற்றைக் கண்ணாடி மூலமாகவும், தொலை நிழற்காட்டி வழியாகவும், சிவனருளால் கண்டு களித்தாகப் புராணங்கள் கூறுகின்றன. முனிவர்கள் எத்தனையோ அயிரம் ஆண்டுகளுக்கு முன்பு எல்லா அண்டங்களுக்கும் சென்று வந்ததாகப் புராணங்கள் மூலம் அறிய முடிகிறது. அத்துடன் அவ்வண்டங்களைப் பற்றிய தகவல்கள் முழுவதையும் கூறியுள்ளனர் அவற்றை மொழிபெயர்த்துப் படித்த வெளிநாட்டினர், அவர்கள் கூறியவற்றைத் தாம் கருவிகள் மூலம் கண்டதாகக் கூறுகின்றனர். அதை வெளிநாட்டவர் நம்புவது ஆச்சரியமல்ல. நம் நாட்டார் நம்புவது தான் ஆச்சரியமானது.

எமது முனிவர்கள் யாவற்றையும் அகத் தவத்தால் கண்டு கூறியுள்ளனர். அதற்குச் சாட்சியாகத் தற்போது திருமந்திரம் உள்ளது” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**2180. போதறி யாது புலம்பின் புள்ளின**
**மாதறி யாவகை நின்று மயங்கின**
**வேதறி யாவணம் நின்றனன் எம்மிறை**
**சூதறி வாருச்சி சூடிநின் [1]றாரே.**

“சிவனடியார்களே, புள் என்று சொல்லப்படுகின்ற பறவை, பறவையென்று சொல்லப்படும். ஆருயிர்கள் அறியாமையால் அறிவிழந்து புலம்பிக் கொண்டிருக்கின்றன. திருவருளாற்றலான திருவருள் அம்மையை அறியாது மயங்கிக் கிடக்கின்றன. உயிருடன் வேறு பிரித்துக் காண முடியாது வேறறப் புணர்ந்து நிற்கும் சிவனைத் திருவடியுணர்வால் உணர்வோர் சிவபெருமானின் திருவடியை அடைந்து பேரின்பத்தை அனுபவிப்பார்”.

“சிவனடியார்களே, கதிரேசன் கோவிலில் குழப்பம் விளைவிக்கும் சிலரைக் கண்டால் பரிதாபப்படுவார். ஆதவன் கற்றவன் ஆதலால் கடவுளை நம்பாதவன். அதனால் அவன் தனக்கு வேண்டியவர்களிடம் கடவுளைப்பற்றித் தவறாகப் பேசுவான். ஒருநாள் அவன் பாஸ்கரனுக்குக் கடவுளைப் பற்றித் தவறாகப் பேசினான். அதைப் பாஸ்கரன் கவலையுடன் வந்து கதிரேசனுக்குச் சொன்னபோது, கதிரேசன் சொன்னார்; “மகனே, சிலரைத் திருத்த முடியாது. கல்வி அறிவை வளர்க்க வேண்டும். சில கற்றவர்கள் தாம் தாம் பெரிய மேதாவி என்று நினைத்துப் பேசிக் கேவலப்படுகிறார்கள். ஆதவனைப் பெண்சாதி, பிள்ளைகளே மதிப்பதில்லை. ஒவ்வொரு ஆத்மாக்களுள்ளும் பிரிவின்றி வேறறக் கலந்து நிற்கும் சிவனையும், சி

வையையும் உணராதவர்கள்தான் அப்படிப் பேசுகிறார்கள். அதனால் பிரச்சினையும்-படுகின்றார்கள். உன்னுடன் வேலை செய்யும் வாமதேவன் சேர்ந்து குடித்துவிட்டு அவனுக்கு அடித்தான். ஒரு கற்றவன் கீழ்த்தரமாக நடக்கக்கூடாதென்றும், தனது தகுதிக்குக் குறைந்தவர்களுடன் சேர்ந்து குடிக்கக்கூடாது என்றும், கற்ற கல்வியால் உணராதவனை எப்படித் திருத்துவது. ஒழுக்கம் என்பது தானாக வருதல் வேண்டும். இன்னொருவரால் கொடுக்க முடியாது. நீ கவலைப்படாதே” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**2181. கருத்தறிந் தொன்பது கண்டமும் ஆங்கே**
**பொருத்தறிந் தோன்புவ னாபதி நாடித்**
**திருத்தறிந் தேன்மிகு தேவர் பிரானை**
**வருத்தறிந் தேன்மன மன்னிநின் றானே.**

“சிவனடியார்களே, திருவருள் முக்கியத்துவம் வாய்ந்தவற்றை எடுத்துக்கூறும் அதன்படி மூலம் முதல் உச்சியீறாகச் சொல்லப்படும் நிலைகள் ஆறும், ஞாயிறு, திங்கள், தீ என்னும் மண்டலம் மூன்றும் ஆகிய ஒன்பதும் கண்டம் என்று கூறப்படுகின்றன. இவற்றை அகத்தே பொருத்தியமைப்பவன் சிவபெருமான். இதை உணர்பவன் புவனங்களுக்குச் செல்லலாம். முழுமுதல் விழிப்பொருளாக இருப்பவன் சிவபெருமான் என்று உணர்ந்து கொள்வான். அவன்தான் தேவர்களுக்கும் முதல்வன். அதனால் அவனைத் தேவர் பிரான் என அழைக்கின்றனர். அதனால் சிறப்புடன் தவம் செய்தால் சிவபெருமான் சிறப்புடன் தவம் செய்பவர்களின் உள்ளத்துள் நிறைந்து நின்று அருளுவான்”

“சிவனடியார்களே, எப்போதும் சிவனைப் பற்றித் தாழ்வாகப் பேசுபவன் ஆதவன். பாஸ்கரன் எப்போதும் சிவனைப் பற்றித் உயர்வாகப் பேசுபவன். எல்லாம் சிவமென நினைப்பான். சிவனே உலகத்தின் புவனாதிபதியென உணர்பவன். கட்டடம் இடிந்தமை பற்றி ஆராய வந்த குழுவின் தலைவர் ஆதவனுக்குச் சொன்னார்; உமக்குப் போதிய அறிவு இல்லை, அறிவுள்ளவர்கள் சொல்வதையும் கேட்பதில்லை. வேலை செய்யும் கொத்தனார் பள்ளிக்குச் சென்று கற்கவில்லை. தனது அனுபவத்தின் மூலம் மேற்கொண்டு கட்ட வேண்டாம் என்றவர். உமது உதவியாளனான பாஸ்கரனும் கட்டவேண்டாமென்றவன். பக்தர்களுக்குக் கடவுள் பின்வருவனவற்றை முன்பே உணர்த்துவார். இது கூடத் தெரியாத நீங்கள் எப்படி வேலை செய்வீர்கள், பொறுப்புக்களைப் பாஸ்கரனிடம் ஒப்படைத்துவிட்டு விடுப்பில் நில்லுங்கள். விசாரணை முடிவடைந்ததும் தீர்ப்பின்படி நடவடிக்கை எடுப்போம் என்றவர்” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**2182. ஆன விளக்கொளி தூண்டு மவனென்னத்**
**தான விளக்கொளி யாமூல சாதனத்**
**தான விதிமூலத் தானத்தில் அவ்விளக்கு**
**ஏனை மதிமண்ட லங்கொண் டெரியுமே.**

“சிவனடியார்களே, குழுவின் தலைவர் அவ்வாறு சொன்னதும், ஆதவன் திகைத்துப் போனான். அதனை உணர்ந்த பாஸ்கரன் அவனைக் கதிரேசனிடம் அழைத்துச் சென்றான். ஆதவனின் நிலையைத் தெரிந்த கதிரேசன் சொன்னார்; “மகனே விளக்கைத் தூண்டுவதற்கு ஒருவர் தேவை, அதுபோல ஆருயிரின் அறிவைத் துலங்கச் செய்யவும் ஒருவன் வேண்டும். அவன் சிவபெருமான். திரி, எண்ணெய், தீ, விளக்கு என்பன இருந்தாலும் அதை ஏற்ற ஒருவன் வேண்டும். ஏற்றிய பின்பு விளக்குத் திரியைத் தூண்ட மாட்டாது. அதற்கு ஒருவன் தேவை. அதைப்போல எரியும் விளக்கை அது எரிவதற்கு உதவ ஒருவர் தேவை; விளக்கு அணைந்தால் மீண்டும் ஏற்றுதல் வேண்டும். இது மின்விளக்குக்கும் பொருந்தும். அதுபோலத்தான் ஆருயிருக்கும் துணையாக இருக்க

ஒருவன் வேண்டும். அறிவினை விளக்கும் முதற் கருவியாகிய துனைகளை மூலத்திடத்து அவ்விளக்கினை ஏற்றுதல் வேண்டும். ஏற்கனவே அது புருவநடுவாகிய மதிமண்டலத்தை ஒளியிடமாகக் கொண்டு விளங்குவது. கடவுள் நேரடியாக வந்து உதவி செய்பவர். அது மெய்வுணர்வுள்ளவர்களுக்குத்தான் புரியும். சிலவேளைகளில் கடவுள் தான் வராது தனது பக்தர்களை அனுப்பிச் சொல்லுவிப்பார். காட்டுவிலங்கான ஆன்மாவைப் பழக்கப்படட்ட விலங்குமூலம் தான் திருத்த வேண்டும் என்பதற்காகச் சிவன் தனது பக்தர்களைக் கொத்தனார் மூலமும் பாஸ்கரன் மூலமும் அறிவுறுத்தினார். உன்னுள் குடிகொண்டிருந்த ஆணவம் அதைக் கேட்க விடவில்லை. அறிவுக்குள் அறிவாய் இருப்பவன் சிவன். அகத்தே இருக்கும் அறிவு சொன்னதைத்தான் கொத்தனாரும் பாஸ்கரனும் சொன்னனர். அதைக் கேட்க ஆணவம் விடவில்லை. உயிர்களில் எல்லாம் கடவுள் சமமாக இருக்கின்றார் என்பதை உணர்ந்தோர் செருக்கடையார். உண்மையைப் புரிந்து கொள்வர். நீ அதைப் புரியாததால் தான் இவை நடந்தது" என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**2183. உண்ணாடும் ஐவர்க்கு மண்டை யொதுங்கிய**
**விண்ணாட நின்ற வெளியை வினவுறில்**
**அண்ணாந்து பார்த்தைவர் கூடிய சந்தியிற்**
**கண்ணாடி காணுங் கருத்ததென் றானே.**

"சிவனடியார்களே, ஆதவன் இயல்பாகவே தற்பெருமை உள்ளவன். அவன் யாரையும் மதிப்பதில்லை. மேலதிகாரியாக வந்தவன் இலஞ்சம் கொடுத்துத்தான் வந்தவன். அவன் அறிவில்லாதவன் என்று கூறுவான். அவன் கதிரேசனை மதிப்பதில்லை. அதனால் ஆதவன் தயங்கியதை உணர்ந்த பாஸ்கரன் சொன்னான்; "ஐயா, படிப்பால் வருவது அறிவு, அந்த அறிவு ஆளுக்காள் வேறுபடும்' உங்கள் அண்ணா கிருபாகரன் வைத்தியர். குணநாதனும் வைத்தியன் ஆனால் கைராசியுள்ள திறமையான வைத்தியன் என்று குணநாதனிடம் வைத்தியம் பார்க்கத்தானே மக்கள் விரும்புகின்றனர். அறிவுக்குள் ஓர் அறிவுண்டு. அது இறைவன் கொடுக்கும் அறிவு. கதிரேசன் கற்காவிட்டாலும், கற்றவர்களால் மதிக்கப்படுபவர். உயர் அதிகாரிகள் எல்லோரும் அவரைத் தமது தந்தையாக மதிக்கின்றனர். அவரது பேச்சை யாரும் கேட்காமல் விடமாட்டார்கள். அதற்குக் காரணம் அவரது அறிவுப் புலன்களாகிய மெய், வாய், கண், மூக்கு, செவி ஆகிய ஐந்தும் உச்சித் தொகையையே நாடும். அது அருள்வெளியில் உலாவும். அங்கு அவை ஒடுங்கித் தன் இயல்பு மறந்து நிற்கும். இது அருட்களைப் பெற்று மெய்யுணர்வினராதல் எனப்படும்; அதனால் அவர் பாகுபாடு காட்டுவதில்லை. குழுத்தலைவராக வந்தவர் கதிரேசனின் மூத்த மகனின் மனைவியின் சகோதரன். அவர் கதிரேசனைத் தெய்வமாக நினைப்பவர். அவர் சொன்னால் கேட்பார். இல்லாவிட்டால் உங்களை வேலை நீக்கம் செய்து விடுவார்கள். அது பெரும் அவமானமாகும். முன்பும் பல குற்றங்களை நீங்கள் செய்ததால் எச்சரிக்கப்பட்டனீங்கள்.

அதனால் ஆராய்ந்து செய்யுங்கள் என்ற பின்பு தான் ஆதவன் கதிரேசனைச் சந்திக்க வந்தான்" என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**2184. அறியாத வற்றை அறிவான் அறிவான்**
**அறிவான் அறியாதான் தன்னறி வாகான்**
**அறியா தவத்தை அறிவானை கூட்டி**
**அறியா தறிவானை யாரறி வாரே.**

"சிவனடியார்களே, பாஸ்கரன் ஆதவனுக்குச் சொன்னான், "ஐயா ஒருவரை மதிக்கப் பண்ணுவதும், அவமதிக்கப் பண்ணுவதும் அவரது நடத்தை தான். கதிரேசன் எப்படியானவர் என்று உங்களுக்குத் தெரியும். கல்விப்பகுதியின் உயர் அதிகாரியான கந்தசாமியே அவரைத் தேடிச் சென்று கதைப்பார். கந்தசாமி ரவீந்திரனை இடமாற்றம் செய்தபோது கல்விப்பகுதியின் தலைமை அதிகாரியான அருள்நேசன் கோவிலுக்கு வந்தபோது கதிரேசனைக் கண்டு மதிப்புடன் வணங்கியவர். அதைக் கேள்விப்பட்ட கந்தசாமி ரவீந்திரனின் இடமாற்றத்தை ரத்துச் செய்தார். கதிரேசன் அருள்நேசனோடு பேசவில்லை. பேசினால் கரைச்சல் வரும் என்பதை உணர்ந்துதான். கந்தசாமி இடமாற்றத்தை ரத்துச் செய்தவர். தனது அறிவால் சுட்டு உணரப்படாதவற்றை திருவருட் கண்ணால் காண்பவனே தெளிந்த அறிவுடையவன். அதை உணர்ந்து கொள்பவன் தான் அறிவாளி. கதிரேசன் மெய்யுணர்வுள்ளவர். ஒரு ஞானி. அதனால் அவர் கட்டாயம் ரவீந்திரனுக்காகக் கதைப்பார் என்று கந்தசாமிக்கு புரிந்தமையால் தான் செயற்பட்டவர். கோவிலில் இவ்வாறான கதையைக் கதைத்து மனதைக் குழப்பக்கூடாது என்று நினைப்பார் கதிரேசன். அதனால் தான் அவர் கதைக்கவில்லை என்றவன்" என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**2185. துரிய தரிசனஞ் சொற்றோம் வியோமம்**
**அரியன துாடண மந்நன வாதி**
**பெரியன கால பரம்பிற றுரியம்**
**அரிய அதீதம் அதீதத்த தாமே.**

"சிவனடியார்களே, துரியம் எனப்படும் புரிவுக்காட்சி பேரறிவுப் பெருவெளியைக் காண்பதாகும். அறிவு வெளி எனச் சொல்லப்படும் நனவு, கனவு, உறக்கம், பேருறக்கம், உயிர்ப்படங்கல் என்பனவற்றை நன்னடைக்குக் கொண்டு வரவேண்டும். காலங்கடந்த எங்கும் பரம்பிய பெரியனவாகிய புரிவு அருமை சேர் அப்பாலதாகும்" என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**2186. மாயையிற் சேதனன் மன்னும் பகுதியோன்**
**மாயையின் மற்றது நீவுதன் மாயையாங்**
**கேவல மாகுஞ் சகலமா யோனியுள்**

**தோயும் மனிதர் துரியத்துட் சீவனே.**

“சிவனடியார்களே, சேதனனாகிய அறிவுடைய ஆருயிர் மாயையில் பொருந்தி மூலப்பகுதியோன் ஆவன். திருவருள் மாயை கூட்டுவிப்பது மாயையில் நிலைப்பிப்பதற்காக அல்ல. மாயையைக் கூட்டி மலத்தை வாட்டி அம்மலத்துடன் கூட்டி அம் மாயையை முற்றாக நீக்குவதற்காகவே ஆகும். உடம்பில் உள்ள அழுக்கை நீக்க தூய நீரை உடலில் விட்டு அவ்வழுக்கை நீக்குவது இதற்கு உதாரணமாகும். மாயையுடன் கூடாத நிலையைப் புலம்பு என்றும், கூடிய நிலையைப் புணர்வு என்றும், அகற்றும் நிலையினைப் புரிவு என்றும் அழைக்கப்படும். நால்வகைத் தோற்றத்து எண்பத்து நான்கு நூறாயிரம் வேறுபாடுள்ள பிறப்பினுள் பிறப்பது புணர்ப்பாகும்”.

“சிவனடியார்களே, இறைவன் ஆருயிரோடு மாயையைச் சேர்த்து வைப்பான். அது ஆருயிரை மலத்தில் இருந்து விடுவிக்க உதவும். ஆதவனுக்குப் பாஸ்கரைனைப் பிடிக்காது. பலமுறை கண்டபடி ஏசியுள்ளான். இருப்பினும் திருவருள் வயப்பட்ட பாஸ்கரன் ஆதவனின் உண்மையான நிலையை உணர்ந்து பரிதாபப்பட்டு அவன் ஏசியபோதெல்லாம் அதைப் பொறுமையுடன் கேட்பான். பின் தனது கருத்தைத் தருணம் பார்த்துச் சொல்வான். அதனால் தான் மலமுள்ள ஆதவன். அவனின் அறிவுரையைக் கேட்டுக் கதிரேசனைச் சந்திக்க வந்தான்” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

## கேவலசகல சுத்தம்

## (புலம்பு புணர்வு புரிவு)

**2187. தன்னை யறியத்தன் றற்கேவ லன்றானும்**
**பின்ன முறநின்ற பேத சகலனும்**
**மன்னிய சத்தசத் துச்சத [1]சத்துடன்**
**துன்னுவர் தத்தந் தொழிற்கள வாகவே.**

“சிவனடியார்களே, திருவருளின் துணையில் ஆருயிர் தன்னை அறியும். அப்போது அவன் புரிவி எனப்படுவான். புரிவு என்பது சுத்தமாகும் நிலை. இத்தகைய அறிவு பெறாத நிலையில் அவன் புலம்பி எனப்படுவான். புலம்பி என்பது கேவல நிலையாகும். புலம்பியில் இருந்து புருவி ஆதற் பொருட்டு ஆதியாகிய நடப்பாற்றல் உடல் கலன் உலகு உணர் என்னும் நான்கினையும் மாயை ஆக்கமாகப் படைத்தருளும். இவற்றுடன் கலந்து ஆருயிர் புணர்வி எனப் பெயர் பெறுவான். புணர்வு என்பது சகல நிலை. நிலைபெற்ற அறிவுப் பொருள் சத்து, நிலையில்லாத அறிவில்லாத பொருள் அசத்து இரண்டிலும் ஆருயிர் ஒட்டியிருப்பதால் அது சதசத்தாகும். இந்நிலை ஆருயிர்களின் தொழிலுக்கேற்ப வாய்த்த நிலைகளாகும். இதை இவ்வாறு கூறலாம். படிக்காது இருப்பது புலம்பு நிலை, படிப்பது புணர்வு நிலை. பாட்டாகத்தான் திகழ்வது

புரிவுநிலை. அப் பாட்டினை நினைப்பது மெய். மறப்பது பொய்" என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**2188. தானே தனக்குப் பகைவனும் நட்டானுந்**
**தானே தனக்கு மறுமையும் இம்மையுந்**
**தானே தன்செய்த வினைப்பயன் துய்ப்பானுந்**
**தானே தனக்குத் தலைவனு [1]மாமே.**

"சிவனடியார்களே, இன்பத்தைத் தருவது நல்ல உறவு. துன்பத்தைத் தருவது வேண்டாத உறவான பகை. அதனால் தானே தனக்கு நண்பன். தானே தனக்கு பகைவன் என்று கூறப்பட்டது. இம்மையில் வரும் இன்ப துன்பங்களுக்குத் தானே காரணமாவர். அவரவர் செய்த வினைப்பயனே இவற்றைத் தீர்மானிக்கிறது. எல்லாவற்றிற்கும் முழுக் காரணியாக விளங்குவது தானே தான்".

"சுந்தரேசனைப் பாருங்கள் அவர் யாரையும் ஏசியது கிடையாது. உதவிகள் தான் செய்வார். சிலருக்குப் பொறாமை காரணமாக அவரைப் பிடிக்காது. எனினும் அதை வெளியே சொல்லப் பயம். யாருக்காவது சொன்னால் அதனால் பல தீமைகள் ஏற்படுமெனப் பயப்பிடுவர். பயப்படாமல் பேசினால் அவரது மானம் கப்பலேறும். கேட்பவர்கள் ஏசுவர். சிலர் சண்டைக்கும் போவர். அவருக்கு ஒரு நோய் ஏற்பட்டால் ஊரே கலங்கும். ஆனால் ஆதவனை யாருக்கும் பிடிப்பதில்லை. நான் செய்த பாவம் தான் ஆதவன் உருவில் வந்திருக்கிறது என்பார் அவனது தந்தை. மனைவியை அவன் எந்நாளும் குடித்து விட்டுவந்து கொடுமைப்படுத்துவான். அதனால், அவன் தனது தாய்க்குச் சொல்வாள். "அவன் இறந்தால் தான் எனக்கு நிம்மதி என்று அதற்கெல்லாம் காரணம் அவரவர் தான்" என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**2189. பாசம தாகும் பழமலம் பற்றற**
**நேசம தாய்நின்ற வாறாறு நீங்கிடக்**
**குாசமி லாத குணங்கே வலசுத்தம்**
**ஆசற நிற்ற லதுசுத்த சைவமே.**

"சிவனடியார்களே, பண்டுதொட்டு ஆன்மாவில் படிந்த புல்லிய பழமலம் பாசமாகும். அதிலுள்ள பற்று நீங்குவதற்காக இடையில் சேர்ந்த மலமாகப் பொருந்திய மெய்கள் முப்பத்தாறு. இவ் முப்பத்தாறு மெய்கள் மீதும் ஆருயிர்கள் அன்பு பூண்டுள்ளன. இதன் உண்மையினைத் திருவருளால் உணர்ந்து நீக்குதல் வேண்டும். நீக்குதல் என்பது அவற்றில் இருந்து விடுபடுவதாகும். இவை துச்சில் போன்று துளைக்கருவிகள். அவை நிலையான பொருட்கள் அல்ல என்று உணர்ந்தால் அவற்றில்

உள்ள பற்றுக்கள் தானதகவே நீங்கும். அப்படி நீங்குவது குற்றமற்ற குண நிலையாகும். இது சுத்தமான நிலை" என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**2190. ஆமுயிர் கேவல மாமாயை இன்னடந்து**
**ஆமுயிர் மாயை எறிப்ப [1]அறிவுற்றுக்**
**காமிய மாயேய முங்பல வாறிற்பத்**
**தாமுறு பாசஞ் சகலத்த தாகுமே.**

"சிவனடியார்களே, புலம்பு நிலையில் இருக்கும் உயிர் மாயையில் உறையும். அவ்வுயிர் பின் முப்பத்தாறு மெய்களுடனும் கூடும். இம் மெய்களுடன் கூடியதும் மாயாதனுவிளக்காம் என்ற முறைப்படி சிறிது அறிவு பெறும். அதனால் காமியமாகிய கருவிகளையும் மாயேயமாகிய கருவிகளையும் உயிருடன் சேர்ந்து தொழிற்படும். இந்நிலையில் அவ்வுயிர் அக்கருவிகளின் மீது பற்றுக் கொள்ளும். இந்நிலை புணர்வு நிலையாகும். புணர்வென்பது "சகலநிலை" என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**2191. சகல அவத்தையிற் சார்ந்தோர் சகலர்**
**புகலு மலமூ வகையும் புணர்ந்தோர்**
**நிகரின் மலரோன்மால் நீடுபல் தேவர்கள்**
**நிகழ்நரர் கீட மந்தமு [2]மாகுமே.**

"சிவனடியார்களே, கருவிகளுடன் கூடிய புணர்வு நிலையுடையோர் புணர்வினராவர். இவர்கள் மும்மலப்பிணிப்பினர். அதனால் சகலர் எனப்படுவர். அயன் மால் தேவர்கள் இவ்வுலகில் வாழும் புழுமுதல் சகல உயிர்களும் சகலரேயாவர். புழுவுக்குரிய குணங்கள் நான்கு அவை உண்ணல், உடனுறைதல், உறங்கல், இறத்தல் என்பனவாகும். இந்நான்கு குணங்களையும் மால் உள்ளிட்ட சகல தேவர்களுக்கும் உண்டு" என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**2192. தாவிய மாயையில் தங்கும் பிரளய**
**மேவிய மற்ற துடம்பாய்மிக் குள்ளன**
**ஓவல் இலக்கணர் ஒன்றிய [1]சீகண்டர்**
**ஆவிய நூற்றெட் டுருத்திர ராகுமே.**

"சிவனடியார்களே, தூவாமாயையைக் கடந்த தூமாயையைத் தாவிய மாயை என்பர். மாயையால் உடலைப் பெற்று அம்மாயையின் கண் உறைவோர் இருமலத்தவராவர். இவர்கள் இயல்பாக உள்ள இரு மலத்தாரும் ஊழி முடிபாகிய பிரளயத்தின்போது திருவருளால் ஒரு மலம் நீங்கிய இருமலத்தாரும் என இரு வகையினராவர். இவர்கள் ஒரு மலமான மாயை அகன்றவர்கள். மாயை அகன்ற

தன்மை என்பது பொருட்களில் மயங்காத தன்மையை உடைய மாயையை உடையவர் எனக் கொள்ளல் வேண்டும். இது பழுதடைந்த வீட்டில் இருந்து நல்ல வீட்டில் குடியேறுவதை ஒக்கும். இவ்வகையைச் சேர்ந்தவர்கள் சீகண்டவுருத்திரர், நூற்றெட்டு உருத்திரர் முதலியோராவர். இவர்கள் தூமாயையின் கண் ஆசான் மெய்யின் அடிப்பகுதியில் உறைவோராவர்" என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**2193. ஆகின்ற கேவலத் தாணவத் தானவர்**
**ஆகின்ற வித்தேச ராமனந் தாதியர்**
**ஆகின்ற எண்மர் எழுகோடி மந்திரர்**
**ஆகின்ற ஈசர் அநேகரு [2]மாகுமே.**

"சிவனடியார்களே, புலம்பு நிலையினையுடைய ஆணவம் மட்டும் உடையவர்கள் ஒரு மலத்தவராவர். இவரை விஞ்ஞானகலர் என்பர். இவர்களை அட்டவித்தேசரெனவும் கூறுவர். இவர்கள் அனந்தர் முதல் எண்மராவர். ஏழுகோடி மந்திர முதல்வர் முதல் பலராவர். இவர்கள் ஆண்டான் மெய்யில் உறைபவர்களாவர்" என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**2194. ஆமவ ரிற்சிவ னாரருள் பெற்றுளோர்**
**போமலந் தன்னாற் புகழ்விந்து நாதம்விட்டு**
**ஓமய மாகி யொடுங்கலி னின்மலந்**
**தோமறு சுத்தா வவத்தைத் [1]தொழிலே.**

"சிவனடியார்களே, தூவாமாயையின் கண் உறைவோர் சிவனருளால் அவர்களைப் பற்றியிருக்கும் ஒரு மலமும் அகன்று உயர்ந்தோரும் சிலராவர். அத்தகையோர் விந்துவாகிய ஒளியினையும் நாதமாகிய ஒலியினையும் விட்டு அகல்வர். இவ் இரு மெய்களும் எல்லோராலும் புகழப்படுவனவாகும். இவ்விரு மெய்யினையும் விட்டோர் ஓமொழியுருவினராவர். அதனுள் அடங்கி நிற்பர். அடங்குதல் என்பது தன்முனைப்பற்றுத் திருவருள் மயமாதலாகும். இதனால் அவர்கள் தூய்மையானவர்களாவர். இதனைக் குற்றம் நீங்கிய தூ நிலைத் தொழில் என்பர்." என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**2195. ஒரினு மூவகை நால்வகை யும்முள**
**தேரி லிவைகே வலமாயை சேரிச்சை**
**சாரிய லாயவை தாமே தணப்பவை**
**வாரிவைத் தீசன் மலமறுத் தானே.**

"சிவனடியார்களே, புலம்பு நிலையாகிய கேவல நிலை மூன்று வகைப்படும். அவை புலம்பிற் புலம்பு, புணர்விற் புலம்பு, புரிவிற் புலம்பு என்பன. இவற்றைக் கேவல கேவலம், சகல கேவலம், சுத்த கேவலம் என்று கூறுவர். அவற்றை நான்கு

வகையாகவும் கூறுவதுண்டு. அவை இருட் புலம்பு, மருட் புலம்பு, தெருட் புலம்பு, அருட் புலம்பு என்பனவாகும். ஆராய்ந்து பார்த்தால் இவை அனைத்தும் புலம்பு நிலையேயாகும். மாயையோடு சேர்ந்த பின்பு தான் ஆருயிருக்கு உவப்பாகிய விழைவு விளக்கம் ஏற்படும். விளக்கமுற்றதும் அம்மாயை தானே அகன்று விடும். அது அகன்றதும் சிவபெருமானது திருவருட் பெருங்கடல் ஆருயிரினை நிரப்பும். அதனால் மலம் அற்றுப்போகும்" என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**2196. பொய்யான போதாந்தம் ஆறாறும் விட்டகன்று**
**எய்யாமை நீங்கவே எய்தவன் தானாகி**
**மெய்யாஞ் சராசர மாய்வெளி தன்னுட்புக்கு**
**எய்தாம லெய்துஞ்சுத் தாவத்தை [1]யென்பதே.**

"சிவனடியார்களே, நிலைபேறில்லாத மண் முதல் துணையாகிய ஒலி மெய் ஈறாக்க கூறப்பட்ட முப்பத்தாறு மெய்களும் அருளால் மெய்யுணர்ந்து கருத்தை விட்டு அகலும். அகன்றதும் ஆணவ விளைவான அறியாமை நீங்கும். நீங்கியதும் அவ்வுயிர் திருவடியை அடையத் தகுதி பெறும். அப்போது இயங்குதிணை உயிர் நிலத்தினை உயிர் உலகம் எல்லாவற்றுடனும் கலப்பால் பிரிப்பின்றி ஒன்றாக நிற்கும் சிவன் தன்னுள் அவ்வுயிர் புகுமாறு அருளிச் செய்வான். அந்நிலையில் ஆருயிர் தன்முனைப்பு அற்றமையால் என்ன நடைபெறுகிறது என்று அறியாதிருக்கும். இதுவே புரிவாகிய தூயநிலையாகும்" என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**2197. அனாதி பசுவியாத்தி யாகு மிவனை**
**அனாதியில் வந்த மலம்ஐந்தால் ஆட்டி**
**அனாதியிற் கேவல மச்சக லத்திட்டு**
**அனாதி பிறப்பறச் சுத்தத்து ளாமே.**

"சிவனடியார்களே, தொன்மையான ஆருயிர் ஆணவப் பிணிப்பால் அடங்கிக் கிடக்கும். அத்தகைய ஆருயிரை ஐவகையான மலங்களால் சிவபெருமான் ஆட்டி வைக்கிறான். அவ்வாட்டுதலின் நிமிர்த்தம் அவ்வுயிரைப் புலம்புநிலையில் இருந்து புணர்வுநிலையிற் புகுத்தியருள்வான். அவ்வுயிர் சிவபெருமானின் திருக்குறிப்புப்படி வாழ்ந்து வந்தால் தொன்மையான பிறப்பு அற்றுப் போகும். அதுதான் ஆருயிர் தூய நிலையினை அடைவதற்கான வழியாகும்" என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**2198. அந்தரஞ் சுத்தாவத் தைகே வலத்தாறு**
**தந்தோர்தஞ் சுத்தகே வலத்தற்ற தற்பரத்**
**தின்பால் துரியத் திடையே யறிவுறத்**
**தன்பால் தனையறி தத்துவந்தா னாமே.**

“சிவனடியார்களே, ஆருயிர் தூய நிலையை எய்துவதற்கு வழியாகவுள்ளது புலம்பு நிலையாகும். இந்நிலையினைக் கூட்டுவித்து உடனாக நிற்பவன் சிவன். அவனின் அருளால் மலம் அகலும். அகன்றவுடன் சிவபெருமானிடத்து பேருறக்கம் கொள்ளும் நிலையை ஆருயிர் பெறும். அந்நிலையில் ஆருயிர் தன்னுணர்வால் தன்னை அறியும். அறிந்ததும் தான் மெயப்பொருளின் அடிமை என்று உணரும். அதனால் மெய்ச்சார்பினதாகத் திகழும்” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**2199. ஐயைந் தொடுங்கும் ஆன்மாவில் ஆன்மாவும்**
**மெய்கண்டு சுத்த அவத்தையில் வீடாகுந்**
**துய்யவவ் வித்தை முதன்மூன்றுந் தொல்சத்தி**
**ஐய சிவஞ்சத்தி யாந்தோற்ற [1]மவ்வாறே.**

“சிவனடியார்களே, உடல், மெய், இருபத்து நான்குடன் ஆளும் கூடி ஆருயிரில் ஒடுங்கும். ஆன்மா என்று சொல்லப்படும் உணர்வு மெய்கள் ஆறும் அழிவில்லதாவனான சிவனால் ஒடுக்கப்படும். உணர்த்து மெய் ஐந்துள் ஆசான், ஆண்டான், அருளோன் ஆகிய மூன்றும் தொல்சக்தி என்ற ஒடுக்க நிலைக்குச் சிவனால் ஒடுக்கப்படும். அன்னை மெய் சிவனாக நிற்கும். சுத்தசிவன், முதன்மைச்சிவன், தொல்சக்தி, வனப்பாற்றல், இம்முறையாகவே அம்மை மீண்டும் தோன்றுங்கால் தோன்றுவாள். இருபத்தைந்து மெய்களும் திருவருளால் உண்மை கண்ட தூயநிலையில் விட்டு நீங்கும்” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**2200. ஐயைந்து மான்மாவில் ஆறோ டடங்கிடும்**
**மெய்கண்ட மேன்மூன்று மேவுமெய் யோகத்தில்**
**கைகண்ட சத்தி சிவபாகத் தேகாண**
**எய்யும் படியடங் குந்நாலேழ் எய்தியே.**

“சிவனடியார்களே, உடல், மெய், இருபத்தைந்தும் ஆருயிரின் உணர்வில் உணர்வு மெய் ஆறுடன் ஒடுங்கும். அவ்வுயிர் செய்த அகத்தவ முறையினால் ஆசான் ஆண்டான் அருளோன் என்னும் மூன்று மெய்களும் ஒடுங்கும். உடனாய் நின்று கைகண்ட துணை புரியும் அன்னை அத்தன் பாகத்தேயாகும் உடன் மெய் இருபத்தைந்து, உணர்வு மெய் ஒன்று, மூன்று கூடிய ஒன்று, இரண்டு கூடிய ஒன்று ஆக நாழேளாகிய இருபத்தெட்டடாகும்” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**2201. ஆணவத் தாரொன் றறியாத கேவலர்**
**பேணிய மாயைப் பிரளயா கலராகுங்**
**காணும் உருவினர் காணாமை காண்பவே**
**பூணுஞ் சகலர்முப் பாசமும் புக்கோரே.**

“சிவனடியார்களே, ஒரு மலத்தால் மட்டும் கட்டுண்டவர் விஞ்ஞானகலர் ஆவர். இவர் மெய்யுணர்வால் கட்டற்றவர். மாயை வினை எதுவும் அறியாத தனிநிலையினர். இது அருவ நிலையாகும். தூமாயைத் தொடர்புடையவர்கள் இரு மலத்தால் கட்டுண்டவர்கள். இவர் பிரளயாகலர் எனப்படுவர். இவர் ஊழியால் கட்டற்றவர். இந்நிலை அருவுருவ நிலையாகும். மும்மலக் கட்டுடையார் சகலர் எனப்படுவர்.இவர் கண் காணும் உருவினராவர்” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**2202. ஆணவ மாகும் விஞ்ஞான கலருக்குப்**
**பேணிய மாயை பிரளயா கலருக்கே**
**ஆணவ மாயையுங் கன்ம மூன்றுமே**
**காணுஞ் சகலர்க்குக் காட்டு [1]மலங்களே.**

“சிவனடியார்களே, விஞ்ஞானகலர் ஆணவத்தால் மட்டும் பிணிக்கப்பட்டவர்கள். பிரளயாகலர் ஆணவம், கன்மம் என்ற இரு மலங்களால் பிணிக்கப்பட்டவர்கள். சகலர் ஆணவம், கன்மம், மாயை என்ற மும் மலங்களால் பிணிக்கப்பட்டவர்கள்” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**2203. கேவலந் தன்னிற் கிளர்ந்தவிஞ் ஞாகலர்**
**கேவலந் தன்னிற் கிளர்விந்து சத்தியால்**
**ஆவயிற் கேவலத் தச்சக லத்தையும்**
**மேவிய மந்திர மாமாயை [2]மெய்ம்மையே.**

“சிவனடியார்களே, ஒருமலத்தால் கட்டுண்டவர்கள் தனிநிலையில் தூண்டித் தொழிற்படுத்துவது அன்னை என்ற விந்து சக்தியாகும். அந்நிலையில் உயிர் உடல் முதலியவற்றை எய்தும். அவ்வுடல் மாமாயையில் தோன்றும் மந்திர உடலாகும்” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**2204. மாயையின் மன்னும் பிரளயா கலர்வந்து**
**மாயையுந் தோன்றா வகைநிற்க ஆணவ**
**மாய சகலத்துக் காமிய மாமாயை**
**ஏயமன் னூற்றெட் டுருத்திரர் [1]என்பவே.**

“சிவனடியார்களே, இரு மலங்களால் கட்டுண்ட பிரளயாகலரிடம் ஆணவம் மேலோங்கி நிற்கும். அதனால் கனமமும் மாயையும் அடங்கி நிற்கும். அதனால் அவை தோன்றாது அடங்கியே இருக்கும். அவர்களது உடம்பு தூமாயையால் அமைந்தது. அதனால் அதன் மெய்யும் கன்மங்கள் இருள்சேர் இருவினைகளும் கடந்த

இறைபணியாகும். இதில் உறைவோரும் இம் மெய்யினரும் நூற்றெட்டு உருத்திரர்கள் ஆவர்" என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**2205. மும்மலங் கூடி முயங்கி மயங்குவோர்**
**அம்மெய்ச் சகலத்தர் தேவர் சுரர்நரர்**
**மெய்ம்மையில் வேதா விரிமிகு கீடாந்தத்**
**தம்முறை யோனிபுக் கார்க்குஞ் [2]சகலரே.**

"சிவனடியார்களே, ஆணவம், கன்மம், மாயை ஆகிய மூன்று மலங்களும் ஒன்று சேர்ந்திருப்பவர்கள் சகலர் ஆவர். இவர்கள் முப்பிணிப்பினர். இந்திரன் உட்பட்ட தேவர்களும் வானவர்களும் மக்களும் மெய்யுணர்வு இல்லாத அயன் அரி முதலி யோகும் பூச்சி புழுக்களும் மும்மலங்களால் பீடிக்கப்ப்ட்டவர்கள். இவர்கள் செய்யும் தொழிலால் வேற்றுமைக்குட்பட்டவர்கள். இவர்களது உடம்பைச் சிவபெருமான் தூமாயையில் இருந்து தோற்றுவித்தவன். இவர்கள் இருவினைகளுக்கீடா இறந்தும் பிறந்தும் இடையறாத துன்பப்படுவர்" என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**2206. சுத்த அவத்தையில் தோய்ந்தவர் மும்மலச்**
**சுத்தசத் தோடத் தனித்தனி பாசமு**
**மத்த இருள்சிவ னான கதிராலே**
**தொத்தற விட்டிடச் சுத்தரா [3]வார்களே.**

"சிவனடியார்களே, சிவபெருமான் தனது திருவருளின் மகிமையால் மும்மலங்களையும் ஒடுக்கி அவற்றின் காரியத்தையும் நீக்கி அருளும் பண்பினனாவான். சத்தென்பது மும்மலங்கள். அசத்தென்பது மும்மல காரியம். இவற்றுடன் தனித்தனியாகப் பிரிவுபட்டு பிணிப்புறுத்தும் மருளாகிய மாயேயாம் அறுபதும் தனித்தனிப் பாசம் எனப்படும். அவற்றின் தொடர்பையும் விட்டவராவர். பெரு மயக்த்தைச் செய்யும் மத்த இருளும் விட்டவராவர். இவையனைத்தையும் விட்டவரே தூயவராவர்" என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**2207. தற்கே வலம்முத்தி தானே தனிமையாம்**
**பிற்பாற் சகலங் கலாதிப் பிறிவதாஞ்**
**சொற்பாற் புரிசுத்த கேவலஞ் சாக்கிரந்**
**தற்பாற் புரிவது தற்சுத்த மாகுமே.**

"சிவனடியார்களே, பற்றற்ற உறுதியான தூயநிலை தான் வீடுபேறு. இவ்வாறு ஆருயிர் நிற்கும் நிலையைத் தூய புலம்புநிலை என்று சொல்வர். உழைப்பு முதலாகச் சொல்லப்படும் தூவா மாயையில் இருந்து ஆருயிர் விலகித் தன்னுணர்வு தோன்றாதிருப்பது தான் தூய நிலை" என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**2208. அறிவின்றி [1]முத்தன் [2]அராகாதி சேரான்**
**குறியொன்றி[3] லாநித்தன் கூடான் கலாதி**
**செறியுஞ் செயலிலான் றினங்கற்ற வல்லோன்**
**கிறியன் மலவியாபி கேவலந் தானே.**

“சிவனடியார்களே, ஆருயிர்க்கிழவன் புலம்பாகிய கேவல நிலையில் மலச்செறிவுடனேயே இருப்பான். அந்நிலையின் மருளாக்கக் கருவிகள் கூடாமையால் அறிவு முன் விளங்கப் பெறாது. அதனால் அவன் உடம்பில்லாதவன். இவன் பிறந்து இறந்து வரும் நிலையாத்தன்மையை மூன்றில்லாத நிலைப்பினன். அதனால் எச்செயலிலும் முன் நில்லாதவன்” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**2209. விந்துவும் மாயையும் மேவுங் கிரியையுஞ்**
**சந்தத ஞான பரையுந் தனுச்சத்தி**
**விந்துவின் மெய்ஞ்ஞான மேவும் பிரளயர்**
**வந்த சகலசுத் தான்மாக்கள் வையத்தே.**

“சிவனடியார்களே, விந்துவாகிய தூமாயையும், மாயையாகிய தூவாமாயையும் என்றும் பேரறிவாகத் திகழும் வனப்பாற்றலாகிய பரையும் ஆருயிர்களுக்கு அவரவர் வினைக்கேற்ப உம்பாக அமையும். ஒரு மலம் மட்டும் உடையவர்களுக்கும், இரு மலங்கள் மட்டும் உடையவர்களுக்கும் அமையும் உடம்பு தூமாயையில் இருந்து தோற்றுவிக்கப்படும். திருவடியுணர்வு கைவரப் பெற்றவர்களுக்குத் திருவருளில் இருந்தே தோன்றும். மும்மலங்களையும் உடையவர்களின் உடம்பு தூவாமாயையில் இருந்து தோன்றும்” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**2210. கேவல மாதியிற் பேதங் கிளக்குறிற்**
**கேவல மூன்றுங் கிளருஞ் சகலத்துள்**
**ஆவயின் மூன்று மதிசுத்த மூடவே**
**ஓவலில் லாவொன்பா னுற்றுணர் வோர்கட்கே.**

“சிவனடியார்களே, புலம்பாகிய கேவலமும், புணர்வாகிய சகலமும், புரிவாகிய சுத்தமும் கேவலாதிகள் என்று ஓதப்பட்டன. இவை ஒவ்வொன்றும் மூன்று வகைப்படும். இவை பின்வருமாறு, புலம்பிற் புலம்பு, புலம்பிற்புணர்வு, புலம்பிற் பிரிவு என மூன்று. புணர்விற் புணர்வு, புணர்விற் புலம்பு, புணர்விற் புரிவு என மூன்று புரிவிற் புணர்வு, புரிவிற் புலம்பு, புரிவின் புரிவு என மூன்றும் ஆக மூன்றும் ஒன்பது வகைப்படும். இவற்றை முறையே கேவலம், கேவல சகலம், கேவல சுத்தம் எனவும் சகல சகலம், சகல கேவலம், சகல சுத்தம் எனவும் சுத்த சுத்தம், சுத்த கேவலம், சுத்த சகலம் எனவும் கூறுவர். இவ் ஒன்பதினையும் பொருந்தி ஆருயிர் தூய்மைப்படும்.

இந்நிலையைத் திருவருளைப் பொருந்தி உணர்பவர்கள் அத் திருவருளை உணர்ந்து கொள்வர். அவர்களுக்கு எளிதில் புலனாகும்" என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**2211. கேவலத்திற் கேவலம் அதீதா தீதங்**
**கேவலத் திற்சக லங்கள் வயிந்தவங்**
**கேவலத் திற்சுத்தங் கேடில்விஞ் ஞாகலர்க்கு**
**ஆவயி னாதன் அருண்மூர்த்தி தானாமே.**

"சிவனடியார்களே, கேவலத்தில் கேவலம் எனப்படும் தூய புலம்பு அப்பாலைக்கு அப்பாலாம். அப் புலம்பிற் புலம்பு தூமாலை நிலைக்கலம். அப்புலம்பிற் புதிவு குற்றமற்ற பேருணர்வாகிய விஞ்ஞானம். இந்நிலை ஒரு மலத்தாராகிய விஞ்ஞானகலர் நிலையாகும். அவ்விடத்து அவ் உயிர் சிவபெருமான் விளங்கும் சீர்த்தவ உடம்பாகும்" என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**2212. சகலத்திற் கேவலஞ் சாக்கிரா தீதஞ்**
**சகல சகலமே சாக்கிர சாக்கிரஞ்**
**சகலத்திற் சுத்தமே தற்பரா வத்தை**
**சகலத்தில் இம்மூன்று தன்மையு மாமே.**

"சிவனடியார்களே, புணர்விற் புலம்பு நனவின் அப்பாலாகும். புணர்விற் புணர்வு நனவிற் கனவாகும். புணர்விற் பரிவு ஆருயிர் அருளுடன் கூடி நிற்கும் நிலை. தூய புணர்வின் கண் இம் மூன்று நிலையையும் காணலாம்" என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**2213. சுத்தத்திற் சுத்தமே தொல்சிவ மாகுதல்**
**சுத்தத்திற் கேவலந் தொல்லுப சாந்தமாஞ்**
**சுத்த சகலந் துரிய விலாசமாஞ்**
**சுத்தத்தில் இம்மூன்றுஞ் சொல்லலு [1]மாமே.**

"சிவனடியார்களே, தூயபுரிவிற் புரிவு, ஆருயிர் தொன்மையும், முதன்மையும், நன்மையும், உண்மையும், அறிவும், இன்பமும் ஒருங்கமைந்த தென்னாடுடைய சிவன்திருவுரு வெய்தல், புரிவிற் புலம்புதற் பணியாற்றுவதாலாகிய தவ ஒடுக்கம், புரிவிற்புணர்வு இன்பியலில் மூழ்கும் இனிய உறைவிடமான துரிய விலாசம்" என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**2214. சாக்கிர சாக்கிரந் தன்னிற் கனவொடுஞ்**
**சாக்கிரந் தன்னிற் சுழுத்தி துரியமே**
**சாக்கிரா தீதந் தனிற்சுகா னந்தமே**
**ஆக்கு மறையாதி ஐம்மல பாசமே.**

“சிவனடியார்களே, நனவில் நனவு, நனவிற் கனவு, நனவின் உறக்கம், நனவிற் பேருறக்கம், நனவின் உயிர்ப்படங்கல் ஆகிய ஐந்தும் துன்பியல் இன்பமாய் மாறும். ஆணவம், கன்மம், மாயை, ஆக்கம், நடப்பாற்றல் ஆகிய ஐம்மலப்பிணிப்பும் மறையாது அகலும்” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**2215. சாக்கிரா தீதத்திற் றானறு மாணவஞ்**
**சாக்கிரா தீதம் பராவத்தை தங்காது**
**ஆக்கு பரோபாதி யாஉப சாந்தத்தை**
**நோக்கு மலங்குண நோக்குத லாகுமே.**

“சிவனடியார்களே, நனவின் அப்பாலாம் சாக்கிராதீதத்தில் தன்முனைப்பால் ஆணவம் அகலும். இந்நிலை அருளில் தங்கும் நிலைக்கு அப்பாற்பட்டதாகும். அருளை உடைய பெரும் பொருள் சிவம். இந்நிலையில் சிவத்தை ஆருளிர்களுக்கு விளங்கச் செய்யும் எல்லாவற்றையும் திருவடி அன்பில் மூழ்குவிக்கும் சிவனடியினையே நோக்குவிக்கும் நோக்கும் என்பது பிறவினைக் பொருளில் வந்த தன்வினை. இந்த நிலையை அடைந்தவர்களை மலங்களால் பற்ற முடியாது” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**2216. பெத்தமும் முத்தியும் பேணுந் துரியமுஞ்**
**சுத்த வதீதமுந் தோன்றாமற் றானுணும்**
**அத்தன் அருளென் றருளால் அறிந்தபின்**
**சித்தமும் இல்லை செயலில்லை தானே.**

“சிவனடியார்களே, வீடும், நல்லோரால் கைக்கொள்ளப்படும் துரியமான ஒழுக்கமும், தூய்மையாகிய அப்பால் நிலையும் திருவருளால் ஒரு சிறிதும் தோன்றாது. தான் அனுபவித்துக் கொண்டிருப்பது சிவபெருமானின் திருவடியின்பம் என்று அருளால் அறிவன் அறிந்த பின் எண்ணமாகிய சித்தம் இயங்காது. அது இல்லாதவிடத்து வேறு எச்செயலும் இல்லை” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**2217. எய்திய பெத்தமும் முத்தமும் என்பன**
**எய்தும் அரணரு ளேவிளை யாட்டோடு[1]**
**எய்தி டுயிர்சுத்தத் திடுநெறி என்னவே**
**எய்தும் உயிரிறை பாலறி வாகுமே.**

“சிவனடியார்களே, பிறப்பும், முத்தியும் ஆருயிர்களுக்குக் கிடைக்கக் காரணம் என்னவென்றால், அவ்வுயிர்களைச் செந்நெறியான ஒழுக்க நெறியில் வாழ்ந்து இன்பம் பெறும் பொருட்டேயாகும். இத்திருவருள் செயல்கள் சிவபெருமானின் திருவுள்ளக்

குறிப்பால் நிகழ்வன. அதுவும் மிகவும் எளிமையாக திகழ்வன அவ்வுயிரைத் தூய்மைப்படுத்தும் தூய வழி அதுவாகும். திருவருளால் ஆருயிரில் இவ் உண்மையை உணரும். உணர்ந்ததும் அதன் அறிவு முழுமையாகச் சிவன் பாற் செல்லும்” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**2218. ஐம்மலத் தாரு மதித்த சகலத்தர்**
**ஐம்மலத் தாரு மருவினைப் பாசத்தர்**
**ஐம்மலத் தார்சுவர்க் கந்நெறி யாள்பவர்**
**ஐம்மலத் தாரர னார்க்கறி வோரே.**

''சிவனடியார்களே, ஆணவம், கன்மம், மாயை, மாயையாக்கம், நடப்பாற்றல் என்னும் ஐந்து மலங்களையும் உடையவர். மிகுந்த மலப்பிணிப்புடைய சகலராவர். இவர்கள் இருளான இருவினைகளாலும் பிணிக்கப்பட்டவர்கள். இவர்கள் துறக்க உலக இன்பத்தை அனுபவிப்பவராவர். இவர்கள் சிவபெருமானை அறியும் அறிவுடையவர்கள் அல்ல?" என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**2219. கருவி லதீதங் கலப்பிக்கு மாயை**
**அரிய துரிய மதிலுண்ணும் ஆசையும்**
**உரிய சுழுனை முதலெட்டுஞ் சூக்கத்து**
**அரிய கனாத்தூலம் அந்நன வாமே.**

''சிவனடியார்களே, கருவின் கண் அப்பால் நிலை மாயையுடன் கலப்பிப்பதாகும். பேருறக்க நிலையாவது மாயாகாரிய பொருட்களை அனுபவிப்பதற்கு எழும் வேட்கை (அவா). பேருறக்க உறக்க நிலைகள் எட்டுப் பாகுபாடாகும். நுண்ணுடம்பு கனவு நிலையாகும். பருவுடம்பு நனவு நிலையாகும்" என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**2220. ஆணவ மாகும் அதீதமேன் மாயையும்**
**பூணுந் துரியஞ் சுழுத்திபொய்க் காமியம்**
**பேணுங் கனவும் மாமாயை திரோதாயி**
**காணு நனவில் மலக்கலப் பாகுமே.**

''சிவனடியார்களே, உயிர்ப்பு அடங்குதல் அல்லது அதீதம் என்று சொல்லப்படும் அப்பால் நிலையில் ஆணவம் மட்டும் ஆருயிர்களைப் பிணித்திருக்கும். பேருறக்கத்தின்போது தூமாயையுடன் சேர்ந்து நிற்கும். உறக்கத்தின் இருவினைகளுடன் கூடி நிற்கும். நனவின்போது நடப்பாற்றலாகிய திரோதாபியுடன் ஐந்து மலங்களும் சேர்ந்திருக்கும்'' என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**2221. அரன்முத லாக அறிவோன் அதீதத்தன்**
**அரன்முத லாமாயை தங்கிச் சுழுனை**
**கருமம் உணர்ந்து மாமாயை கைக்கொண்டோர்**
**அருளு மறைவார் சகலத்துற் றாரே.**

“சிவனடியார்களே, அரன் முதலாக அறிவோனாகிய ஆருயிர் அப்பால் நிலைக்காண் தங்கும். அரன் முதலாகக் கொள்ளும் மாயை பேருறக்கமாகும். உறக்கத்தில் கருமமாகும். கனவில் மாமாயை ஆகும். நனவில் மறைப்பருளாகிய நடப்பாற்றல் மேலோங்கும். இந்நிலை சகல நிலையாகும்” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**2222. உருவுற்றுப் போகமே போக்கியந் துற்று**
**மருவுற்றுப் பூதம னாதியான் மன்னி**
**வருமச் செயல்பற்றிச் சத்தாகி வைகிக்**
**கருவுற் றிடுஞ்சீவன் காணுஞ் சபலத்தே.**

“சிவனடியார்களே, ஆருயிருக்கு மாயாகாரிய உடம்பு கிடைத்ததும் அது உருவநிலையை அடையும், அப்பொழுது வினைப்பயனை அனுபவிக்கும் நிலை உருவாகும். அதனால் பொறிகளால் புலன்களை அனுபவிக்கும். அது துற்று என்று சொல்லப்படும். இன்ப நுகர்வும் ஆருயிருக்கு உண்டாகும். மனம், பொறி முதலியவற்றால் சுவை, ஒளி, ஊறு, நாற்றம் என்னும் அறிதற் பொருட்சரிதம் கதைத்தல், நடத்தல், தான தருமம் செய்தல், கழிவகற்றல், கலந்து மகிழல் என்னும் செய்தற் பொருட்கள் ஆகியவற்றைப் புலன்களைக் கொண்டு இன்பமடையும். இதைச் சத்தாதி என்பர். இக்கருவிகளுடன் ஆருயிர் சேர்ந்து செயற்படும் ஆருயிர் சகலத்தில் காணப்படும்” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**2223. இருவினை யொத்திட இன்னருட் சத்தி**
**மருவிட ஞானத்தில் ஆதன மன்னிக்**
**குருவினைக் கொண்டருட் சத்திமுன் கூட்டிப்**
**பெருமல நீங்கிப் பிறவாமை சுத்தமே.**

“சிவனடியார்களே, நல்வினை, தீவினைப் பயன்களை நான் என்னும் முனைப்பு அற்று சிவ நினைவுடன் கழிக்கும் நிலையும் சிவனின் அடிமையென நினைத்து இறைப்பணியை விருப்பு வெறுப்பின்றி செயற்படும் நிறைவான ஒழுக்கமும் இருவினையொப்பு எனப்படும். இருவினையொப்பு நிலையை அடைந்ததும் சிவபெருமானது திருவருள் வெளிப்படும். அப்போது சிவபெருமான் சிவகுருவாக வெளிப்படுவன். வெளிப்பட்டுத் திருவைந்தெழுத்தை செவியறிவுறுத்துவன். அதனால் பெருமலமாகிய ஆணவ மலம் அகலும். அது அகன்றதும் பிறவாமை கைகூடும். இதுதான் தூய நிலை” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**2224. ஆறாறு மாறதின் ஐயைந் தவத்தையோடு**

**ஈறா மதீதத் துரியத் திவனெய்தப்**
**பேறான ஐவரும் போம்பிர காசத்து**
**நீறார் பரஞ்சிவ மாதேய [1]மாகுமே.**

“சிவனடியார்களே, அருஞ் சைவர் மெய்கண் முப்பத்தாறாகும். இம் முப்பத்தாறு மெய்களுடன் ஆருயிர்கூடி ஐம்பாட்டினை எய்தும். ஐம்பாடாவன நனவு, கனவு, உறக்கம், பேருறக்கம், உயிர்ப்படங்கல் என்பனவாகும். இவை ஒவ்வொன்றும் ஐந்து வகையானவை. இம்முறையால் நிலைகள் இருபத்தைந்தாகும். நிலை என்பது அவத்தையாகும். முப்பத்தாறு மெய்களும் வழிகளாகும். மெய்யுணர்வைப் பெற்ற ஒருவன் திருவருளால் நன்நிலையை அடைவான். அடைந்தால் தூமாயையின் கான் வாழும் ஐவர் நிலையையும் விட்டு நீங்கும். நீங்கியதும் சிவபெருமான் அவனை ஆட்கொண்டருள்வான்” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

2225. **தன்னை யறியா துடலைமுன் தானென்றான்**
**தன்னைமுன் கண்டான் துரியந் தனைக்கண்டான்**
**உன்னுந் துரியமும் ஈசனோ டொன்றாக்கால்**
**பின்னையும் வந்து பிறந்திடுந் [1]தானன்றே.**

“சிவனடியார்களே, நூல்களைக் கற்கு முன் தனது வீடு, மனைவி, மக்கள், மாடு முதலிய புறப் பொருட்களையே தனது உயிராகக் கருதி வாழ்ந்து வருவான் அவற்றைக் கற்ற பின்பு தனது உடம்பே தனது உயிர் எனக் கருதி வாழ்வான்’ தன் உடல்தான் தனது உடைமை என்று அதைப் பேணுவான். அதன் பின் தன் உடம்புக்கு வேறாக ஒன்று உண்டு என்று அவன் உணர்வதில்லை. பின் மெய்யுணர்வு தரும் நூல்களைப் படித்து, அதன்படி வாழும்போது திருவருளின் துணையால் தன்னைக் கண்டனன். சிவனை உணர்ந்து சிவசேவை செய்து சிவனை மறவாது வாழ்ந்தான். அதனால் அவன் துரிய நிலையை அடைந்தான். அந்நிலை சிவனோடு இரண்டறக் கலக்கும் நிலைக்கு முதல் நிலையாகும். அவனுக்கு அக்கலப்பு எய்தாதவிடின் பின்பும் அவன் பிறப்பெடுப்பான்” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

2226. **சாக்கிரந் தன்னில் அதீதந் தலைப்படில்**
**ஆக்கிய வந்த வயிந்தவ மானந்தம்**
**நோக்கும் பிறப்பறு நோன்முத்தி சித்தியாம்**
**வாக்கும் மனமும் மருவல்செய் யாவே.**

“சிவனடியார்களே, நனவு நிலையில் அப்பால் நிலை வந்து பொருந்தினால் திருவருள் மாயாகாரியமாகிய வயிந்தவத்தின்பால் மாலாகிய மயக்கம் கெட

திருவடிப்பேறு கிடைக்கும். அதனால் பிறப்பறும். பிறப்பறுந்ததும் பெரும் பேரின்பப் பேறான வீடு கைகூடும்" என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**2227. அப்பும் அனலும் அகலத்து ளேவரும்**
**அப்பும் அனலும் அகலத்து ளேவாரா**
**அப்பும் அனலும் அகலத்து ளேதெனில்**
**அப்பும் அனலுங் கலந்ததவ் வாறன்றே.**

"சிவனடியார்களே, அப்பு என்று சொல்லப்படும் விருப்பும், அனல் என்று சொல்லப்படும் வெறுப்பும் ஆருயிரின் நெஞ்சில் நிகழும். விருப்பு வெறுப்புக்கள் அப்பால் நிலைக்கண் வந்து பொருந்தாது. அப்பால் நிலை என்பது உயிர்ப்படங்கும் நிலை. இதற்கு இடம் மூலம். இந்நிலை கருவிகளுடன் கூடா நிலை. விருப்பு வெறுப்பாகிய அப்பும், அனலும் எவ்வாறு நெஞ்சத்துள்க் கலந்தது என்றால், உறக்கநிலையாகிய நெஞ்சும், அரனின் இருப்பிடம் பேருறக்க நிலையாகிய மேல் வயிறு அரியின் இருப்பிடம். இவ்விரு நிலைகளினால் நெஞ்சில் விருப்பு வெறுப்புத் தோன்றுவது இயல்பு" என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**2228. [1]அறுநான் கசுத்தம் அதிசுத்தா சுத்தம்**
**உறுமேழு மாயை உடனைந்தே சுத்தம்**
**பெறுமா றிவைமூன்றுங் கண்டத்தாற் பேதித்து**
**உறுமாயை மாமாயை யான்மாவி னோடே**

"சிவனடியார்களே, உடன், மெய் இருப்பத்து நான்கும் தூவாமையை உடையன. உணர்ந்த மெய் ஏழும் தூவாமையும், தூய்மையும் உடையனவாகும். இவை முறையே அசுத்தம், சுத்தாக்கம், சுத்தம் என்று கூறப்படும். ஒரு மாயையே பகுப்பு வேறுபட்டால் இங்ஙனம் முத்திறப் பிரிவாக வேறுபடும். இவை ஆருயிர்கட்கும் கருவியாய் அவற்றுடன் பொருந்தி நிற்கும். மாயையை உணர்வு மெய்யாகவும், மாமாயையை உணர்த்து மெ்யாகவும், ஆன்மாவை உடன் மெ்யாகவும் கொள்ளல் வேண்டும். ஆன்மாவை இரட்டுற மொழிந்து உடன் மெய்யாகவும் உயிராகவும் கொள்ளல் வேண்டும். இத்திருப்பாட்டைத் திருமுறைப்படி வழங்கப்படி வழங்கப்படும். சிவதீக்கையின்போது மும்முறை நீர் பருகுதல் வேண்டும். அப்போது ஓதுவது மிகவும் சிறப்பானதாகும்" என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**2229. மாயைகைத் தாயாக மாமாயை யீன்றிட**
**ஆய பரசிவன் தந்தையாய் நிற்கவே**
**ஏயும் உயிர்கே வலசகலத் தெய்தி**
**ஆய்தரு சுத்தமுந் தான்வந் தடையுமே.**

“சிவனடியார்களே, தூவாமாயையைச் செவிலித் தாயாகவும், தூமாயையை நல்ல தாயாகவும் கொண்டு ஈன்ற மகவு உடலாகும். தந்தை சிவபெருமானாவான். அவனது திருவுள்ளத் திருக்குறிப்பால் மாயாகாரிய உடல் பிறக்கின்றது. அம்முறையால் சிவனைத் தந்தையென்கின்றனர். இந்த நிலையில் புலம்பிக் கிடந்த புல்லுயிர் உடம்பினைப் பெற்று புணர்வுநிலையை எய்துகிறது. புணர்வுநிலையின் கண் செல்லுயிராக இருந்த திருவருளால் புரிவுநிலையை அடைந்து நல்லுயிராகிறது” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**2230. அஞ்சுங் கடந்த அனாதி பரந்தெய்வ**
**நெஞ்சம தாய நிமலன் பிறப்பிலி**
**விஞ்சும் உடலுயிர் வேறு படுத்திட**
**வஞ்சத் திருந்த வகையறிந் தேனே.**

“சிவனடியார்களே, துன்பப்படுத்தும் ஐந்து வகையான பாசங்களிலிருந்தும், இயல்பாகவே நீங்கியவன் சிவபெருமான். அவன் பழமைக்குப் பழமையானவன். இதுவே அனாதியாகும். தொன்மையான செம்பொருளும் அவனே. தன்னை விரும்பி நினைப்பவர்களது தூய உள்ளத்தில் கள்ளமின்றி மிக்க மகிழ்வுடன் இருக்கும் தூயவன் அவன். என்றும் பிறவாத இயல்பினன். மாயாகாரியமாக வியக்கத்தக்க முறையில் படைத்தளித்த இவ்வுடலில் நின்று, அவரவரது விளைனக்கேற்றபடி ஆருயிரைப் பிரித்தருளுள்பவன். அதற்காக அவன் மாயையுடன் கலந்து நிற்கும் நிலையை நான் அவனருளால் உணர்ந்தேன் என்கிறார் திருமூலர்” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**2231. சத்தி பராபரஞ் சாந்தி தனிலான**
**சத்தி பரானந்தந் தன்னிற் சுடர்விந்து**
**சத்திய மாயை தனுச்சத்தி ஐந்துடன்**
**சத்தி பெறுமுயிர் தானங்கத் தாறுமே.**

“சிவனடியார்களே, சாந்தியென்றால் வேண்டுதல் வேண்டாமை இல்லாத பரிபக்குவநிலை. இதனை உவர்ப்பு என்பார்கள். இது பேரறிவுப் பெரும்பொருளின் திருவருளாற்றலாகும். அவ்வாற்றல் தான் பேரின்பப் பெருநிலை. இவ் இருளால் விந்து என்று சொல்லப்படும் தூமாயையின் கண்ணும் உடம்பும், உடம்பின் கூறுகளும் இருக்கும். வனப்பாற்றல், நடப்பாற்றல், அன்பாற்றல், அறிவாற்றல், ஆற்றலாற்றல் என்ற ஐம்பெரும் பிரிவுகளும், அரும்பெரும் திருவின் பிரிவுகளாகும். அவ் அருட்பெருந் திருவை பேரறிவுப் பெருந்திரு என்றுங் கூறுவர். ஆருயிர்கள் உடம்பால் ஆற்றலை வெளிப்படுத்துகின்றன. ஆற்றல் நல்லவழியில் செல்லும்” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**2232. ஆறாறுக் கப்பால் அறிவார் அறிபவர்**
**ஆறாறுக் கப்பால் அருளார் பெறுபவர்**
**ஆறாறுக் கப்பால் அறிவாம் அவர்கட்கே**
**ஆறாறுக் கப்பால் அரனினி தாமே.**

“சிவனடியார்களே, அருஞ்சைவர், மெய் முப்பத்தாறு, தத்துவங்களுக்கு அப்பால் உள்ளது எதுவென்று அறிபவர் மெய்ப்பொருளின் உண்மையை உணர்ந்தவராவர். அவரே அப்பாலுள்ள நிறைந்த திருவருளைப் பெறுபவராவார். முப்பத்தாறு மெய்களுக்கும் அப்பால் இருக்கும் மெய்ப்பொருளான சிவபெருமானைத் திருவருளின் துணையோடு அறிந்து கொள்பவர்தான் மெய்யறிவுள்ளவராவர். அவர்கள் சிறப்புப் பெற்ற உயிரினராவர். அவர்கள் அருளை உள்ளும் புறமும் கண்டு இன்புறுவர். அது இனிக்கும் ஞானப்பழமாகும். அந்த ஞானப்பழம் நமச்சிவயப் பழம் எனச் சான்றோர் கூறுவர்” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**2233. அஞ்சொடு நான்குங் கடந்தக மேபுக்குப்**
**பஞ்சணி காலத்துப் பள்ளி துயில்கின்ற**
**விஞ்சையர் வேந்தனும் மெல்லிய லாளொடு**
**நஞ்சுற நாடி நயஞ்செய்யு மாறன்றே.**

“சிவனடியார்களே, நான்கு வகையாகக் கூறப்படும் ஐந்து சுவைகள் இவை. பூதங்கள் ஐந்து, பூதமுதல்கள் ஐந்து, பொறிகள் ஐந்து, புலன்கள் ஐந்தும் அகக்கலன்கள் என்று சொல்லப்படும். எண்ணம், மனம், எழுச்சி, இறுப்பு என்ற நான்கும் சேர்ந்தால் இருபத்து நான்கு. இவ் இருபத்து நான்கினையும் கடந்து, உட்புகுந்து பஞ்சு முதலிய ஐவகைப் பொருட்களால் செய்யப்பட்ட அழகிய கட்டிலில் ஆருயிர் துயிலும். அவ்வுயிர் வியத்தகு வேந்தன் என்று சொல்லப்படுவான். அக் கருவிகளுக்குத் தலைவனான மெல்லியலாள் நடுநாடியில் தங்கிநிற்கும் உயிர்ப்பு. அவற்றுடன் கூடிக்கொள்ளும். அறிதுயில் ஒடுங்கிய உறக்கமாகும். இது யோகநித்திரை எனவுங் கூறப்படும். அவ்வேளையில் ஆணவம் வெளிப்படும். அதைச் சிவபெருமான் கவனிக்கிறான். அவ் ஆணவ உணர்வு சிவனின் அருட்பார்வையால், அகலச் சிவபெருமான் தனது அருட்பார்வையால் அவ்வுயிருக்குத் திருவடியுணர்வைக் கொடுத்தருளுவான். இதுவே நயம் செய்தலாகும்” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**2234. உரிய நனாத்துரி யத்தி லிவனாம்**
**அரிய துரிய நனாவாதி மூன்றிற்**
**பரிய பரதுரி யத்திற் பரனாந்**
**திரிய வருந்துரி யத்திற் சிவமே.**

“சிவனடியார்களே, துரியம் என்று சொல்லப்படும். அப்பால் நனவில் ஆருயிர் தனித்து நிற்கும். அதனால் ஆருயிர் இவனாம் எனப் பெயர் பெறும். அதன்பின் நனவுதுரிய சாக்கிரமாகும். அத்தகைய அருமையான அப்பால் நனவு, அப்பாற் கனவு, அப்பாலுறக்கம் என்ற மூன்றினுள் பெருமைமிக்க அப்பாலைக்கப்பாலாம் பரதுரியத்தில் பரன் என்று சொல்லப்படும் திருவருளுடன் கூடி உறைவான். இவற்றுக்கெல்லாம் மேம்பட்டு மாறுபாடில்லாத அப்பால் நிலைகண் இருப்பவன் தூய சிவனேயாவான்” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**2235. பரமாம் அதீதமே பற்றறப் பற்ற**
**பரமாம் அதீதம் பயிலப் பயில**
**பரமாம் அதீதம் பயிலாத தபோதனர்**
**பரமாகார் பாசமும் பற்றொன் றறாதே.**

“சிவனடியார்களே, எல்லாவற்றிற்கும் மேலான மெய்ப்பொருள் பரமாகும். அந்தப் பரத்தை அடையக் குறிகளும், அடையாளங்களும், கோவில்களும், ஒழுக்கங்களும் ஆகியவற்றை அருளித்தந்தவன் சிவன் எனவுணர்ந்து திருவருளால் அவனது திருவடியை அடைய வேண்டும். இதற்கு உதாரணமாகக் கற்றுத் தேர்வதற்கு உதவியாக இருப்பன நூல்கள். கற்றுத் தேர்ந்தபின் அந்நூல்கள் தேவைப்படாதுபோலத் திருவருளால் அகத்துவம் புரிவாருக்கு முன் பற்றுக்கோடாக இருந்து வந்த அடையாளங்கள், கோவில்கள், நெறிகள் என்பன இப்போது வேண்டாதனவாக நீங்கும். அவை நீங்கியதும் திருவருள் வெளிப்பட்டு அவ்வுயிரை ஆட்கொள்ளும். அதனால் மெய்ப்பொருள் வெளிப்படும். வெளிப்பட்டபின் தொடர்ந்து செயற்பட மெய்ப்பொருளை அடையும் நிலை உருவாகும். இவற்றைப் பின்பற்றாதோர் பற்றுக்களிலிருந்து விடுபட முடியாது துன்புறுவர்” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**2236. ஆயும்பொய்ம் மாயை யகம்புற மாய்நிற்கும்**
**வாயு மனமுங் கடந்த மயக்கறின்**
**தூய அறிவு சிவானந்த மாகிப்போய்**
**வேயும் பொருளாய் விளைந்தது தானன்றே.**

“சிவனடியார்களே, மெய்யறிவு உண்டாவதற்கு முன்பு உலகம் நிலையானது, வாழ்வும் நிலையானது, இன்பமானது என்று எண்ணுவர். மெய்யறிவு வந்தபின் இவையாவும் பொய் மாயத் தோற்றம் என்று உணர்வர். மாயையின் மயக்கம் திருவருளால் அகன்றபின் உலகத்தினதும், உலக வாழ்க்கையினதும் உண்மைநிலை தெரிய வரும். அந்த உண்மை தெரிய வந்தால் சிவவுண்மை அறிவு ஏற்படும். அவ் அறிவால் சிவப் பேரின்பம் ஏற்பட்டு அது நிலைக்கும், நிலைத்ததும் சிவபெருமான் எங்கும் பரந்து நிற்கும் தன்மை புலனாகும். அதனால் அவ்வுயிர் சிவவிளைவாய்த் திகழும்” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**2237. துரியப் பரியில் இருந்தஅச் சீவனைப்**
**பெரிய வியாக்கிரத் துள்ளே புகவிட்டு**
**நரிகளை யோடத் துரத்திய நாதர்க்கு**
**உரிய வினைகள்நின் றோலமிட் டன்றே.**

"சிவனடியார்களே, துரியப் பரியாகிய அப்பால் முடிவின் கண் இருந்த ஆருயிரைத் திருவைந்தெழுத்தை ஓதுமாறு பணிப்பவன் சிவன். திருவைந்தெழுத்தை இடையறாது ஓதினால் நரிகளையொத்து நம்மை வஞ்சித்துக் கொண்டு தம் வழியில் இழுத்துச் செல்லும். பொறி புலன் கலன்களை சிவன் அடக்கியருள்வன். அதன்பின் இறைபணிகளான திருத்தொண்டுகள் பலவும் செய்தால் சிவனது அடிமை என்ற நிலை தோன்றும்."

"சிவனடியார்களே, நாகலிங்கம் பெருங் குடிகாரன், அவனது மனைவி திடீரென்று இறந்தமையால், அவன் தனிமைப்பட்டு விட்டான். அவனுக்குப் பிள்ளைகள் இல்லை. நல்ல பலசாலியான அவன் திருடியே தனது வாழ்க்கையை நடத்திக் கொண்டிருந்தான். ஒருநாள் அவன் திருடுவதற்கென பூபாலசிங்கத்தின் வீட்டுக்குள் நுழைந்தபோது பூபாலசிங்கத்தின் மனைவியான ரதி அவனைக் கண்டு விட்டாள். அவள் அதை ஊரவர்க்குச் சொல்ல ஊரவர் அவனைத் தேடித்திரிந்தனர். அகப்பட்டால் தன்னைக் கொன்றுவிடுவார்கள் என்பதற்காக அவன் கதிரேசனது வீட்டுக்குச் சென்று தனது நிலையைச் சொன்னான். கதிரேசன் ஊரவர்களைச் சமாதானப்படுத்தி அனுப்பிவிட்டு, நாகலிங்கத்திற்குச் சொன்னார்; 'குற்றம் செய்பவன் ஒருநாள் அகப்படுவான். அகப்பட்டால் அடி, உதை வாங்க வேண்டி வரும். ஒரு நாளைக்குச் சமாதானம் கூறலாம். தொடர்ந்து கூறமுடியாது. இன்று நான் உனக்கு உதவ முன்வந்தது உன்னைத் திருத்துவதற்காக, இனித்திருடினால் இங்கு வராதே. வந்தால் நானே உன்னைக் காவல்துறையிடம் ஒப்படைத்து விடுவேன். சிவன் தந்த உடம்பு உறுதியாக இருக்கு. அப்படியிருக்க ஏன் திருடுகிறாய். ஆச்சிரமத்துக்கு வந்து வேலை செய். மூன்று வேளையும் உணவு தரலாம். திருவைந்தெழுத்தை ஓதிச் சிவனை வணங்கு; திருவைந்தெழுத்து உனது குற்றங்களையெல்லாம் நீக்கும் என்றவர்" என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**2238. நின்றஇச் சாக்கிர நீள்துரி யத்தினின்**
**மன்றனு மங்கே மணஞ்செய்ய நின்றிடும்**
**மன்றன் மணஞ்செய்ய மாயை மறைந்திடும்**
**அன்றே யிவனும் அவன்வடி வாகுமே.**

“சிவனடியார்களே, நனவின்போது ஏற்படும் அப்பால் நிலை சாக்கிரக துரியம் எனப்படும். அந்நிலையில் திருவைந்தெழுத்துக்களை அகநிலை ஐம்பெரும் மன்றங்களாகக் கொண்டு, சிவபெருமான் அம்மை காண்பதற்காக அருட்பெருங்கூத்தை ஆடுகிறான். இது அகக்கூத்தாகும். இவ் அகக்கூத்துச் சொல்லுலகைப்பற்றி நிகழ்கின்றது. இதுபற்றிப் பொருளுலகம் பற்றி நிகழும் புறக்கூத்தும் ஐந்திடத்தில் நடைபெறும். அவை முறையே திரு ஆலங்காடு, திருந்தில்லை, திருக்கூடல், திருநெல்வேலி, திருக்குற்றாலம் என்பனவாகும். இவற்றின்கண் அமைந்துள்ள மன்றங்கள் மணி, பொன், வெள்ளி, செம்பு என்பவற்றால் ஆக்கப்பட்டன. இவற்றுக்கு ஒப்பாக சிவயநம என்ற ஐந்தெழுத்துள்ளது. இவ்வாறு அகப்புற அம்பலங்களில் கூத்தாடும் அம்பலவாணரை மன்றன் என அழைப்பர்” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**2239. விரிந்திடிற் சாக்கிர மேவும் விளக்காய்**
**இருந்த விடத்திடை யீடான மாயை**
**பொருந்துந் துரியம் புரியிற்றா னாகுந்**
**தெரிந்த துரியத் தீதக லாதன்றே.**

“சிவனடியார்களே, பொறி, புலன், கலன் முதலிய உறுப்புக்கள் விரித்த இடத்தில் நனவினைப் பொருந்தும். மாயை விளக்குப் போன்று இருந்த இடத்தில் வலிமையோடு நிற்கும். நனவில் அப்பால்நிலைக்கு முன்னிலை வாய்குமிடத்து அருளால் ஆருயிர் தாமரை இலையில் நீர்போல ஒட்டாது நிற்கும். இக்கருவிகளெல்லாம் நனவின்போது ஏற்படும் பேருறக்க நிலையில் விட்டகலாது. ஒட்டிச் செயலற்று இருக்கும்” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**2240. உன்னை யறியா துடலைமுன் நானென்றாய்**
**உன்னை யறிந்து துரியத் துறநின்றாய்**
**தன்னை யறிந்தும் பிறவி தணவாதால்**
**அன்ன வியாத்தன் அமலனென் றறிதியே.**

“சிவனடியார்களே, முன்பு நீ உன் நிலையை உணராது ஐம்புலன்களின் விருப்புக்கு ஆட்பட்டு உடலை நான் என்று நினைத்தாய். அதன்பின் அருளால் உன்னை அறிந்து பேருறக்கமாகிய துரியத்தைப் பொருந்தி நின்றாய். தனது நிலையை அறிந்த பின்பு பிறவி நீங்காது என்றும், பிறவி நீங்குவது சிவபெருமானால் என்று அறிந்து கொண்டாய். இது உடல் பெருத்துக் கொண்டு வருவதை நோய் என்று உணராது அது ஒருவித அழகு என்றுணர்ந்து அதனால் சிலநாள்கள் மகிழ்ந்து, பின் பெருந் துன்பப்பட்டு அதன் பின் அது நோய் என்று உணர்கின்றாய். அது நீங்க வேண்டும் என்று விரும்புகின்றாய். அது நீங்க வேண்டுமானால் அதற்கான அறிவுடைய மருத்துவனால் மட்டுமே முடியும். அதுபோன்று மலநோயை நீக்கும் வல்லமை சிவபெருமானுக்கே உண்டு.” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**2241. கருவரம் பாகிய காயந் துரியம்**
**இருவருங் கண்டீர் பிறப்பிறப் புற்றார்**
**குருவரம் பெற்றவர் கூடிய பின்னை**
**இருவரு மின்றியொன் றாகிநின் றாரே.**

“சிவனடியார்களே, கருவுற்ற நாள்முதலாக வளர்ந்து ஓர் எல்லையை அடையும் நிலை பிறப்பாகும். அப்பிறப்பின் காரணமாக உண்டாவது இவ் உடல். படைத்தலையும், காத்தலையும் சிவனது திருவாணையால் செய்து வரும் அயனும் அரியும் பிறப்பு இறப்புக்கு உட்பட்டவர்களைச் சிவகுரு எழுந்தருளிவந்து திருவைந்தெழுத்தை அருளியருளுவான். அது ஒரு வரமாகும். அவ்வரத்தினைப் பெற்று அவரது திருவடியில் ஆருயிராகிய கிழவன் சேருவன். சேர்ந்த பின்பு முத்திறப்புப் புணர்வான மொழியொணாக் காப்புநிலையை அடைவன். அதன்பின் ஆருயிர் சிவனது திருவடியில் அடங்கும் அடங்கினால் இருவரும் ஒருவராக நிற்பர். இந்த இருவரின் கலப்பும் தேனும் பாலும் கலந்தது போலாகும்” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**2242. அணுவின் துரியத்தி லான நனவும்**
**அணுவசை வின்கண் ணான கனவும்**
**அணுவசை விற்பரா தீதஞ் சுழுத்தி**
**பணியிற் பர துரி யம்பர மாமே.**

“சிவனடியார்களே, ஆருயிரான அணுவின் பேருறக்க நிலையான துரியத்தில் உண்டாகும் நனவும், ஆருயிரின் புடைப்பெயர்ச்சியில் உண்டாகும் கனவும், அடிப்படைப் பெயற்சியின்கண் தன்னை இழப்பதாகிய உறக்கமும், பொருந்திய இடத்து, அப்பால்நிலை எய்தும். எய்தியதும் சிவனோடு ஒன்றாகும் சிறப்புநிலை உண்டாகும்” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**2243. பரதுரி யத்து நனவும் பரந்து**
**விரிசக முண்ட கனவுமெய்ச் சாந்தி**
**உருவுறு கின்ற சுழுத்தியும் ஒவத்**
**தெரியுஞ் சிவதுரி யத்தனு மாமே.**

“சிவனடியார்களே, பேருறக்கமாகிய பரதுரிய நனவு எங்கும் பரந்து விரிந்த உலக நுகர்வுகளை உடையன. அதுபோலக் கனவுப் பயனும், நுண்நுகர்வுண்மையாதலின் பரதுரியக்கனவு மெய்மை அமைதியாகும். கருவிகரண முதலிய உருவு மட்டும் அசைவின்றியிருக்கும். உறக்கநிலையும் நீங்க, ஆண்டு அருளாற் புலனாகும் ஒன்று. அதுவே சிவதுரிய நிலையாகும். அந்நிலை எய்தியவன் சிவத்துரியத்தனாவன்” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**2244. பரமா நனவின்பின் பாற்சக முண்ட**

**திரமார் கனவுஞ் சிறந்த சுழுத்தி**
**உரமாம் உபசாந்த முற்றல் துறவே**
**தரனாஞ் சிவதுரி யத்தனு மாமே.**

"சிவனடியார்களே, மேன்நனவு என்று சொல்லப்படும் பரமா நனவின் அடுத்தநிலை மெய்மையும் உறுதியும் உடைய மேற்கனவில் உலக நுகர்வுகளை உண்ணும் சிறந்த உறக்கநிலை நல்லுறுதியாகும். பேருறக்க மேனிலை அமைதி நிறைதல். அதன்மேல் நிலை துறவு ஆகும். இந்நிலை சிவதுரிய நிலையாகும். இந்நிலையை அடைந்தவன் சிவதுரியத்தனாவன்" என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**2245. சீவன் துரிய முதலாகச் சீரான**
**ஆவ சிவன்துரி யாந்தம் அவத்தைபத்து**
**ஒவும் பராநந்தி யுண்மைக்குள் வைகியே**
**மேலிய நாலேழ் விடுத்துநின் றானன்றே.**

"சிவனடியார்களே, ஆருயிரின் பேருறக்க நிலையாகிய சீவதுரிய முதல் சிவதுரியம் ஈறாக நிலைகள் பத்தாகும். இப் பத்து நிலைகளையும் அருளால் கண்டு நீங்க ஆண்டு நிலை பெற்றுள்ள பராநந்தியாகிய சிவபெருமானின் திருவடியில் தங்கி நிலை பத்தும் அப்பால் நிலையொன்றுமாகிய பதினொன்றினையும் விடுத்து ஆருயிர்க் கிழவன் இன்புற்றிருந்தனன்." என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**2246. பரஞ்சிவன் மேலாம் பரமம் பரத்திற்**
**பரம்பரன் மேலாம் பரநன வாக**
**விரிந்த கனாவிடர் வீட்டுஞ் சுழுனை**
**உரந்தகு மாநந்தி யாமுண்மை தானே.**

"சிவனடியார்களே, பரம்சிவன் இரண்டிற்கும் மேல் பரமம். அப்பரமத்திற்கு மேல் பரம்பரன். பரநனவு விரிந்த பரக்கனவு. இவ்விரண்டும் ஆருயிர்களின் பிறவித் துன்பத்தை அகற்றும். அதன்மேல் பேரறிவுப் பெருமானாகிய பரநந்தியின் உண்மைநிலையை எய்துவன்." என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**2247. சார்வாம் பரசிவஞ் சத்தி பரநாதம்**
**மேலாய விந்து சதாசிவ மிக்கோங்கிப்**
**பாலாய்ப் பிரமன் அரியம ராபதி**
**தேவாம் உருத்திரன் ஈசனாங் காணிலே.**[1]

"சிவனடியார்களே, எப்பொருட்களோடும் சார்பாக நின்று எப்பொழுதும் இன்ப வடிவினனாக விளங்கும் மெய்ப்பொருள் பரசிவம், சக்தி, பரநாதம், பரவிந்து, சதாசிவம், ஈசன், அரன், அரி, அயன் என்னும் ஒன்பது நிலைகளுள் நிற்கும்; இது பரநிலையாகும். இந்நிலையை அடைந்த ஆருயிர்க் கிழவனும் இப்பெயர்களையே பெற்று வாழ்வான்.

சதாசிவ மெய்யாகிய அருளோன் அருவுருவ நிலையாவான். இந்நிலையில் இருந்துதான் உருவநிலைகள் நான்கும் தோன்றும். அரிய அமராபதித்தேவு என்னும் உருத்திரருக்கு அடங்கியவர்களே வானவர்களான தேவர்களும், தேவர்களின் அரசனான இந்திரனும்" என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**2248. கலப்பறி யார்கடல் சூழுல கேழும்**
**உலப்பறி யாருட லோடுயிர் தன்னை**
**அலப்பறிந் திங்கர சாளகி லாதார்**
**குறிப்பது கோல மடலது வாமே.**

"சிவனடியார்களே, ஏழு வகையான உலகங்களும், பிறப்புக்களும், மாயாகாரியப் பொருட்களின் கலப்பாகும். அவற்றுடன் ஆருயிர் கலந்திருப்பதும் நிலையானதல்ல. இவ் உண்மையை அறியாதவர்கள், உயிருடன் கூடிய உடல் அழியும் என்பதையும், அவ்வாறு அழிவடையும் உடல் உயிரினைத் தன்பக்கம் ஈர்த்து துன்புறுத்துவதையும் அறிய மாட்டார்கள். அருளால் அறிவோர் அவ்வுடலினை ஆளும் தகுதியினை உடையவராவர். அவ் உண்மை அறிந்து அவற்றை ஆளும் வலிமை இல்லாதவர்களும் உண்மையை உணரவும், ஆளும் தகுதியைப் பெறவும், சிவபெருமானைப் பற்றற்ற உள்ளத்தால் வழிபடல் வேண்டும். அவ்வாறு வணங்கி வந்தால் அதற்கு வேண்டிய வலிமை சிவபெருமானிடத்தில் இருந்து தாமே வந்து சேரும்" என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**2249. பின்னை யறியும் பெருந்தவத் துண்மைசெய்**
**தன்னை யறியில் தயாபரன் எம்மிறை**
**முன்னை யறிவு முடிகின்ற காலமும்**
**என்னை யறியலுற் றின்புற்ற வாறே.**

"சிவனடியார்களே, பிறந்தபின் அறிவு கல்வியால் வரும். பின்னை அறிவாகிய செயற்கை அறிவு நன்னெறி நான்மை நற்றவம் செய்து செய்துவந்தால் அன்னையாகிய திருவருளம்மை நம்மை அறிந்து கொள்வாள். அம்மை அறிந்தால் அதனைச் சிவனும் உணர்ந்து கொள்வன். உணர்ந்தவுடன் தொன்மையான இயற்கை அறிவு சிவனது திருவடியின்கண் பொருந்தும். நன்நிலை வந்து சேரும். அதனால் உயிர் தன்னை அறிந்து கொள்ளும். எமது உறவு ஆண்டவனது திருவடியாகும். திருவடியை அடைந்தால் பேரின்பம் கிடைக்கும்." என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**2250. பொன்னை மறைத்தது பொன்னணி பூடணம்**
**பொன்னின் மறைந்தது பொன்னணி பூடணம்**
**தன்னை மறைத்தது தன்கர ணங்களாம்**
**தன்னின் மறைந்தது தன்கர ணங்களே.**

“சிவனடியார்களே, பொன்னாலான அணிகளை அணிபவர்கள் மகிழ்வும், பெருமையும் அடைகின்றனர். மற்றவர்களும் அவர்களை மதிக்கின்றனர். அணிபவர்களும் அவற்றால் சிறப்புப் பெறுகின்றனர். அவ்வணிகலன்களை அணியின் வேறுபாட்டுடன் காணும்போது பொன்னைப்பற்றிய குறிப்பும் காட்சியும் ஒரு சிறிதும் புலனாகாது. அதுபோலப் பொன்னைப்பற்றி ஆராயுமிடத்து அணிகளைப் பற்றிய குறிப்பும், காட்சியும் தென்படாது. அதுபோல உடல் கலன் முதலியவற்றை ஆராயும்போது ஆருயிரின் குறிப்பும் காட்சியும் தென்படாது; அதுபோல உடல்கலன் என்பவற்றிற்கு மேலாக அறிவுள்ள தாய் அவற்றின் வேறாக நின்று அவற்றை இயக்குவதாய் அவற்றால் பயனடையும்படி சிவனால் சேர்க்கப்பட்டதாய், அழிவில்லாதாய், சிவனின் திருவடிக்கீழ் வாழும் பெரும் பேற்றினை எய்த வேண்டுமென்பதற்காகச் சிறப்பாகச் சிவனால் படைக்கப்பட்ட ஆருயிர் ஒன்று உண்டு என்பதை ஆராய்ந்தால் உடல்கலன் பற்றிய நினைவு வராது” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**2251. மரத்தை மறைத்தது மாமத யானை**
**மரத்தின் மறைத்தது மாமத யானை**
**பரத்தை மறைத்தது பார்முதற் பூதம்**
**பரத்தின் மறைத்தது பார்முதற் பூவே.**

“சிவனடியார்களே, உலகம் உருவமாகவும், யோனிகள் உறுப்புக்களாகவும் கொண்டு அகிலா நலங்கள் என்றும் இடையீடின்றி ஒன்றாய், வேறாய், உடனாய் நின்று அருள்புரிந்தருளும் சிவபெருமானின் அரும்பெரும் தன்மையினை இத்திருப்பாடல் விளக்குகின்றது. தேக்கு முதலிய சிறந்த மரங்களால் கை தேர்ந்த தச்சன் ஒருவன் ஒரு அழகிய யானையின் உருவைச் செய்கின்றான். அவ்வுருவைப்பற்றி எண்ணினாலோ அல்லது ஆய்வு செய்தாலோ மரத்தைப் பற்றிய எண்ணமும் வேறுபாடும் ஒரு சிறிதும் தோன்றாது. மரத்தைப் பற்றி எண்ணினால் யானையைப் பற்றிய எண்ணம் தோன்றாது. அது போல உலகத்தைப் பற்றி எண்ணும்போது அதைப் படைத்த சிவனின் எண்ணம் தோன்றுவதில்லை. ஆருயிர்கள் இன்பமடைவதற்காக வியத்தகு உலகையும், உயிர்களையும் படைத்து அவற்றுடன் கலந்து நின்று அவற்றை இயக்கிவரும் சிவபெருமானின் திருவுருவமான திருவருளின் இயல்பினையும், அவனது எண்பெருங் குணங்களையும், என்றுங் கேட்பார் யாருமில்லை.”

சிவனடியார்களே, சிவன் கோவிலுக்கு ஓர் அடியவர் ஒரு யானை வாகனத்தைச் செய்து கொடுத்தார். அது மிகவும் அழகாகவும், உயிர்யானை போலவும் இருந்தது. அதைப் பார்த்தவர்கள் அழகான யானை என்றனர். சிலர் உயிரான யானைபோல இருக்கிறது என்றனர். ஆனால் யாரும் அந்த யானையைச் செய்த தச்சனின் திறமையைப் பாராட்டவில்லை. இவற்றைக் கேட்டுக் கொண்டிருந்த கதிரேசன் சொன்னார்; அழகான இந்த உலகையும், பெறுமதியான உடல்களையும் படைத்த

சிவபெருமானை யாரும் உணராததுபோல இந்த யானை வாகனத்தைச் செய்தவனையே நாம் பாராட்ட வேண்டும். எதனால் அது செய்யப்பட்டதென்பதையும், யாரும் உணரவில்லை. மரத்தை யானையும், யானையை மரமும் மறைத்ததுபோல உலக விடயங்களை உள்ளபடி உணர ஆணவம் விடுவதில்லை." என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**2252. ஆறா றகன்று நமவிட் டறிவாகி**
**வேறான தானே யகாரமாய் மிக்கோங்கி**
**ஈறார் பரையின் இருளற்ற தற்பரன்**
**பேறார்[1] சிவாய அடங்கும்பின் முத்தியே.**

"சிவனடியார்களே, அருஞ்சைவர் மெய் என்று சொல்லப்படும் முப்பத்தாறு தத்துவங்களின் உண்மைகள் ஒருவனுக்குத் திருவருளால் உணர்த்தப்படும். உணர்த்தப்பட்டால் அப்பொருளின் உண்மை குறிக்கும் மகர எழுத்து படித்து முடித்த நூல்போலச் செயலற்று இருக்கும். அப்படிச் செயலற்று இருந்தால் அதனைத் தொழிற்படுத்தும் நகரமும் கற்பித்த ஆசானும் செயலற்று இருப்பர். இந்நிலையில் ஆருயிரின் அறிவு சுட்டறிவாகவும், சிற்றறிவாகவும் இருக்கும். இவை முற்றாக அகன்றால் ஆருயிர் அறிவாகி நிற்கும். பின் உழைப்பாலோ, வேறு வழிகளாலோ மிக்க ஓங்கிக் காணப்படும். ஆருயிர் ஐம்புலன்களையும் அடக்கினால், ஆருயிருர் எழுந்து நின்ற இடத்தில் தான் வந்து நிற்கும். அதன்பின் சிவபெருமான் திருவருளின் துணையால் அவ்வுயிரைத் தன் திருவடியில் சேர்ப்பான்" என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**2253. துரியத்தில் ஓரைந்துஞ் சொல்லக ராதி**
**விரியப் பரையின் மிகுநாத மந்தம்**
**புரியப் பரையின் பராவத்தா போதந்**
**திரியப் பரமந் துரியந் தெரியே.**

"சிவனடியார்களே, துரியமாகவே மேல் நிலையில் உண்டாகும் மேல் நனவு, மேற்கனவு, மேலுறக்கம், மேற்பேருறக்கம், மேலொழுக்கம் என்னும் ஐந்து நிலைகளும் திருவருளால் உணருதல் வேண்டும். சொல்லுலகும், பொருளுலகும் விரிதற்கிடமாகிய அகர முதலிய எழுத்துக்களை உள்ளடக்கி நிற்கும் ஒலியாகிய நாதம் திருவருளால் தூமாயையில் இருந்து தோன்றும்; அதுபோல இரு வேறு உலகங்களையும், அந்தமாகிய ஒடுக்கத்தைப் பெறத் திருவருளால் பாராவத்தையாகிய மேல்நிலை தோன்றும். திருவருள் உணர்வாகிய போதமும் ஒடுங்கும். ஒடுங்கியதும் சிவன் தோன்றுவார். இதுதான் துரியமாகிய மேன்நிலையாகும்" என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**2254. ஐந்துஞ் சகலத் தருளாற் புரிவற்றுப்**
**பந்திடுஞ் சுத்த அவத்தைப் பதைப்பினில்**
**நந்தி பராவத்தை நாடச் சுடர்முனம்**
**அந்தி யிருள்போலும் ஐம்மல மாறுமே.**

“சிவனடியார்களே, திருவருளால் ஆருயிர்களின் ஐம்மலங்களும், நீங்குவதே துறவாகும். இது பற்றற்றநிலை. அதுவே தூய்மையான நிலை; அதுவே தெளிவாகக் காணலாம். அதுவே சுத்தி. அதுவே பரிவு. அந்நிலையில் நந்தியின் மேல் நாட்டம் உண்டாகும். அந்நிலையில் ஐந்து மலங்களும் அகன்றுவிடும்” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**2255. ஐயைந்து மட்டுப் பகுதியும் மாயையும்**
**பொய்கண்ட மாமாயை தானும் புருடன்கண்டு**
**எய்யும் படியாய் எவற்றுமாய் அன்றாகி**
**உய்யும் பராவத்தை யுள்ளுறல் சுத்தமே.**

“சிவனடியார்களே, ஆருயிர்களுக்குப் பருவுடலாய் அமைந்த உடல் இருபத்து நான்காகும். இவற்றுடன் சேர்ந்திருக்கும் ஆளையும், கூட்டினால் இருபத்தைந்தாகும். இவ் இருபத்தைந்து மெய்களும் சேர்ந்துதான் உடலாகும். ஆளின் பொது நிலைமை ஊழி, ஊழ், உழைப்பு, உணர்வு, உவப்பு என்னும் தூவாமாயையினால் ஐயம் போர்வைபெற்று நிற்கும். இவ் இரண்டும் முறையே உழைப்பார் கருவிகைக் கோடலும், தக்கரையாத்தலும் ஒக்கும். உழைத்தல், குடையடுத்தல் உன்னுபோது ஆளாம். விழைகருவி கோடல், சிறப்பு, மட்டுப்பகுதியாகிய மூலப்பகுதியும், ஏழு மெய்களுள் கூடிய தூவாமாயை என்றும் உணர்வு மெய்யும் நிலையாமையுடையன. திருவடி சேர்வதற்கான கருவிகளான தூமாயை ஐந்தும், திருவருளால் ஆருயிரின் அறிவில் காணப்படும். காணவேதான் வேறு எனினும் இவற்றால் தனக்கு நன்மைகள் எதுவும் இல்லை என்ற நிலை ஏற்படும். இந்த நிலையில் ஏற்படுவதே புரிவு நிலையாகும்” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**2256. நின்றான் அருளும் பரமுமுன் னேயமும்**
**ஒன்றாய் மருவும் உருவும் உபாதியுஞ்**
**சென்றா னெனைவிடுத் தாங்கிற்செல் லாமையும்**
**நன்றான ஞானத்தின் நாதப் பிரானன்றே.**

“சிவனடியார்களே, நன்னெறி நான்கையும் பேணுவதன் மூலம் திருவடி உணர்வு வெளிப்படும். நாதங்கடந்து அந் நாதத்தை இயக்கும் சிவபெருமான் நாதப்பிரான் என்று அழைக்கப்படுவன். அவனது திருவருளும் பரமும் அதன்மீது ஆருயிர் கொள்ளும் அன்புமாகச் சிவன் நின்றருளுவன். ஆருயிருடன் பிரிவின்றிக் கலந்து, ஒன்றாக சேர்ந்திருக்கும் பருவுடல், நுண்ணுடல், முதலுடல் ஆகியவை ஆருயிரைவிட்டு அகலும்படி சிவகுருவாகச் சிவன் வந்தருளுவான்” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

## முக்குண நிர்க்குணம்

**2257. சாத்திக மெய்து நனவெனச் சாற்றுங்கால்**
**வாய்த்த இராசத மன்னுங் கனவென்ப**
**ஒய்த்திடுந் தாமதம் உற்ற சுழுத்தியாம்**
**மாய்த்திடு நிர்க்குண மாசில் துரியமே.**[1]

“சிவனடியார்களே, மூலப்பகுதிகளில் இருந்து வெளிப்படும் முக்குணங்களின் இயல்புகளைக் கூறுமிடத்து மிக்க அமைதிக் குணமாகிய சாத்விகம் நனவாகும். ஆட்சிக்குணமான இராசத நிலை கனவாகும். அழுந்தற்குணமாகிய தாமதம் உறக்கமாகும். இம் மூன்று குணங்களையும் அடங்குமாறு செய்து அருட்குணம் மேலோங்கி நின்றால் அது நிர்க்குணமாகும். இந்த நிலை பேருறக்க நிலையாகிய துரித நிலையாகும். பேருறக்கம் என்பது உலகையும் உடலையும் துறந்து சிவனை நினைந்து திருவருளில் அடுத்து நிற்கும் நிலையாகும்.” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

## அண்டாதிபேதம்

**2258. பெறுபகி ரண்டம் பேதித்த அண்டம்**
**எறிகடல் ஏழின் மணல்அள வாகப்**
**பொறியொளி பொன்னணி யென்ன விளங்கிச்**
**செறியும்அண் டாசனத் தேவர் பிரானே.**

“சிவனடியார்களே, புறத்தே காணப்படும் அண்டங்களும், நிலமண்டலம், நீரண்டம், நெருப்பண்டம், காற்றண்டம், வான் அண்டம் என்று சொல்லப்படும். ஒன்றோடொன்று மாறுபட்ட அண்டங்களும் அளவில்லாதன. தேவர்களுக்கும், ஏனையோருக்கும் முழுமுதலாக விளங்கும் சிவபெருமான் இவ் அண்டஙங்கள் அனைத்தையும் இருக்கையாகக் கொண்டு பிரிவின்றி விளங்குகின்றனன். கண்ணும் ஒளியும், பொன்னும் அணியும் ஒன்றைவிட்டு ஒன்று தனித்து விளங்காமை போன்று சிவனும் அண்டங்களும் பிரிவின்றி இருந்தருளுகிறான்.” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**2259. ஆனந்த தத்துவம் அண்டா சனத்தின்மேல்**
**மேனிஜந் தாக வியாத்தமுப் பத்தாறாய்த்**
**தானந்த மில்லாத தத்துவ மானவை**
**ஈனமி லாஅண்டத் தெண்மடங் காகுமே.**

“சிவனடியார்களே, பேரின்ப வடிவினனான சிவபெருமான் அண்டங்களை இருக்கையாகக் கொண்டவன். அவன் அத்தன், அன்னை, அருளோன், ஆண்டான்,

ஆசான் ஆகிய ஐந்து வேறுபட்ட வடிவங்களைக் கொண்டு ஆருயிர்களுக்கு வேண்டியதை அள்ளித்தருகிறான். முப்பத்தாறு மெய்களுக்கும், அப்பாற்பட்டு அறிவில்லாது நிற்பவன் அவன். இத்தத்துவங்கள் அளவில்லாது காணப்படும் அண்டங்களின் தொகையை விட எட்டுமடங்கு அதிகமானதாகும். ஐந்து திருமேனிகளைக் கொண்டெழுந்துபோதும் அவன் எங்கும் நீக்கமற நிறைந்தும், அவற்றிலிருந்து பிரிவின்றி நிற்பான்" என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

## பதினொராந்தானமும் அவத்தையெனக்காணல்

**2260. அஞ்சில் அமுதுமோ ரேழின்கண் ஆனந்த**
**முஞ்சிலோங் காரமோ ரொன்பான் பதினொன்றில்**
**வஞ்சக மேநின்று வைத்திடிற் காயமாங்**
**கிஞ்சுகச் செவ்வாய்க் கிளிமொழி கேளே.**

"சிவனடியார்களே, உயிர் ஒருபோதும் அழியாது. அது அழியாது நிலைத்திருக்க உதவுவது அமிழ்து. தூமாயையின் கண் பெறப்படும் சிவ மெய் என்றும் அழிவடையாத இன்பநினைப்பினைத்தரும். அதனால் சிவனே சாவா மருந்தாவான். இ∴து தூமாயையின் ஐந்து நிலைகளில் ஒடுக்கமுறை ஈற்றில் காணப்படுவது. இதுவே தோற்ற முறையில் முதலாவதாகும். இவ்வைந்தும் உணர்த்து மெய் என்று கூறப்படும். உணர்வு, மெய் ஏழில் இறுதியாகக் காணப்படும் தூவாமாயை இன்ப நிலையாகும். ஓங்காரம் மூன்று எழுத்துக்களைக் கொண்டதாகும். அவை அ + உ + ம் என்பனவாகும். இவற்றுடன் உடல் மெய்யில் காணப்படும் இருபது மெய்களுடன் ஓங்காரம் மூன்றும் சேர்ந்து இருபத்து மூன்று. இது ஆங்கள மெய்யாகும். பிறக்கும் தன்மை வாய்ந்த ஆருயிர்விட்டு உடல் மெய் அவ்வாங்காரி பெற்ற பெண்பிள்ளையாகும். முள்முருங்கின் பூவின் இதழ் போன்ற செம்மையான இதழை உடைய பெண்பிள்ளையே கேட்பாயாக" என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**2261. புருட னுடனே பொருந்திய சித்தம்**
**அருவமொ டாறும் அதீதத் துரியம்**
**விரியுஞ் சுழுத்தியின் மிக்குள்ள எட்டும்**
**அரிய பதினொன்று மாமவ் வவத்தையே.**

"சிவனடியார்களே, புருடனும் தூமாயை மெய்கள் ஐந்தும் கூடி ஆறாகும். இவ்வாறும் அப்பால் நிலையென்று கூறப்படும். துரியாதீதத்தின் கண் செயற்படும். இவை மிக நுண்மையானபடியால் அருவம் எனப்பட்டன. தூமாயை ஏழும் தூமாயையில் உள்ள ஆசான் மெய்யொன்றுமாகிய எட்டும் மேல் உறக்கத்தின்கண் செயற்படும். தூமாயை மெய்கள் ஐந்தும் தூவாமாயை மெய்கள் ஆறும் ஆகிய பதினொன்றும் மேல்நிலைப்பாட்டிற்கு உள்ளன" என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

2262. **காட்டும் பதினொன்றுங் கைகலந் தாலுடல்**
**நாட்டி யழுத்திடின் நந்தியல் லாலில்லை**
**ஆட்டஞ்செ யாத வதுவிதி யேநினை**
**ஈட்டு மதுதிடம் எண்ணது மாகுமே.**

“சிவனடியார்களே, தூவா மாயை மெய்கள் ஐந்தும் ஆகிய பதினொன்றும் ஆருயிருக்கு வந்து கூடினால் நுண்ணுடலும் பருவுடல்களும் உண்டாகும். திருவருளால் அதை அறிந்து கொண்டால் நந்தியாகிய சிவபெருமானை அல்லது நிலைச் சார்பு பிறிது இல்லை. அந்நிலையை அடைந்தார்களுக்கு கருவிகள் எந்தத் தொழிற்பாட்டையும் புரிய மாட்டாது. அதுவே முறைமையாகும். இவர்களை நந்தியெம்பெருமான் திருவடிக்கண் அணைத்துக் கொள்வன். இதனை நினைப்பது ஆருயிர்களுக்குப் பேரின்பமாகும்” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

## கலவு செலவு

2263. **கேவலந் தன்னிற் கலவச் சகலத்தின்**
**மேவுஞ் செலவு விடவரு நீக்கத்துப்**
**பாவுந் தனைக்காண்டன் மூன்றும் படர்வற்ற**
**தீதறு சாக்கிரா தீதத்திற் சுத்தமே.**

“சிவனடியார்களே, ஆருயிர் கருவிகளுடன் கூடாதநிலையில், புலம்பாகிய கேவலமாகும். சிவபெருமான் மாயாகாரியக் கருவிகளைப் படைத்தருளியபோது ஆருயிர்கள் அதன்கண் செல்லும். அப்படிச் செல்வதனால் ஆருயிர் புணர்வாகிய சகல நிலையினை எய்தும். திருவருளால் இப்புணர்வுநிலையைக் கருத்தால் துறந்துவிட்ட இடத்துப் புரிவாகிய சுத்தநிலை உண்டாகும். இந்நிலையே நனவில் எய்தும் அப்பால் நிலையாகும். இதனுடன் விரவி நிற்கும் ஆருயிர் அருளால் தான் இவற்றிற்கு வேறு என உணர்வது உயிர்க்காட்சியாகும். ஏழிற்பரை சிவபெருமானது வடிவம் எனக் காணுதல் அருட்காட்சியாகும். யான் எனது என்னும் செருக்கு அடங்கிச் சிவபெருமானின் திருவடியைச் சேர்தல் சிவதரிசனமாகும்.” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

2264. **வெல்லும் அளவில் விடுமின் வெகுளியைச்**
**செல்லும் அளவுஞ் செலுத்துமின் சிந்தையை**
**அல்லும் பகலும் அருளுடன் தூங்கினாற்**
**கல்லும் பிளந்து கடுவெளி யாமே.**

“சிவனடியார்களே, எண்ணம், சொல், செயல்கள் யாவும் தூய்மையானவையாக இருந்தால் அதை நின்மலாவத்தை என்பர். அந்நிலையை ஊமைக்கிணறு என்றும் சொல்வர். ஆருயிர் கருவிகளுடன் கூடிக் கருத்தைச் சிவன்பால் இருத்தி ஏனைய அகப்புறச் செயல்களைத் துறந்திருப்போர் ஊமை எனப்படுவர்.

இந்நிலையில் அவர்களது ஐந்து உறுப்புக்களும், அடங்கிச் செயலற்று இருக்கும். இது ஆமை அரவங்கேட்டதும், தனது உறுப்புக்களை உள்ளே எடுத்து அடங்கியிருப்பதை ஒக்கும். இந்நிலையில் ஆருயிரானது சிவபெருமானின் திருவடியில் ஒடுங்கும். அங்ஙனம் ஒடுங்கினால் நெடுநாள் உயிர் வாழும்" என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

## நின்மலாவத்தை

**2265. ஊமைக் கிணற்றகத் துள்ளே யுறைவதோர்**
**ஆமையின் உள்ளே யழுவைகள் ஐந்துள**
**வாய்மையி னுள்ளே வழுவா தொடுங்குமேல்**
**ஆமையின் மேலுமோ ராயிரத் தாண்டே.**

"சிவனடியார்களே, எண்ணம், சொல், செயல்கள் யாவும் தூய நிலையில் இருந்தால் அதை நின்மலாவத்தை என்பர். அந்நிலையை ஊமைக்கிணறு என்பர். ஆருயிர் கருவிகளுடன் கூடிக் கருத்தைச் சிவன்பால் இருத்தி அறப்புறச் செயல்கள் அனைத்தும் அகற்றி, மனத்தைச் சிவன்பால் இருத்தி இருக்கும் நல்லோர் ஊமை எனப்படுவர். அந்நிலையில் அவர்கள் சிவபெருமானின் திருவடியில் ஒடுங்குவர். அவ்வாறு ஒடுங்கினால் நெடுநாள் உயிர் வாழும் ஆமையைவிட அவ்வுயிர் பல ஆயிரக்கணக்கான ஆண்டுகள் அருளால் வாழும்" என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**2266. காலங்கி நீர்பூக் கலந்தஆ காயம்**
**மாலங்கி யீசன் பிரமன் சதாசிவன்**
**மேலஞ்சும் ஒடி விரவவல் லார்கட்குக்**
**காலனும் இல்லை கருத்தில்லை தானே.**

"சிவனடியார்களே, பெரும் பூதங்கள் ஐந்து. இவற்றை இயக்கும் கடவுளரும் ஐவராவர். அவர்கள் அயன், அரி, அரன், ஆண்டான், அருளோன் ஆகியவர்களாவர். ஆகாயம் ஏனைய நான்கு பூதங்களையும் இயங்குமாறு இடமளித்து அவற்றின்மேல் விரிந்து நிற்கிறது. இவற்றை இயக்கும் கடவுளர்கள் உயிரினத்தவர்களே யாவர். இவற்றை இயக்கும் காரணக் கடவுளரும் ஒருவராவர். அக் காரணக்கடவுளிடத்துச் சென்று கலக்க வல்லவர்களுக்கு உயிரைக் கவர்ந்து செல்லும் காலனும் வரமாட்டான். அவர்களுக்குச் சிவ நினைவு அன்றி வேறெதுவும் வராது. முன் சொல்லப்பட்ட கடவுளர்கள் ஐவரும் மூலம் முதலாகச் சொல்லப்படும் இடங்களில் வைத்து வழிபடப்படும் சார்புக் கடவுள்களாவர்." என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**2267. ஆன்மாவே தான்மைந்த னாயினன் என்பது**
**தான்மா மறையறை தன்மை யறிகிலர்**
**ஆன்மாவே மைந்தன் அரனுக் கிவனென்றல்**

**ஆன்மாவும் இல்லையால் ஐயைந்தும் இல்லையே.**

“சிவனடியார்களே, சிவனின் திருவடி இன்பத்தை அனுபவிக்கும் தன்மை உயிருக்கே உரியது. அதனால் ஆருயிரை மைந்தன் என்று சொல்லப்படுகிறது. ஆருயிரானது பேருயிரான சிவனது மைந்தனாகும். உடன் மெய் இருபத்து நான்கும், ஆளொன்றுமாக இருபத்தைந்தும் சார்ந்த இடத்து ஆருயிர் என்றும் பெயர் உண்டு. அது சிவனைச் சாரும்போது அடிமை என்னும் பெயரைப் பெறுகிறது. இம்முறையில் உடல் நீங்கியவிடத்து ஆன்மா என்னும் பெயரைப் பெறுகிறது. இம்முறையில் உடல் நீங்கியவிடத்து ஆன்மா என்னும் பெயர் அற்று விடுகிறது. இது தொழில் நீங்கினால் தொழிலின் பெயர் நீங்குதலன்றி, தொழில் புரிந்தவன் நீங்குவதில்லை.” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**2268. உதய மழுங்கல் ஒடுங்கலிம் மூன்றின்**
**கதிசாக் கிரங்கன வாதி சுழுத்தி**
**பதிதரு சேதனன் பற்றாந் துரியத்து**
**அதிசுப னாவனந் தானந்தி யாமே.**

“சிவனடியார்களே, ஆருயிர் உடலுடன் கூடித் தொழிற்படுவது தோற்றமாகிய உதயமாகும். இது நனவு. மழுங்கலாகிய தொழிற் குறைபாடு. இது கனவு. ஒடுங்குதற் கருவிகள் ஒடுங்கித் தொழிலின்றி இருப்பதாகும். இது உறக்கமாகும். சிவனது நினைவுகள் மனதைவிட்டு அகலாமல் இருப்பதே சிவனடியில் சேர்தலாகும். அதைப் பதி தருதல் எனப்படும்.” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**2269. எல்லாந்தன் னுட்புக யாவுளுந் தானாகி**
**நல்லாந் துரியம் புரிந்தக்கால் நலலுயிர்**
**பொல்லாத வாறாறுட் போகாது போதமாய்ச்**
**செல்லாச் சிவகதி சென்றெய்து மன்றே.**

“சிவனடியார்களே, சிவன் அருளால் மேல்நிலையை அடைந்த ஆருயிர் சிவனது திருவடியில் மயங்கி நிற்கும். அதனால் சிவநிறைவில் அது உறைந்து நிற்கும். பாலில் கலக்கப்பட்டமோர் பால் முழுவதும் தயிராவதற்கு இது ஒப்பானதாகும். அதுபோல ஆருயிரும் சிவனுடன் பிரிப்பின்றிக் கலந்து நிற்கும். அவ்வேளை எல்லாப் பொருட்களும் ஆருயிரில் ஒடுங்கும். சிவனுடன் ஒன்றித்து மகிழும். ஆருயிர் சிவனின் கண் உறைவதால் சிவன் இருக்கும் எல்லாப் பொருட்களிலும் ஆருயிர் விரவி நிற்கும். அப்பொழுது முப்பத்தாறு மெய்களும் திருவருட் காட்சியால் அகலும்.” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**2270. காய்ந்த இரும்பு கனலை யகன்றாலும்**
**வாய்ந்த கனலென வாதனை நின்றாற்போல்**

**ஏய்ந்த கரணம் இறந்த துரியத்துத்**
**தோய்ந்த கருமத் துரிசக லாதன்றே.**

**(அ.சி) கருமத்துரிசு. கன்ம வாசனை.**

"சிவனடியார்களே, உலையில் இட்ட இரும்பு உலையில் இருக்கும் வரை தீயைப்போல இருக்கும். அதை உலையில் இருந்து எடுத்தால் அது முன்னுள்ளது போல மாறிவிடும். ஆனால் வெப்பம் இருக்கும். தொட்டால் சுடும். அதனை வாதனை என்பர். இரும்பிலே கனலின் தோற்றமான செம்மை இல்லாது போனாலும், அதன் சூடு நிற்கின்றது. அதுபோல ஆருயிருக்கும் அகக்கலன், அகப்புறக்கலன், புறக்கலன்களாகிய முத்திறக் கலன்களும் சிவகுருவின் திருவருளால் முற்றாக அகன்றபோதும் பேருறக்கமாகிய துரியநிலையில் தோய்ந்த கருமத்துரிசு என்னும் பசை அறாது." என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**2271. ஆன மறையாதி யாமுரு நந்திவந்து**
**தேனை யருள்செய் தெரிநனா வத்தையில்**
**ஆன வகையை விடுமடைத் தாய்விட**
**ஆன மலாதீதம் அப்பரந் தானே.**

"சிவனடியார்களே, எல்லாமான மறை என்று சொல்லப்படுவது திருவைந்தெழுத்தையே. அது இரண்டு வகைப்படும். ஒன்று நமசிவய. மற்றொன்று சிவயநம. இவ் எழுத்துக்களால் தோன்றும் சிவபெருமானின் திருத்தோற்றம் முதலாவது திருவுருவத் தோற்றமாகும். அதுதான் அதிசயமான திருவுருவம். அதுதான் ஐந்தொழில்களையும் செய்விக்கிறது. அது தூக்கால் மணி வயிறு, தோள், முகம், முடி ஐந்தும் முறையே நமசிவய என்பதைக் குறிக்கும். துடி வலக்கை, வீஇடக்கை, மகிழ்வலக்கை, மதவிடக்கை, துமு வலக்கால் இவை ஐந்தும் முறையே சிவயநம என்பதைக் குறிக்கும். இத் திருக்கோலத்துடன் சிவபெருமான் எழுந்தருளிவந்து தன் திருவடித்தேனைத் தந்தருள்வன். இந்நிலை அப்பால் நனவு நிலையாகும். இந்நிலையில் ஆருயிர்கள் உடல்கலன் முதலிய கருவிகளை முறையாக விட்டு அகலும். அகன்றதும் அங்கு அருளால் தோன்றுவது ஆன அமலாதீதம் என்னும் பிணிப்பில்லாத அப்பால் மணிநிலையானது கைகூடும். அந்நிலையானது சிவபெருமான் தன்மையை அளித்து அருள்வதாகும். சிவபெருமான் தேன் அமிழ்தாகவும் சிவப்பெருமாட்டி பால் அமிழ்தாகவும் ஆருயிர் பால் உறைவர். தேன் அறிவாகவும், பால் ஆற்றலாகவும் உறைவு அன்பாகவும் கொள்ளப்படும்" என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**2272. சுத்த அதீதஞ் சகலத்தில் தோய்வுறில்**
**அத்தன் அருள்நீங்கா வாங்கணிற் றானாகச்**
**சித்த சுகத்தைத் தீண்டாச் சமாதிசெய்து**
**அத்தனோ டொன்றற் கருள்முத லாகுமே.**

“சிவனடியார்களே, தூய அப்பால் நிலை நனவில் ஆருயிர் தோய்வுற்றால் அத்தனான சிவபெருமானின் திருவருள் வெளிப்பட்டு நீங்காது நிலைத்து நிற்கும். அப்போது எண்ணமாகிய சித்தத்தினால் உணரப்படும் மாயாகாரியப் பொருட்களால் உண்டாகும் இன்பத்தை எண்ணாது உணர்வுக்குள் உணர்வாகத் திகழும். சிவபெருமானின் திருவடியில் ஒடுங்கி சமாதி நிலையை அடையும். அச்சமாதியினால் அத்தனாகிய சிவபெருமானின் திருவடியில் முற்றாகக் கலந்து மகிழும் நிலை உண்டாகும். இதைச் செய்தருள்வது திருவருளாகும்” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**2273. வேறுசெய் தானிரு பாதியின் மெய்த் தொகை**
**வேறுசெய் தானென்னை எங்கணும் விட்டுய்த்தான்**
**வேறுசெய் யாவருட் கேவலத் தேவிட்டு**
**வேறுசெய் யாவத்தன் மேவிநின் றானன்றே.**

“சிவனடியார்களே, சிவபெருமான் ஆருயிர்கள் ஒருவரோடு ஒருவர் மகிழ்வுடன் சேர்ந்து வாழ்ந்து தனது திருவடியை அடைந்து பேரின்பமாக வாழவேண்டும் என்றே விரும்புகிறான். அதனால் தான் காதல் செய்தலை மேற்கொள்ளும் ஆடவரையும் காதல் பேறுதலை மேற்கொள்ளும் கன்னிப் பெண்களையும் சேர்த்து வைத்தான். அதற்காகத் தான் சிவபெருமான் ஆண், பெண் என்ற இரு உருவையும் ஒன்றாக்கித் தானாகினான். அவ்வடிவமே அன்னை அத்தன் உரு என்று சொல்லப்படும் சக்தி சிவமாகும். அதனால் தான் ஆண், பெண் என்ற இரு வேறு உருவிற் புகுந்தனன். என்னையும் அங்ஙனமே செலுத்தி விடுத்தனன். தன்னில் இருந்து என்னை வேறுபடுத்தாது ஒன்றுபடச் செய்து ஒடுங்கிக் கொண்டனன். அதுவே அருட்கேவலம் எனப்படும் என்கிறார் திருமூலர்” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**2274. கறங்கோலை கொள்ளிவட் டங்கட லில்திரை**
**நிறஞ்சேர் ததிமத்தின் மலத்தினில் நின்றங்கு**
**அறங்காண் சுவர்க்க நரகம் புவிசேர்ந்து**
**இறங்கா வுயிரரு ளாலிவை நீங்குமே.**

“சிவனடியார்களே, ஆருயிர் மலப்பிணிப்பால் தான் செயற்பட்டு ஆராயாது நன்மை தீமைகளைச் செய்கிறது. அவ்விரண்டும் பாவபுண்ணியமாக வளர்ந்து விளைந்து முதிர்கிறது. அதனால் இன்ப துன்பங்களை அனுபவிப்பதற்காக மண்ணுலகத்தில் பிறக்கிறது. இவ்வாறு பிறக்கும் ஆருயிர் வினைப்பயனாக மாறி மாறிப் பிறந்து இறந்து துன்பப்படுகிறது. இதற்குக் காற்றாடி, கொள்ளி சுற்றுவதால் ஏற்படும் வட்டம், கடலில் எழும் அலை, மத்தால் கடையப்படும் தயிர் என்பன ஒப்பாகும். இவ்வாறு மாறி மாறித் துன்பப்படும் உயிர்களின் நிலைகண்டு, சிவபெருமான் திருவருளால் அவற்றை நீக்கவே விரும்புவான்” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**2275. தானே சிவமான தன்மை தலைப்பட**
**ஆன மலமுமப் பாச பேதங்களும்**
**ஆன குணமும் பரான்மா வுபாதியும்**
**பானுவின் முன்மதி போற்பட ராவே.**

“சிவனடியார்களே, திருவருளின் பேற்றால் ஆருயிர் தானே சிவமாகும் தன்மையை அடையும். அப்போது தொன்மையான மலமும், பாச வேறுபாடுகளுமாகிய ஐந்துவகையான மலங்களும் நீங்கும். அதனால் ஏற்பட்ட தீமைகளும் அகலும். உயிர்த் தன்மைத் தடையாகிய பரான் மாவு பாதியும் நீங்கும். இதற்கு உதாரணமாகச் சூரியன் உதித்ததும், சந்திரன் மறைவதைக் காணுவர். அதனால் ஆருயிரினது செயல்கள் யாவும் அற்றுப்போகும்” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**2276. நெருப்புண்டு நீருண்டு வாயுவும் உண்டங்கு**
**அருக்கனுஞ் சோமனும் அங்கே அமருந்**
**திருத்தக்க மாலுந் திசைமுகன் தானும்**
**உருத்திர சோதியும் உள்ளத்து [2]ளாரே.**

“சிவனடியார்களே, உடலின் அகத்தே நிலமுண்டு, நீருண்டு, நெருப்புண்டு, காற்றுண்டு, வெளியுண்டு, ஞாயிறுண்டு. அவற்றை இயக்கும் தெய்வங்களாகிய அயன், அரி, அரன், ஆண்டான், அருளோன் என்பவர்களும் உளர். ஐம்பூதமுறையை முறையே மூலம், வேல், வயிறு, நெஞ்சம், கழுத்து, உச்சத்துளை என்பன ஞாயிற்று மண்டலத்தை அடிப்பகுதியிலும், திங்கள் மண்டலத்தைப் புருவத்து நடுவிலும் கூறுவர்.” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**2277. ஆனைகள் ஐந்தும் அடக்கி அறிவென்னும்**
**ஞானத் திரியைக் கொளுவி அதனுட்புக்கு**
**ஊனை யிருளற நோக்கும் ஒருவற்கு**
**வானக மேற வழியெளி தாகுமே.**

“சிவனடியார்களே, மெய், வாய், கண், மூக்கு, செவி என்னும் ஐம்புல யானைகளைத் திருவருளின் அருளால் அடக்கி உயிர் என்ற திரியை திருவடி உணர்வென்ற தீயால் கொளுத்திச் சிவபெருமானை அவனருளால் இடையறாது எண்ணுவோர்க்குச் சிவ உலகம் செல்லுதல் மிகவும் எளிதானதாகும்” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**2278. ஆடிய காலில் அசைக்கின்ற வாயுவுந்**
**தாடித் தெழுந்த தமருக ஓசையும்**

**பாடி யெழுகின்ற வேதா கமங்களும்**
**நாடியி னுள்ளாக நான்கண்ட வாறே.**

“சிவனடியார்களே, ஆருயிர்களது நெஞ்சில் நின்று அம்பலவாணனான சிவபெருமான் அவை உய்வதற்காகத் திருநடனத்தை இடையறாது புரிகின்றான். அதனால் அசைக்கப்படுகின்ற உயிர்ப்பை நடு நாடி வழியாகச் செலுத்தி நிற்பவர்களுக்குத் திருமறைத் திருமுறைகள் தோன்றுவதற்கு வாயிலாக வலக்கை, உடுக்கை ஒலி நலமுறக் கேட்கும். அவ்வொலி மகிழ்வைத்தரும். இவையனைத்தையும் நடுநாடியின் முடிவிடமான உச்சத்துளை வழியாக என்னகத்தே நான் கண்டுள்ளேன் என்று திருமூலர் கூறுகிறார்” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**2279. முன்னைப் பிறவியிற் செய்த முதுதவம்**
**பின்னைப் பிறவியிற் பெற்றால் அறியலாந்**
**தன்னை பறிவ தறிவாம தன்றிப்**
**பின்னை யறிவது பேயறி [3]வாகுமே.**

“சிவனடியார்களே, முற்பிறவியில் செய்த புண்ணியங்களைப் பின்னைய பிறவியில் நாம் உணர்ந்து கொள்ளலாம். திருவருளின் உதவியால் சிவனைத் தலைவன் என நினைத்து அறிந்து கொள்ளலாம். அதற்கு நான் சிவனின் அடிமை என்று உணர்வு உண்டாகுதல் வேண்டும். அடிமை என உணர்தலே மெய்யுணர்வாகும். அதுதான் வேண்டத்தக்க அறிவாகும். அவ் அறிவு தவிர்ந்த ஏனைய அறிவுகள் யாவும் பேயறிவாகும்” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**2280. செயலற் றிருக்கச் சிவானந்த மாகுஞ்**
**செயலற் றிருப்பார் சிவயோகந் தேடார்**
**செயலற் றிருப்பார் செகத்தொடுங் கூடார்**
**செயலற் றிருப்பார்க்கே செய்தியுண் டாமே.**

“சிவனடியார்களே, திருவருளால் செயலற்று இருப்பதைச் சமாதிநிலை என்பர். அதை நிட்டை என்றும் சொல்லலாம். செயலற்றிருப்போர் சிவ இன்பத்தை அனுபவிப்பவராவர். அவர்கள் நிலையில்லாத வாழ்வுடன் கூடமாட்டார்கள். செயலற்று இருப்பவர்களுடன் சிவபெருமான் பேரின்பத்துடன் உரையாடுவார். இது ஆண்டான் அடியின்ப நுகர்வுச் செயலாகும். இதுவும் ஒரு வகையான நிட்டையே” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**2281. தானவ னாகுஞ் சமாதிகை கூடினால்**
**ஆன மலமறும் அப்பசுத் தன்மைபோம்**

**ஈனமில் காயம் இருக்கும் இருநிலத்து**
**ஊனங்கள் எட்டு மொழித்தொன்று வோர்கட்கே.**

“சிவனடியார்களே, திருவருளால் ஆருயிருக்குத் தான் அவகரம் என்ற சமாதிநிலை ஏற்பட்டால் ஐந்து மலங்களும், சிற்றுணர்வான பசுத்தன்மையும், அகன்றுவிடும். புலால் உண்ணல், கொலை, களவு, கள், காமம், பொய்கூறல், சிவனை மறத்தல், சிவனடியானை மறத்தல் என்னும் எண்பெருங் குற்றங்களும் அகன்றுவிடும். அவர்களது நல் உடல் சிவ உலகம் செல்லும்.”

“சிவனடியார்களே, ரவீந்திரனுக்கு ஒருமுறை அமைச்சின் அதிகாரிகள் வைத்த மதியபோசன விருந்திற்கு அழைப்புக் கிடைத்தது. அமைச்சர் உட்பட உயர் அதிகாரிகள் பலரும் கலந்து கொண்டனர். பெரிய ஆடம்பரமான விருந்தினர் விடுதியில் அவ் விருந்துபசாரம் நடைபெற்றது. விருந்து தொடங்கியதும் மதுபான வகைகளும், மாமிசமும் பரிமாறப்பட்டது. அதை ரவீந்திரன் எதிர்பார்த்துத்தான் சென்றவன். அதனால் அவன் அதிர்ச்சியடையாது அமைச்சரின் அருகில் சென்று தனது நிலையை விளக்கிக் கூறினான். அமைச்சர் சொன்னார்; ‘நான் பௌத்த மதத்தைப் பின்பற்றுபவன். அதனால் நானும் மாமிசம் உண்பதில்லை. மதுவும் குடிப்பதில்லை; வாருங்கள் விருந்தினர் தங்கும் அறைக்குச் செல்வோம்’ என்றுகூறி அழைத்துச் சென்றார். அவர்கள் இருவரும் வெகுநேரமாகக் கதைத்துக் கொண்டிருந்ததைப் பலரும் கண்டு ஆச்சரியப்பட்டனர். ‘இதுபோல முன்பு ஒருமுறை அலுவலகத்தில் நடைபெற்ற விருந்தொன்றில் ஒரு பெண் ரவீந்திரனுக்கு அருகில் இருந்து தேவையில்லாத கதைகளைக் கதைத்தபோது அவன் எழுந்து சென்றுவிட்டான். அதன்பின் அவள் சொன்னாள் கடவுளுக்கு ஆசை வந்தாலும் வரும். ஆனால் ரவீந்திரனுக்கு வராது’ என்று ரவீந்திரன் பொய் சொல்லமாட்டான். அதனால் பல பிரச்சினைகள் அலுவலகத்தில் வரும். சிலர் சண்டைக்கும் செல்வர். இதற்கெல்லாம் அவன் பயப்பட மாட்டான். எல்லாவற்றையும் சிவன் சமாளித்துக் கொள்வார் என்பான்.” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**2282. தொலையா அரனடி தோன்றுமஞ் சத்தி**
**தொலையா இருளொளி தோற்ற அணுவுந்**
**தொலையாத் தொழின்ஞானந் தொன்மையில் நண்ணித்**
**தொலையாத பெத்தமுத் திக்கிடை தோயுமே.**

“சிவனடியார்களே, மெய்யுணர்வைப் பெற்ற ஆருயிர் திருவருள் வீழ்ச்சியாகிய சத்திநிபாத நிலையை அடையும். அந்நிலையில் சிவபெருமானின் திருவடி தோன்றும். அப்போது மலமான இருளும், சிற்றுணர்வாகிய உயிர்த்தன்மையும் தோன்றும். அணுவாகிய ஆருயிருக்குக் கேடில்லாத தொன்மையிலேயே உள்ள நன்னெறி

நன்மையின் தொழிலும் அறிவும் உண்டு. அதனால் சுட்டுவீடு என்று சொல்லப்படும். இருநிலையும் தோன்றும். அப்போது ஆருயிர் அருளில் தோயும்”

“சிவனடியார்களே, விருந்து முடிந்து திரும்பிய ரவீந்திரன் கதிரேசனது வீட்டிற்குச் சென்றான். அப்போது விடியற்காலை மூன்று மணி. அவன் சென்றபோது வீடு அமைதியாக இருந்தது. எந்தவிதமான அரவமும் இல்லை. கதிரேசனது பூசை அறை எவ்வேளையிலும் திறந்தே இருக்கும். அதனால் அவன் பூசையறைக்குச் சென்றான். கதிரேசன் சமாதிநிலையில் இருந்தார். ரவீந்திரன் வந்ததும், கதிரேசனின் மனைவியும், மூத்த மகளும் அங்கே வந்தனர். கதிரேசனது மனைவி சொன்னாள்; நாளை எனது பேர்த்திக்குத் திருமணம். மூன்று நாட்களுக்கு முன் அமர்ந்தவர் எழுந்திருக்கவில்லை. உணவு, தண்ணீர்கூட எடுக்கவில்லை. ‘என்றபோது கதிரேசன் சொன்னார்; “சிவனோடு இருப்பவர்களுக்கு எவையும் தேவையில்லை. தேவையானவற்றைச் சிவன் தருவார். எனது பேர்த்தியின் திருமணத்திற்கு வருவேன்; ரவி நீ அமைச்சரோடு அல்லச் சிவனோடு தான் கதைத்தாய். சிவன் உனது உள்ளத்தில் திருநடனம் புரிந்து, எவ்வேளையிலும் உன்னைக் காப்பார். எண்பெருங் குற்றங்களையும் ஒழித்த நீ சிவனருளால் மேன்மை அடைவாய் என்றவர்” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**2283. தோன்றிய பெத்தமும் முத்தியுஞ் சூழ்சத்தி**
**மான்றுந் தெருண்டு முயிர்பெறு மற்றவை**
**தான்தரு ஞானந்தன் சத்திக்குச் சாதனாம்**
**ஊன்றலில் லாவுள் ளொளிக்கொளி யாகுமே.**

‘‘சிவனடியார்களே, திருவருளின் சக்தியால் ஆருயிருக்குத் தோற்றுவிக்கப்பட்ட கட்டும் வீடும் தோன்றும். அதை அவ்வுயிர் மருண்டும் தெருண்டும் உணரும். பின்திருவடியுணர்வால் அவ்வுயிர் சக்திக்குச் சாதனாகும். அதனால் அவ்வுயிர் அருள்வழி ஒழுகி ஊன்றி நிற்க உள்ளொளிக்குள் ஒளியாகச் சிவஒளி தோன்றும்”

“சிவனடியார்களே, கதிரேசனுக்கு உள்ளொளியாகச் சிவஒளி தோன்றியமையால்தான் அமைச்சின் அலுவலகத்தில் ரவீந்திரனுக்கு ஏற்பட்ட நிலை உள்ளொளியாகத் தெரிந்தது. சிவநினைவோடு சமாதிநிலையில் இருந்தாலும் நடப்பவையும், நடக்க இருப்பவையும் உள்ளொளியாகத் தோன்றும். அதனால்தான் சமாதிநிலையில் இருந்த கதிரேசனது பேர்த்தியின் திருமண நாள் ஞாபகத்தில் இருந்தது. ரவீந்திரனுக்கு நடந்தவை தெரிந்தது.” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**2284. அறிகின்றி லாதன ஐயேழும் ஒன்றும்**
**அறிகின்ற என்னை யறியா திருந்தேன்**
**அறிகின்றாய் நீயென் றருள்செய்தான் நந்தி**

**அறிகின்ற நானென் றறிந்துகொண் டேனே.**

“சிவனடியார்களே, தாமே அறியும் தன்மை இல்லாத முப்பத்தாறு மெய்களும், ஆருயிரால் அறிகின்றன. அவ் உண்மையினையும் அறிகின்ற என்னையும் அறியாதிருந்தேன். சிவபெருமான் அறியும் தன்மை உனக்குள்ளேயே உள்ளது என்று அருளால் அறிவித்தான். அதனால் தான் அறிகின்றேன் என்று திருமூலர் கூறுகிறார். அது உண்மை. சில தினங்களுக்கு முன்பு நல்லைநாதன் வேற்றூர் ஒன்றுக்கு நண்பர்கள் சிலருடன் செல்ல விரும்பினார். அவர் எதைச் செய்தாலும் கதிரேசனுக்கு சொல்லாமல் செய்யமாட்டார். அவர் கதிரேசனுக்கு சொன்னபோது கதிரேசனுக்கு சொன்னார், “யாரும் வேற்றூருக்கு செல்லாதீர்கள், முக்கியமாக நீ போகக்கூடாது” என்றார். நல்லைநாதன் அதைத் தனது நண்பர்களுக்கு சொல்ல அவர்கள் அதைக் கேட்கவில்லை. அதனால் நல்லைநாதன் செல்லவில்லை. வாகனத்தை ஓட்டிச் சென்ற சாரதி மதுவை அருந்தியமையால் வீதியில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த ஒரு காரை வாகனத்துடன் மோதினான். சென்ற பதினைந்து பேர்களுக்கும் கடுமையான காயம் ஏற்பட்டது. சிவனின் நினைவோடு இருப்பவர்களுக்குத் திருவருளினால் யாவும் தெரியவரும் எதையும் அறியும் தன்மையை ஒவ்வொரு உயிருக்கும் சிவன் கொடுத்துள்ளான். அதை அவர்கள் அறிவதில்லை” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**2285. தானவ னாகிய ஞானத் தலைவனை**
**வானவ ராதியை மாமணிச் சோதியை**
**ஈனமின் ஞானத்தி னின்னருட் சத்தியை**
**ஊனமி லாள்தன்னை யூனிடைக் கண்டதே.**

“சிவனடியார்களே, ஒவ்வொரு உயிருக்கும் உள்ள அறிவு விளக்க விளங்குவது. இரும்பைப் பொன்னாக்குவது போல தன்னை அவனாக்கும் ஞானத்தின் தலைவன் சிவனாவான். அவன் தான் சிவ உலக வாழ்வினர்க்கு முதல்வன். அவனை என் உடம்பின் அகத்தே அவன் காட்ட நான் கண்டு கொண்டேன் என்கிறார் திருமூலர்”.

“சிவனடியார்களே, எவ்விதமான பற்றுக்களுமின்றி வழிபடுவோரின் உள்ளத்தில் வீற்றிருக்கும் சிவபெருமான் தன்னை உயிருக்குக் காட்டியருள்வான். அதனால் தான் நல்லைநாதன் நண்பர்களுடன் சென்று விபத்துக்குள்ளாகப் போகிறான் என்று சிவன் காட்டியருளியுள்ளான். கடவுள் நேரடியாக எதுவும் சொல்வதில்லை. மெய்யடியார்களின் உள்ளத்தில் இருந்து தன்னையும் காட்டிச் சிவனடியார்களுக்கு வரப்போகும் நிகழ்வுகளையும் காட்டி வருவான். அதைப் பலர் நம்புவதில்லை. இடர்கள் வந்தபோதும் நம்புவதில்லை. இது மக்களின் இயல்பு. நம்பியவர்கள் மேன்மை அடைவார்கள். இதற்காகத் தான் சகுனம் பார்க்கப்படுகிறது. அன்று நல்லைநாதனின் இடக்கண் துடித்தது. அதை அவர் சொல்ல ‘நீ மரக்கறி வகைகளை உண்பாய்

அதனால் வாயுக்கோளாறு' என்று சொன்ன தில்லையம்பலம் விபத்தின்போது கடுமையாகப் பாதிக்கப்பட்டவன். “கடவுள் சொல்வார் கேட்காதவர்கள் துன்பப்படுவர்” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**2286. ஒளியும் இருளும் பரையும் பரையுள்**
**அளிய தெனலாகும் ஆன்மாவை யன்றி**
**அளியும் அருளுந் தெருளுங் கடந்து**
**தெளிய அருளே சிவானந்த மாமே.**

‘‘சிவனடியார்களே, சிற்றறிவாகிய ஒளியும், ஆணவமாகிய இருளும், இவற்றை விளக்கும் நடப்பாற்றலாகிய பரையும் திருவருளால் தலையளிக்கத்தக்க ஆருயிரும் அருளால் உணரப்பட வேண்டியவை ஆகும். மேலும் தலையளிப்பையும் அதனைப் புரியும் அருளையும், அவ் அருளால் எய்தும் தெருளைவும் கடந்து திருவடியைத் தெளிவாகக் காண்பிப்பது வனப்பாற்றலாகிய திருவருளே. அத் திருவருள் தான் சிவப்பேரின்பமாகும்’.

“சிவனடியார்களே, ஆருயிர் திருவருளால் எதையும் அறிந்து கொள்ளும். அவ்வாறு உணரும் ஆருயிர் திருவடியை அடையத் தகுதி பெறும். கதிரேசன் பேர்த்தியின் திருமணத்திற்குச் சென்றார். பெரிய ஆடம்பரமான மண்டபத்தில் கோலாகலமாகத் திருமணம் நடைபெற்றது. வந்தவர்கள் எல்லோரும் மிக மிக விலையுயர்ந்த உடுபுடைவைகளையும் பெறுமதிமிக்க ஆபரணங்களையும் அணிந்திருந்தனர். கதிரேசன் சாதாரணமாக துவைக்கப்பட்ட வேட்டியும் சால்வையும் அணிந்திருந்தார். காதில் குண்டலங்கள் அணிந்திருந்தார். கையில் ஒரு கம்பு வைத்திருந்தார். அவர் மண்டபத்திற்கு வந்தபோது அங்கிருந்தவர்கள் எழுந்து நின்றனர். அவர் சண்முகம் என்ற ஏழையின் அருகில் வந்து தனது மகனை அழைத்துச் சொன்னார்; ‘சண்முகம் ஏழை, நோயாளி. அவனது பிள்ளைகள் கற்க உதவி செய்’ சிற்றறிவையும் ஆணவத்தையும் பண்பையும் ஆருயிர் திருவருளால் உணரல் வேண்டும். சிவன் சண்முகத்திற்கு உதவி செய்யும்படி கூறுகிறான்” என்றவர்,

“சிவனடியார்களே, உள்ளத்தில் படிந்துள்ள இருளான ஆணவத்தையும், ஒளியான சிவனையும், நடப்பாற்றலான பண்பையும் திருவருளால் ஆருயிர் உணரும். நான் உணர்ந்துள்ளேன். நீயும் உணர்வாய். இது திருவருளான சிவப் பேரின்பத்தை அடைந்தவர்களுக்கு மட்டும் தெரியும். அதைச் சிவப்பேரின்பத்தை உணர்ந்தவர்கள் தான் உணர்வார்கள் என்றவர்” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**2287. ஆனந்த மாகும் அரனருட் சத்தியில்**

**தானந்த மாமுயிர் தானே சமாதிசெய்து**
**ஊனந்த மாயுணர் வாயுள் ளுணர்வுறிற்**
**கோனந்தம் வாய்க்கு மகாவாக் கியமாமே.**

“சிவனடியார்களே, பேரின்பப் பெருவாழ்வானது ஆனந்தமாக ஆவதற்குக் காரணம் அரனாரான சிவனின் ஆற்றலான திருவருளேயாகும். அவ் இன்பம் எய்திய ஆருயிர் சமாதி நிலையில் செயலற்று இருக்கும். உடலின் முடிவு தோன்றி ஒடுங்கும். ஆக்கப்பொருள் அறிவில்லாதது. அதன் முதல் அழிவில்லாது என உணர்த்தும் அருள் வழி உயிர் உணரும். உணர்ந்து உணர்த்துகின்ற அறிவையும் பெறும். உணர்ந்தால் சிவபெருமானின் திருவடிப் பேரின்பம் கிடைக்கும். இத்தன்மை திருவைந்தெழுத்தை ஓதுவதாலேயே கிடைக்கும்” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

2288. **அறிவிக்க வேண்டாம் அறிவற் றயர்வோர்க்கும்**
**அறிவிக்க வேண்டாம் அறிவிற் செறிவோர்க்கும்**
**அறிவுற் றறியாமை யெய்திநிற் போர்க்கே**
**அறிவிக்கத் தம்மறி வாரறி வோரே.**

“சிவனடியார்களே, நந்தகுமாரன் திருமணமாகிய இரண்டு மாதத்துக்குள் மனைவி அவனை விட்டுச் சென்றுவிட்டாள். அதற்குக் காரணம் அளவுக்கதிகமாகக் குடித்துவிட்டு அவளைத் துன்புறுத்துவதேயாகும். நந்தகுமாரனின் மனைவி ஆரணி தந்தையை இழந்தவர். பாடசாலைக்குச் செல்ல வறுமை விடவில்லை. தாய் நோயாளி. நந்தகுமாரனை அவள் தோட்டங்களில் கூலி வேலை செய்யும் போது கண்டு விரும்பித் திருமணம் செய்தவள். நந்தகுமாரன் குடித்துவிட்டுக் கொடுமைகள் புரிவதால் அவனை விட்டுப் பிரிந்து தனிமையில் வாழ்கிறாள். நந்தகுமாரன் பலரை அவளிடம் தூது அனுப்பிய போதும் அவள் சம்மதிக்கவில்லை. அதனால் அவளது தாயார் நல்லைநாதனிடம் வந்து இருவரையும் சமாதானம் செய்து வைக்கும்படி இரந்தாள்’. அதற்கு நல்லைநாதன் சொன்னார், “மகளே அறிவு ஒரு சிறிதும் இன்றிக் கண்டதே காட்சி கொண்டதே கோலம் என்றெண்ணி உழைப்பு முழுவதையும் தீய வழியில் அழித்துவிட்டுத் திமிரோடு கடவுளையும் நிந்தித்துக் கொண்டு வாழ்வோருக்குப் புத்திமதிகள் கூறக்கூடாது. இப்படியானவர்களுக்கு கடவுளைப் பற்றியும், மெய்யுணர்வு நூல்களைப் பற்றியும் கூறக்கூடாது. திருந்தக்கூடிய நல்லவர்களுக்குத் தான் புத்திமதிகள் கூறுதல் வேண்டும். ஒருமுறை சொன்னால் கேட்கக்கூடியவனுக்குத் தான் புத்திமதி சொல்லலாம். பலவற்றைத் தம்மறிவால் அறிந்து கொள்பவர்களே புத்திசாலிகள். நந்தகுமாரனுக்குப் புத்திமதிகள் கூறிய திருக்குமரனுக்கு அவன் குடித்துவிட்டு வந்து அடித்தவன். அத்துடன் நீ ஏன் அவன் மீது இரக்கப்படுகிறாய். அவனோடு தொடர்பிருக்கா என்றும் கேட்டவன். சிவனை வணங்குபவன் தீய

செயல்களைச் செய்தால் அவனுக்குக் கூறலாம். அவன் அதை ஏற்காவிட்டாலும் தரக் குறைவாகப் பேசமாட்டான். குடிவெறி, பொய் சொல்லல், திருட்டு, கடவுளையும் மனிதர்களையும் மதியாமை போன்ற குணமுள்ளவனை ஒருபோதும் திருத்தமுடியாது என்றவர் "என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**2289. சத்தும் அசத்துஞ் சதசத்துந் தான்கூடிச்**
**சித்தும் அசித்துஞ் சிவசித்த தாய்நிற்குஞ்**
**சுத்தம் அசுத்தந் தொடங்காத் துரியத்துச்**
**சுத்தரா முன்றுடன் சொல்லற் றவர்களே.**

''சிவனடியார்களே, ஆருயிருக்கு நிலைப்பு நிலையாமை என இரு பெயர்கள் உண்டு. இதுவே சதசத்தாகும். இதைச் சார்பி என்று சொல்லப்படும். சத்தாகிய திரிபில் சிவத்தோடு கூடும்போது சத்து என்றும், அதுபோலத் திரிபடையும் மெய்ப்பொருளான மாயையுடன் கூடுதலால் அசத்து என்னும் பெயரும் உயிருக்கு உண்டு. உயிர் சத்துடன் கூடிச் சத்தாக நிற்கும். அதுபோல சிவத்துடனும் கூடி நிற்கும். அதனால் சிவசித்தென்றும் அதை அழைப்பர். அறிவு அறியாமையாகிய இரண்டும் தொடங்காத பேருறக்கத்தும் ஆருயிர் தூயதாய் இருக்கும். அதுபோல உறக்கம் கனவு நனவு என்ற மூன்றிலும் தூயதாகவே இருக்கும்''

''சிவனடியார்களே, நந்தகுமாரன் தருணத்திற்கு ஏற்றவாறு நடந்து கொள்வான். குமாரசாமியிடம் சென்று கோழியை வெட்டி கறி சமைத்துச் சாராயம் வாங்கி வந்து கொடுப்பான். அப்போது அவன் குடிகாரன். நல்லைநாதனின் தோட்டத்தில் வேலை செய்யும்போது மாமிசம் உண்ணமாட்டான். சாராயம் குடிக்கமாட்டான். ரவீந்திரனைக் கண்டால் விழுந்து கும்பிடுவான். சந்திரனைக் கண்டால் கத்தியை எடுத்துக் கொண்டு அவைன வெட்டுவதற்காகக் கலைத்துச் செல்வான். இது உயிரின் இயல்பு. தேவையைப் பொறுத்துத் தன்னை மாற்றும் இயல்பு பாமரருக்கு மட்டுமல்ல கற்றார்களுக்கும் உண்டு'' என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**2290. தானே யறியான் அறிவிலோன் தானல்லன்**
**தானே யறிவான் அறிவு சதசத்தென்று**
**ஆனால் இரண்டும் அரனரு ளாய்நிற்கத்**
**தானே யறிந்து சிவத்தடன் தங்குமே.**

''சிவனடியார்களே, ஆருயிர்கள் தாமாக எதையும் அறிய மாட்டாது. ஆனால் அது அறிவில்லாதது அல்ல. அவ்வுயிரின் அறிவு சதசத் என்னும் உண்மையை அருளால் அறிந்தால் அவ்வுயிர்தானே அறிவுச் சதசத் என்னும் உண்மையை அருளால் அறிந்தால் அவ்வுயிர்தானே அறியும். இவ்விரு நிலையும் திருவருளால் எய்தப்படும்.

அதனால் அவ் அருளில் கலந்து அருளாய் நிற்பன். நிற்கவே தானே அறிந்து சிவத்துடன் கலந்து அவனது திருவடியில் உறைந்து பெருவாழ்வுப் பேரின்பின்பத்தை அனுபவிப்பன்'' என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**2291. தத்துவ ஞானந் தலைப்பட் டவர்கட்கே**
**தத்துவ ஞானந் தலைப்பட் லாய்நிற்குந்**
**தத்துவ ஞானத்துத் தானவ னாகவே**
**தத்துவ ஞானானந் தந்தான் தொடங்குமே.**

''சிவனடியார்களே, முப்பத்தாறு மெய்களின் உண்மையை உணர்ந்தவர் - களுக்கே திருவடி உணர்வாகிய திருவடி உணர்வு வரப் பெற்றால் சிவனருளால் உயிர் சிவனாகும். சிவனின் திருவடி நிழலில் அமர்ந்து திருவடி இன்பத்தை அனுபவிப்பன்.''

''சிவனடியார்களே, எதையும் நாம் நல்ல முறையில் செய்தால் அதனால் மேன்மை உண்டாகும். நந்தகுமாரன் மனைவியோடு சண்டையிட்டதால் அவள் பிரிந்து சென்றமையால் அவன் உணவுக்குத் துன்பப்படுகிறான். கதிரேசன் மனைவியோடு மிக அன்பாக வாழ்வதால் சிவனடியார்களும், ஏழைகளும், துணையில்லாதவர்களும் அவரது வீட்டுக்கு வந்து உணவு பெற்று உண்கின்றனர். அதனால் அவர்களும் கதிரேசனும் இன்பத்தை அனுபவிக்கின்றனர். இந்நிலை திருவடி இன்பத்தைப் போன்றது" என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**2292. தன்னை யறிந்து சிவனுடன் தானாக**
**மன்னு மலங்குணம் மாளும் பிறப்பறும்**
**பின்னது சன்முத்தி சன்மார்க்கப் பேரொளி**
**நன்னது ஞானத்து முத்திரை நண்ணுமே.**

''சிவனடியார்களே, ஒருவன் தனது உண்மைநிலையை உணர்ந்து சிவபெருமானின் திருவடியில் தங்கி நிலைப்பின் அதனால் அவனைப் பீடித்திருந்த மலங்கள் யாவும் அகலும். அது அறுந்ததும் பிறப்பும் அறும். அதன்பின் திருவடிப்பேறு கைகூடும். அப்பேற்றால் நன்னெறிப் பேரொளி உண்டாகும். அந்நிலையில் திருவருள் பெற்ற திருவினராவர்" என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**2293. ஞானந்தன் மேனி கிரியை நடுவங்கந்**
**தானுறும் இச்சை உயிராகத் தற்பரன்**
**மேனிகொண் டைங்கரு மத்துவித் தாதலான்**
**மோனிகள் ஞானத்து முத்திரைபெற் றார்களே.**

“சிவனடியார்களே, சிவபெருமான் ஆருயிர்களை ஆட்கொண்டருளுவதற்காகத் திருவருளையே திருமேனியாகக் கொண்டிருக்கிறான். திருமேனியில் காணப்படும் திருவுறுப்புகள் திருவருளாற்றலாகும். உயிர்ப்பு திருவருளின் விழைவு ஆகும். அதனால் ஐந்தொழில்களையும் புரிகின்றனர். அவனே ஐந்தொழில்களுக்கும் முதல்வன். மோனநிலையில் உள்ள நல்லவர்களான மெய்யடியார்கள் திருவடியை அடைந்து இன்பமடைவர்.”

சிவனடியார்களே, நந்தகுமாரன் நன்றாகக் குடித்துவிட்டுத் தள்ளாடியபடி வீதியால் வந்தபோது ஒரு வாகனம் அவனை மோதிவிட்டு நிற்காமல் சென்றுவிட்டது. அவ்வழியால் வந்தவர்கள் தீயவனான அவன் சாகட்டும் என்று நினைத்துச் சென்றுவிட்டனர். அதன்பின் அவ்வழியால் வந்த நல்லைநாதனும் ரவீந்திரனும் யாரோ அவஸ்த்தைப்படும் சத்தம்கேட்டு சென்று பார்த்தபோது நந்தகுமாரன் காயங்களோடு வீதியோரமாக முனகிக் கொண்டிருந்தான். நல்லைநாதன் வீதியால் வந்த வாகனத்தை மறித்து நந்தகுமாரனை அதில் ஏற்றி வைத்தியசாலைக்குக் கொண்டு சென்றார். அப்போது நந்தகுமாரனுக்கு வெறி தணிந்துவிட்டது. அவன் சொன்னான்; ‘நான் விபத்துக்குள்ளானதைப் பலர் பார்த்துவிட்டுப் பாராததுபோலச் சென்றுவிட்டனர். நாம் மாமிசம் சமைச்சுச் சாராயமும் வாங்கிக் கொடுக்கும் குமாரசாமி பார்த்துவிட்டுச் சென்றான். சிவனடியார்களான நீங்கள்தான், உதவுகிறீர்கள்’ என்றவன். அதற்கு நல்லைநாதன் சொன்னார்; ‘நந்தகுமாரா, மனிதரில் பலர் கடவுளை வணங்கினால் போதுமென்றே நினைக்கின்றனர். தானதர்மம் செய்வதையோ, உதவி செய்வதையோ கடவுளின் தொண்டாக நினைப்பதில்லை. சிவன் அன்பே உருவானவன். அதனால் தான் அன்பே சிவம் என்கிறார்கள். அவன் அன்பு என்ற திருவருளைத் தன் உடலாகக் கொண்டவன். அதனால் அவனை நினைத்ததும் அவன் அன்பான திருவருளை வெளிப்படுத்துவான், கோவில் வாசலை அறியாத நீ சிவநிந்தனை செய்து வாழ்ந்து வந்தாய். உயிருக்கு ஆபத்து என்றவுடன் சிவனே சிவனே என்னைக் காப்பாற்று என்று அழுதாய். நாம் எங்கோ சென்றோம். திருவருள்தான் பாதையை மாற்றி அனுப்பியது. சிவன் எப்போதும் ஆருயிர்களை மேம்படுத்தவே விரும்புவான். தீமை செய்யும், தீயவர்களும் அழைத்தால் உடனே வந்து உதவுவான். இதை இனியாவது நம்பித் தீமைசெய்யாது வாழ் என்றவர்” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**2294. உயிர்க்கறி வுண்மை யுயிரிச்சை மானம்**
**உயிர்க்குச் கிரியை யுயிர்மாயை சூக்கம்**
**உயிர்க்கியை யூட்டுவோன் ஊட்டு மவனே**
**உயிர்ச்செய் லன்றியவ் வுள்ளத்து ளானே.**

“சிவனடியார்களே, நல்லைநாதன் நந்தகுமாரனுக்குச் சொன்னார். “நீ தீயவன், தீயிலும் கொடியவன், ஆராயாது தீமைகளைச் செய்யும் அரக்கன். உனக்கு

எது சொன்னாலும் ஏறாது. இருந்தும் சொல்கிறேன். ஆருயிருக்கு அன்பு, அறிவு, ஆற்றல் என்பன என்றும் உண்டு. இவற்றை மேன்மையடையச் செய்யவே சிவபெருமான் மாயையில் இருந்து நுண்ணுடலையும், பருவுடலையும் படைத்தருளினான். இவற்றால் வரும் பயனைச் சிவபெருமான் உயிர்களுக்குக் கொடுத்தருளியுள்ளான். அவ்வாறு கொடுத்துவிட்டுச் சிவபெருமான் உயிரோடு தோன்றாத் துணையாக நின்று அருளுகின்றான். உடலில் உள்ள மலங்களில் பற்றுண்டாகச் செய்கிறான். இதனால் உயிர்கள் ஒழுக்கமாக வாழவேண்டும் என்று விரும்புகிறான். இதைப் பலர் உணர்வதில்லை. ஒழுக்கமாக வாழ்வதே சிவனுக்குச் செய்யும் சேவையாகும். சிவன் அன்பு, அறிவு, ஆற்றல் என்பவற்றைக் கொடுத்துப் பகுத்தறிவையும் கொடுத்துள்ளான். பகுத்தறிவில்லாத மிருகங்கள் தம்முள் ஒற்றுமையாக வாழ்கின்றன. பகுத்தறிவுள்ள நீ ஒருநாளென்றாலும் பிற உயிர்கள் மீது அன்பு செலுத்தியிருக்கிறாயா…? உதவி செய்திருக்கிறாயா…? உயிர்களைக் கொலை செய்வதும், கொடூரமாக நடப்பதும் தான் உனது செயல்கள். அதனால்தான் உன்னை ஆபத்தான நிலையில் கண்ட பலர் கவனிக்காது சென்றனர். அவர்களுக்கும் அன்பு, அறிவு, ஆற்றல் என்பவை இல்லை. நல்லவர்கள் தமக்குக் கொடுமையான தீமை செய்தவர்களுக்கும், உதவுவர். அது சிவனுக்குச் செய்யும் சேவை என்றவர்” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**2295. தொழிலிச்சை ஞானங்கள் தொல்சிவ சீவர்**
**கழிவற்ற மாமாயை மாயையி னாகும்**
**பழியற்ற காரண காரியம் பாழ்விட்டு**
**அழிவற்ற சாந்தாதீ தன்சிவ னாமே.**

“சிவனடியார்களே, நாகலிங்கம் நந்தகுமாரனது இனத்தவன். மறுநாள்க் காலை செய்தியை அறிந்த நாகலிங்கம் நல்லைநாதனின் வீட்டுக்கு வந்து சொன்னான்; “ஐயா நந்தகுமாரன் விபத்துக்குள்ளாகிப் பலமணிநேரம் வீதியில் கிடந்தும் யாரும் கவனிக்கவில்லை. நீங்களும் ரவீந்திரன் ஐயாவும் காப்பாற்றாவிட்டால் அவன் இறந்திருப்பான்” என்ற போது கதிரேசன் சொன்னார்; “தொழில் விழைவு அறிவு ஆகிய மூன்றும் உயிர்களுக்குள்ளன. சிவபெருமானுக்கு அவை மூன்றும் தாமே விளங்குவன. ஆருயிருக்குச் சிவபெருமான் விளக்க விளங்குவன. ஆருயிர்களுக்கு அவை மூன்றும் பிறப்பாகிய காட்டின்கண் திருவருள் இயைந்து இயக்க மாயாகாரியக் கருவியும் ஒளியும் உறுதுணையாகக் கொண்டு விளங்குகின்றன. சிறப்பாகிய ஓட்டின்கண் திருவருளைக் கருவித்துணையாகக் கொண்டு விளங்குகின்றன. அழித்தல் இல்லாத அப்பால் அமைதியானவன் சிவபெருமான். சாதாரணமான பக்தர்கள் நூல்களைப் படித்தும், தத்துவங்களை ஆராய்ந்தும், பிரசங்கங்கள் செய்தும், கேட்டும் வந்தபோதும் தனது நிலையையும், சிவனது நிலையையும் உணராதவர்களாகவே இருக்கின்றனர். தீயவர்கள் தீமைகளைத்தான் செய்வார்கள். அது அறியாமையாக இருக்கலாம். இல்லைத்

திமிராகவும் இருக்கலாம். தொழில், அறிவு, விழைவு மூன்றும் ஆருயிர்களுக்கு உண்டு. சிவனுக்கும் உண்டு. சிவனுக்கு அவை மூன்றும் தாமே விளங்குவன. ஆனால் ஆருயிர்களுக்கு விளக்க விளங்குவன. கல்வியும் மெய்யுணர்வைத் தரும். நூல்களும் அவற்றை விளக்கியபோதும் விளங்காதவர்களாகவே பலர் வாழ்கின்றனர். பாவம் பழியை உணராது செயற்படுகின்றனர். அதை ஒவ்வொருவரும் உணர்ந்தால்தான் உண்டு, வேறு எதனாலும் அதை மாற்றமுடியாது என்றவர்" என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**2296. இல்லதும் உள்ளதும் யாவையுந் தானாகி**
**இல்லதும் உள்ளது மாயன்றாம் அண்ணலைச்**
**சொல்லது சொல்லிடில் தூராதி தூரமென்று**
**ஒல்லை யுணர்ந்தால் உயிர்க்குயி ராகுமே.**

''சிவனடியார்களே, நிலைபேறில்லாத செயல்களிலும், நிலைபேறுள்ள செயல்களிலும் சிவன் கலப்பால் ஒன்றாய் நின்று அருள்கின்றனன். இந்நிலை அவனுக்கும், ஆருயிர்களுக்கும் தொன்று தொட்டே உள்ளது. அதனால் சிவன் யாவற்றிலும் தானாகி நிற்கிறான். ஆனால் பொருள் தன்மையில் அவன் வேறாகி நிற்கிறான். அதனால் அவன் யாவையும் அல்லனாகிறான். அத்தகைய பெருமை வாய்ந்தவனின் அற்புதங்களைச் சொல்லி முடிக்க முடியாது. அதைத் திருவருளால் உணர்ந்தால் உயிருக்குள் உயிராய் அவன் உடலாய் நின்று அருளுவன்"

"சிவனடியார்களே, நாகலிங்கம் சொன்னான்; "சுவாமி சிவபெருமான் நல்லவர்களுக்கு உதவுவதாகவும், தீயவர்களைத் தண்டிப்பதாகவும் கேள்விப்பட்டு இருக்கிறேன். ஆனால் சிவ பக்தர்களான நல்லைநாதனும் ரவீந்திரனும் நந்தகுமாரனை வைத்தியசாலையில் சேர்த்துவிட்டு அவனுக்கு வேண்டிய உதவிகளைச் செய்து வருகிறார்களே" என்றான். அதற்கு நல்லைநாதன் சொன்னார், "ஒவ்வொரு உயிரிலும் சிவன் உயிருக்குள் உயிராகக் கலந்து நிற்பதால் அவ்வுயிர் செய்யும் நன்மை தீமைகளிலும் கலந்து நிற்கிறான். இது தொன்று தொட்டு வரும் உறவு. அறியாமையால் தீமைகளைச் செய்யும் உயிர்களை ஆட்கொள்ள வேண்டும் என்பதற்காகவே அவன் இவ்வாறான செயல்களைச் செய்விக்கிறான். எல்லோரும் நல்லவர்களாக வாழவேண்டும் என்று விரும்புவன் சிவபெருமான். ஆனால் பொருள் தன்மையில் அவன் வேறாக நிற்கின்றான். அவனது செயல்களான திருவிளையாடல்களைப் பற்றிச் சொல்லி முடிக்க முடியாது. பலர் சிவனுக்குப் பயந்து தீய செயல்களைச் செய்யத் தயங்குகின்றனர். சிலர் அஞ்சாது செய்கின்றனர். இரண்டிலும் சிவன் அமைந்து நிற்கின்றான் என்பதைப் பலர் அறிந்ததில்லை. எதையும் திருவருளால் தான் அறிந்து கொள்ள முடியும். தீயவர்களுக்கு இத் திருவருளின் பெருமை தெரியாது என்றவர் " என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**2297. உயிர்ச்சை யூட்டி யுழிதருஞ் சத்தி**
**உயிரிச்சை வாட்டி யொழித்திடு ஞானம்**
**உயிரிச்சை யூட்டி யுடனுற லாலே**
**உயிரிச்சை வாட்டி யுயர்பதஞ் சேருமே.**

‘‘சிவனடியார்களே, நாகலிங்கம் படிக்காதவன். அத்துடன் தனக்குப் பிடித்தவர்களின் சொற்படி நடப்பவன். அவன் நல்லைநாதனோடு உரிமையாடு பழக விரும்பிய போதெல்லாம் அவர் அணைக்க கிட்ட நெருங்க விடுவதில்லை. அவனோடு சேர்ந்தால் தனக்கும் மதுவை இரகசியமாக வாங்கிக் கொடுப்பதாகச் சொல்வான் என்ற பயத்தால் அவனோடு பேசமாட்டார். அதனால் நல்லைநாதன் சொன்னார், “நாகலிங்கம் உன்னோடு பழக எனக்கு விருப்பமில்லை. ஆனால் நீ நல்லவனாக மாறிக் குடும்பத்திற்கு உதவுதல் வேண்டும். சிவபக்தனாதல் வேண்டும் என்பதே எனது விருப்பம். ஆருயிர்களுக்கு அளவிறந்த பற்றுக்களை உண்டாக்கி அணைப்பது நடப்பாற்றல். அவ்வுயிருக்கு மெய்யறிவு வந்ததும் பற்றுக்களை அழித்துச் சிவனடியில் சேர்ப்பிப்பது வனப்பாற்றல். நடப்பாற்றல் என்பது ஆதிசக்தியான கிரியாசக்தி. வனப்பாற்றல் பராசக்தி என்ற ஞானசக்தி. உயிருக்கு வனப்பாற்றலான பராசக்தி மெய்யுணர்வை உண்டாக்கிச் சிவனடியை உணர வைக்கும். அதனால் சிவனின் உணரும் தன்மை உயிருக்கு உண்டாகும். அந்த நிலையை அடைந்த உயிர் சிவனது திருவடியை அடையும். இது உனக்கு விளங்காது. ஆச்சிரமத்திற்கு வந்து அங்குள்ள நடைமுறைகளைச் சில காலத்திற்குப் பின் பற்று யாவும் உனக்குப் புரியும் என்றவர்” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**2298. சேருஞ் சிவமானார் ஐம்மலந் தீர்ந்தவர்**
**ஓரொன்றி லாரைம் மலவிருள் உற்றவர்**
**பாரின்கண் விண்ண ரகம்புகும் பான்மையர்**
**ஆருங்கண் டோரார் அவையருள் என்றன்றே.**

‘‘சிவனடியார்களே, நல்லைநாதன் சொன்னது நாகலிங்கத்துக்கு விளங்கவில்லை. அத்துடன் தீய செயல்களைச் செய்வதால் அவனது மனைவியும் பிள்ளைகளும் அவனை மதிப்பதில்லை. ஊரவர் எவரும் மதிப்பதில்லை. நல்லைநாதன படிப்பறிவில்லாதவன். இருந்தும் அவனது கல்வியைப் பற்றி யாரும் பெரிதாக எண்ணாது அவனைக் கடவுளைப் போல மதிக்கின்றனர். அதற்குக் காரணம் அவரின் ஒழுக்கமும் பக்தியும் தான். நாகலிங்கத்தின் மனைவியும் பிள்ளைகளும் நல்லைநாதனை கடவுளைப் போல மதிக்கின்றனர். அவர் சொல்வதை வேதவாக்காக எண்ணுகின்றனர். ஆனால்

தன்னை மதிப்பதில்லை என்ற கோபம் நாகலிங்கத்தின் மனதில் இருந்து சினத்தைக் கொடுத்துக் கொண்டிருந்தபோதும் அதை அவனால் வெளிக்காட்ட முடியவில்லை. அதை நாகலிங்கம் தான் வேலை செய்யும் வீட்டுக்காரனான வைத்தியர் சிவராசாவுக்குச் சொன்னபோது அவர் சொன்னார், “நாகலிங்கம், ஊரவர் பணத்தையும் குணத்தையும் தான் மதிப்பார்கள். இரண்டும் நல்லைநாதனிடம் உண்டு. வேதனைப்படுபவனுக்கு அன்பான வார்த்தைகளும், துன்பப்படுபவனுக்கு உதவியும் செய்து பார் உன்னையும் கடவுளாக மதிப்பார்கள். திருவருளால் ஐந்து மலங்களையும் அகற்றியவர்கள் சிவனடியைச் சேர்வார்கள். தீய செயல்களைச் செய்வோர் ஐம்மல இருளில் துன்பப்பட்டுத் தொடர்ந்து இறந்து பிறந்து துன்புறுவர். தீவினையை அனுபவித்து நரகத்தை அடைவர். நரகம் என்பதும் சொர்க்கம் என்பது அவரவர் வாழும் வீடும் சமூகமும் தான். நந்தகுமாரனைப்பார் வசதியானவன் அல்லவென்றாலும் கடும் உழைப்பாளி. நல்ல முறையில் வாழ்ந்தால் இன்பமாக வாழ்ந்திருப்பன். தானே தனது வாழ்க்கையை அமைத்தல் வேண்டும். வாழ்க்கையை நல்ல முறையில் அமைத்தால் பலரும் தேடி வருவர். இது சொர்க்கம். தீய வழியில் வாழ்ந்தால் உற்றார் உறவினர் நண்பர்கள் மனைவி மக்கள் கூட மதிக்கமாட்டார்கள். இது நரகம். இவற்றையெல்லாம் கண்டும் கேட்டும் உணராதவர்கள் அறிவில்லாதவர்கள்” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**2299. எய்தினர் செய்யும் இருமாயா சத்தியின்**
**ஏய்தினர் செய்யும் இருஞான சத்தியில்**
**ஏய்தினர் செய்யும் இருஞால சத்தியின்**
**ஏய்தினர் செய்யும் இறையருள் தானே.**

“சிவனடியார்களே, ஆருயிர்கள் தூமாயை துவாமாயை என்னும் இரு மாயைகளிலும் பொருந்திச் செய்வன செய்யும். அதுபோல ஞானசக்தியினைப் பெற்று அறிவு விளங்கப் பெறும். நிலவுலகமான மூலப்பகுதியைப் பொருந்தி தூய்பனவற்றைத் தூய்க்கும். இவையெல்லாம் திருவருளால் நடைபெறுவன”.

“சிவனடியார்களே, கதிரேசன் யாரையும் குறை சொல்லமாட்டார். நாகலிங்கமும் நந்தகுமாரனும் திருவிழாக் காலங்களில் குடித்துவிட்டு சுவாமியை வணங்க வருபவர்களுடன் வலிந்து சண்டையிடுவார்கள். அதை யாராவது கதிரேசனுக்குச் சொன்னால் அவர் சொல்வார், “ஆருயிர்கள் ஆணவமலத்தின் தூண்டுதலால் தான் இவ்வாறு நடக்கின்றன. அவை தூமாயையிலும் தூவா மாயையிலும் பொருந்தி இவற்றைச் செய்யும். அதுபோல மெய்யுணர்வையுடைய ஆருயிர்கள் அறிவு விளங்கப்பெற்றமையால் எது செய்ய வேண்டியது எது செய்யக்கூடாதது என்று புரிவதால் செய்யக்கூடாதவற்றைச் செய்யாது நிலத்தில் வாழும்

உயிர்கள் அனுபவிக்க வேண்டியவற்றை அனுபவிக்கும். இதற்குத் திருவருள் துணை செய்யும். தகாத செயலில் ஈடுபடுபவர்கள் தண்டிக்கப்படுவதை நீங்கள் அறியவில்லையா? வினைப்படி செயல் நடைபெறும். செயற்படி பலன் கிடைக்கும். ஆதலால் கவலை கொள்ளாது கடவுளை வணங்குங்கள். மெய்யடியவனுக்கு ஆரவாரம் எதுவும் செய்யாது என்றவர்" என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**2300. திருந்தனர் விட்டார் திருவி னரகந்**
**திருந்தனர் விட்டார் திருவார் சுவர்க்கந்**
**திருந்தனர் விட்டார் செறிமலக் கூட்டந்**
**திருந்தனர் விட்டார் சிவமா யவமே.**

"சிவனடியார்களே, கதிரேசனின் உயிர் நண்பன் நல்லைநாதன். இருப்பினும் கதிரேசன் மேற்கண்டவாறு அடிக்கடி சொல்வார். அது அவருக்குப் பிடிப்பதில்லை. எனினும் வெளிக்காட்டிக் கொள்ளமாட்டார். நல்லைநாதனை பற்றி நன்கு அறிந்தவர் கதிரேசன். நல்லைநாதன் பெரும் பக்திமானாலும் சில சமயங்களில் உணர்ச்சி வசப்படுபவர். அதைத் தெரிந்த கதிரேசன் சொன்னார்; "குடித்துவிட்டு அறியாமையால் குழப்பம் செய்பவர்களைத் தண்டிக்க வேண்டுமென்று நினைப்பவர்களும் அறியாமை மிக்கவர்களே. தண்டனை குற்றச்செயல்களை அதிகரிக்கப் பண்ணும். திருவடியுணர்வால் மெய்யுணர்வை அடைந்தவர்கள் இன்பமில்லாத இருளான உலகிற்குச் செல்ல விரும்பமாட்டார். கோவிலில் குழப்பம் விளைவிப்பவனைத் தண்டிப்பவனும் குற்றவாளிதான். ஏனென்றால் தண்டனையின் பின் பெரும் மோதல்கள் ஏற்பட்டுள்ளன. மெய்யுணர்வுடையோர் அவற்றில் இருந்து ஓதுங்குவரேயன்றி அது பற்றிக் கதைக்க மாட்டார். ஐம்மலத்தையும் விட்டவர்கள் தம் கருமம் செய்யும் தவத்தோராவர். இதைப் புரிந்து கொள்ள முடியாதவர்கள் தான் நல்வினை எது தீவினை எதுவென்று புரியாது தடுமாறுவர் என்றவர்" என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**2301. அவமுஞ் சிவமும் அறியார் அறியார்**
**அவமுஞ் சிவமும் அறிவார் அறிவார்**
**அவமுஞ் சிவமும் அருளால் அறிந்தால்**
**அவமுஞ் சிவமும் அவனரு ளாமே.**

"சிவனடியார்களே, நான் என்ற செருக்குப் பல தீமைகளைச் செய்ய வைக்கும். பிறரை மதிக்காது வாழ வைக்கும். பிறப்பைத் தொடர்ந்து கொடுக்கும். அந்தச் செருக்கு இல்லாதவர்கள் தீயவற்றை அறியமாட்டார்கள். சிவமாகிய சிறப்பிற்கு ஏதுவான நற்பணிகளை அருளால் அறியாதவர்கள் அறியாமையுடைய அறியாதவராவார். பிறப்பு, இறப்பு ஆகிய அவம் சிவம் என்னும் இரண்டையும் திருவருளால் அறிந்து கொள்பவர்கள் தான் அறிவுடையவர்கள். அவ் இரண்டையும் அருளால் அறிந்து

கொண்டால் அவ் இரண்டினையும் சிவபெருமான் நமக்குக் கூட்டுவிப்பார். நாம் செய்யும் பாவச் செயல்கள் சிவச் செயல்கள் ஆகியவற்றின் பயனும் அவனது திருவருளால் உண்டானவையே. இதை நல்லைநாதன் திருவருளால் உணர்ந்தமையால் தான் நந்தகுமாரனைக் காப்பாற்றி வைத்தியசாலையில் சேர்ப்பித்தார். இதை உணராதவர்கள் தான் விபத்துக்குள்ளாகிக் கடுங் காயங்களுடன் கிடந்த நந்தகுமாரனை விட்டுச் சென்றவர்கள்” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**2302. அருளான சத்தி யனல்வெம்மை போலப்**
**பொருளவ னாகத்தான் போதம் புணரும்**
**இருளொளி யாய்மீண்டு மும்மல மாகுந்**
**திருவரு ளானந்தி செம்பொரு ளாமே.**

“சிவனடியார்களே, தீயும் அதன் வெம்மையும் பொருளால் ஒன்றாக இருந்தாலும் பண்பால் இரண்டாக விளங்கும். தீயின் பண்புகள் ஒளியும் சூடும் ஆகும். அதுபோலத் திருவருளும் சிவபெருமானும் ஒன்றேயாகும். அத்திருவருளே ஆற்றலான சக்தியாகும். அவ் அருள் மெய்ப்பொருளான சிவனுடன் ஒன்றாக இருக்கும். அவ் அருளின் வடிவம் தனியில்லாத ஞானமாகும். ஆணவம் இருளானதாகும். அவ் ஆணவத்தோடு மாயை, கன்மம், மாயேயம் என்னும் மும்மலங்களும் சேரும். அவ்வாறு சேர்ந்தவற்றை அகற்றுவதற்காகத் திருவருள் பேரொளியான நடப்பாற்றலாகக் கூடும். அதனால் மலங்கள் ஐந்தாகி விடும். அந் நடப்பாற்றல் சேர்ந்திருந்து மலங்களை அகற்றும் அதேவேளை அத்திருவருளானது சிவபெருமானைக் காட்டியருளும். அதனால் ஆருயிர் பேரின்பப் பெருநிலையான திருவடியை அடையும்” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**2303. ஆதித்தன் தோன்ற வரும்பது மாதிகள்**
**பேதித்த தவ்வினை யாற்செயல் சேதிப்ப**
**ஆதித்தன் றன்கதி ராலவை சேட்டிப்பப்**
**பேதித்துப் பேதியா வாறருட் பேதமே.**

“சிவனடியார்களே, ஒன்றின் வரவில் நன்மையும் உண்டு. தீமையும் உண்டு. இரண்டும் திருவருளால் தான் நடைபெறுகிறது. தானாக எதுவும் நடைபெறுவதில்லை. இதைப் பலர் உணர்வதில்லை. சூரியன் உதிக்கும்போது தாமரை மலர்கிறது. மற்றொன்று மலர்வதற்காக மொட்டாக இருக்கும். அது இரவில் மலரும். வேறொன்று உதிர்ந்து விழும். இப்பூக்களின் செயற்பாடுகள் பூக்களின் கண் காணப்படினும் அப்பூக்கள் தம்மளவில் செயற்படுவதில்லை. சூரியனது செயற்பாட்டால் தான் அவை நடைபெறுகின்றன. அதுபோலத் திருவருளின் செயற்பாட்டினால் அவன் அவள் அது என்ற மூன்று வகை உலகும் தோன்றி நின்று அழிகின்றன. இதுபோல் நிலைபேறாகத்

தோன்றும் உலகங்களும் அழியும். இவற்றை வேறுபடச் செய்யுங் காரணங்கள் இவற்றின்கண் உண்டெனினும் இவற்றை இயக்கும் திருவருள் வேறுபட்டது. அதை மெய்யுணர்வுள்ளவர்களால் தான் உணர்ந்து கொள்ள முடியும். வீட்டில் வானொலி உண்டு. தொலைக்காட்சிப் பெட்டி உண்டு. மா அரைக்கும் சிறிய இயந்திரமுண்டு. இவற்றை இயக்கும் மின்சாரம் ஒன்றென்றாலும் இயக்கும் தன்மை வேறுபட்டது. முதலாவதில் பாடல் மட்டும் வரும். இரண்டாவதில் பாடலும் பாடமும் வரும். மூன்றாவதில் தானியம் மாவாக வரும். மின்சாரம் ஒன்றானாலும் செயல்கள் வேறு என்பதை உணருதல் வேண்டும்" என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**2304. பேதம் அபேதம் பிறழ்பேதா பேதமும்**
**போதம் புணர்போதம் போதமும் நாதமும்**
**நாத முடனாத நாதாதி நாதமும்**
**ஆதன் அருளின் அருளிச்சை யாமே.**

"சிவனடியார்களே, ஆருயிர்களுக்கு உடல் உலகுடன் ஏற்படும் ஒற்றுமை வேற்றுமை பிறழ்வு எனப்படும். பேதம், அபேதம், பேதாபேதம் ஆகிய வேறுபாடுகளும் திருவுள்ளத்தாலேயே நடைபெறுகின்றன. அதுபோல் உயிர்களுக்கு உரிய இயற்கை அறிவும் அவ் அறிவின் விளக்கமும் கல்வி முதலிய செயற்கை அறிவும், இவற்றால் ஏற்படும் அறிவின் வளர்ச்சியும் அவ் அறிவுக்குத் தன்மையாகிய ஓசையாகிய நாதமும், இந் நாதத்தைத் தொழிற்படுத்தும் அருளொளியாம் பரநாதமும் திருவருளின் திருவுள்ளத்தால் உண்டாவன. ஓர் உயிர் எந்த வகையில் செயற்பட்டாலும் அது திருவருளின் தன்மையுடன் செயற்படுகிறது. ஒரு நாயை எடுங்கள் அது தனக்குத் தேவையான மருத்துவத்தை தானே செய்கிறது. இது இயற்கை அறிவு. கல்வியால் வரும் அறிவானது சிந்தனையைத் தூண்டித் தேவைக்கேற்றவகையில் இயங்க வைக்கும். அப்படியிருக்கும்போது கற்றவர்கள் பணத்திற்காகத் தமது கல்வியைப் பயன்படுத்துகின்றனர். இது பல இடங்களில் அழிவையே கொடுத்துள்ளது. ஒரு வைத்திய நிபுணர் தான் செய்யும் சத்திரசிகிச்சை யாவும் வெற்றி பெறுவதாக நினைத்துக் கர்வத்துடன் செயலாற்றினார். ஒரு சாதாரண சத்திரசிகிச்சை நோயாளியைப் பலி கொண்டது. அது வைத்தியரின் கவனக் குறைவு என்று விசாரணையின்போது தெரிய வந்தது. அதனால் தொழிலுக்குப் பாதிப்பு உண்டானது. முன்பு அவ் வைத்தியர் சத்திரசிகிச்சை செய்யும்போது இறைவனை வணங்கி நல்ல முறையில் யாவும் நடைபெற வேண்டும் என்று பிரார்த்திவிட்டே செயலைச் செய்வார். இப்போ தான் பெரும் நிபுணன் என்று நினைத்துச் செய்தார். அவமானமும் பழியும் தான் ஏற்பட்டது. இதை அவர் செயல் முடிந்த பின்பே உணர்ந்தார்" என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**2305. மேவிய பொய்க்கரி யாட்டும் வினையெனப்**
**பாவிய பூதங்கொண் டாட்டிப் படைப்பாதி**
**பூவியல் கூட்டத்தாற் போதம் புரிந்தருள்**

**ஆவியை நாட்டும் அரனரு ளாமே.**

“சிவனடியார்களே, செயற்கைப் பொருட்களால் யானையின் உருவத்தைச் செய்து அதில் இயக்கும் பொறியை அமைத்துப் பொய்யாக அதை இயக்குவிப்பது போல ஐம்பூதங்களால் ஆக்கப்படும் இவ் உடலை இயக்குவது திருவருள். அதனுடன் உயிரை இணைப்பதும், அதற்கு அறிவைக் கொடுப்பதும் திருவருள். அதுபோல மெய்யுணர்வு பெற்ற உயிர்களைச் சிவனது திருவடியில் சேர்ப்பிப்பதும் திருவருள். எல்லாவற்றையும் செய்து இன்பங்களை அனுபவிக்க வைப்பதும் திருவருளே. இது ஒரு இயந்திரத்தினை பல்வேறு பாகங்களை ஒன்றிணைத்து இயந்திரமாக்கி இயக்குவதைப் போன்றது ” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**2306. ஆறா றகன்று தனையறிந் தானவன்**
**ஈறாகி யாவினு மியாவுந் தனிலெய்த**
**வேறாய் வெளிபுக்கு வீடுற்றா னம்மருள்**
**தேறாத் தெளிவுற்றுத் தீண்டச் சிவமாமே.**

“சிவனடியார்களே, மண் முதல் ஒலி ஈறாகச் சொல்லப்படும் முப்பத்தாறு மெய்களின் உண்மையான அருளால் உண்டாக்கப்பட்ட மெய்யுணர்வைத் தரும் நூல்களின் மூலம் உணர்ந்து பொருட்களின் மீதெழும் பற்றைத் துறத்தல் வேண்டும். துறத்தல் என்பது அம்மெய்கள் நாமல்ல என்றும், நமக்கு ஆண்டவனால் தரப்பட்ட இவ் உடல் இரவற் கருவி என்றும், அவை என்றும் இரவலானவையே என்றும் அவற்றால் ஆண்டவனுக்குத் திருப்பணிகள் செய்தல் வேண்டும் என்றும் அவை நிலையில்லாதன என்றும் எண்ணி நல்லவற்றைச் செய்தல் வேண்டும். அவ்வாறு வாழ்ந்து வருவோர் தன்னை அடிமை என்று அறிந்து கொள்வான். அந்த அறிவால் அவன் சிவனிடம் ஒடுங்கிச் சிவனாகிறான்” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**2307. தீண்டற் கரிய திருவடி நேயத்தை**
**மீண்டுற் றருளால் விதிவழி யேசென்று**
**தூண்டிச் சிவஞான மாவினைத் தானேறித்**
**தூண்டிச் சிவனுடன் சாரலு மாமே.**

“சிவனடியார்களே, திருவருளாற்றலால் பிறவாத தன்மையைக் கொண்ட திருவருள் நேயம் மீண்டும் அருளால் ஆருயிர் எய்தும். எய்தியதும் சிவகுருவின் ஆணைப்படி அவ்வுயிர் ஒடுங்கும். இதனால் சீலமும் நோன்பும் கைகூடும். அதனால் சிவஞானத்தை அடைவதற்குரிய செறிவுநெறி கைகூடும். அதை மா என்று சொல்வர். மா என்பது குதிரையைக் குறிக்கும். இது யோகவழியாகும். யானை எனக் குறிப்பது ஞான வழியாகும். இந்நிலையைக் கடந்து அறிவு நெறியிற் புகுந்து அந்நெறியின்

எல்லையான சிவனது திருவடியை அடைந்து இன்புறுவர்" என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**2308. சார்ந்தவர் சாரணர் சித்தர் சமாதியர்**
**சார்ந்தவர் மெய்ஞ்ஞான தத்துவ சாத்தியர்**
**சார்ந்தவர் நேயந் தலைப்பட்ட ஆனந்தர்**
**சார்ந்தவர் சத்த அருட்டன்மை யாரே.**

"சிவனடியார்களே, நன்னெறி நான்மையினர் சீலத்தார் நோன்பினர் செறிவினர் இவர்கள் அறிவினர் என்று அழைக்கப்படுவார்கள். அவர்களே இங்குச் சாரணர், சித்தர், சமாதியர், சாத்தியர் என்றும் அழைக்கப்படுவர். இவர்கள் சிவபெருமானின் திருவடியை முறைப்படி அடைந்தவர்களாவர். இவர்கள் கண்ணப்பரைப் போன்ற காதல் அன்பு நெறியில் ஒழுகுபவர்கள். இவர்கள் இறவா இன்பத்தை அனுபவிப்பவராவர்" என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**2309. தானென் றவனென் றிரண்டென்பர் தத்துவந்**
**தானென் றவனென் றிரண்டற்ற தன்மையைத்**
**தானென் றிரண்டுன்னார் கேவலத் தானவர்**
**தானின்றித் தானாகத் தத்துவ சுத்தமே.**

"சிவனடியார்களே, ஆருயிராகிய தான் என்றும், பேருயிராகிய சிவன் என்றும், பொருள் தன்மையில் அழியாத மெய்மையும் அறிவுப்பொருளும் இரு வேறு வகையானவை. சிவன் ஒருவன். ஆருயிர்கள் அளவிட முடியாதன. அவன் கலப்புத் தன்மையில் தானென்றும் அவன் என்றும் வேறுபடுத்திக் கூறாது நீற்றடியார் என்னும் நீர்மைபோல சிவத்தர் என ஒற்றுமையாக ஓதுவர். அதனால் இந்த வேறுபாடுகளைப் பற்றி நினைக்கமாட்டார்கள். இது கற்றாரும் கற்ற கல்வியும் வேறு என எண்ணாமையை ஒக்கும். இவர்களின் அருள் தனிமையானது" என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**2310. தன்னில் தன்னை யறியுந் தலைமகன்**
**தன்னில் தன்னை யறியத் தலைப்படுந்**
**தன்னில் தன்னையும் சார்கில னாயிடில்**
**தன்னினில் தன்னையுஞ் சார்தற் கரியவே.**

"சிவனடியார்களே, திருவருளால் தன்னை உணரும் முறையிலேயே சிவபெருமானையும் உணரல் வேண்டும். தன்னையும் சிவனையும் உணர்ந்தவர்கள்

சிவனைக் கண்டவராவர். இதுவே தலைப்படும் என்பதன் மெய்மைப் பொருளாகும். உயிர்க்கிழவன் திருவருளால் தலைவனைச் சார்தல் வேண்டும். அவ்வாறு அறிந்து விட்டால் அத்தலைவனும் சார்தற்கரிய நிலையை உடையவனாவான்" என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**2311. அறியகி லேனென் றரற்றாதே நீயும்**
**நெறிவழி யேசென்று நேர்பட்ட பின்னை**
**இருசுட ராகி இயற்றவல் லானும்**
**ஒருசுட ராவந்தென் உள்ளத்துள் ளாமே.**

"சிவனடியார்களே, திருவருளால் சிவனை அறிய முடியவில்லையென்றால் நான்னெறி நான்மை வழியே சென்றால் திருவருளால் சிவபெருமானை கண்டு கொள்ளலாம். அதன் பின்பு ஆருயிர் பேருயிர் என்ற இரு சுடராக இயைந்து இயக்கும் உண்மை புலப்படும். அத்தகைய வல்லவனாகிய சிவன் அடியேனைத் தன் திருவடியின் கீழ் அடக்கி அடியேனின் உள்ளத்துள்ப் புகுந்திருக்கிறான் என்று திருமூலர் கூறுகிறார்" என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**2312. ஒம்புகின் றானுல கேழையும் உள்நின்று**
**கூம்புகின் றார்குணத் தின்னொடுங் கூறுவர்**
**தேம்புகின் றார்சிவஞ் சிந்தைசெய் யாதவர்**
**கூம்பகில் லார்வந்து கொள்ளது மாமே.**

"சிவனடியார்களே, சிவபெருமான் உயிர்க்குள் உயிராகவும், உலகுக்குள் உலகமாகவும் ஒன்றிணைந்து உலகங்கள் ஏழினையும் இயக்கியருள்கிறான். அச் சிவபெருமானைத் திருவடியின் கண் ஒடுங்கிய மனத்தை உடையவர்கள் சிவபெருமானின் திருவடியில் கூடியவராவார். கூடியவர் என்பது ஒடுங்கியவர் என்பதைக் குறிக்கும். அவர்களை மெய்யடியார் எட்டுவான் குலைத்து எம்மான் என்பர். சிவபெருமானின் திருவடியை நினைக்காதவர் உள்ளத்தில் உணர்ச்சி இல்லாதவராவர்" என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**2313. குறியறி யார்கள் குறிகாண மாட்டார்**
**குறியறி யார்கடங் கூடல் பெரிது**
**குறியறி யாவகை கூடுமின் கூடி**
**அறியறி யாவிருந் தன்னமு மாமே.**

"சிவனடியார்களே, உடம்பினுள் வாழும் உயிரை அறிய முடியாதவர்கள் சிவபெருமானையும் அருளாலே அறியாதவராவர். தன்னையும் தனது தலைவனையும் அறியும் தவப்பேறு இல்லாதவர்கள் திரும்பத் திரும்பப் பிறப்பார்கள். அதனால் சிவனின்

திருவடியின் பெருமைகளை அடைய முயற்சி செய்யுங்கள். அப்படி முயற்சி செய்தீர்களானால் என்றும் பேரின்பத்தைத் தரும் திருவடி நிழலை அடையலாம்"

"சிவனடியார்களே, தீயவனாக இருந்த நாகலிங்கம், நந்தகுமாரன் விபத்துக்குள்ளான பின்பு ஆச்சிரமத்திற்கு வந்தான். சிவனைப்பற்றி எண்ணாது அவரது பெருமையை உணராது தீய செயல்களில் ஈடுபட்டு வந்த அவன் ஆச்சிரமத்திற்கு வந்ததைச் சிவனடியார்கள் ஆச்சரியத்துடன் பார்த்தனர். அவன் கதிரேசனையும் என்னையும் வணங்கிவிட்டு நான் பெருந் துன்பப்படுகிறேன். எனது துன்பங்கள் தீர உதவுங்கள் என்றான். கதிரேசன் சொன்னார், "ஒவ்வொருவரும் தன்னைத்தான் அறியாததால் தான் சிவனையும் அறியாது துன்பப்படுகின்றனர். பிறந்த நாளத் தொடக்கம் தன்னுள் இருக்கும் உயிரை அறியாவர்கள் எதையும் அறியமாட்டார்கள். உனது உயிருக்குள் இருக்கும் ஆணவம் கடவுளையும் நல்லவற்றையும் மறைக்கிறது. உயிர் உன்னதமானது. அது உடலை விட்டுச் செல்லுமுன் நல்லவற்றைச் செய்ய வேண்டும் என்று நினைத்து நல்லவற்றைச் செய்பவனே தன்னை உணர்ந்தவன். உலகையும் உலகைப் படைத்தவனையும் உணர்வான். ஒழுக்கமான வாழ்வு தன்னை உணரச் செய்யும். முதலில் ஒழுக்கமாக வாழத் தொடங்கு. அதன்பின் யாவும் கிடைக்கும் என்றவர்" என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**2314. ஊனோ வுயிரோ வுறுகின்ற தேதின்பம்**
**வானோர் தலைவி மயக்கத் துறநிற்கத்**
**தானோ பெரிதறி வோமென்னு மானுடர்**
**தானே பிறர்போ டிறப்பறி யாரன்றே.**

"சிவனடியார்களே, கதிரேசன் நாகலிங்கத்திற்குச் சொன்னார், "தன்னைத் தான் அறிந்து கொண்டால் இன்பமான வாழ்வு வாழலாம். உன்னால் செய்ய முடியாததை செய்ய முடியும் என்று நினைப்பதால் தான் பிரச்சினைகள் உருவாகின்றன. இயல்பில் மாற்றம் உண்டாகும். பொய் சொல்ல வேண்டி வரும். களவெடுக்க வேண்டி வரும். ஆனால் உன்னைப் பற்றிப் பிறர் சரியாக அறிந்து வைத்திருக்கிறார்கள். ஒவ்வொருவரும் தன்னைப் பற்றி அறிவதில்லை. பிறரைப் பற்றியே அறிகின்றனர். அதனாலும் பயனில்லை ஏனென்றால் பலர் தீய செயல்களைச் செய்யத் தகுதியானவர்களை இனங் கண்டு அவர்களோடு சேர்ந்து தீய செயல்களைச் செய்கின்றனர். உடம்பின் கண் வாட்டும் உயிர்கள் பலவிதமாக இன்பங்களை அடைவதாக எண்ணுகின்றன. உண்மையில் அவ்வாறு அடையும் இன்பம் ஒன்று இல்லை. அப்படி அனுபவிப்பது எது உடலா உயிரா வானவர்களாலும் உணர முடியாத பெருநிலையின் கண் உள்ளவர், வனப்பாற்றலாகிய பேரறிவுப் பெருந்திரு. அத்தகைய வனப்பாற்றலாம் உண்மைத் திருவின் கலப்பினால் உண்மை உணர்வு தோன்றும்.

அத்தோற்றத்தின் வழியே வாழும் மானிடர் தாமே எய்தும் பிறப்பு இறப்பினை மாற்றும் இயல்பு அறியாதவர். ஒருவன் இன்பமெனை நினைப்பது செயலின்போது தான். செயல் முடிந்தால் அது துன்பமாகி விடும். இதுதான் வாழ்க்கை. அதனால் கடவுளை வணங்கி என்றும் குறைவில்லாத இன்பத்தைப் பெறுவதே நிலையான இன்பம் என்றவர்" என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

## 4. அறிவுநயம்

**2315. தன்னை யறியத் தனக்கொரு கேடில்லை**
**தன்னை யறியாமல் தானே கெடுகின்றான்**
**தன்னை யறியும் அறிவை அறிந்தபின்**
**தன்னையே யர்ச்சிக்கத் தானிருந் [1]தானே.**

"சிவனடியார்களே, திருவருளால் தனக்குத் தலைவனாகிய சிவபெருமானை அறியத் தன்னையும் உயிர் அறிந்து கொள்ளும். அவ்வாறு தன்னையும் சிவனையும் அறிந்த உயிருக்குப் பிறப்பும் இறப்பும் இருக்கமாட்டாது. தன்னையும் தனது தலைவனையும் அறியாத உயிர்களே தீய செயல்களில் ஈடுபட்டுத் துன்பமடைகின்றன. சிவனைத் தலைவனாக ஏற்று அவனை அர்ச்சிப்போர் ஒருபோதும் வினைகளால் துன்பப்படமாட்டார்கள்".

"சிவனடியார்களே, கதிரேசன் சொன்னார், "துன்பங்களுக்குக் காரணம் நான் என்ற அகங்காரம். இது தனது பலத்தையும் பலவீனத்தையும் உணராமையால் உண்டாகிறது. கோவில் தலைவர் தான் மிக மிக நேர்மையானவன். தனது வாழ்க்கை சிவசேவைக்குரியது என்கிறார். ஆனால் மக்கள் அவரது வாழ்க்கை முறையை உணர்ந்து அவரைச் சரியாகக் கணிப்பிட்டுள்ளனர். இவை தெரிந்தும் அவர் அதைப்பற்றி நினைப்பதில்லை. அதற்குக் காரணம் பொருள் ஆசை. ஆசையையும் அகங்காரத்தையும் விட்டு விட்டால் சிவனை உணரலாம். அந்த உணர்வுத்தன்மை தான் உணரவைக்கும். சிவன் என்னுள்ளத்தில் இருக்கிறார் என்று நான் சொல்லமாட்டேன். எல்லோரது உள்ளத்திலும் இருப்பது போல என்னுள்ளத்திலும் இருக்கிறார் என்ற நினைவு இருந்தால் அந்த நினைவு நாளடைவில் வளர்ந்துவிடும். அதனால் தீயதை நினைக்க முடியாது. அதனால் உனது மனதிலும் சிவன் இருக்கிறார் என்று நினைத்தேயாயானால் தீயவற்றைச் செய்யும் துணிவு வராது. அவற்றை நினைக்கவே பயம் உண்டாகும்" என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**2316. அங்கே யடற்பெருந் தேவரெல் லாந்தொழச்**
**சிங்கா சனத்தே சிவனிருந் தானென்று**
**சங்கார் வளையுஞ் சிலம்புஞ் சரேலெனப்**
**பொங்கார் குழலியும் போற்றிஎன் றாளன்றே.**

“சிவனடியார்களே, யாராவது சிவனைப் பற்றிக் கேட்டால் பல நாட்கள் மௌனமாக இருந்தாலும் கதிரேசன் மிக்க மகிழ்வுடன் சொல்ல ஆரம்பித்து விடுவார். அதற்குக் காரணம் துன்பப்படும் மனிதர்கள் தமது அறியாமையை விட்டு நீங்கிச் சிவனது திருவடியை அடைய வேண்டும் என்ற நன் நோக்கத்திற்காகத் தான். அவர் தொடர்ந்து சொன்னார், “நாகலிங்கம் நீ சிவனைப் பற்றிக் கேட்பது எனக்கு மிகுந்த மகிழ்ச்சியைத் தருகிறது. சிவனைப் பற்றி அறிய விரும்புவன் காலப்போக்கில் சிவனடியானாகிப் பின் சிவனாகிவிடுவான். ஆருயிர்களின் உள்ளங்களில் வீற்றிருக்கும் சிவபெருமான் புறத்தே திருவெள்ளி மலையில் திருவருளம்மையுடன் வீற்றிருந்து அருள் புரிகின்றான். அங்கு வலிமை மிகுந்த தேவர்கள் சென்று அவர்களை வணங்குகின்றனர். அவன் சிவபெருமானை வணங்கும் தேவர்களுக்கு வேண்டிய வரங்களை அளிக்குமாறு வேண்டுவார்கள். இது சிவபெருமானை அன்போடு வழிபடுபவர்களுக்கும் பொருந்தும். சிவனும் திருவருளம்மையும் என்றும் பிரியாதவர்கள். அதனால் கோவிலுக்குச் சென்று சிவனை மெய்யன்போடு வணங்கு. உனக்கு வேண்டிய வரம் அளிக்கும்படி அம்மை சிவனுக்குச் சொல்வாள் என்று கூறும்போது நாகலிங்கத்தின மனதில் நம்பிக்கை உண்டானது என்றவர்” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**2317. அறிவு வடிவென் றறியாத என்னை**
**அறிவு வடிவென் றருள்செய்தான் நந்தி**
**அறிவு வடிவென் றருளால் அறிந்தே**
**அறிவு வடிவென் றறிந்திருந் தேனே.**

“சிவனடியார்களே, ஆருயிரானது தொன்மையாகத் தன்னைச் சேர்ந்த ஆணவ மலத்தாலும், மாயையின் சார்பால் மருளாலும் தான் ஓர் அறிவின் வடிவம் என அறியாதிருக்கிறது. சிவபெருமான் அவ் ஆருயிர்கள் மீது கொண்ட பேரன்பின் காரணமாகவும் ஆருயிர்களை அழைத்து நீங்கள் மலம் காரணமாகவும் மருளான மாயையின் காரணமாகவும் அறிவான் நீங்கள் அறியாமை வயப்பட்டு அறிவில்லாதவர்களாக வாழ்கிறீர்கள். அவ்வாறு எனக்கும் சொல்லி அருளினான். அதற்கு முன்பு நான் அறிவுடையவனென்று நினைக்கவில்லை. அவனருளால் தான் நான் அதை உணர்ந்து கொண்டேன். அதன்பின் அவன் நினைவாகவே இருந்து அவனை அறிந்து கொண்டேன் என்று திருமூலர் கூறுகிறார்”

“சிவனடியார்களே, அறிவு என்பது கற்றலால் உண்டாவது. மெய்யுணர்வு என்பது அனுபவத்தால் உண்டாவது. கற்றவர்கள் எல்லோரும் நல்ல அறிவைப் பெறுவதில்லை. பெரும்பான்மையானவர்கள் சந்தர்ப்பத்திற்கேற்றவாறு வாழ்ந்து தமது காரியத்தையே பார்க்கிறார்கள். இது அறிவல்ல. அறிவென்பது சிவனருளால்

மெய்மைத்தன்மை வாய்ந்ததாக இருத்தல் வேண்டும். தானும் தனது குடும்பமும் வாழ்வதல்ல வாழ்க்கை. அது சிவனருளால் எல்லோருக்கும் பயனாகுதல் வேண்டும். கதிரேசன், நல்லைநாதன் போன்றோரிடம் தான் மக்கள் ஆலோசனை கேட்கிறார்கள். பல பட்டதாரிகள் இருந்தபோதும் அவர்களை மக்கள் அறிவுள்ளவாகளாகக் கருதவில்லை. இதற்குக் காரணம் சிவபெருமான் அவர்களை அழைத்து மெய்யுணர்வைக் கொடுத்தமையே. கற்றவர்களுக்கிடையில் ஏற்படும் முரண்பாடுகளையும் இவர்கள் தான் தீர்த்து வைக்கிறார்கள். சென்ற வாரம் பட்டதாரி ஆசிரியரான குமாரசாமிக்கும் அதிபரான ஏகாம்பரத்திற்கும் காணி சம்பந்தமாகப் பிரச்சினை ஏற்பட்ட போது அதைத் தீர்த்து வைத்தவர் கதிரேசன். அவர் சொல்வார் சிவன் சொல்கிறான் நான் செய்கிறேன். இதில் எனது பங்கு எதுவும் இல்லை என்பவர்" என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**2318. அறிவுக் கழிவில்லை யாக்கமும் இல்லை**
**அறிவுக் கறிவல்ல தாதாரம் இல்லை**
**அறிவே யறிவை யறிகின்ற தென்றிட்டு**
**அறைகின் றனமறை யீறுகள் தாமே.**

‘‘சிவனடியார்களே, ஆருயிர்களின் அறிவுக்குக் கேடாகிய அழிவும், தோற்றமுமாகிய ஆக்கமும் இல்லை. சிற்றறிவுள்ள உயிர்களுக்கு முற்றறிவுள்ள சிவபெருமான் நிலைத்த ஆதாரமாகும். வேறு ஆதாரங்கள் இல்லை. ஆருயிர்க்கு உண்டாகும் அறிவுப் பேருயிரான சிவனையும் தன்னையும் உணரச் செய்யும். இது பேருயிரின் அருளால் உண்டாவது. இதைத்தான் மறைநூல்கள் கூறுகின்றன என்று கதிரேசன் கூறுவார்".

‘‘சிவனடியார்களே, குமாரசாமி திருகுதாளங்கள் செய்பவன். அவன் ஏகாம்பரத்தின் பாட்டனாரின் காணியைத் தனது பெயருக்கு எழுதி வைத்திருந்தான். அதை அறிந்த ஏகாம்பரம் நீதிமன்றுக்குச் செல்லத் துணிந்தபோது கதிரேசன் சொன்னார்; "குமாரசாமி நீ கள்ள உறுதி முடித்த காணி ஏகாம்பரத்தின் பாட்டனாருடையது. அவர் வசதியானவர். விற்க வேண்டிய தேவை அவருக்கில்லை. நீ காணி எழுதுபவருக்குக் காசு கொடுத்தால், சாட்சிகளான கணேசனுக்கும் துரைராசாவுக்கும் காசு கொடுப்பதாகச் சொன்னாய். ஆனால் கொடுக்கவில்லை. கொடுத்திருந்தால் சிலநேரம் நீ தப்பி இருப்பாய். முன்பு குடித்துவிட்டு வெறித்துத் திரிந்த கணேசன் இப்போ திருந்திச் சிவனடியானாகி விட்டான். அவன் நடந்தவற்றைக் கூறிவிட்டான். இந்நிலையில் நீ நீதிமன்றம் சென்றால் தண்டனையைப் பெறுவாய். வேலையும் போய் விடும். அதனால் யோசித்துச் சொல் என்றார். அதனால் குமாரசாமி பயந்துவிட்டான். கதிரேசன் சொல்வது நடக்கும்' என்று உணர்ந்த அவன்

சமாதானமாகிவிட்டான் . அது சிவன் கொடுத்த அறிவு ” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**2319. மன்னிநின் றாரிடை வந்தருண் மாயத்து**
**முன்னிநின் றானை மொழிந்தேன் முதல்லனும்**
**பொன்னின்வந் தானோர் புகழ்திரு மேனியைப்**
**பின்னிநின் றேனீ பெரியையென் றானன்றே.**

“சிவனடியார்களே, கதிரேசன் சொல்வார்; “திருக்கைலாயத்தில் இருந்து பூமிக்குச் சைவத்தைப் பரப்பவும் சிவனது பெருமைகளை விளக்கவும் வந்த திருமூலர் சிவனைப் பற்றி இவ்வாறு சொல்கிறார். தனது திருவடியை மெய்யுணர்வுடன் விரும்பி வணங்குவோரது உள்ளத்தில் சிவபெருமான் நிறைந்த மகிழ்வுடன் வந்து குடியமர்வான். அங்ஙனம் வருவது அவர்களது மாயாயகாரிய உடம்பைப் பெற்ற உயிரை உய்வடையச் செய்லதற்காகவே. அவனது திருமேனி பொன்போல மினுமினுக்கும். அத்திருமேனியை அனைத்துலகத்தினரும் புகழ்ந்து வணங்குவர். அத்திருமேனியை நானும் மிக்க மகிழ்வுடன் வணங்கி வந்தேன். சிவபெருமான் தனது அடிமையாகிய என்னை நோக்கி நீ பெரியை என்றருளினான் என்று கூறுகிறார். அத்தகைய சிவபெருமானை நீ மெய்யன்புடன் வணங்கு. உனது துன்பங்கள் துயரங்கள் யாவும் தீரும் என்று நாகலிங்கத்திற்குக் கதிரேசன் கூறியவர்” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**2320. அறிவறி வாக அறிந்தன்பு செய்மின்**
**அறிவறி வாக அறியுமிவ் வண்ணம்**
**அறிவறி வாக அணிமாதி சித்தி**
**அறிவறி வாக அறிந்தனன் நந்தியே.**

“சிவனடியார்களே, சிற்றறிவு முழுமையான அறிவைக் கடந்து சிவனது திருவடியை அடையும் நிலை ஏற்படுவதை அறிவு அறிவாதல் எனப்படும். இது உடல் முழுவதும் நீறு பூசியவர் முனிவராகுதலை ஒக்கும். இவர்கள் சிவனை மறவாது பெரும் அன்பு பூண்டு செயலற்று நிட்டையில் இருப்பர். இந்நிலையில் அவர்களுக்கு அணிமா சித்திகள் கிட்டும்” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**2321. அறிவறி வென்றங் கரற்றும் உலகம்**
**அறிவறி யாமை யாரும் அறியார்**
**அறிவறி யாமை கடந்தறி வானால்**
**அறிவறி யாமை யழகிய வாறே.**

“சிவனடியார்களே, உலகோர் திருவருள் நாட்டமின்றித் தாம் தாம் அறிஞர் என்று கூறிப் பெருமை கொள்வர். எது அறிவு எது அறியாமை என்று உணராதவர்கள் அவர்கள். திருவருளால் அறிவு அறியாமை என்றும் இரண்டினையும் அருளால் கடந்து முற்றறிவு பெற்று முழுமையாக மெய்யறிவு பெறும் ஆருயிர் அறிவுடையது. இதை அறியாதவர்கள் தான் “தான் தாம்” அறிவாளிகள் என்று நினைக்கின்றனர்”.

“சிவனடியார்களே,அயலூரவரான மார்க்கண்டேயன் என்பவர் இமயமலைக்குச் சென்று அங்கு தங்கியிருந்து தவம் செய்து சிவனைச் சந்தித்ததாகக் கூறினார். அவரைப் பெரும் அறிஞர் என்று மக்கள் மதித்தனர். அவரின் மீது கதிரேசனுக்கு நம்பிக்கை இல்லை. தற்போது பணக்காரர் சிலர் மன அமைதிக்காக இமயமலைக்குச் சென்று அங்குள்ள முனிவர்களைச் சந்தித்துப் பேசியதாகக் கூறுகிறார்கள். அவர்களின் நடத்தைகளில் எவ்வித மாற்றமும் இல்லை. தாம் பிரபலமடையவும், தனது பிழைப்புக்குமாக அவர்கள் நடிக்கிறார்கள். அவர்களின் தொழிலே நடிப்புத்தான். இவர்கள் மது மாமிசத்தைக் கூட தவிர்ப்பதில்லை எனக் கேள்விப்பட்டுள்ளார். அதனால் கதிரேசன் மார்க்கண்டேயனைப் பெரிதாக எடுக்கவில்லை. அது மார்க்கண்டேயருக்கு மனவருத்தத்தை கொடுத்த போதும் அவர் அதை வெளிக்காட்டிக் கொள்ளவில்லை. அவர் ஆச்சிரமத்தில் உரையாற்றும்போது அருணன் என்ற சிறுவன் கேட்டான், “சுவாமி எவ்வளவோ இனப் பாம்புகள் வாழும்போது சிவன் நாகபாம்பை அணிந்ததன் நோக்கம் என்ன? அவர் அதை ஏன் அணிந்திருக்கிறார்?” என்று கேட்டான். அவர் அதைக் கேளாதது போல பேசிக் கொண்டிருந்தார். அதனால் அவன் மீண்டும் கேட்டான். அதற்கு அவர் சொன்னார்; “மகனே, அது பெரிய தத்துவம். சொன்னால் உனக்கு விளங்கும் அறிவு இல்லை. அறிவுக்கறிவான சிவனை வேண்டு அவர் அதை விளக்குவார் என்று தனது பேச்சை முடித்துவிட்டார்” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**2322. அறிவறி யாமையை நீவி யவனே**
**பொறிவா யொழிந்தெங்குந் தானான போது**
**அறிவா யவற்றினுள் தானா யறிவின்**
**செறிவாகி நின்றவன் சீவனு மாமே.**

“சிவனடியார்களே, மார்க்கண்டேயன் அவ்வாறு சொன்னதால் திருப்தி அடையாத அருணன் கதிரேசனிடம் வந்து கேட்டான். “தாத்தா, நீங்களாவது எனக்கு பதில் சொல்லுங்கள்” என்றபோது கதிரேசன் சொன்னார்; “பேரா மாயாகாரியப் பொருட்களால் வரும் அறிவு சுட்டறிவு. அவற்றின் மூலம் அறிந்ததைச் சொல்வதும் அறிந்தேன் என்பதும் சிற்றறிவு. இவ்விரண்டும் புல்லறிவு. மலத்தின் ஆதிக்கத்தால் அறியாதிருப்பது பேதைமை. எனவே பேதைமைகளையும் புல்லறிவாண்மையயும்

கடந்து நீங்கியவன் தான் மேலோன். அவன் தான் அறிஞன் என்று சொல்லமாட்டான். தானே தனக்கு பட்டம் சூடமாட்டான். பிறர் சூட்டுவதையும் விரும்பமாட்டான். அவன் தான் பொறிகளின் வழி செல்லாது நிற்பவன். பொறிகளின் விருப்பு வெறுப்பை நீக்கியவன் சிவனருளால் எங்கும் தானாக விளங்குவான். அப்போது அவன் நல்லறிவுள் ஒடுங்கி நிற்பான். அவனது சீவன் மெய்யறிவு பெற்றது. அதனால் சுட்டறிவு, சிற்றறிவு போதாமையாயும் அகன்று பேரறிவு உண்டாகும். அவ்வாறானவர்கள் தாம் தான் அறிவாளியன்றோ மற்றவர்கள் அறிவாளி என்று கூறுவதையோ விரும்பமாட்டார்கள். பட்டம் பதவிகளை விருதுகளை விரும்பமாட்டார்கள். சிவன் அடியார்கு அடியவன். மிக மிக வறிய அடியவனின் நிலமைக்குக் கீழ்த்தான் அவனது தோற்றம் இருக்கிறது. அதற்குக் காரணம் அவ்வாறான அடியவர்களுக்கும் அடியவன் என்பதை உணர்த்தவே. நாகம் பாம்புகளில் மிகவும் பெருமை வாய்ந்தது. மக்களால் வணங்கப்படுவது. தீமை செய்தாலும் பொறுத்துக் கொள்வது. கூற்றுவனின் உத்தரவுக்குப் பின்பு தான் அது மனிதரைக் கொத்தும். வேறு சந்தர்ப்பங்களில் கொத்தாது. அதை வணங்க வேண்டும் என்பதற்காகவும், அதன் மூர்க்கத்தை அடக்க வேண்டும் என்பதற்காகவும் அதனால் கேடு செய்ய முடியாது என்பதற்காகவும், தோசமுள்ளவர்கள் தோச நிவர்த்தி பெற வேண்டும் என்பதற்காகவும், வேறு பல நல்ல நோக்கங்களுக்காகவும் தான் சிவன் நாகத்தை அணிந்துள்ளான் என்றவர் " என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**2323. அறிவுடை யார்நெஞ் சகலிட மாவது**
**அறிவுடை யார்நெஞ் சருந்தவ மாவது**
**அறிவுடை யார்நெஞ்சொ டாதி பகவனும்**
**அறிவுடை யார்நெஞ்சத் தங்குநின் [1]றானே.**

"சிவனடியார்களே, அன்று கதிரேசன் உரையாற்றினார்; "அன்பானவர்களே தினமும் அறிவைத் தேட வேண்டும். பொன் பொருள்களைத் தேடுவதையே இலட்சியமாகப் பலர் கொண்டிருக்கின்றனர். சிவசேவை செய்வதாகக் கூறுபவர்களும் அதைத்தான் செய்கிறார்கள். இதை அவர்கள் உணர்ந்து திருந்துதல் வேண்டுமே தவிர யாரும் செல்லக்கூடாது. சிவ சேவை செய்யும் ஒருவர் வாகனம் வாங்கி உள்ளார். காணி வாங்கி வீடு கட்டியுள்ளார். பொதுப்பணத்தைத் தனக்குச் செலவு செய்கிறார். அப்பணத்தைக் கொடுத்து வீடுகளும் பட்டங்களும் வாங்குகிறார் என்று தினம் பலர் எனக்குச் சொல்கின்றனர். அது உண்மை. ஆனால் எனது சிவ சேவையையும் சொல்பவரது சிவ சேவையையும் அது பாதிக்கிறது. ஒவ்வொரு உயிரிலும் உள்நின்று இயக்கும் இறைவன் அதைக் கவனித்துக் கொள்வான். ஓர் உயிர் நினைப்பதையே தெரிந்து கொள்ளும் சிவன் நீங்கள் சொல்வதைக் கேளாமல் இருப்பானா....? கற்ற அறிவில்லாதவர்கள் செய்யும் சிறு சிறு தவறுகளைச் சொல்லித் திருத்தலாம். ஏனெனில் அவர்கள் அச் செயலின் நன்மை தீமைகளைப் புரியாது சொல்கின்றனர்.

சொல்லிப் புரிய வைத்தால் ஏற்றுக் கொள்வர். ஆனால் படித்துப் பட்டங்கள் விருதுகளைப் பெற்றவர்கள் கேட்கமாட்டார்கள். கேட்டாலும் செயற்பட மாட்டார்கள். அவர்களைச் சிவன் திருத்துவான். திருவருளால் நல்லறிவு பெற்றவர்களின் மனம் அருள் வெளியாகும். அது சிவபுண்ணிய அருந்தவ நிலைக்களமாகும். அவ்வறிவுடையாரின் நெஞ்சில் உலகமாதாவான ஆதி எழுந்தருளி மகிழ்வுடன் இருப்பாள். சேவனாகிய சிவபெருமானும் ஆதியுடன் கூடி மகிழ்வுடன் வீற்றிருப்பார். இவர்கள் தீயவற்றை நினைக்கமாட்டார்கள். சிவ வேடம் தாங்கி அதை வெளிக்காட்டித் தமது பிழைப்பை நடத்துவோரின் உண்மையான நிலையை ஆதியும் அத்தனும் அறிவார்கள். அதனால் எதைப் பற்றியும் கவலை கொள்ளாது சிவ சேவையைச் செய்யுங்கள் என்றவர்" என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**2324. மாயனு மாகி மலரோன் இறையுமாய்க்**
**காயநன் னாட்டுக் கருமுத லானவன்**
**சேயன் அணியன் தித்திக்குந் தீங்கரும்பு**
**ஆயமு தாகிநின் றண்ணிக்கின் [1]றானே.**

"சிவனடியார்களே, கதிரேசன் தொடர்ந்து சொன்னார், "காத்தல் கடவுளாக மாயனும், படைத்தற் கடவுளான மலரோனும், அழித்தற் கடவுளான இறையுமாக விளங்குபவன் சிவபெருமான். அவனே ஆருயிர்களுக்கு உடம்புகளைப் படைத்தருளும் வினை முதல் காரணன். அவன் அன்பர்கள் அல்லாதவர்களுக்குத் தொலைவில் உள்ள அன்னியனாக நிற்பான். அன்பர்களுக்கு அருகில் இருக்கும் நல்ல நண்பனாக இருப்பான். அதனால் அவன் எல்லாவற்றையும் அறிவான். அதைப் பலர் உணர்கிறார்களில்லை. சிவனது மெய்யன்பர் என்று சொல்லும் ஒருவர் காலையில் வந்து இன்னொருவரைப் பற்றிச் சொன்னார். அவருக்கு நான் சொன்னேன்; "நீர் சிவனடியாரா…? சிவனடியாராக இருந்தால் எனக்கு உவற்றைச் சொல்லத் தேவையில்லை. ஏனென்றால் சிவன் ஒவ்வொரு உயிரிலும் நுண்ணியனாக இருக்கும் அவன் மிகமிக நுண்ணிய விடயங்களையும் தானாகவே அறிந்து கொள்வான். அதில் சந்தேகமிருப்பின் நீங்கள் நேரடியாகச் சிவனுக்குச் சொல்லுங்கள் எனக்குச் சொல்லுவதால் பயன் இல்லை. ஏனென்றால் நான் செயற்படுவதில்லை. மற்றவர்களுக்குச் சொல்வதுமில்லை. அதனால் தேவையில்லாத விடயங்களை எனக்குச் சொல்லாதீர்கள் என்றவர்" என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**2325. என்னை யறிந்திலேன் இத்தனை காலமும்**
**என்னை யறிந்தபின் ஏதும் அறிந்திலேன்**
**என்னை யறிந்திட் டிருத்தலுங் கைவிடாது**
**என்னைவிட் டென்னை உசாவுகின் றானன்றே.**

“சிவனடியார்களே, கதிரேசன் சொன்னார், “அன்பானவர்களே, இருட்டறையில் பொருளைத் தேடுபவன் விளக்கைப் பயன்படுத்தாவிட்டால் பொருளைக்காண மாட்டான். அத்துடன் தன்னையும் காணமாட்டான். அதுபோலச் சிவபெருமானின் திருவருளான முற்றுணர்வு விளக்கில்லாவிட்டால் ஆருயிர்க்கிழவன் தன்னையும், தன்னைப் படைத்த சிவனையும் அறிய மாட்டான். கருவிகளுடன் கூடிய உயிர்தான் உண்டென்று அறிவது பொது நிலையும், நிலையில் நினைவுமாகும். சிவபெருமான் உடன்கூடி உடனாய் நிற்பதை உணர்வது சிறப்புநிலை என்னும் மாறாநிலையாகும். திருவருளால் என்னை அறிந்தபின் உலகியலில் நான் நிற்கும் உலகியற் பொருட்களை யான் அறியேன். ஆருயிரின் தன்மை ஒன்றில் அழுந்தி அதுவாய் நின்றால் வேறொன்றையும் அறிய முடியாது. என்னை உணர்ந்தபின் சிவநிறைவில் அடங்கியுள்ளேன். சிவனும் என்னைக் கைவிடாது. தன்னுடன் சேர்த்துக் கொண்டான். அதனால் நான் சிவநினைவாகவே உள்ளேன்” என்று திருமூலர் கூறுகிறார். தன்னை அறிந்தவன் சிவனை அறிவான். தன்னையறியாதவன் சிவனைத் தவிர்ந்த ஏனைய எல்லாவற்றையும் அறிவான். அந்த அறிவுதான் புகழைத் தேடச் சொல்லும். பணம், பொருளைத் தேடச் சொல்லும். இதுதான் உலகின் நிலை. ஆனால் சிவனடியார்கள் இந் நிலைக்காளாதவதால் தான் சிவத்துரோகங்களைச் செய்கின்றனர்” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**2326. மாய விளக்கது நின்று மறைந்திடுந்**
**தூய விளக்கது நின்று சுடர்விடுங்**
**காய விளக்கது நின்று கனன்றிடுஞ்**
**சேய விளக்கது நின்று தேடுகின் [1]றேனே.**

“சிவனடியார்களே, மாயாகாரியமாகிய உடல் கலன், உலகு, ஊண் முதலிய பொருட்கள் விளக்குப்போல எமது வாழ்க்கைக்குத் துணையாகவும், அதன்கண் காணப்படும் அகல், திரி, தீ முதலியனபோல நுகர்வாகவும் இருக்கின்றன. ஆனால் அது காலவரையறைக்குட்பட்டு மாறுதல் அடையும் என்றும், ஒன்றுபோல நின்று ஒளிரும் தூய விளக்காகிய சிவன் திருவடி விளக்கு ஆருயிர்களுக்கு முற்று வினையை விளக்கி முற்றுவிக்கும் உடம்பாகிய விளக்கு உன்னோடு வாழ்தல் அரிது என்று அலறி அழும்படி வருந்தும். இவற்றிற்கப்பாற்பட்ட திருவடிப் பேரின்ப விளக்கு அம்மையின் அருள் விளக்காகும்” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**2327. தேடுகின் றேன்திசை யெட்டோ டிரண்டையும்**
**நாடுகின் றேனல மேயுடை யானடி**
**பாடுகின் றேன்பர மேதுணை யாமெனக்**
**கூடுகின் றேன்குறை யாமனத் தாலே.**

“சிவனடியார்களே, கதிரேசன் சொன்னார்; “அன்பர்களே, திருமூலர் சொல்வதைப்போலப் பத்துத் திசைகளிலும் நான் குற்றமில்லாத பரம்பொருளான சிவபெருமானைத் தேடுகின்றேன். அவனது திருவடியை நாடி நிற்கின்றேன். சிவபெருமானே எனக்கு வழித்துணையென்றும், விழுத்துணையென்றும் தெரிந்து செந்தமிழாலான திருமுறைகளைப் பாடித் துதிக்கின்றேன். அதனால் மெய்யுணர்வு ஏற்படுகிறது. அதனால் அவனது திருவடியை வணங்குகின்றேன். இதைத்தவிர எனக்கு வேறு நினைப்பில்லை. வேறு விருப்புக்களும் இல்லை. அதுபோல சிவனடியார்களான நீங்களும் சிவனை வணங்குங்கள். அவனது நினைப்பாக இருங்கள். அப்படியிருந்தால் வேறு எண்ணங்கள் தோன்ற மாட்டாது. எண்ணங்கள் வார்த்தைகளாக வெளிப்படும்போது அவை மெய்யுணர்வை உண்டாக்கி வளரச் செய்தல் வேண்டும். அப்போதுதான் சிவதரிசனம் கிடைக்கும். குளிக்கச்சென்று சேறு பூசும் நடவடிக்கைகளில் ஈடுபடாதீர்கள். நல்லவர்கள் தீயசொல்களைச் சொல்லார். தீயவர்கள் நல்லவற்றை நினையார். கற்றவர்கள், பூனை கண்ணைமூடிக்கொண்டு திருட்டுத்தனமாகப் பாலைக் குடிப்பது போலத் தீயவற்றைச் சொல்வார்கள். அது மற்றவர்களுக்குத் தெரியாதென்று நினைப்பார்கள். காய்ச்சி வைத்த பாலைக் காணாவிட்டால் அது பூனை குடித்திருக்கும் என்று பாலைக் காய்ச்சி வைத்தவருக்குத் தெரிவதுபோல எல்லோரது நடவடிக்கைகளும் சிவனுக்குத் தெரியும்” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**2328. முன்னை முதல்விளை யாட்டத்து முன்வந்தோர்**
**பின்னைப் பொருமலம் வந்தவர் பேர்த்திட்டுத்**
**தன்னைத் தெரிந்துதன் பண்டைத் தலைவன்தாள்**
**மன்னிச் சிவமாக வாரா பிறப்பன்றே.**

“சிவனடியார்களே, கதிரேசன் தொடர்ந்து பேசினார்; “அன்பானவர்களே, அனாதியிலிருந்து வினைக்கீடாகப் பிறப்பெடுக்கும் உயிர்கள் அனைத்திலும் ஐம்மலங்களும் சேரும். பின் சிவ வழிபாட்டால் சேர்ந்த ஐந்து மலங்களும் நீங்கும். திருவருளால் அவர்கள் தம்மை உணர்வர். தம்மை உணர்ந்தவர் சிவபெருமானை வணங்கி, அவனது திருவடியை அடைவர். அவர்கள் சிவனாகவே மண்ணில் வாழ்வர். இவர்களுக்குப் பிறப்புக்களால் வரும் துன்பங்கள் வராது. இதை உணர்ந்தவர்கள் தமது செயல்களைச் சிவனிடம் ஒப்படைத்துவிட்டு செயலற்று இருப்பர். தன்னையும், செயல்களையும் செய்விப்பவர் சிவன் என்ற உணர்வு உள்ளத்தில் எழுந்தால்தான் இந்த நிலை உண்டாகும் என்றவர்” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

## 5. ஆறந்தம்

## (அறு முடிவு)

**2329. வேதத்தின் அந்தமும் மிக்கசித் தாந்தமும்**
**நாதத்தின் அந்தமும் நற்போத அந்தமும்**
**ஓதத் தகுமெட் டியோகாந்த அந்தமும்**
**ஆதிக்க லாந்தமும் ஆறந்த மாகுமே.**

“சிவனடியார்களே, மறை என்று சொல்லப்படும் வேதத்தின் முடிபு, முறை முடிபு, அறிவின் முடிபு, ஒலி முடிபு, செறிவின் முடிபு, உணர்த்துவதன் முடிபு ஆகிய ஆறு வகையான முடிபும் ஒரு வகை முடிபு ஆகும். இவற்றை வேதத்தின் அந்தம் என்பர். மறை முடிபு என்பது செந்தமிழ் மறையின் முடிபு ஆகும். சித்தாந்தம் என்பது மெய்கண்ட அமிழ்தாகும். நாதாந்தம் என்பாது ஓசை முடிபு. போதாந்தம் என்பது அறிவின் முடிபு. திருவுருவச் சேர்க்கையின் முடிபே காலாந்தமாகும். இவற்றைச் செயற்படுத்துவது திருவருளின் செயல் முடிபு ஆகும்” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**2330. அந்தமோ றாறும் அறிவார் அதிசுத்தர்**
**அந்தமோ றாறும் அறிவார் அமலத்தர்**
**அந்தமோ றாறும் அறிவார் அவர்தமக்கு**
**அந்தமோ டாதி அறியவொண் ணாதன்றே.**

“சிவனடியார்களே, ஆறு அந்தங்களையும் திருவருளால் அறிபவர் எல்லையில்லாத தூயவராவார். அது போல ஆறு அந்தங்களையும் அறிந்தவர்கள் மலங்களற்றவராவர். இவற்றின் உண்மைகளைச் சிவகுருவிடம் இருந்து அறியாதவர்கள் பிறப்பினையும், இறப்பினையும், உலகின் தோற்றத்தையும், அதன் ஒடுக்கத்தினையும் ஒரு சிறிதும் அறியாதவராவார்” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**2331. தானான வேதாந்தந் தானென்னுஞ் சித்தாந்தம்**
**ஆனாத் துரியத் தணுவன் றனைக்கண்டு**
**தேனார் பராபரஞ் சேர்சிவ யோகமாய்**
**ஆனா மலமற் றருஞ்சித்தி யாதலே.**

“சிவனடியார்களே, தானான வேதாந்தம் என்பது நினைப்பாகிய பாவனைப் பயிற்சியால் யான் அதுவானேன் எனும் முறைமையாகும். தான் என்னும் சித்தாந்தம் என்பது திருவருளால் பாவனைப் பயிற்சியுங் கடந்து தனது நாமங் கெடும் நிலைமை நேர்ந்து தானே எனச் சாற்றும் தனிமறையாகும். நீங்குதலில்லாத சிவனின் நினைவுடன் கூடிய பேருறக்க நிலையாகிய ஆனாத்துரியத்து அணுவாகிய ஆருயிர் திருவருளின் துணையால் சிவனைக் காணும்போது தன்னையும் காண்பன். கண்ணாடியைக் காணும்போது தன்னையும் காண்பதுபோலச் சிவனைக் காணும்போது தன்னையும் காண்பான். பொறிகள் சிவ உணர்வால் தம்நிலை அற்ற நிலையில் இது நிகழும்.

இவர்கள் தேனினுமினிய சிவலோக நிலையை அடைவர்" என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**2332. நித்தம் பரனோ டுயிருற்று நீள்மனஞ்**
**சத்த முதல்ஐந்துந் தத்துவத் தால்நீங்கிச்**
**சுத்த மசுத்தந் தொடரா வகைநினைந்து**
**அத்தன் பரன்பால் அடைதல்சித் தாந்தமே.**

"சிவனடியார்களே, சிவனே பரனாவான். அவனுடன் ஆருயிர் அருளால் ஒன்று சேரும். சேர்ந்தால் மனம், ஓசை முதலிய ஐந்து பொறிகளும் மெய்களாகும். இதைப் பயிற்சியால் உணர்ந்து கொள்ளலாம். உணர்ந்தால் பற்றுக்கள் நீங்கும். தூமாயை, தூவாமாயை ஆகிய சுத்தமும் அசுத்தமும் தொடராது. அந்நிலையில் யாவர்க்கும் அத்தனாக விளங்கும் சிவபெருமானின் திருவடியை அடையும் நிலை உண்டாகும். இவ் உண்மையை விளக்குவது சித்தாந்தமாகும்." என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**2333. மேவும் பிரமனே விண்டு உருத்திரன்**
**மேவுசெய் யீசன் சதாசிவன் மிக்கப்பால்**
**மேவும் பரவிந்து சாதம் விடாவாறாறு**
**ஒவும் பொழுதணு வொன்றுள தாகுமே.**

"சிவனடியார்களே, அயன், அரி, அரன், ஆண்டான், அருளோன் அதற்கப்பாலுள்ள பரவிந்து, பரநாதம் விட்டு முப்பத்தாறு மெய்களும் கருத்தைவிட்டு நீங்கியதும் ஆருயிரின் உண்மைநிலை நன்கு புலனாகும்" என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**2334. உள்ள வுயிராறாற தாகும் உபாதியைத்**
**தெள்ளி யகன்றுநா தாந்தத்தைச் செற்றுமேல்**
**உள்ள இருள்நீங்க வோருணர் வாகுமேல்**
**எள்ளலின் நாதாந்தத் தெய்திடும் போதமே.**

"சிவனடியார்களே, மெய்களின் ஆய்வு முறைமையால் உண்மையைக் கண்ட ஆருயிர் முப்பத்தாறு மெய்களின் பிணிப்பில் இருந்து விடுபடும். விடுபட்டதும் ஏற்பட்ட தெளிவினால் நாத அந்தத்தைக் கடக்கும். அப்போது அகவிருள் அகல அருளுணர்வு உண்டாகும். அருளுணர்வு உண்டானதும் குறைவில்லாத நாத முடிவில் தோன்றும் நல்லறிவு உண்டாகும்" என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**2335. தேடும் இயம நியமாதி சென்றகன்று**
**ஊடுஞ் சமாதியில் உற்றுப் படர்சிவன்**
**பாடுறச் சிவன் பரமாகப் பற்றறக்**
**கூடும் உபசாந்தம் யோகாந்தக் கொள்கையே.**

“சிவனடியார்களே, தனக்கு நீங்காத உறுதி தரும் செயல்களை நன்கு ஆராய்ந்து தகாதவற்றை அகற்றுவதாகிய இயமமும், நல்லவற்றைப் பேணுவதாகிய நியமத்தையும் கைக்கொண்ட பின்பு அவற்றையுங் கடந்த நிலையாகிய சமாதிநிலை கிட்டும். அந்நிலையால் சிவனடியைச் சேர்வர். அதுவே வேண்டுதல் வேண்டாமை இன்மை தலைப்படுதலாகும். இத் தலைப்பாடே யோகானந்தக் கொள்கையாகும். பொய், கொலை, களவு, காமம், பொருளாசை இவ்வைந்தும் அடக்க வேண்டிய நியமம் ஆகும்” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**2336. கொள்கையி லான கலாந்தங் குறிக்கொள்ளில்**
**விள்கையி லான நிவிர்த்தாதி மேதாதிக்கு**
**உள்ளன வாம்விந்து வுள்ளே யொடுங்கலுந்**
**தெள்ளி யதனைத் தெளிதலு மாமே.**

“சிவனடியார்களே, குறிப்பாகக் காலாந்தத்தைச் சொல்வதனால் நீக்கல் முதலிய ஐந்து கலைகளும், கொழுப்பு முதலிய ஏழு வகையான பொருட்களும் மாயையிடத்து ஒடுங்கும். அவ்வாறு ஒடுங்குவதை ஆராய்வதும், ஆராய்ந்தபின் தெளிவடைதலும் காலாந்தம் எனப்படும். கலைகளாவன நீக்கல், நிலைப்பித்தல், நுகர்வித்தல், அமைதியாக்கல், அப்பாலாக்கல் என்பனவாகும். பொருட்களை வனசரதம், செந்நீர், ஊன், கொழுப்பு, எலும்பு, மூளை, வெண்ணீர் என்பனவாகும்” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**2337. தெளிவு மிவையன்றித் தேரைங் கலைவேறு**
**ஒளியுள் அமைத்துள்ள தோரங் லார்கட்கு**
**அளியவ னாகிய மந்திரந் தந்திரந்**
**தெளிவுப தேச ஞானத்தொ டைந்தாமே.**

“சிவனடியார்களே, காலாந்தத்தைத் தெளிவதல்லாமல் இன்னொரு வகையால் குறிப்பதுண்டு. அந்தம் நீங்கல் முதலிய கலைகள் ஐந்தினையும் திருவருள் ஒளியுள் அமைத்தல் வேண்டும். அங்ஙனம் அமைத்த மெய்யுணர்வுடையவர்களுக்குச் சிவபெருமான் பேரருளைப் புரிவான். அவை மந்திரம், தந்திரம், தெளிவு, உபதேசம், ஞானம் என ஐந்தாகும்” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**2338. ஆகும் அனாதி கலையா கமவேதம்**

**ஆகுமத் தந்திர மந்நூல் வழிநிற்றல்**
**ஆகு மனாதி யுடல்லா மந்திரம்**
**ஆகுஞ் சிவபோ தகம்உப தேசமே.**

"சிவனடியார்களே, கலை என்ற திருவருளாற்றல் மிகவும் தொன்மை வாய்ந்ததாகும். இக்கலையை முறையும் மறையும் எனப்படும் ஆகம வேதங்களாகும். மறைவழியே நீங்காது ஒழுகுதல் தந்திரமாகும். மனம் முதலிய கருவிகள் நீங்கி உணர்வினால் கணிக்கப்படும் சிவசிவ என்ற மந்திரமாகும். சிவபெருமானைக் காணவைக்கும் சிவகுருவின் திருவார்த்தை உபதேசமாகும்" என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**2339. தேசார் சிவமாகுந் தன்ஞானத் தின்கலை**
**ஆசார நேய மறையுங் கலாந்தத்துப்**
**பேசா வுரையுணர் வற்ற பெருந்தகை**
**வாசா மகோசர மாநந்தி தானன்றே.**

"சிவனடியார்களே, ஞானக்கலையென்பது பேரொளிப் பகலவனான சிவபெருமானாகும். ஆன்றோரைப் பின்பற்றி வாழ்வது ஆசாரம். அவ் ஒழுக்கத்தில் நிலைத்து நிற்பது பேரன்பு என்ற நேயம். இவ்விரண்டும் சொல்லப்படும் காலாந்தமாகும். இவ் வழிவந்த பேச்சற்றநிலையிலுள்ளோன் பெருந்தகையாவன்" என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**2340. தானவ னாகுஞ் சமாதி தலைப்படில்**
**ஆன கலாந்தநா தாந்தயோ காந்தமும்**
**ஏனைய போதாந்தம் சித்தாந்த மானது**
**ஞான மெனஞேய ஞாதுரு வாகுமே.**

"சிவனடியார்களே, ஆருயிரானது பேருயிரான சிவபெருமானில் ஒடுங்குவது தான் அவனாகும் சமாதி நிலை ஆகும். இந்நிலையை ஏற்படுத்துவதே காலாந்தம், நரகாந்தம், யோகாந்தம், போதாந்தம், சித்தாந்தம் எனப்படுவது காட்சி, காணப்படும் பொருள், காண்போன் என்னும் முத்திற முடிபும் எத்திறமும் நீங்காது கொள்ளும் நிலைமைத்தாகும்" என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**2341. ஆறந்த முஞ்சென் றடங்குமந் நேயத்தே**
**ஆறந்த ஞேயம் அடங்கிடு ஞாதுரு**
**கூறிய ஞானக் குறியுடன் வீடவே**
**தேறிய மோனஞ் சிவானந்த வுண்மையே.**

‘‘சிவனடியார்களே, மேற்சொல்லப்பட்ட அறுவகை அந்தமும், நேயமும் ஆகிய பேரன்புப் பொருளான சிவபெருமான் கண் ஒதுங்கும் ஞாதுரு என்று சொல்லப்படும் காண்போனும், காண்டற்குரிய ஞானமாகிய அறிவும், சிவனது திருவடியில் ஒருங்கு சேர்ந்து ஒடுங்கும். ஒடுங்கியதும் முதன்மை உணர்வாகிய மோனம் கைகூடும். இதுவே சிவானந்தப் பேரின்பமாகும். நீரில் மூழ்குபவனுக்கு, கனவில் இருக்கும்போது அந்நீரைப் பற்றிய நினைப்பும் உணர்வும் ஏற்படுமளவிற்கு அவன் நீரில் மூழ்கும்போது ஏற்படுவதில்லை. மெய்யடியார்க்கும் சிவத்துடன் கலந்து நிற்கும்போது காட்சி காண்போன் முதலியன தோன்றாது அடங்கிவிடும்” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**2342. உண்மைக் கலையாறோ ரைந்தான் அடங்கிடும்**
**உண்மைக் கலாந்தம் இரண்டைந்தோ டேழுந்தம்**
**உண்மைக் கலையொன்றில் ஈறாய நாதாந்தத்து**
**உண்மைக் கலைசொல்ல வோரந்த மாகுமே.**

‘‘சிவனடியார்களே, மெய்க்கலைகள் பதினொன்றாகும். காலாந்தம் பதினேழாகும். இத் திருவருட் கலைகளைச் சிவனுக்கு அருளிச் செய்ய ஒப்பில் ஒரு கலை முடிபு ஆகும்” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**2343. ஆவுடை யாளை யரன்வந்து கொண்டபின்**
**தேவுடை யான்எங்கள் சீர்நந்தி தாடந்து**
**வீவற வேதாந்த சித்தாந்த மேன்மையைக்**
**கூவி யருளிய கோனைக் கருதுமே.**

‘‘சிவனடியார்களே, ஆருயிர்களை உடமைப் பொருளாகக் கொள்ளும்போது, அவ்வுயிர் அருளுயிராகும். இதனால் திருவருளம்மை ஆவுடையாள் எனப்படுவள். சிவபெருமானாகிய அரன் எழுந்தருளிவந்து ஆவுடையானைத் தன்னுள் அடக்கிக் கொள்வன். அவ்வாறு அடக்கிக் கொண்டபின் தேவர்களையும் உடமைப் பொருளாகச் சிவன் கொண்டருளுவன். அவன் எங்கள் சீர்நந்தியாவான். அதன்பின் சிவகுருவாக எழுந்தருளிவந்து, திருவடியைச் சூட்டியருளுவன். வேதாந்த, சித்தாந்தக் கருத்துக்களையும் விளக்கியருள்வான் என்று திருமூலர் கூறுகிறார்” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**2344. கருது மவர்தங் கருத்தினுக் கொப்ப**
**அரனுரை செய்தருள் ஆகமந் தன்னில்**
**வருசம யப்புற மாயைமா மாயை**
**உருவிய வேதாந்த சித்தாந்த வுண்மையே.**

“சிவனடியார்களே, சிவகுருவானவன் கருதுவார்க் கருத்திற்கு ஒவ்வுமாறு பாடசாலையில் கற்ப்பிப்பதுபோல படிப்படியாக முப்பொருள் உண்மையை விளக்கியருளுவான். அவ்விளக்கம் அதனுரை ஆகமம் என்ற பெயரைப் பெறும். அவ் ஆகமத்துள்க் கூறப்படும் சமய உண்மைகள் அகச் சமயம், அகப்புறச் சமயம், புறச் சயம், புறப்புறச் சமயம் என நான்காகும். பின் ஒவ்வொன்றும் அவ்வாறாக இருபத்து நான்காகவும் பெறப்படும். இவைகளெல்லாம் சமயப்புறம் என்றதனால் பெறப்பட்டன.இவை அனைத்தும் மாயை, மாமாயை என்னும் மாயா காரியப் பகுப்பாய்வினுள் அடங்கும். இம் முப்பத்தாறு மெய்களுக்கும் அப்பாற்பட்டது வேதாந்த சித்தாந்த மெய்மை” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**2345. வேதாந்தங் கேட்க விருப்பொடு முப்பதப்**
**போதாந்த மான பிரணவத் துள்புக்கு**
**நாதாந்த வேதாந்த போதாந்த நாதனை**
**[1]ஈதாம் எனாதுகண் டின்புறு வோர்களே.**

“சிவனடியார்களே, திருவருளின் துணையோடு வேதாந்தத்தை ஆராய்ந்தால் அது விருப்புடன் கேட்கத்தக்க மூன்று பதங்களை உடையது. உயிரிலும் சிறந்த பதங்கள் அகரம், உகரம், மகரம் ஆகும். இம் மூன்றும் முறையே அருவும், உருவும் மருவுமாகும். அருவால் சிவபெருமானும், உருவால் வனப்பாற்றலாகிய அம்மையும், ஆருயிர்களுக்கு உடலைப் படைத்தருளும் ஆதியும், மருவும் என்பதனால் பண்டுக்காலம் தொட்டும் தொடரும் மலமும், அம்மலத்தால் பிணிப்புண்ட ஆருயிர்களும் அப் பிணிப்பைப் கண்டு இரங்கி விடுவிக்கக் கூட்டாய வினை மாயைகளும் பெறப்படும். அகர உகர, மகரங்களும் ஓங்காரம் எனப்படும். இம் மூன்றும் அறிவு விளங்குவதற்குரிய ஓசைத் துணைக்கருவிகளாகும். இந்த அறிவின் முடிபாகிய பிரணவம் என்று சொல்லப்படும் ஓங்காரத்தினுள் புகுந்து நாதாந்தம் வேதாந்தம் போதாந்தங்களுக்கு முதல் வணங்கிய சிவபெருமானை இ∴து என்று சுட்டியறியப்படாது ஒட்டியறிந்து நித்த இன்பம் பெறுவார்கள்” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**2346. வேதாந்தஞ் சித்தாந்தம் வேறிலா முத்திரை**
**போதாந்த ஞானம் யோகாந்தம் பொதுஞேயம்**
**நாதாந்தம் ஆனந்தஞ் சீரோ தயமாகும்**
**மூதாந்த முத்திரை மோனத்து மூழ்கவே.**

“சிவனடியார்களே, வேதாந்த சித்தாந்த முப்பொருள் உண்மைகள் வேற்றுமை இல்லாத ஒற்றுமையுள்ள அடையாளக் குறிப்புக்களாகும். அருளின் முடிபே அருள் ஞானம். செறிவின் முடிவாகிய யோகாந்தம் பொதுவாக அறியப்படும்

பொருளாகிய ஞேயம் ஆகும். ஓசை முடிவாகிய நாதாந்தம் இன்பத்தைத் தந்தருளும் சீர்த் தோற்றமுமாகும். முடிந்த முடிவாகிய திருவடிப் பேருணர்வின் விண்முத்திரை மோனமாகிய மேன்மைத் திருவடி ஞானத்துள் மூழ்குதலாகும்'' என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**2347. வேதாந்தந் தன்னில் உபாதிமே லேழ்விட**
**நாதாந்த பாசம் விடுநல்ல தொம்பதம்**
**மீதாந்த காரணோ பாதியேழ் மெய்ப்பரன்**
**போதாந்த தற்பதம் போமசி என்பவே.**

''சிவனடியார்களே, வேதாந்தத்தில் உயிரின் நுகர்வுநிலை ஏழாகும். இவை ஏழும் விட்டகல் நாதாந்தமாகிய ஓசைப் பிணிப் பின் கண்ணுள்ள பற்றனும் நன்மை பயப்பதாகிய தொம்பதமாகும். தொம்பதம் என்பது ஆருயிரைக் குறிக்கும் நீ என்பதாகும். உபாதி நுகர்வு நிலை மீதார்ந்தமாகிய அப்பால் முடிவு. காரணோபாதியாகிய இறைநுகர்வுநிலை ஏழாகும். மெய்ப்பொருளான சிவன் அறிவின் முடிவான தற்பதம் ஆகும். ஆருயிரும் சிவனும் கூடும்நிலை அசி என்பதாகும். அசியென்றால் ஆகிறாய். அது சிவமாகிறாய் என்பதைக் குறிக்கும்" என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**2348. வேதாந்த ஞானம் விளங்க விதியிலோர்**
**நாதாந்த போதம் நணுகிய போக்கது**
**போதாந்த மாம்பரன் பாற்புகப் புக்கதால்**
**நாதாந்த முத்தியுஞ் சித்தியும் நண்ணுமே.**

''சிவனடியார்களே, செந்தமிழ் மறையினைத் திருவருள் துணையுடன் கற்று அதனால் எய்தும் திருவடி உணர்வு கைவரப் பெறாதவர்கள் வடமொழி வேதத்தை உண்மையான வேதமெனத் தப்பாக எண்ணி அழிவைத்தரும் வேள்விகளைச் செய்து, அவத்தவம் செய்கின்றனர். அவ்வேள்வி மிகவும் தாழ்வானது மட்டுமன்றிப் பயனும் தரவல்லன அல்ல. நாதத்தைத் தெய்வமாகக் கொள்வோர் நாதாந்த போதம் எய்துவர். அவர்கள் வழிப்பேறாகிய பதமுத்தி எய்துவர். அறிவுக்கறிவான சிவன் பேரறிவினன். அவனை வணங்குவோர்க்கு நாதமுத்தியும், சித்தியும் எளிதில் கிடைக்கும்" என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**2349. அண்டங்கள் ஏழுங் கடந்தகன் றப்பாலும்**
**உண்டென்ற பேரொளிக் குள்ளாம் [2]உளவொளி**
**பண்டுறு நின்ற பராசத்தி யென்னவே**
**கொண்டவ னன்றிநின் றான்எங்கள் கோவே.**

“சிவனடியார்களே, ஏழுவகையான அண்டங்களையும் கடந்து அதற்கப்பாலும் ஒளிர்ந்து கொண்டிருக்கும் பேரொளி திருச்சிற்றம்பலமாகும். இத் திருச்சிற்றம்பலம் பராசக்தி எனப்படும். அப்பராசக்தியான வனப்பாற்றலைத் திருமேனியாகக் கொண்டுள்ளவன் சிவபெருமான். அவன் எல்லாவற்றிலும் கலப்புத்தன்மையாய் விரவி நிற்கின்றான். எனினும் பொருட்தன்மையால் வேறுபட்டு நிற்கின்றான். அத்தகைய மெய்ப்பொருளே எமது தலைவன்” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**2350. கோவுணர்த் துஞ்சத்தி யாலே குறிவைத்துத்**
**தேவுணர்த் துங்கரு மஞ்செய்தி செய்யவே**
**பாவனைத் தும்படைத் தர்ச்சனை பாரிப்ப**
**ஒவனைத் துண்டொழி யாத ஒருவனே.**

“சிவனடியார்களே, சிவபெருமான் சிவகுருவாக எழுந்தருளிவந்து திருவருளாலேயே அனைத்தையம் உணர்த்தியருள்வன். அவன் உணர்த்திய குரு வழி நின்று அவனை வழிபடுதல் வேண்டும். அத்துடன் செந்தமிழ் மறையான திருமுறைகளைப்பாடிப் பணிதல் வேண்டும். சிவபெருமானின் கோவில் ஆருயிரின் கள்ளம் கபடமில்லாத வெள்ளை உள்ளமாகும். திருக்கோவிலும் அங்கு காணப்படும் குறிகளும் அடையாளங்களுமாகவுள்ள திருவுருவங்களும், பிறவும் சிவபெருமான் அன்பரின் உள்ளத்தில் எழுந்தருளி வரும் வாயில்களே” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**2351. ஒருவனை யுன்னார் உயிர்தனை யுன்னார்**
**இருவினை யுன்னார் இருமாயை யுன்னார்**
**ஒருவனு மேயுள் ளுணர்த்திநின் றூட்டி**
**அருவனு மாகிய ஆதரத் தானே.**

“சிவனடியார்களே, சிவபெருமானை உள்ளன்புடன் நாடாதவர்கள் ஆருயிரின் உண்மையினையும் நாடார். இது மணத்தைக் கொண்டு மலரை அறிந்து கொள்வதைப் போன்றது. மணத்தை அறியாதவர் மலரை எப்படி அறிவர். இது போன்றதுதான் சிவனை அறியாதவர் தன்னையும் அறிய மாட்டார் என்பதற்குச் சான்று. நல்வினையையும், தீவினையையும் அறியாதவர்கள் தூமாயையும், தூவாமாயையும் அறிய மாட்டார்கள். இவற்றைச் சிவபெருமானே உள்நின்று உணர்த்தியருளுகின்றான். அத்துடன் இருவினைப் பயன்களையும் அளித்தருளுகின்றான். அச்சிவன்தான் அனைத்தையும் தாங்கும் நிலைக்களனாவான்” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**2352. அரனன்பர் தானம தாகிச் சிவத்து**
**வருமவை சத்திகள் முன்னா வகுத்திட்டு**
**உரனுறு சந்நிதி சேட்டிப்ப என்றுந்**
**திரனுறு தோயாச் சிவாநந்தி யாமே.**

‘‘சிவனடியார்களே, முழுமுதற் கடவுளான அரன் தனது அன்பர்களின் தூய உள்ளத்தில் கோவில் கொண்டு எழுந்தருளியிருக்கின்றான். அவ்வரனின் ஆற்றல்கள், சக்திகள் என்று கூறப்படும். சக்தியான திருவருளாற்றால்தான் உலகை உருவாக்கும்.”

“சிவனடியார்களே, நாகலிங்கம் தினமும் ஆச்சிரமத்திற்கு வரத் தொடங்கினான். அவனுடனே சேர்ந்து நந்தகுமாரனும் வரத்தொடங்கினான். இருவரும் மிக அமைதியாக இருந்து ஆச்சிரம வேலைகளைச் செய்தனர். இருவரும் நல்ல பலசாலிகள். அதனால் ஆச்சிரமப் பூந்தோட்டத்தில் இருவரும் சேர்ந்து வேலை செய்தனர். இதுவரை இல்லாததுபோல பூந்தோட்டம் மிக்க அழகுடன் காணப்பட்டது. அத்துடன் இருவரும் மிகமிக அமைதியாகினர். நாகலிங்கத்தின் மகன் திருவரங்கன். அவன் ஆசிரியராகப் பணி செய்கிறான். நாகலிங்கம் குடித்துவிட்டு ஊரில் குழப்பம் செய்வதால் திருவரங்கனுக்கு அது அவமானமாக இருந்தது. அவன் ஒழுக்கமானவன். மாணவர்களுக்கு ஒழுக்கத்தைப் போதித்தால் நாகலிங்கத்தால் பாதிக்கப்பட்ட ஆசிரியர்கள் முதலில் உனது தந்தைக்குப் போதி. அவரது தொல்லை தாங்கமுடியவில்லை என்பார்கள். அதனால் அவன் வேறு ஊருக்கு இடமாற்றம் பெற்றுச் சென்றுவிட்டான். இப்போது நாகலிங்கம் திருந்தியதால் திருவரங்கன் மகிழ்ச்சியுடன் ஆச்சிரமத்திற்கு வந்து கதிரேசனைச் சந்தித்தபோது கதிரேசன் சொன்னார்; “மகனே அரனான சிவன் தனது அன்பர்களின் உள்ளங்களில் கோவில் கொண்டிருக்கின்றான் என்பதை அறிபவர்கள் திருந்திவிடுவார்கள். உனது தந்தை தனது உள்ளத்தில் சிவன் இருப்பதை உணர்ந்து விட்டான். யாவும் வினைப்படி நடக்கும். இது உனக்குத் தெரியும். அதனால் இனியும் அவனை வெறுக்காதே என்றவர்” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**2353. வேதாந்த தொம்பத மேவும் பசுவென்ப**
**நாதாந்த பாசம் விடநின்ற நன்பதி**
**போதாந்த தற்பதம் போயிரண் டயிக்கியஞ்**
**சாதா ரணஞ்சிவ சாயுச்சிய மாமே.**

‘‘சிவனடியார்களே, வேதாந்தம் வாயிலாக முப்பொருளுண்மை நாட்டல், தத்துவமசி என்னும் மறையினால் ஆம் இவை தத் துவம் அசி எனப் பிரிந்து மூன்று சொற்களாக விளங்கும். மூன்றுள் தொம்பதம் நீ என்ற பெயருடன் ஆருயிரைக் குறிக்கும். மகனே, நாத முடிவாகிய பாசம் ஆருயிர்களைப் பற்றி நிற்கும். அப்பாசம் அகல சிவனின் அறிவு தோன்றும். அதனால் சிவனில் உண்டான பற்றுப் படிப்படியாக அதிகரிக்கும். இதனால் வேறு நினைப்புக்கள் வராது. அதனால்தான் உனது தந்தை குடிப்பதை நிறுத்தினார். இப்போதுதான் மிகவும் மகிழ்வாக இருப்பதாக எனக்குக் கூறுகிறார். இதற்கு முன் அவர் சிவனை உணராமைக்குக் காரணம் மலமாகும். அதனால்தான் தான் தான் பெரியவன், தைரியசாலி என்ற நிலை உருவாகியது. அதுதான் அவரை ஆட்டிப்படைத்தது. இப்போது சிவனருளால் அவர் திருந்திச் சிவனை

நினைக்க ஆரம்பித்து விட்டார். சிவநினைவு வந்தால் மற்றவர்களை மதிக்க வேண்டும் என்ற எண்ணம் மனதில் எழும். இதனால் ஆணவம் படிப்படியாக அகலும். அம்மலத்தைத் திருவருள் போக்கியருளும். அத்திருவருள் ஆசிரியர் ஒருவர் கற்பிப்பதைப்போன்று ஆருயிரைக் கொண்டே மலத்தை அகற்றுவிக்கும். அதனால் முப்பொருள் உண்மையும், அப்பொருள் கூட்டமும், திடமான நம்பிக்கையும் உண்டாகும். இதனால் சிவநெருக்கம் உண்டாகும். இப்போது உனது தந்தை சிவனை உணர்ந்து கொண்டதால் தவறு செய்ய மாட்டார் என்றவர்" என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**2354. சிவமாதல் வேதாந்த சித்தாந்த மாகும்**
**அவமவ மாகு மவ்வவ் விரண்டுஞ்**
**சிவமாஞ் சதாசிவன் செய்தொன்றா னானால்**
**நவமான சேதாந்த ஞானசித் தாந்தமே.**

"சிவனடியார்களே, கதிரேசன் திருவரங்கனுக்குச் சொன்னார்; "மகனே உனது தந்தையைப் பற்றி இனிக் கவலைப்படாதே, நிம்மதியாகத் தொழிலைச் செய். விருப்பமானால் இடமாற்றம் பெற்றுவா. வேதாந்தம், சித்தாந்தம் ஆகிய இருபெரும் திருநெறிகளும், சிவன் கொடுக்கும் பேரின்ப வாழ்வை ஆருயிர்களுக்கு வழங்குவனவாகும். ஏனைய நாதாந்தம், போதாந்தம், யோகாந்தம், காலாந்தம் என்று சொல்லப்படும். நான்கும் சிறப்பானவை அல்ல. அதனால் வேதாந்தத்தையும் சித்தாந்தத்தையும் விடுத்து ஏனைய நான்கு அந்தங்களும் பெரும் பயனைத் தருவன அல்ல. அதனால் அவற்றை அவம் என்று சொல்கின்றனர். நீ அந்த ஊரிலுள்ள பிரமுகர்கள் பின்பற்றும் நாதாந்தம், போதாந்தம், யோகாந்தம், காலாந்தம் என்னும் நெறிகளைப் பின்பற்றி மாணவர்களுக்கு உபதேசிப்பதாக அறிந்தேன். அவை மாயமான் போன்றவை. கண்ணுக்குத் தெரியாது. ஆனால் மனதை மாற்றித் தன்வசப்படுத்தி ஆட்டிப்படைக்கும். அதனால் மேலான சித்தாந்த நெறியைப் பின்பற்று என்றவர்" என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**2355. சித்தாந்தத் தேசீவன் முத்திசித் சித்தலாற்**
**சித்தாந்தத் தேநிற்போர் முத்திசித் தித்தவர்**
**சித்தாந்த வேதாந்தஞ் செம்பொரு ளாதலாற்**
**சித்தாந்த வேதாந்தங் காட்டுஞ் [1]சிவனையே.**

"சிவனடியார்களே, கதிரேசன் தொடர்ந்து சொன்னார்; "மகனே பிரமுகர்கள் நல்லதைத் தீயதை ஆராயாது வேறு பிரமுகர்கள் கண்மூடித்தனமாகப் பின்பற்றும் நெறிகளைப் பின்பற்றுவர். அவர்களைத் திருப்திப்படுத்த அல்லது அவர்களிடம் உதவிபெற ஊரவரும் விளக்கமின்றிப் பின்பற்றுவர். நீ ஆசிரியன், எல்லாம் கற்றவன் ஊரிலிருக்கும்போது ஆச்சிரமத்திற்கு வந்து சிவனை ஆராதித்தவன். அப்படியிருக்க ஏன்

மனம் மாறினாய்? சித்தாக்கத்தை முழுமனதுடன் பின்பற்றுவோருக்குச் சீவன் முத்தியாகிய பிணிமையின்மை கைகூடும். அதனால் திருவடிப்பேறும் கைகூடும். திருவடிப்பேறு கைகூடினால் அவர்கள் முத்திச் சித்தராவார். அதனால் வேதாந்த சித்தாந்தப்பிறப்பு என்ற பேதமையம் நீங்கும். அதனால் செம்பொருளான சிவனை அடையும்நிலை உண்டாகும். இவற்றையெல்லாம் தெரிந்த நீ எவ்வாறு படுகுழியில் விழுந்தாய். எனக்கு ஆச்சரியமாக இருக்கிறது. ஊரில் இருக்கும்போது சிவனைத் தவிர வேறு தெய்வம் வேறில்லையென்று பிரசங்கம் செய்த நீயா இவ்வாறு மாறினாய்? எனக்கு ஆச்சரியமாகவும், கவலையாகவும் இருக்கிறது என்றார்" என்றவர் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**2356. சிவனைப் பரமனுட் சீவனுட் காட்டும்**
**அவமற்ற வேதாந்த சித்தாந்த மானான்**
**நவமுற் றவத்தையில் ஞானஞ் சிவமாந்**
**தவமிக் குணர்ந்தவர் தத்துவத் தாரே.**

"சிவனடியார்களே, சிவபெருமானைப் பரமன் என்று சொல்லுவார்கள். புற அம்பலங்களில் சீவன் என்றும் சொல்வார்கள். ஆருயிர்களின் நெஞ்சமான திருச்சிற்றம்பலத்தின் கண்ணே வேதாந்த சித்தாந்த நெறிகளைக் காட்டியருளுபவன். அந்நெறியைப் பின்பற்றி வாழ்வோர் நவமுற்ற அவத்தையாகிய அப்பால் நிலையில் இயற்கை உணாவும், முற்றுணர்வும் இயல்பாகவே அமைந்த சிவபெருமானின் திருவடியுணர்வு உண்டாகும். இத்தகைய நற்றவத்தை அருளால் உணர்ந்தவர்கள் திருவடி மெய்யுணர்வு பெற்றவராவர்."

"சிவனடியார்களே, கதிரேசன் சொன்னார்; "திருவரங்கா, முன்பு நீ சிவனைப் போற்றினாய் அதனால் வேதாந்த சித்தாந்த தத்துவங்களை மெய்யன்று நம்பினாய். எனது நெஞ்சமாகிய திருச்சிற்றம்பலத்தின்கண் பரமனான சிவன் வேதாந்த சித்தாந்த உண்மையைக் காட்டியருள்பவன் என்றும் சொன்னாய். இயற்கை உணர்வும் முற்றுணர்வுமுடைய சிவபெருமானின் திருவடியுணர்வு ஏற்பட்டுவிட்டதென்றும் சொன்னாய். அப்படியிருக்க இப்படி ஏன் மாறினாய்? அதனால் என்ன பயனைக் கண்டாய். என்று சொல் என்று கேட்டவர்" என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**2357. தத்துவ மாகுஞ் சகள வகளங்கள்**
**தத்துவ மாம்விந்து நாதஞ் சதாவிவந்**
**தத்துவ மாகுஞ் சீவன்றன் தற்பரந்**
**தத்துவ மாஞ்சிவ சாயுச் சியமாமே.**

‘‘சிவனடியார்களே, கதிரேசன் சொன்னார்; “மகனே சிவபெருமானின் திருவடி மெய்மை உணர்வையும், நினைவையும் உண்டாக்குவது சிவனின் திருவுருவாகும். எழுத்தின் வரிவடிவம் ஒலி வடிவத்தினையும், ஒலி வடிவம் பொருள் வடிவத்தையும் உணர்த்தும் தன்மை இதற்கு ஒப்பானதாகும். அதனால் அதனைச் சகளம் என்றனர். ஒலி, ஒளி, அருளோன் முதலிய நிலைகளும் தத்துவமாகும். ஆருயிரும் பேருயிருமாகிய ஆவியும் சிவனும் தத்துவமாகும். சிவத்துடன் ஆருயிர் ஒன்றியிருப்பது சிவசாயுச்சியமாகும். இவற்றை நம்பிச் சிவனைத் தொழுபவர் மகாதேவன். அதேபோல அவரது மகளும் சிவனின் திருவுருவைத் தொழுது மெய்யுணர்வு பெற்றவர்கள். அவ்வாறிருக்க நீ வடமொழி வேதத்தை உண்மையான வேதம் என்று சொல்வோரோடு சேர்ந்து திரிகின்றாய். வேள்வி முதலியவற்றில் நம்பிக்கை கொண்டுள்ளாய். முன்பு நீ உமையவளைக் காதலித்ததை அவளது தந்தையான மகாதேவன் விரும்பவில்லை. அதற்குக் காரணம் உனது தந்தை சிவ நிந்தனை செய்தது. இப்போ உனது தந்தை சிவபக்தனாகி ஆச்சிரமத்தில் தொண்டு செய்வதால் உனது தந்தையை அவர் சிவனடியானாக ஏற்றார். இப்போ இதை அறிந்தால் சம்மதிக்கமாட்டார். அத்துடன் உமையவளும் விரும்பமாட்டாள் என்றவர்” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**2358. வேதமோ டாகமம் மெய்யாம் இறைவன்நூல்**
**ஓதும் பொதுவுஞ் சிறப்புமென் றுள்ளன**
**நாதன் உரையவை நாடில் இரண்டந்தம்**
**பேதம தென்பர் பெரியோர்க் கபேதமே.**

‘‘சிவனடியார்களே, உமையவள் பெரும் சிவபக்தை. பொறியியலாளராகத் தொழில் செய்தாலும், சிவனைத் தினமும் செந்தமிழ் மந்திரம் சொல்லி வணங்குபவள். அவள் ஆச்சிரமத்துச் சிறுவர்களுக்குப் பாடம் கற்பிப்பாள். அத்துடன் சபையில் பேசுபவள். அவள் சொன்னாள்; “சிவபெருமானது திருவுருதான் திருவடி மெய்மை உணர்வையும், நினைவையும் எழுப்புவது. வேதமும் ஆகமமும் சிவனின் உண்மையை உணர்த்தும் சாத்திர நூல்கள். அந்நூல் சிவனின் உள்நின்று உணர்த்த திருவருள்கை வந்த மெய்யடியார்களின் வாயினால் உரைத்தருளப்பட்ட உரை நூல்கள். அவை இரண்டும் பொதுநூலும், சிறப்புநூலும் ஆகும். பொதுநூல் என்பது அன்பியலை மிகுதியாகவும், அருளியலைத் தொகுதியாகவும் கூறுவது. சிறப்புநூல் என்பது அருளியலை மிகுதியாகவும், அன்பியலைத் தொகுதியாகவும் கூறுவது. இவற்றின் உதவியால்தான் சிவனது திருவடியை அடைய முடியும். இவற்றை உணராத சிலர் வெவ்வேறு கதைகளைக் கூறுவர். இவற்றை ஏற்காதார்கள், சிவனையும் ஏற்காதவர். என்று உணர்ச்சி வசப்பட்டுப் பேசியவர். அதனால் அவர் இதை அறிந்தால் உன்னை

ஏற்கமாட்டார் என்று நான் திருவரங்கனுக்குக் கூறியபோது அவனது முகம் விகாரமடைந்ததைக் கண்டேன்” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**2359. பரானந்தி மன்னுஞ் சிவானந்தம் எல்லாம்**
**பரானந்த மேன்மூன்றும் பாழுறா னந்தம்**
**விராமுத்தி ரானந்த மெய்ந்நட னானந்தம்**
**பொராநின்ற வுள்ளமே பூரிப்பி யாமே.**

“சிவனடியார்களே, மெய்யுணர்வைப் பெற்ற சிறப்புயிரை ஆவி பரானந்தி என்று சொல்வர். பரானந்தியின் அருளால் பல்வேறுபட்ட சிவ இன்பங்களை அனுபவிக்கலாம். ஆருயிர் உறக்கம், அருள் நிலை உறக்கம், சிவநிலை உறக்கம் என மூன்றைப் பெறும். மாயையால் வரும் இன்பம் முத்திரைகள் பலவற்றாலும் முற்றும் பல்வகை இன்பம் மெய்ப்பொருட் கூத்தாகும். ஐந்தொழிலமை நடன இன்பம், இவற்றைப் பொருந்திய உள்ளமே பூரிப்புடையதாகும். அதனால் அவ்வுள்ளத்தைப் பூரிப்பி என்றவர்” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**2360. ஆகுங் கலாந்தம் இரண்டந்த நாதாந்தம்**
**ஆகும் பொழுதிற் கலையைந்தா மாதலில்**
**ஆகும் அரனேபஞ் சாந்தக னாமென்ன**
**ஆகு மறையா கமமொழிந் தானன்றே.**

“சிவனடியார்களே, காலாந்தம் இரண்டாகும். அவை நாதாந்தம், கலையந்தம் என அழைக்கப்படும். கலையந்தம் நீக்கலாகிய நிவர்த்தி முதல் ஐந்தாகும். இவ்வைந்திற்கும் அரனே முழுமுதல்வனாவான். அதனால் அரனே பஞ்சாந்தகனா மென்ன அருளினர். இங்ஙனமே மறையாகமம் முறையாக மொழியப்பட்டதாகும்” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**2361. அன்றாகு மென்னாதை வகையந்தத் தன்னை**
**ஓன்றான வேதாந்த சித்தாந்தம் உள்ளிட்டு**
**நின்றா லியோகாந்த நேர்படு நேர்பட்டான்**
**மன்றாடி பாத மருவலு மாகுமே.**

“சிவனடியார்களே, ஐவகையான முடிவும் அந்தங்களும் மாறுபட்டதன்று. இவ் உண்மையினை வேதாந்த சித்தாந்தம் ஒன்றென்று விளங்கக் கூறுவர். அத்தகைய வேதாந்த சித்தாந்தத்தை முன்னிட்டு வாழ்ந்தால் யோகாந்தம் கைகூடும். அந்நிலை ஏற்பட்டால் திருவடிப் பேறு உண்டாகும்” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**2362. அனாதி சீவனைம் மலமற்றப் பாலாய்**

**அனாதி யடக்கித் தனைக்கண் டரனாய்த்**
**தனாதி மலங்கெடத் தத்துவா தீதம்**
**வினாவுநீர் பாலாதல் வேதாந்த வுண்மையே.**

“சிவனடியார்களே, தொன்மையான ஆருயிருக்குத் திருவருளின் துணையால் ஆணவம், கன்மம், மாயை, மாயையாக்கம், நடப்பாற்றல் ஆகிய ஐம்மலங்களும் அறும். அவை அறுந்தவிடத்து அப்பால் நிலை ஏற்படும். அப்பால் நிலையான துரிதநிலை எய்தினால் ஆணவப்பசை அடங்கும். அடங்கியதும் ஆருயிர் தன்னையும், அரனையும் காணும்நிலை ஏற்படும். அந்நிலை வந்ததும், கிடைச்சேர் மலங்களாகக் கன்மம் மாயைகள் எளிதில் நீங்கும். அவை நீங்கியதும் அருஞ்சைவர் தத்துவங்கள் முப்பத்தாறிற்கும், அப்பால் அருளில் நிற்கும். நீர் பாலுடன் கலந்தபோது நீரின் தன்மை நீங்கிப் பாலின் தன்மை அடைவது போல என விளக்குவது வேதாந்த மெய்மையாகும். அந்நிலையில் ஆருயிர் மலம் நீங்கும் சிவனாரின் எண்குணங்களையும் பெற்றுச் சிவனாகத்திகழும்” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

2363. **உயிரைப் பரனை யுயர்சிவன் தன்னை**
**அயர்வற் றறிதொந் தத்தசி யதனாற்**
**செயலற் றறிவாகி யுஞ்சென் றடங்கி**
**அயர்வற்ற வேதாந்த சித்தாந்த மாமே.**

“சிவனடியார்களே, ஆருயிரைப் பரனாகிய திருவருளின் துணையால் திருவருளால் செறிந்து காண்பாயாக. நீ அதுவாகிறாய் என்று கூறும் தொத்தத்தசிப் பெருங்கிளவியால் உன் செயலற்று அறிவாகி இருப்பாயாக. அறிவாகியும் திருவடியின்கீழ் அடங்கி நிற்பாயாக. இந்நிலையே மருளற்ற வேதாந்த சித்தாந்த அருள் மாண்பாகும். இவ்வுண்மை வரும் செந்தமிழ் மறை முடிபாம் திருவாசகத் தேனால் உணரலாம்.” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

2364. **மன்னிய சோகமா மாமறை யாளர்தஞ்**
**சென்னிய தான சிவோகமாம் ஈதென்ன**
**அன்னது சித்தாந்த மாமறை யாய்பொருள்**
**துன்னிய ஆகம நூலெனத் தோன்றுமே.**

“சிவனடியார்களே, நிலைபெற்ற அதுதான் என்றும், ஆழ்ந்த நிலையினால் அவனே தானாகி நிற்கும்நிலை சோகம் எனக் கூறப்படும். இந்நிலை மாமறையாளர்களுக்கு ஏற்படுவதாகும். அம்மறையாளர் முடியணியாய்த் திகழும் அருண்மறை சிலோகம் எனப்படும். சிலோகம் என்பது சிவனுடன் கூடிய நிலை. இது

சித்தாந்த மாமறையால் ஆராயப்படும் பெரும் பொருளாகும். இப்பொருளை ஆராயும் பெருநூல் ஆகமமாகும்.” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**2365. முதலாகும் வேத முழுதா கமமப்**
**பதியான ஈசன் பகர்ந்த திரண்டும்**
**முதிதான வேத முறைமுறை யாலமர்ந்து**
**அதிகாதி வேதாந்த சித்தாந்த மாமே.**

“சிவனடியார்களே, முதலாம் நூலாகிய வேதங்களும், முழுமுதல் நூல்களாகிய ஆகமங்களும் நல்லடியின் வாயிலாக முதல்வனாம் சிவபெருமானால் அருளிச் செய்யப்பட்டவை. இவ் இரண்டினுள் முதன்மையான வேதம் முறை முறையாக அமைந்த வேதாந்தமாகும். ஆகமம் தலைசிறந்த சித்தாந்தமாகும்.” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

## 6. பதி பசு பாசம் வேறன்மை

**2366. அறிவறி வென்ற அறிவு மனாதி**
**அறிவுக் கறிவாம் பதியும் அனாதி**
**அறிவினைக் கட்டிய பாசம் அனாதி**
**அறிவு பதியிற் பிறப்பறுந் தானே.**

“சிவனடியார்களே, ஆருயிரான ஆன்மாவை அறிவென்றும், பேருயிரான பரமான்மாவை அறிவுக்கு அறிவு என்றும் சொல்வர். இவ்விரண்டும் மிகத் தொன்மையானவை. ஆருயிரும் பேருயிரும் தொன்மையானவை. அறிவை விளங்கவிடாது ஆருயிருடன் ஒட்டியிருக்கும் பாசமும் தொன்மையானது. அறிவாகிய ஆருயிருக்குப் பாசநீக்கத்தின் பொருட்டு அருளால் பிறப்பு உண்டாகும். அறிவுக்கறிவான பதி அறிவான ஆருயிரில் பதியும்போது பிறப்பு அறும்.”

“சிவனடியார்களே, கதிரேசன் திருவரங்கனுக்குச் சொன்னார்; “ஆருயிர் அறிவுடையது. சிவன் அறிவுக்கறிவானவன். ஆருயிர் படைக்கப்பட்ட காலத்திலிருந்து மலங்களால் பீடிக்கப்பட்டது. அதை அறிந்த பேருயிரானால் சிவன் அவ் ஆருயிர் உய்யும்பொருட்டு மனித உடம்பைக் கொடுக்கிறான். அறிவுள்ள ஆருயிர் தான் பிறந்த நோக்கத்தை உணர்ந்து சிவனை வழிபட்டு ஒழுக்கமாக வாழ்ந்து சிவனது திருவடியை அடைந்து பேரின்பம் பெற வேண்டும் என்பதே சிவனது விருப்பமாகும். இயல்பாகவே அறிவுடைய ஆருயிர்க்கு இது தெரிந்தும் ஆசைகளால் பீடிக்கப்பட்டுக் கெட்டழிகிறது. ஆசிரியரான நீ இது தெரியாது மீண்டும் மீண்டும் பாவத்தையே செய்கிறாய். உனது

நிலையை இனியாவது உணர்ந்து திருவடியை அடையப்பார். அறிவுள்ள நீ அறியாமையால் மிகவும் குழம்பியுள்ளாய். அதனால்தான் கெட்டவர்களின் சகவாசம் ஏற்கப்பட்டது. அதை உணர்ந்தால் திருந்தி விடுவாய் என்றவர்" என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**2367. பசுப்பல கோடி பிரமன் முதலாய்ப்**
**பசுக்களைக் கட்டிய பாசமூன் றுண்டு**
**பசுத்தன்மை நீக்கியப் பாசம் அறுத்தாற்**
**பசுக்கள் தலைவனைப் பற்றி விடாவே.**

''சிவனடியார்களே, கதிரேசன் சொன்னார்; "மகனே, பாசத்தால் கட்டுண்ட உயிரைப் பசு என்பர். நீர் நிலைகளில் நீரின்மேல் பாசி என்னும் தாவரம் படர்ந்து நிற்கும். இதுபோல் உள்ளத்தில் அழுக்குப்படர்ந்திருந்தால் அதைப் பாசம் என்பர். இது ஆருயிரின் விருப்பு வெறுப்பையும், ஆற்றலையும் மறைத்து நிற்கும். அதனால் அதை ஆணவப் பாசம் எனப்படும். அப் பாசத்தால் பிணிக்கப்பட்ட உயிர் பசு எனப்படும். பிரமன் முதலாகப் படைக்கப்பட்ட உயிர்கள் அனைத்தும் இந்த வகையைச் சேர்ந்தவையே. இத்தகைய பசுக்களைக் கட்டிய பாசங்களும் மூன்றாகும். அவை ஆணவம், கன்மம், மாயை என்பன. திருவருளால் பாசம் நீங்கினால் மும்மலங்களும் அற்றுப்போம். அம்மலங்கள் நீங்கினால் ஆருயிர் சிவனோடு சேரும் என்று உனக்குத் தெரியும். இந்த ஊரில் வாழும்போது அதை ஏற்று வாழ்ந்துள்ளாய். திடீரென்று உனது மனத்தைத் தீயவர்கள் கெடுத்துவிட்டார்கள். வேதங்களையும், ஆகமங்களையும் ஏற்காதவர்கள் சிவநிந்தனை செய்பவராவார். உனது இதயத்தை அழுக்குச் சூழ்ந்துவிட்டது. அதை உடனே அகற்றாவிட்டால் பெரும் துன்பப்படுவாய். நேற்று மகாதேவன் வந்து உன்னை விசாரித்தவர். நான் எதுவும் சொல்லவில்லை. சொல்லியிருந்தால் உன்னை வெறுத்திருப்பார் என்றவர்." என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**2368. கிடக்கின்ற வாறே கிளர்பயன் மூன்று**
**நடக்கின்ற ஞானத்தை நாடோறு நோக்கித்**
**தொடக்கொன்றும் இன்றித் தொழுமின் தொழுதாற்**
**குடக்குன்றி லிட்ட விளக்கது வாமே.**

''சிவனடியார்களே, கதிரேசன் சொன்னார்; "எதையும் நான் உனக்குச் சொல்லத் தேவையில்லை. ஆருயிர்கள் பாசப்பிணிப்பில் இருந்து விடுபட மூன்று பொருட்களைக் கைக்கொள்ளுதல் வேண்டும். அவை இன்பமும், பொருளும், அறமுமாகும். இம்மூன்று வழிகளையும் கைக்கொண்டு வாழ்வோர் திருவடியை அடைய வேண்டிய நன்னெறியில் வாழ்வர். சிவத்தின் பயனாக நோன்பும், நோன்பின் பயனாகச்

செறிவும் கைகூடும். இம் மூன்று வழியைப் பின்பற்றி வாழ்பவருக்கு அறிவு கைகூடும். அறிவு கைகூடினால் திருவடியுணர்வு உண்டாகும். அதைத் தொடர்ந்து கடைப்பிடித்தால் தொடக்கமாகிய பாசப்பிணிப்பு அறும். இவையாவும் உனக்குத் தெரியும். தெரிந்தும் கண்களைத் திறந்து கொண்டே படுகுழியில் விழுந்துள்ளாய். இவை தெரியாதவன் பொருளையும், புகழையும் விரும்பிச் சைவத்தை அவமதிக்கும் சமயங்களில் சேரலாம். தெரிந்தவன் சேரலாமா….? உனக்கு ஏன் பணம்…. மகாதேவனிடம் இல்லாத பணமா? என்று கேட்டவர்" என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**2369. பாசஞ்செய் தானைப் படர்சடை நந்தியை**
**நேசஞ்செய் தாங்கே நினைப்பர் நினைத்தலுங்**
**கூசஞ்செய் துன்னிய குறிக்கொள்வ தெவ்வண்ணம்**
**வாசஞ்செய் பாசத்துள் வைக்கின்ற வாறே.**

"சிவனடியார்களே, ஆணவமலத்தை அகற்றுவதற்காகச் சிவபெருமானையும், நந்தியையும் உள்ளன்புடன் வணங்குங்கள். மருத்துவன் நோயாளியின் நோயைக் குணப்படுத்துவது போலச் சிவபெருமான் உங்களைப் பற்றிப் பிடித்துள்ள மலங்களை அகற்றுவார். ஆசிரியன் தன்னிடம் கற்கவரும் மாணவனைக் கல்லாதவன் என்று கூறமுடியாதவாறும், பின் அவன் கற்றுத் தேறியபின் அவனை நிலைநிறுத்த முடியாதவாறும் ஒப்பாகும். திருவரங்கா இது உனக்குத் தெரியும். உன்னை நினைத்துக் கதிரேசனும் நானும் மிக்க துயரடைந்துள்ளோம். உனது நிலை மாறவேண்டும். அதற்காகச் சிவனையும், நந்தியெம்பெருமானையும் முழுமனத்துடன் வணங்கு. யாவும் சரியாகிவிடும் என்று கதிரேசனோடு இருந்த திருவரங்கனுக்குக் கூறினேன்." என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**2370. விட்ட விடமேறா வாறுபோல் வேறாகி**
**விட்ட பசுபாச மெய்கண்டோன் மேவுறான்**
**கட்டிய கேவலங் காணுஞ் சகலத்தைச்**
**சுட்டு நனவில் அதீதத்துள் தோன்றுமே.**

"சிவனடியார்களே, மெய்ப்பாவகனான மாந்திரீகனால் விடம் ஏறாது காக்கப்படுவதுபோல, திருவருளால் ஆருயிரைவிட்டு வேறாகிச் சென்ற மலங்கள் மீண்டும் ஆருயிருடன் சேராது தொன்மையிலேயே பிணித்த மலங்கள் மலத் தனிமையாகிய புலம்பு சகலமாகிய புணர்ப்பினை எய்துவிக்கும். நனவின்கண் அப்பால் நிலைக்கண்ணும் இப்புலம்பு நிலையாகிய தனிமை தோன்றும். அப்பால் நிலைத்தனிமை ஆணவத்துடன் பிணிப்பின்றி அருளுடன் பிணிப்பூன்றி அறிவு மறைப்புற்று நிற்கும்." என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**2371. நாடும் பதியுடன் நற்பசு பாசமும்**

**நீடுமா நித்தன் நிலையறி வாரில்லை**
**நீடிய நித்தம் பசுபாச நீக்கமும்**
**நாடிய சைவர்க்கு நந்தி யளித்ததே.**

"சிவனடியார்களே, பதி, பசு, பாசம் என்ற மூன்றும் பலவாக விரியும். முதன்மையான தலைவனான சிவபெருமானின் நிலையினை உள்ளவாறு யாரும் அறியமாட்டார்கள். தொன்றுதொட்டுத் தென்பட்டும் தென்படாதும் வருகின்ற முப்பொருள்களும் என்றும் ஒன்றுபோல நிலைப்பதாகிய பதியின் நிலையும், சாம்பியாகிய பசுவுக்கு நேர்ந்த பசு பாச நீக்கமும் திருவருளால் ஆராயத் தொடங்கிய சைவ மெய்யடியார்களுக்கு நந்தியாகிய சிவபெருமான் அவற்றை விளக்கி அருளவான்" என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**2372. ஆய பதிதான் அருட்சிவ லிங்கமாம்**
**ஆய பசுவும் அடலே றெனநிற்கும்**
**ஆய பலிபீட மாகுநாற் பாசமாம்**
**ஆய அரனிலை யாய்ந்துகொள் வார்கட்கே.**

"சிவனடியார்களே, கலப்பினால் எல்லாமாகவும், பொருள் தன்மையால் அல்லவுமாய் உள்ள பதியாகிய சிவபெருமான் அருளை வழங்கும் சிவலிங்கமாகும் என்றும் பொன்றாத சார்பினவாய் நிற்கும் சார்பியாகிய பசுவும் அருட் சிவக்கொழுந்தின் திருமுன் வலிமைமிக்க ஆண் ஏறுபோல அசைவின்றி நிற்கும். அவ் ஆண் ஏற்றின்பின் காணப்படும் பலிபீடம் ஆருயிர்களினின்றும், அருளால் விடுபட்ட யான் எனது என்றும் செருக்காகிய பசு பாசங்கள் தங்கி மங்கும் இடமாகும். திருவருளால் அரனாகிய திருக்கோவிலை ஆராய்வார்க்கு அருளால் இவ்வுண்மைகள் புலனாகும்." என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**2373. பதிபசு பாசம் பயில்வியா நித்தம்**
**பதிபசு பாசம் பகர்வோர்க் காறாக்கிப்**
**பதிபசு பாசத்தைப் பற்றற நீக்கும்**
**பதிபசு பாசம் பயில நிலாவே.**

"சிவனடியார்களே, பதி, பசு, பாசம் என்னும் முப்பொருட்களையும் நிலைவேறுபாட்டால் விரித்தும், தொழில் ஒற்றுமையால் தொகுத்தும் அருஞ்சைவர்கள் ஐம்பொருட்களாக வகுத்தனர். அவையே சிவயநம என்பதாகும். பதியாகிய சிகரத்தின் நிலைவேறுபாட்டால் வகரமும் நகரமும் என விரிந்து மூன்றாகின. மல கன்மாயைகளின் தொழில் பெரும்பான்மையும் மறைத்தலும், மறைத்தலுக்குத் துணைபுரிவதுமாகும். அதனால் அவை மூன்றையும் ஒன்றடக்கியகரமாகிய ஆருயிர் என்றும், சார்ந்து நின்றதே உயிர்நிலை என வழங்கும் இயல்புடையது. அதனால் வகர நகரங்கட்கு நடுவாய் ஒன்றாகின. விகரம் நற்றாயாகவும், நகரம் செவிலித்தாயாகவும் கொள்ளப்படுகிறது.

செவிலித்தாய்க்குப் பொருள் கூட்டும் பணியும், நற்றாய்க்கு அருள்கூட்டும் பணயும் இயல்பாக அமைந்துள்ளன. பதி, பசு, பாசம் மூன்றும் மீநிறைவு, வீழ்நிறைவு, மிடை நிறைவு என்ற முறையில் ஒன்றினுள் ஒன்று அடங்கி விளங்கும் இவற்றை முறையே வியாபகம், வியாப்பி, வியாத்தி என்பர். பதி மீநிறைவாகும். பசு வீழ் நிறைவாகும். பாசம் மிடைநிறைவாகும். இம் முப்பொருள் உண்மையை விளக்கும். திருவைந்தெழுத்தை தினமும் இடையறாது பொருட்குறிப்புடன் ஓதுதல் வேண்டும். அவ்வாறு செய்பவர்களுக்கு நன்னெறி நான்மையின் வழியினை அருளிச் செய்வாராய் வழியமைத்தனர். அந்நெறி நிற்பார்தம் பாசப் பற்றுக்கள் அறவே நீங்கும். திருவருள் கிட்டியபின் மலங்கள் எவையும் நில்லாது" என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**2374. பதியும் பசுவொடு பாசமும் மேலைக்**
**கதியும் பசுபாச நீக்கமுங் காட்டி**
**மதிதந்த வானந்த மாநந்தி காணுந்**
**துதிதந்து வைத்தனன் சுத்தசை வத்தே.**

"சிவனடியார்களே, பேருயிராகிய பதியும், ஆருயிராகிய பசுவும், அப்பசுவைப் பிணித்த பாசமும், திருவருளால் அப்பாசம் நீங்கியவிடத்துப் பெறும் திருவடிப் பேறாகிய பெரும்பேறும், அதன்பின் சிவபெருமான் சிவகுருவாக எழுந்தருளிவந்து, செய்யும் மலநீக்கமும் செய்து மெய்மை காட்டி அருள்வது சுத்தசைவத்தில் மட்டுமே நடைபெறுவதாகும். இதைத் தந்தருளுபவன் நந்தியாகிய சிவபெருமானாவான். அவனது திருவடியினைச் செந்தமிழ்த் திருமுறைகளை ஓதி வழிபட்டு உய்யும்படி சிவன் வைத்தருளியுள்ளான்." என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**2375. அறிந்தணு மூன்றுமே யாங்கணு மாகும்**
**அறிந்தணு மூன்றுமே யாங்கணு மாக**
**அறிந்த அனாதி வியாத்தனு மாவன்**
**அறிந்த பதிபடைக் பானங் கவற்றையே.**

"சிவனடியார்களே, அணுவாகிய ஆருயிர் மூவகைப்படும். இவை ஒருமலம், இருமலம், மும்மலப் பிணிப்பால் ஆனவை. இதை அறிந்தவன் சிவபெருமான். அதனால் அவன் ஆருயிர்களை மலப்பிணியில் இருந்து விடுவிக்கவே விரும்புவான். அதற்காக அதற்கு வேண்டிய உடல், கலன், உலகு, ஊண் முதலியவற்றை மாயாகாரியமாகப் படைத்தருளினான்" என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**2376. படைப்பாதி யாவது பரஞ்சிவஞ் சத்தி**
**இடைப்பால் உயிர்கட் கடைத்திவை தூங்கல்**
**படைப்பாதி சூக்கத்தை தற்பரஞ் செய்யப்**
**படைப்பாதி தூய மலமப் பரத்தே.**

“சிவனடியார்களே, அணுவாகிய ஆருயிர்களுக்கு உடல், கலன், உலகு, ஊண் முதலியவற்றைக் சிவபெருமான் படைத்தருளினான். அச்சிவன் வைப்பாற்றலாகிய மாயையில் இருந்து இவற்றைப் படைத்து உயிர்களுக்கு அளித்துக் காத்தருளுகின்றான். சக்தி வைப்பாற்றல், தூங்கல், நிகழ்தல், படைப்பு முதலான ஐந்தொழில்களும் மிகவும் நுண்மையானவை. அந்த நுண்தொழில்களைச் சிவபெருமான் செய்தருளுவதனால் ஆருயிர்கள் மலப்பிணியில் இருந்து விடுபடுகின்றன. அதனால் தூய்மை அடைகின்றன. அதனால் திருவடியை அடைகின்றன” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**2377. ஆகிய சூக்கத்தை யவ்விந்து நாதமும்**
**ஆகிய சத்தி சிவபர மேலைந்தால்**
**ஆகிய சூக்கத்தில் ஐங்கரு மஞ்செய்வோன்**
**ஆகிய தூயவீ சானனு மாகுமே.**

“சிவனடியார்களே, நுண்மையான ஐந்தொழில்களையும் விந்து, நாதம், சக்தி, சிவம், பரம் என்னும் மேல் ஐந்து நிலைகளாலும் செய்விப்பவன் ஈசனாவான்.” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**2378. மேவும் பரசிவ மேற்சத்தி நாதமும்**
**மேவும் பரவிந்து ஐம்முகன் வேறீசன்**
**மேவும் உருத்திரன் மால்வேதா மேதினி**
**ஆகும் படிபடைப் போனர னாகுமே.**

“சிவனடியார்களே, இவ்வைந்து தொழில்களையும் சிவபெருமான் அருவம் நான்கு, அருவுருவம் ஒன்று, உருவம் நான்கு ஆகிய ஒன்பது நிலைகளில் நின்று உள்முகமாகிய கருத்தால் செய்தருள்கிறான். அந்நிலைகள் முறையே பரசிவம், பராசக்தி, பரநாதம், பரவிந்து எனவும், ஐம்முகம் எனவும் ஈசன், உருத்திரன், மால், அயன் எனவும் கூறப்படுகிறது. மாயாகாரியமாகிய உலகினைப் படைத்தருளுபவன் அரனாகிய சிவபெருமானே” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**2379. படைப்பு மளிப்பும் பயிலிலைப் பாற்றுந்**
**துடைப்பு மறைப்புமுன் தோன்ற அருளுஞ்**
**சடத்தை விடுத்த அருளுஞ் சகலத்து**
**அடைத்த அனாதியை ஐந்தென லாமே.**

“சிவனடியார்களே, படைத்தல், காத்தல், அழித்தல், மறைதல் இவை நான்கும் இயல்பாகத் திருவருளால் சிவபெருமானிடத்தில் தோன்றின. அத் திருவருள் ஆருயிர்களின் மலப்பிணிப்பை நீக்கி, சிவப்பிணிப்பில் நிலைப்பித்து மகிழ்விக்கும்.

இப்பிணிப்பைத் தொன்மையில் இருந்து விடுவிப்பவன் சிவன். விடுவிப்பதற்காக ஆருயிர்களுக்கு புணர்ப்பு நிலையை முதலில் அருளுவான்" என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**2380. ஆறாறு குண்டலி தன்னின் அகத்திட்டு**
**வேறாகு மாயையின் முப்பான் மிகுத்திட்டங்கு**
**ஈறாங் கருவி யிவற்றால் வகுத்திட்டு**
**வேறாம் பதிபசு பாசம்வீ டாகுமே.**

"சிவனடியார்களே, குண்டலியாகிய மாயையில் இருந்து முப்பத்தாறு மெய்களும், திருவருளால் தோன்றி விரியும். இவை உணர்த்து மெய் ஐந்து, உணர்வு மெய் ஏழு, உடல் மெய் இருபத்து நான்கு என்பனவாகும். இவை முறையே தூமாயை, தூவா மாயை, பகுதி மாயை எனப்படும். ஆருயிர்களுக்கு வேண்டிய கருவிகளையும் இவற்றாலேயெ வகுத்தருளினான். பதி, பசு, பாசம் என்னும் முப்பொருள் உண்மையையும், தொடர்பினையும் அருளால் உணர்ந்தால் பாசத்திலிருந்து பசு வேறாகும். வேறானதும் பதியாகிய சிவபெருமானின் திருவடியை அடையும்" என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**2381. வீட்கும் பதிபசு பாசமும் மீதுற**
**ஆட்கும் இருவினை யாங்கவற் றாலுணர்ந்து**
**ஆட்கு நரக சுவர்க்கத்திற் றானிட்டு**
**நாட்குற நான்தங்கு நற்பாச நண்ணுமே.**

"சிவனடியார்களே, மலநீக்கத்தின் பொருட்டுப் பதியாகிய சிவம் பசுவாகிய உயிரைப் பாசத்தின்கண் விருப்பமுறச் செய்யும். அத்துடன் இருவினைகளையும் செய்ய வைக்கும். அதனால் ஏற்படும் இன்ப துன்பங்களை அனுபவிப்பதற்காக அவ்வுயிரை துரக்க நிரயங்களிலிட்டு ஆழச் செய்யும். இவ்வாறு பயனை அனுபவிக்கும். காலம் கழிந்தபின் பிறப்புக்கு ஏதுவாகிய நான் என்னும் முனைப்புத் தங்கும்படி நற்பாசமாகிய மறைப்பாற்றல் வந்து பொருந்தும்" என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**2382. நண்ணிய பாசத்தில் நானெனல் ஆணவம்**
**பண்ணிய மாயையில் ஊட்டற் பரிந்தனன்**
**கண்ணிய சேதனன் கண்வந்த பேரருள்**
**அண்ணல் அடிசேர் உபாயம தாகுமே.**

"சிவனடியார்களே, மாயாகாரிய உடம்புடன் கூடி நான் என்று முனைந்து நிற்றல் ஆணவத்தின் செயலாகும். ஆணவம் நீங்குதற்பொருட்டு மாயையின் கண்

செலுத்தி, இருவினைப் பயன்களையும் நடப்பாற்றல் ஊக்குவிக்கும். ஊட்டுவதன் மூலம் ஆணவம் அகலும். அகன்றதும் ஆருயிரின் மேல் வைத்த அன்பின் காரணமாக அவ்வுயிருக்குத் தலைவனான சிவபெருமானின் திருவடியை அடையவேண்டிய வழிவகைகளை அவ்வாற்றல் தோற்றுவித்தருளும். இதனை உபாயமதாகும் என்பர்.” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**2383. ஆகும் உபாயமே யன்றி யழுக்கற்று**
**மோக மறச்சுத்த னாதற்கு முலமே**
**ஆகு மறுவை யழுக்கேற்றி யேற்றல்போல்**
**ஆகுவ தெல்லாம் அருட்பாச மாகுமே.**

“சிவனடியார்களே, நடப்பாற்றல் ஆருயிருக்கு வினைமாயைகளைக் கூட்டும் வழிவகைகளைச் செய்வதோடு, ஆணவ அழுக்கை நீக்கித் தூயனாதற் பொருட்டும், கடும் பற்றாகிய மருள் நீங்குவதற்கும், தூயவனாவதற்கும் இதுவே மூலமாகும். அழுக்கான ஆடைகளைச் சாணி, உவர் போன்ற அழுக்குகளைச் சேர்த்துத் துவைத்து அழுக்குகளைப் போக்குவதை ஒக்கும். இவை அனைத்தும் நடப்பாற்றலால் நடைபெறுவன” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**2384. பாசம் பயிலுயிர் தானே பரமுதல்**
**பாசம் பயிலுயிர் தானே பசுவென்ப**
**பாசம் பயிலப் பதிபர மாதலாற்**
**பாசம் பயிலப் பதிபசு வாகுமே.**

“சிவனடியார்களே, பாசத்தில் சிக்கித் தவிக்கும் உயிர் ஒரு சுமையாகும். அதனால் உயிரைப் பசு என்று சொல்லப்படுகிறது. அது பாசத்தில் இருந்து விடுபட பதியுடன் சேருதல் வேண்டும். இதனால் பதியும் பசுவாகிறது. இது நோயாளிக்கு மருந்து கொடுக்கும் வைத்தியன் மருந்துடனும் நோயாளி தொடர்பு கொண்டிருப்பதைப் போன்றதாகும்” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**2385. அச்சத்தில் உத்தரங் கேட்ட அருந்தவர்**
**அத்தத்தில உத்தர மாகும் அருள்மேனி**
**அத்தத்தி னாலே யணையப் பிடித்தலும்**
**அத்தத்தில் தம்மை யடைந்துநின் றாரே.**

“சிவனடியார்களே, அருந்தவத்தினர் மறையைக் கற்றபோதும், அதன் பொருளை உணராமையால் அவர்கள் ஆலமர் கடவுளிடம் வந்தனர். அதனை அறிந்த ஆலமர் தன் கைவிரல்களால் மறையின் பொருளை விளக்கினார். அத்துடன்

சிவதீக்ஷையும் வழங்கினார். அப்போது அவர்கள் தம்மை ஆலமர் கடவுளிடம் ஒப்படைத்தனர். பெருவிரல் பதியாகும். ஆட்காட்டி விரல் பசுவாகும். நடுவிரல் கன்மமாகும். மோதிர விரல் மாயையாகும். சிறுவிரல் ஆணவமாகும்." என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

## 7. அடிதலை அறியும் நிலைகூறல்

**2386. காலுந் தலையும் அறியார் கலதிகள்**
**காலந்தச் சத்தி யருளென்பர் காரணம்**
**பாலொன்று ஞானமே பண்பார் தலையுயிர்**
**காலந்த ஞானத்தைக் காட்டவீ[1] டாகுமே.**

"சிவனடியார்களே, காலாகிய வழியையும், சிரசாகிய உண்மையையும் கற்காதவர்கள் அறிய மாட்டார்கள். அவர்கள் வீணர்களாவர். கால் என்பது திருவருள். அனைத்திற்கும் காரணமான சிவபெருமானே திருவடியுணர்வாகிய சிவஞானமாவான். அவன் எண்குணத்தவன். ஆருயிர்களுக்குத் திருவருளைக் காட்டித், திருவடியுணர்வைக் காட்டித் திருவடியைச் சேரவைப்பவன் அவன். சிரம் என்பதில் உள்ள சிகரமும் வழி என்பதில் உள்ள வகரமும் சிவ என்றாகும். அது சிவ என்றும் செந்தமிழ் மறையாகும். மேலும் பரையுயிரில் யான் எனது என்ற அடிகள் இரண்டும் முறையே வழியும் சிறப்பும் போலும் ஆகும். இவற்றை உணராதவர்கள் தலை, கால் தெரியாது தடுமாறுவார்கள்" என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**2387. தலையடி யாவ தறியார் காயத்தில்**
**தலையடி யுச்சியில் உள்ளது முலந்**
**தலையடி யான அறிவை யறிந்தோர்**
**தலையடி யாகவே தானிருந் தாரே.**

"சிவனடியார்களே, ஆருயிரின் உடம்பில் தலைமேலே உள்ளது. அடி என்பது வழியாக உள்ளது. இவ்வுண்மையை அருளால் அறிதல் வேண்டும். தலை அடி என்பது செந்தமிழ்ப் பொதுமறையாகும். இதை அறிந்தவர்கள் சிவமாக இருந்து இன்புறுவர்" என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**2388. நின்றான் நிலமுழு தண்டமும் மேலுற**
**அன்றாள் அசுரர் அமரரும் உய்ந்திடப்**
**பின்றான் உலகம் படைத்தவன் பேர்நந்தி**
**தன்றா ளிணையென் தலைமிசை யானதே.**

“சிவனடியார்களே, சிவபெருமான் நிலமும், அண்டமும், கீழும், மேலும் பொருந்தும் வண்ணம் பேரொளிப் பிழம்பாக நின்றருளியவன். அவ்வாறு நின்றருளியது அசுரரும் தேவர்களும் உய்யும் பொருட்டேயாம். அவனே உலகத்தைப் படைத்தருளியவன். அவனது திருப்பெயர் நந்தியாகும். அவனது திருவடி எனது தலையின் மீது அமர்ந்தது என்று திருமூலர் கூறுகிறார்” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**2389. சிந்தையி னுள்ளே எந்தை திருவடி**
**சிந்தையும் எந்தை திருவடிக் கீழது**
**எந்தையும் என்னை யறியகி லானாகில்**
**எந்தையை யானும் அறியகி லேனே.**

“சிவனடியார்களே, எனது சிந்தைக்குள் எனது தந்தையாகிய சிவபெருமானின் திருவடி உள்ளது. சிவபெருமான் விரும்பி எனது சிந்தைக்குள் தனது திருவடியைப் பதித்துள்ளான். அதனால் அவனை அறிந்து கொள்ளும் வாய்ப்பு எனக்குக் கிடைத்தது. இது ஆசிரியர் தனது மாணவனைத் தான் ஈன்ற பிள்ளை என்று நினைப்பதை ஒக்கும். மூத்தோரின் முறைவழி இளையோர் ஒழுகுவதை ஒக்கும்” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**2390. பன்னாத பாரொளிக் கப்புறத் தப்பால்**
**என்னா யகனார் இசைந்தங் கிருந்திடம்**
**உன்னா ஒளியு முரைசெய்யா மந்திரஞ்**
**சொன்னான் கழலிணை சூடிநின் றேனே.**

“சிவனடியார்களே, ஆறாதார அகநிலை ஒளிக்கு மேலாக விளங்குவது அருட்பெரும் அறிவுப் பெருவெளி. அங்கு நிறைந்திருப்பவன் சிவபெருமான். அவனது பேரொளியை அளக்கவும் முடியாது. அதுபோல அவனது திருப்பெயரின் மந்திரத்தை உரைத்தல் செய்யவும் முடியாது. உரைக்கும்போது அவனது பெயரான தமிழ் மந்திரம் மனத்துள்த் தோன்றும். உரைக்கும்போது செவிகளில் அம்மந்திரம் ஒலிக்கும். இவ்விரண்டையும் கடந்து விரவி நின்றருள்வது திருவருளாகும். அதை அவனருளால் உணர்வில் உணர்த்தி அருளுவான். அதனால் ஆருயிர் திருவடியைச் சூடிநிற்கும்” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**2391. பதியது தோற்றும் மதமது வைம்மின்**
**மதியது செய்து மலர்ப்பத மோதும்**
**நதிபொதி யுஞ்சடை நாரியோர் பாகன்**
**கதிசெயுங் காலங்கள் கண்டுகொ ளீரே.**

“சிவனடியார்களே, சிவனது திருவடி என்றும் மணியொழியாய்த் திகழ்ந்து ஒளிரும். அவ்வாறு ஒளிரும் செந்தாமரைப்பூப்போன்ற அழகிய திருவடியைத்தலையில் சூடுங்கள். அதை இடையறாது ஓதுங்கள். திருவருள் வெள்ளம் தங்கியிருக்கும் அவனது திருச்சடையையும், பெண் அமர்ந்திருக்கும் ஒரு பாகத்தையும் உடையவன் சிவபெருமான். அவனை வணங்க உகந்த காலங்கள் நான்காகும். அவை செவ்வொளிவானக் காலம், வெள்ளொளியான நண்பகல், செவ்வொளி திகழும் மாலையும், மையொளியான நள்ளிரவு வேளையும் ஆகும். இக் காலங்களே நற்காலங்களாகும். தொழுதற்குரிய திருமுறைத் திருப்பாட்டின் முதன் நினைப்புக்கள் வருமாறு. சிந்திப்பார், காலையே, படைக்கலாமா, வாழ்க என்னும் இன்பம் என்பனவாம். அவ்வாறு தொகுத்தால் சிவபெருமான், நிலையான அருளைப் புரிவன்” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**2392. தரித்துநின் றானடி தன்னிட நெஞ்சில்**
**தரித்துநின் றானம ராபதி நாதன்**
**கரித்துநின் றான்கரு தாதவர் சிந்தை**
**பரித்துநின் றானப் பரிபாகத் தானே.**

“சிவனடியார்களே, சிவபெருமானின் திருவடியை மாறாத நினைப்புடன் நினையுங்கள். அப்படி நினைப்பவர்களின் மனங்களில் அவன் நீங்காது தரித்து நின்றருளுவான். அவன் இயல்பாகவே எங்கும் தங்கியிருந்து அருள்பவன். அவன் அனைவர்க்கும் முதல்வன். தன்னை நினையாதவரையும் வெறுத்து ஒதுக்குபவன் அல்ல” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**2393. ஒன்றுண்டு தாமரை யொண்மலர் முன்றுள**
**தன்றாதை தாளும் இரண்டுள காயத்துள்**
**நன்றாகக் காய்ச்சிப் பதஞ்செய வல்லார்கட்கு**
**இன்றேசென் றீசனை யெய்தலு மாகுமே.**

“சிவனடியார்களே, தாமரையாகிய கழுகு முனை ஒன்றுண்டு. அதன் மேல் மிக்க அழகிய தாதுமிக்க மலர்கள் மூன்று உண்டு. அதற்குரிய தாள்கள் இரண்டு உண்டு. தாள் இரண்டு, இடப்பால் நரம்பு, வலப்பால் நரம்பு, மலர் மூன்று நரம்புங்கூடியமைந்த முடிச்சு உடம்பின் அகத்தே மூலக்கண்ணால் நன்றாக வெதுப்பியபோது உள்ளம் மெய்யுணர்வைப் பெறும். அப்படி ஏற்பட்டதும் சிவபெருமானின் திருவடியை அடையும் நிலை ஏற்படும்” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**2394. கால்கொண்டென் சென்னியிற் கட்டறக் கட்டற**
**மால்கொண்ட நெஞ்சின் மயக்கிற் றுயக்கறப்**

**பால்கொண்ட வென்னைப் பரன்கொளள நாடினான்**
**மேல்கொண்டென் செம்மை விளம்பவொண்[1] ணாதே.**

“சிவனடியார்களே, அடியேனின் முடியில் சிவபெருமான் தனது திருவடியைச் சூட்டியருளினான். சூட்டியது ஆணவத்தாலும், மாயாகாரியப் பொருட்களாலும் நெஞ்சில் ஏற்பட்ட மயக்கம் நீங்கத் திருவடி உணர்வாயைச் சிவஞானத்தைச் சிவபெருமான் அளித்தருளினான். அதனால் நீங்காத இன்பத் திருவடியின் மேல் நிலையைப் பெற்றேன். அதனின் கிடைத்த பேரின்பம் சொல்லி முடிக்க முடியாதது என்று திருமூலர் தனது அனுபவத்தைக் கூறுகிறார்” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

2395. **பெற்ற புதல்வர்போற் பேணிய நாற்றமுங்**
**குற்றமுங் கண்டு குணங்குறை செய்வோர்**
**பற்றைய வீச னுயிரது பான்மைக்குச்**
**செற்றமி லாச்செய்கைக் கெய்தின செய்யுமே.**

“சிவனடியார்களே, தாயும் தந்தையும் மிக்க மகிழ்வுடன் தங்கள் பிள்ளைளைப் பேணிப் பாதுகாத்து வளர்ப்பது போலச் சிவபெருமானும் தனது குழந்தைகளான ஆருயிர்களை அவ்வுயிர்களின் குற்றங்களைக் கண்டு அவற்றிற்கு ஏற்றவாறு அருள்கின்றனன். இவ்வாறு ஆருயிர்களுக்குச் செய்தருளுவது சிவபெருமானேயன்றி வேறுயாரும் இலர். அவன் பாகுபாடு காட்டாது செய்தருளுகின்றனன். அவனது செயற்பாடுகள் நடுவுநிலையானது” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

## 8. முக்குற்றங்கள்

2396. **மூன்றுள குற்ற முழுதும் நலிவன**
**மான்றிருள் தூங்கி மயங்கிக் கிடந்தன**
**மூன்றினை நீங்கினர் நீக்கினர் நீங்காதார்**
**மூன்றினுட் பட்டு முடிகின்ற வாறன்றே.**

“சிவனடியார்களே, ஆருயிர்களுக்கு மீண்டும் மீண்டும் பிறப்பாகிய துன்பங்களைத் தருவது மூன்று குற்றங்களாகும். அவை காமம், வெகுளி, மயக்கம் என்பன. இக்குற்றங்கள் பிறப்புக்கள் தோறும் தொடர்ந்து வந்து துன்பங்களைத் தரும். இவ் உயிர்கள் மருளால் மயங்கிக் கிடக்கும். அம் மருளான மாளை நீங்காததால் அவை ஆணவ வல்லிருளில் மூழ்கிக் கிடக்கின்றன. திருவருளால் இம்மூன்று குற்றங்களையும், நீக்கியவர் பிறப்பு இறப்புக்களில் இருந்து நீங்கியவராவார். அவர்களே திருவடி இன்பப் பெருவாழ்வைப் பெற்றவர்களாவார்கள்” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**2397. காமம் வெகுளி மயக்க மிவைகடிந்து**
**ஏமம் பிடித்திருந் தேனுக் கெறிமணி**
**ஓமெனும் ஓசையி னுள்ளே யுறைவதோர்**
**தூம மதனைத் தலைப்பட்ட வாறன்றே.**

“சிவனடியார்களே, காமம், வெகுள், மயக்கமாகிய முக்குற்றங்களையும் திருவருளால் அகற்றுதல் வேண்டும். அவை நீங்கினால் பேரின்பம் வந்து சேரும். அவ் இன்பத்தைப் பெற்றுள்ள அடியேனுக்கு ஓம் என்ற ஓசை எவ்வேளைகளிலும் கேட்கிறது. சிவஒளி தெரிகிறது. முக்குற்றங்களையும் அகற்றியவர்களுக்குத் திருவருள் வந்து சேரும். காமத்தால் மாயையும், வெகுளியால் வினையும், மயக்கத்தால் மலமும் வந்து சேரும்” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

## 9. முப்பதம்

**2398. தோன்றிய தொம்பதந் தற்பதஞ் சூழ்தர**
**ஏன்ற அசிபதம் இம்மூன்றோ டெய்தினோன்**
**ஆன்ற பராபர மாகும் பிறப்பற**
**ஏன்றனன் மாளச் சிவமா[1] யிருக்குமே.**

“சிவனடியார்களே, பிறந்து இறந்து துன்பப்படும் உயிரைத் தொம்பதம் என்பர். தொம்பதம் என்பதும் துவம் என்பதும் ஒன்றாகும். துவம் என்பது நீ என்பதைக் குறிக்கும். அந்த நீ யினை ஆருயிர் தத்பதமாகிய அது என்ற சிவபெருமானை அருளால் சென்றடைதல் வேண்டும். நீண்டகாலமாகத் தொடர்ந்து வரும் பிறப்பு நீங்குதற் பொருட்டு அப்பிறப்பினை மலச்சார்பால் துன்பப்பட்டுப் பின்பு சிவச்சார்பால் மலங்களை முற்றாக அகற்றிச் சிவமாக இருக்கும் நிலையை உருவாக்க வேண்டும்” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**2399. போதந் தனையுன்னிப் பூதாதி பேதமும்**
**ஓதுங் கருவிதொண் ணூறுடன் ஓராறு**
**பேதமும் நாதாந்தப் பெற்றியிற் கைவிட்டு**
**வேதஞ்சொல் தொம்பத மாகுதன் மெய்ம்மையே.**

“சிவனடியார்களே, திருவருளால் ஆருயிர் தனது அறிவு விளங்குவதற்குப் பூதங்கள் முதலாகச் சொல்லப்படும் உடலின் உள்ளேயுள்ள மெய்கள் தொண்ணூற்றாறு. அக் கருவிகளின் வேறுபாடுகளும் பல. இவை அனைத்தும் கருவிகளேயன்றி கருத்தாக்கள் அல்ல. நாம் கற்கும் நூல், நம்முடைய அறிவு, ஒழுக்கம், அன்பு, இன்பம் விளங்குவதற்குக் கருவியாக இருப்பது இதற்கு ஒப்பாகும். அரிய பிறப்பினைப் பயனின்றிக் கழித்து, மீண்டும் பிறப்போர் பிறப்பற்ற இன்பநிலையை அருளால்

உணர்வதில்லை. சிவபெருமானால் படைத்து அளிக்கப்பட்ட தொண்ணூற்றாறு கருவிகளை நிலையானது என நினைக்காது என உணருபவர்களே தன்னை உணர்ந்தவர்களாவர்" என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**2400. தற்பதம் என்றுந் தொம்பதந் தானென்றும்**
**நிற்ப தசியத்துள் நேரிழை யாள்பதஞ்**
**சொற்பதத் தாலுந் தொடரவொண் ணாச்சிவன்**
**கற்பனை யின்றிக் கலந்துநின் றானன்றே.**

"சிவனடியார்களே, தற்பதம் சிவனென்றும், தொம்பதம் ஆருயிர் என்றும் தனித்தனியாக நிற்பது அசிபதம் சேராதவிடத்து அஃது ஆகிறாய் என்றாகிறது. அசிபதம் சேர்தல் என்பது ஆருயிர் சிவத்தைச் சார்ந்து மாறின்றிச் சிவமாகும் நிலையாகும். அஃது ஆகிறாய் என்பது அருளால் ஆக்கப்படுகிறாய் என்பதாகும். அந்நிலையில் திருவருள் வீழ்ச்சியாகிய சத்தினிபாதம் வந்து பொருந்தும். இதை நேரிழையாள் பதம் என்பர். இந்நிலையில் முழுமுதலான சிவபெருமான் எந்தவிதமான வேறுபாடுகளுமின்றிக் கலந்து நிற்பான்." என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**2401. அணுவும் பரமும் அசிபதத் தேய்ந்து**
**கணுவொன் றிலாத சிவமுங் கலந்தால்**
**இணையறு பால்தேன் அமுதென இன்பத்**
**துணையது வாயுரை யற்றிடத்[1] தோன்றுமே.**

"சிவனடியார்களே, ஆருயிராகிய அணுவும், அவ்வணுவைச் சிவத்துடன் கூட்டுவதுமாகிய பரமாகிய திருவருளும் அசிபதமாகிய ஆக்கப்பாட்டால் பொருந்திச் சிவபெருமானைக் கலக்கும். அப்போது தேனமுதாக இனிக்கும். அவ்வினிப்பு ஒருபோதும் நீங்காது நின்று இனிக்கும். பால், தேன், அமுது என்னும் மூன்றும் முறையே ஆருயிர், பேருயிர், திருவருள் என்பதாகும்." என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**2402.தொம்பதந் தற்பதந் தோன்றும் அசிபதம்**
**நம்பிய சீவன் பரன்சிவ னாய்நிற்கும்**
**அம்பத மெலைச் சொருபமா வாக்கியஞ்**
**செம்பொருள் ஆண்டருள் சீர்நந்தி தானன்றே.**

"சிவனடியார்களே, தொம்பதமான ஆருயிர் திருவருளை நம்பிவாழும் தன்மையது. தற்பதம் ஆருயிரைச் சிவத்துடன் கூட்டும் திருவருளாகும். ஆருயிரும் பேருயிரும் ஒன்றாகக் கலந்து நிற்கும் நிலை சிவனாகும். இந்நிலையினைச் சிறப்பு நிலை என்பர். சிறப்புநிலை என்பது சொரூபநிலையாகும். ஆருயிர் செம்பொருளான

சிவனை அடைதற்பொருட்டு நந்தியெம்பெருமான் உதவி செய்வான்" என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**2403. ஐம்ப தறியா தவரு மவர்சிலர்**
**உம்பனை நாடி யுரைமுப்ப தத்திடைச்**
**செம்பர மாகிய வாசி செலுத்திடத்**
**தம்பர யோகமாய்த் தானவ னாகுமே.**

"சிவனடியார்களே, வயது ஐம்பது ஆகியபோதும், முப்பொருட்களின் உண்மையைப் பலர் அறிந்திலர். சிலர் அறிய முற்படுவதில்லை. இவர்கள் முப்பதத்தை நாடிப்பெறல் வேண்டும். சிவனை நாடும் வழியாக முப்பதத்திடை வாசியாகிய உயிர்ப்பினைச் செலுத்திச் செம்பர நிலைக்கு வழியமைக்கும் சிவனைத் தொழவேண்டும். சிவனுடன் கூடுவது பெரும் யோகமாகும். இவ்வழியாக ஆருயிர் சிவத்துடன் கூடிச் சிவனாக வேண்டும்" என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**2404. நந்தி யறிவும் நழுவில் அதீதமாம்**
**இந்தியஞ் சத்தாதி விடவிய னாகும்**
**நந்திய மூன்றிரண் டொன்று நலமைந்து**
**நந்தி னனவாதி மூட்டும் அனாதியே.**

"சிவனடியார்களே, ஆருயிரின் அறிவு அருள் நினைவால் நழுவப் பெறுமானால் அதை மேற்பாடு என்று சொல்லப்படும் அப்பால் நிலையாகும். அந் நிலை விட்டநிலையாகும். ஆருயிரும் விட்டவனாவான். அம்மேற்பாட்டின்போது பொருந்திய உறக்கம், கனவு, நனவு என மூன்றுண்டு. கனவு, நனவு என இரண்டுண்டு. நனவு என ஒன்றுண்டு. இந் நன்மைப்பாடாகிய மேற்பாடு ஐந்தும் அகன்றால் தொன்மைப் பொருளாகச் சிவபெருமான் நனவாதியிற் கூட்டுவிப்பன்" என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**2405. பரதுரி யத்து நனவு படியுண்ட**
**விரிவிற் கனவும் இதனுப சாந்தத்து**
**உரிய சுழுனையு மோவுஞ் சிவன்பால்**
**அரிய துரியம் அசிபத மாமே.**

"சிவனடியார்களே, மேற்பாட்டின்போது ஏற்படும் பேருறக்கநிலையில் நனவு நிலை பொருந்திய இயல்பு உண்டாகும். இதன் விரிந்தநிலையில் கனவு ஏற்படும். இதன்மேல் ஏற்படும் உறக்கமும் உண்டு. அதை ஒழிவாகிய உபசாத்தன் என்பர். அது நீங்கியவிடத்துச் சிவபெருமானின் திருவடிநிலை ஏற்படும். இதை அரிய பெரிய துரியம் என்று சொல்லப்படும். இந்நிலை அருளால் அளக்கப்படும். இதைப் புலப்படுத்துவது அசிபதமாகும்" என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

## 10. முப்பரம்

**2406. தோன்றியென் னுள்ளே சுழன்றெழ கின்றதோர்**
**மூன்று மடிமண் டலத்து முதல்வனை**
**ஏன்றெய்தி யின்புற் றிருந்தே யிளங்கொடி**
**நான்று நலஞ்செய் நலந்தரு மாறன்றே.**

“சிவனடியார்களே, என் உடம்பினுள் தோன்றி என்னுள்ளே வலஞ்சுழித்து, எழும் மண்டிலங்கள் மூன்று உள்ளன. அவை தீ மண்டிலம், ஞாயிற்று மண்டிலம், திங்கள் மண்டிலம் என்பனவாகும். இம் மூன்று மண்டிலங்களுக்குமுரிய முழுமுதல்வனான சிவபெருமானைத் திருவருளால் ஏற்றுப் பொருந்தி இன்புற்றேன். அத்துடன் இளங்கொடியாகிய குண்டலினியை உயிர்ப்புப் பயிற்சியால் எழுப்பி அதனுடன் கலந்து நின்றபோது முழுநலமும் வந்து சேர்ந்தது என்று திருமூலர் கூறுகிறார்” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**2407. மன்று நிறைந்தது மாபர மாயது**
**நின்று நிறைந்தது நேர்தரு நந்தியுங்**
**கன்று நினைந்தெழு தாயென வந்தபின்**
**குன்று நிறைந்த குணவிளக் [1]காமே**

“சிவனடியார்களே, முழுமுதற் சிவபெருமானாகிய விழிப்பொருள், அறிவுப்பெருவெளியான மன்றின் கண் நிறைந்துள்ளது. எதற்கும் எவர்க்கும் மேலாகிய பெரும்பொருள் அது. உயிர்களின் நிலைக்கேற்ப நந்தியெம்பெருமானும் நேரில் எழுந்தருளுவன். அப்பெருமான் கன்றை நினைத்து ஓடிவரும் தாய்ப்பசுவைப்போல வந்து ஆட்கொண்டருள்வன். அங்ஙனம் ஆட்கொண்டபின் மலையில் ஏற்றிய விளக்குப்போல எண்குண விளக்காய் விளங்கியருள்வன்.” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**2408. ஆறாறு தத்துவத் தப்புறத் தப்பரங்**
**கூறா வுபதேசங் கூறிற் சிவபுரம்**
**வேறாய் வெளிப்பட்ட வேதப் பகவனார்**
**பேறாக ஆனந்தம் பேணும் பெருகவே.**

“சிவனடியார்களே, அருஞ்சைவர் கைக்கொள்ளும் முப்பத்தாறு மெய்களையும் கடந்து, அப்பால் விளங்குவது சிவமான பெரும் பரம்பொருள். பரம்பொருள் சொல்லாது சொல்லும் கைவிரல் அடையாளமாகிய செவியறிவுறூ சிவபரத்தைப் பற்றியதாகும். அவ் உபதேசம் சிறப்பாக வெளிப்பட அருளோன் மெய்யில்

உள்ள செந்தமிழ் மறையை வெளிப்படுத்தியருளிய பகவனாரவர். திருவடியுணர்வால் பெறற்கரும்பேறாகிய பேரின்பப்பேறு பெருகிவரும். தன்னை நினைப்பவர்களுக்குப் பெரும் ஆனந்தத்தைக் கொடுக்கம் பெரும் பொருள் சிவன்" என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**2409. பற்றறப் பற்றிற் பரம்பதி யாவது**
**பற்றறப் பற்றிற் பரனறி வேபரம்**
**பற்றறப் பற்றினிற் பற்றவல் லோர்கட்கே**
**பற்றறப் பற்றிற் பரம்பர மாகுமே.**

"சிவனடியார்களே, உலகப் பற்றுக்களை ஒழிக்க வேண்டுமானால், சிவபெருமான்மீது பற்று வையுங்கள். அவ்வாறு பற்றித் தினமும் அவனை வணங்கி வந்தால், அவ்வுயிர் சிவபதமாகி அனைத்துப் பற்றுக்களையும் ஒழித்துச் சிவனது திருவடியை அடைந்து இறவா இன்பம் பெறும். அவர்கள் நல்லோரால் பரம்பரம் என்று அழைக்கப்படுவர்."

"ஒரு நாள் கதிரேசனின் வீட்டுக்கு வந்த சிவனடியார் ஒருவர் வீட்டுவாசலில் நின்று 'பரம் பரம், பரம் பரம்' என அழைத்தார். சத்தம் கேட்டு வெளியே வந்த கதிரேசனின் மனைவி வாசலில் நின்ற சிவனடியாரைக் கண்டு வணங்கிவிட்டு, "சுவாமி, இங்கு பரம் பரம் என்று யாரும் இல்லை. நான் அறிந்வரை சிவாசாரியர் யாரும் யாரையும் பரம் பரம் என்று அழைப்பதில்லை" என்றாள்; இந்த வீட்டவரைத்தான் பரம் பரம் என்று அழைத்தல் வேண்டும். பற்றுக்கள் யாவற்றையும் அகற்றுவதற்காக எனது கணவன் சிவன்மீது பற்று வைத்தார். அதனால் பற்றுக்கள் முழுவதையும் நீக்கியவர்' என்று கூறும்போது கதிரேசனும் நல்லைநாதனும் வீட்டுக்கு வந்தனர். அப்போது அச்சிவனடியார் 'பரம் பரம்' என்றவாறு கதிரேசனது பாதங்களைப் பற்றினார். கதிரேசன் அதிர்ந்து போனார்; "சுவாமி, ஒரு சிவனடியான் சாதாரண மனிதனின் காலைத் தொட்டு வணங்கலாகாது என்றபோது சிவனடியார் சொன்னார்", அடியவரே நீர் பரம்பரம் அதனால் வணங்கலாம். பரம் பரம் என்பது பரமனான சிவனது நாமம். நீர் சிவன் என்று கூறிவிட்டு நில்லாது சென்றுவிட்டார். கதிரேசனும் நல்லைநாதனும் அவரின் பின்னால் சென்றபோதும், அவருடன் நடக்க முடியாததால் திரும்பினர்; அன்றுமுதல் நல்லைநாதனும், ஊரவர்களும் கதிரேசனைப் பரம் பரம் என்றே அழைத்தனர்" என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**2410. பரம்பர மான பதிபாசம் பற்றாப்**
**பரம்பர மாகும் பரஞ்சிவ மேவப்**
**பரம்பர மான பரசிவா னந்தம்**
**பரம்பர மாகப் படைப்ப தறிவே.**

“சிவனடியார்களே, சிவபெருமானைப் பற்றோடு பற்றி வணங்கினால் பாசம் பற்றாது. பற்றினவர்களுக்கு அவன் எழுந்தருளிவந்து இன்புறுத்துவன். அதுவே மேலான திருவடி இன்பமாகும். இவற்றைத் திருவடியுணர்வால் திருவருள் மூலம் அறிவதே நிலைபெற்ற அறிவாகும்.”

“சிவனடியார்களே, விரைவாகச் சென்ற அந்தச் சிவனடியார் சிறிது நேரத்தில் திரும்பிக் கதிரேசனது வீட்டிற்கு வந்தார். “பரம் பரமே உன்னை ஏமாற்றிவிட்டுப் போக நான் விரும்பவில்லை. உனது வீட்டுக்கு வரும் அடியவர்கள் எவரும் உணவு உண்ணாமல் சென்றதில்லை. நான் அவசரமாகச் சென்றபோது நந்தியெம்பெருமான் தான் உணவு உண்ணாமல் போனால் கதிரேசன் கவலைப்படுவார். தான் ஏதோ தவறு செய்துவிட்டதாக நினைப்பார். அதனால் திரும்பிச்சென்று உணவை உண்டுவிட்டுச் செல்க என்றவர். சிவபெருமானை எந்நேரமும் மறவாது நினைக்கும் உன்னை எப்பாசங்களும் பற்றாது. அதனால் நீ பெரும் இன்பத்தை அனுபவிப்பாய் என்று கூறியவர்” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**2411. நனவிற் கலாதியா நாலொன் றகன்று**
**தனியுற்ற கேவலந் தன்னில்தா னாகி**
**நினைவுற் றகன்ற அதீதத்துள் நேயந்**
**தனையுற் றிடத்தானே தற்பர மாமே.**

“சிவனடியார்களே, அச் சிவனயார் கதிரேசனைக் கட்டித் தழுவினார். இன்று பரன்பரனைச் சந்தித்ததால் மிக்க மகிழ்ச்சியடைகிறேன். நனவுக் காலத்தில் உழைப்பு, உணர்வு, உவப்பு, ஆள், மருள் என்ற ஐந்தும் செல்லுறாது ஆருயிரில் அகல நிற்கும். அது புலம்புநிலையாகும். தன்னில் தானாக நின்று அகன்ற நிலையில் உள்ளது அப்பால் நிலையாகும். அந்நிலையில் உணர்வினுள் உணர்வாகச் சிவபெருமான் விளங்குவான். அச் சிவபெருமானின் திருவடியை திருவருளின் துணையோடு துதிக்க அவ்வுயிர் தற்பர சிவமாய்த் திகழும்” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**2412. தற்கண்ட துயமுந் தன்னில் விலாசமும்**
**பிற்காணுந் தூடணந் தானும் பிறழ்வுற்றுத்**
**தற்பரன் கால பரமுங் கலந்தற்ற**
**நற்பரா தீதமு நாடக ராதியே.**

“சிவனடியார்களே, தொடர்ந்து அச்சிவனடியார் சொன்னார்; “அடியவரே, உமக்குச் சில வார்த்தைகள் சொல்ல வேண்டும். திருவருளின் நினைவால் தலைவனான சிவனின் உண்மையை உணர்ந்து அதன்மூலம் ஆருயிர் தன்னை உணரும். பரம்பரமே நீ திருவருளால் சிவனையும் உன்னையும் உணர்ந்தவன். இதைத் தற்காண்டல் என்று சொல்லப்படும். இந்நிலை மலம் அகன்ற தூயநிலை. இதைத் தூயம் என்றும்,

நின்மலாவத்தை என்றும் சொல்வர். இந்நிலையில் ஆருயிருக்குத் தனது விரிவும் புலனாகும். அதன் பின் மலம், கன்மம், மாயைகளை மீறி நிற்பதாகிய தூடணமும் உண்டாகும். அதனால் தன்னைச் சார்ந்தவையும் பிறவும் நிலையானவை அல்ல என்ற எண்ணமும் உண்டாகும். அந்த எண்ணம் என்றோ உனது மனதில் வந்துவிட்டது. அதனால் உன்மீது சிவன் கொண்ட பற்று உன்னை அவனாக்கும் காலம் வந்துவிட்டது. அவன் உன்னோடு கலந்திருப்பதால் எல்லாவகையான சிவ இன்பங்களும் உனக்குக் கிடைத்துக் கொண்டிருக்கின்றன. நீ பொதுத்தேவை கருதிச் சிவனை வேண்டியுள்ளாய். அது நடக்கும் என்றார்" என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

## 11. பரலட்சணம்

**2413. அதீதத்து ளாகி யகன்றவன் நந்தி**
**அதீதத்து ளாகி யறிவிலோன் ஆன்மா**
**மதிபெற் றிருள்விட்ட மன்னுயிர் ஒன்றாம்**
**பதியிற் பதியும் பரவுயிர் தானே.**

"சிவனடியார்களே, அச்சிவனை யார் சொன்னார். "பரம் பரமே" நீ நான் எனது என்ற பற்றைவிட்டுப் பலகாலமாகிவிட்டது. சிவனைத் தவிர உனது மனதில் யாரும் இல்லை. உனது மனைவி, பிள்ளைகள், பேரப்பிள்ளைகள், உறவினர்கள் யாரென்றே உனக்குத் தெரியாது. எல்லாவற்றையும் சிவன் பார்ப்பான். எனக்கு எந்த வேலையும் இல்லை. என்ற நிலையில் இருக்கிறாய். அப்பாலாகிய மேல்நிலையில் நந்தி நிலைத்து நிறைந்து நிற்கின்றான். ஆணவப் பிணிப்பால் அறிவில்லாத கிடப்புநிலை எய்திய உயிர், திருவருளின் நிலையால் உண்மைநிலை எய்தும். உண்மையை உணர்ந்தமையால் உனது மனம் தூய்மை அடைந்து விட்டது. அதனால் உனது எண்ணம், சிந்தனை, விருப்பு யாவும் சிவனின் திருவடியையே நினைத்திருக்கிறது. அப்போது அவ்வுயிர் பரவுயிர் அல்லது சிறப்புயிர் என்று அழைக்கப்படும். நீ அத்தகையவன். உனக்கு சிவனைத் தவிர வேறு எந்த நினைவும் இல்லை என்றவர்" என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**2414. ஆதியும் அந்தமும் இல்லா வரும்பதி**
**சோதிப் பரஞ்சுடர் தோன்றத்தோன் றாமையின்**
**நீதிய தாய்நிற்கும் நீடிய வப்பர**
**போதம் உணர்ந்தவர் புண்ணியத் தோரன்றே.**

"சிவனடியார்களே, ஆதியும் அந்தமுமமில்லாத பெரும்பதி சிவபெருமான். அறிதற்கரிய அவன் பேரொளிப் பிழம்பாகவும், உள்ளொளியாகவும் விளங்குபவன். நல்லவரின் மனதில் தோன்றியும், தீயவர்களது மனதில் தோன்றாமலும் நிற்கும் அறவான். அவன் சிவஞானபோத வடிவினன்"

"சிவனடியார்களே, அச் சிவனடியார் கதிரேசனுக்குச் சொன்னார்; "அடியவரே நீர் சிவனையே எவ்வேளையிலும் சிந்தித்துக் கொண்டிருப்பதால், உமது நெஞ்சில்

சிவன் நீங்காது வீற்றிருந்து அருள் செய்கிறான். அதனால் எவராலும் உம்மை வெல்ல முடியாது. பெரும் பெரும் அரச அதிகாரிகள் உம்மோடு மோதிச் செல்லாக்காசாகி விட்டனர். சிவனில் நிறைந்த பக்தி உள்ள உமக்கு நான் ஒரு பரிசு தரப்போகிறேன். இந்தச் சிவஞானபோதநூலில் சிவபெருமான் கோவில் கொண்டிருக்கின்றான். எவ்வேளையிலும் இதனை வைத்திருங்கள். அதனால் சிவன் எப்போதும் உமது கைகளில் இருப்பார்." என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**2415. துரியங் கடந்து துரியா தீதத்தே**
**அரிய விபோகங்கொண் டம்பத் தாடும்**
**பெரிய பிரானைப் பிரணவக் கூபத்தே**
**துரியவல் லார்க்குத் துரிசில்லை தானே.**

"சிவனடியார்களே, அச்சிவனடியார் கதிரேசனுக்குச் சொன்னார். 'அடியவரே, துரியமாகிய பேருறக்கம் நீங்கித் துரியாதீதமாகிய அப்பால் நிலையை எய்தியவர்களுக்கு ஓர் அரிய ஒழிவு உண்டாகும். அவ்வொழிவினைப் பெற்று ஐவகையான மன்றங்களுள் வகர அடையாளமாகிய பொன்னம்பலத்தின் நான் ஐந்தொழிலருட்கூத்தை இயற்றுபவனே பெரிய முதல்வன். அவனை ஓங்கார வட்டத்தினுள்ளே ஆய்ந்தறிய வல்லவர்களுக்கு எவ்வகையான குற்றங்களும் வந்தடையா. ஓங்கார வட்டத்துள் ஒலி, ஒளி, அ, உ, ம் என்ற ஐந்தெழுத்துக்கள் காணப்படும். இவை சிவயநம என்ற ஐந்தெழுத்தையும் அதன் பொருளையும் ஒத்தன. அதனால் இவற்றை ஆராய்வோர் திருவைந்தெழுத்தை ஓதும் பெரும் பலனைப் பெறுவர். அதனால் இவர்கள் துரிசிலாராவர். நீர் திருவைந்தெழுத்தைப் பொருள் தெரிந்து முறைப்படி ஓதுகிறீர்கள். அதனால் உமக்கும் ஓர் அரிய ஒழிவு உண்டாகும் என்றவர்" என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**2416. செம்மைமுன் னிற்பச் சுவேதந் திரிவபோல்**
**அம்மெய்ப் பரத்தோ டணுவனுள் ளாயிடப்**
**பொய்ம்மைச் சகமுண்ட போத வெறும்பாழிற்**
**செம்மைச் சிவமேரு சேர்கொடி யாகுமே.**

"சிவனடியார்களே, அந்தச் சிவனடியாரின் முகத்தில் ஓர் ஒளி வட்டம் தென்பட்டது. அவர் பூரணமான மகிழ்வுடன் கதிரேசனது கையைப் பிடித்துத் தனது தலையில் வைத்து விட்டுச் சொன்னார்; "அடியவரே, சித்தர்கள் குழூக்குறியாகக் கந்தகத்தைச் செம்மையென்றும், இரசத்தை வெள்ளையென்றும் வழங்குவது மரபு. செம்மையின் முன்னிலையில் வெண்மை மாறுதல் அடைவதுபோல, அம்மைக்குரிய முழுமுதற் சிவத்துடன் அணுவாகிய ஆருயிர் பிறிவின்றிக் கலந்து கொள்ளும். அப்பரம் அழிவில்லாத செம்பொருளாதலால் அதை அம்மெய்ப்பதம் என்பர். இந்நிலையில்

உணர்வுகள் ஒடுங்கிவிடும். அறிவொளியான பெருவெளி வெறும் பாழ் எனப்படும். அதில் சிவம் வெளிப்பட்டு விளங்கும். அவ்வாறு வெளிப்பட்டு விளங்கும் பொன்மலையுடன் கலந்து இரண்டற நின்று பேரின்ப நுகர்வைப் பெறும். இந்த நிலைக்கு நீ வந்துவிட்டாய். உனது கடமைகளைச் செய் என்றவர்" என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**2417. வைச்ச கலாதி வருதத்து வங்கெட**
**வெச்ச இருமாயை வேறாக வேரறுத்து**
**உச்ச பரசிவ மாமுண்மை யொன்றவே**
**அச்சம் அறுத்தென்னை யாண்டனன் நந்தியே.**

‟சிவனடியார்களே, அச்சிவனடியார் தொடர்ந்து கதிரேசனுக்கு சொன்னார் ; "அடியவரே, ஆருயிருக்கு அறிவு மேம்படுவதற்காக ஆண்டவன் முதற்கண் அதைப் படைத்து விட்டு அத்துடன் நீங்காது ஒட்டியிருக்குமாறு அமைத்த உணர்வு மெய் ஊ முதல் ஏழாகும். அவை ஊழி, உழைப்பு, ஊழ், உணர்வு, உவப்பு, உழைப்பு, உழல்வு என்பன. இவை முறையே காலம், நியதி, கலை, வித்தை, அராகம், புருடன், மாயை எனக் கூறப்படும். இவற்றால் விழும் சுட்டுணர்வும் சிற்றுணர்வும் அடங்கும். இதுவே தத்துவம் கெடுதல் ஆகும். இம் மெய்கெட எஞ்சிய தூமாயையும் மூலப்பகுதி மாயையும் வேறாகும். இது பின் தோன்றாவண்ணம் திருவருள் அவற்றின் வேர்களை அகற்றும், அகற்றியதும் சிவபெருமான் வெளிப்பட ஆருயிர் அவருடன் கலக்கும். அதனால் பிறப்பு இறப்பு என்ற அச்சம் தீரும். அதற்கு நந்தி அருள் புரிவன். இதெல்லாம் உமக்குத் தெரியும். சிவனோடு கலந்திருக்கும் நீ சிவ இன்பம் பெற்றுக் கொண்டிருக்கிறாய். இதற்கு மேல் எதுவும் இல்லை என்றவர்" என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**2418. என்னை யறிய இசைவித்த என்னந்தி**
**என்னை யறிந்தறி யாத விடத்துய்த்துப்**
**பின்னை யொளியிந் சொரூபம் புறப்பட்டுத்**
**தன்னை யளித்தனன் தற்ப மாகவே.**

‟சிவனடியார்களே, இவ்வாறு அச் சிவனடியார் சொன்னதும் மிக்க மகிழ்வடைந்த கதிரேசன் சொன்னார்; "குருவே, பிறந்ததன் பலனைத் தங்களைச் சந்தித்ததன் மூலம் அடைந்தேன். என்னை அறியும் இயல்பு இல்லாத நான் ஆணவப் பிணிப்போடு மட்டும் இருந்த நிலையில் சிவபெருமான் மாயாகாரிய உடம்பினை உள்ளதாகிய மாயையில் இருந்து படைத்தருளினான். அதன் பின் என்னை அறியுமாறு என்னை அவ்வுடம்புடன் பொருத்தியருளினான். நந்தியின் அருளால், என்னை நான் அறிந்து கொண்டேன். அவன் என்னை அறிவுப் பெருவெளியின்கண் என்னைச் செலுத்தினான். நிலாமுற்றத்தில் இருப்பவனுக்குக் கீழ் இருப்பவை எவையும் தெரியாததுபோல திருவருளின் மகிமையால் வேறெதையும் காணாது சிவபெருமானை மட்டுமே கண்டு உணர்ந்தேன். அவன் ஆருயிர்களின் மேம்பாட்டிற்காக உதவி செய்பவன்

என்பதையும் அறிந்து கொண்டேன்” என்றதும் அச்சிவனடியார் கதிரேசனைக் கட்டித் தழுவினார். அப்போது ஓர் ஒளி தன்னுள்ச் செல்வது போல இருந்தது என்று கதிரேசன் மயக்கநிலையில் சொன்னவர்” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**2419. பரந்துஞ் சுருங்கியும் பார்புனல் வாயு**
**நிரந்த வளியொடு ஞாயிறு திங்கள்**
**அரந்த அரனெறி யாயது வாகித்**
**தரந்த விசும்பொன்று தாங்கிநின் றானே.**

“சிவனடியார்களே, நிலம் எங்கும் பரந்துள்ளது. நீர் நிலத்தில் ஒடுங்கியுள்ளது. நிலம், நீர், தீ, காற்று, வானம், ஞாயிறு, திங்கள் ஆகிய காரியப் பொருட்கள் ஏழையும் படைத்தது ஆதிசக்தியாகிய நடப்பாற்றலாகும். இவற்றைத் தாங்கி நிற்பவன் சிவபெருமான். அவனை அறியும் திருநெறி அறநெறியாகும். இந்த அறநெறியைக் கதிரேசன் நன்கு அறிந்துள்ளார். அதனால் அவர் உலகைத் தாங்கும் சிவபெருமானையும் அவற்றை படைத்தருளிய நடப்பாற்றலான ஆதிசக்தியையும் அறிந்தவர் என்று அச்சிவனடியார் கூறினார் ” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**2420. சத்தின் நிலையினில் தானான சத்தியுந்**
**தற்பரை யாய்நிற்குந் தானாம் பாற்குடல்**
**உய்த்தகு மிச்சையில் ஞானாதி பேதமாய்**
**நித்த நடத்து நடிக்குமா நேயத்தே.**

“சிவனடியார்களே, சத்தின் நிலையினில் தானாக விளங்கும் சக்தியும், பரன் என்று நிற்கும் நிலையில் அம்மையும் பரன் என நிற்பன். அவன் சிவபெருமானுக்கு உடலாக நிற்பவன். உலகங்களைப் படைத்து உயிர்களுடன் உடனாய் நின்று தனது அன்பாற்றலாகிய இச்சயையினால், ஆதி ஆற்றல், அறிவாற்றல், தொழிலாற்றல், விழைவாற்றல்களாக வெளிப்படைப் பெயர் பெற்றுத் தினமும் ஐந்தொழில்களையும் நடத்தியருள்பவன். அது அவனது திருவிளையாட்டாகும். இத் திருவிளையாடல் சிவபெருமானின் திருவருளை இடமாகக் கொண்டு, நடைபெறுவது” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**2421. மேலொடு கீழ்ப்பக்க மெய்வாய்கண் ணாசிகள்**
**பாலிய விந்து பரையுட் பரையாகக்**
**கோலிய நான்சுவை ஞானங் கொணர்விந்து**
**சீவமி வாயணுச் செய்திய தாகுமே.**

“சிவனடியார்களே, திருவருள் ஆருயிரைவிட்டு அகலாது நின்று காத்தருளும். அத்திருவருள் மேல், கீழ், பக்கம், மெய், வாய், கண், மூக்கு, செவி என்னும்

இவற்றோடு சேர்ந்து விந்து எனப்படும் ஒளிவடிவாக நின்று காத்தருளும். அவ்வருள் பரையாகும். அப்பரை பேரறிவான சிவனிடத்தில் அடங்கி இருக்கும். ஆருயிர்கள் உய்தற்பொருட்டு அமைந்தவை நன்னெறி நான்காகும். அவை சீலம், நோன்பு, செறிவு, அறிவு என்பனவாகும். இவற்றால் திருவடி உணர்வு கைகூடும். அதனால் விந்துவும் ஞானமும் மேலேழுந்து விளங்கும். கருவிகளோடு கூடாதவிடத்து சீலம் முதலிய நான்கும் ஆருயிர்க்கு விளங்காது. அவற்றை விளக்குவதற்காக திருவருள் திருத்தொழில் ஐந்தையும் புரியும். இது அம்மையின் அருளால் நடைபெறும்" என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**2422. வேறா மதன்தன்மை போலுமிக் காயத்தில்**
**ஆறாம் உபாதி யனைத்தாகுந் தத்துவம்**
**பேறாம் பரவொளி தூண்டும் பிரகாசமாய்**
**ஊறா யுயிர்த்துண் முறங்கிடு மாயையே.**

"சிவனடியார்களே, ஆருயிர் உடல் ஒடுங்கும்போதும் உடலைப்பெறும் காலத்திலும் வேறாக இருக்கும். அதுபோல உடலுடன் கூடியிருக்கும் காலத்திலும் அதன் தன்மை வேறாக இருத்தல் வேண்டும். உடலின் அகத்தே ஆறுநிலைகள் உண்டு. அவற்றை ஆறாதாரம் என்பர். இவையும் துன்பங்களையே தரும். இவைபோல ஏனைய தத்துவக்கூட்டங்களும் துன்பத்தையே தரும். திருவடிப் பேறாகிய அறிவுப் பேரொளியைக் கண்டதும் இருவேறுபட்ட மாயைகளும் செயலற்றுவிடும்." என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**2423. தற்பர மன்னுந் தனிமுதற் பேரொளி**
**சிற்பரந் தானே செகமுண்ணும் போதமுந்**
**தொற்பதந் தீர்பாழிற் சுந்தரச் சோதிபுக்கு**
**அப்புற மற்றதிங் கொப்பில்லை தானன்றே.**

"சிவனடியார்களே, திருவருளால் ஆருயிர்கள் உலக உண்மையை உணரும். அதற்குத் துணையாக நிற்பது பெரும் பொருளான சிவபெருமான். சிவனைக்கண்ட ஆருயிர் தலைவனைக் கண்ட தலைவி போலத் தன் நாமம் கெடும். அதனால் தொம்பாகிய நீ என்ற முன்னிலைப் பெயர் நீங்கும். அதன் பின் அவ்வுயிர் படர்க்கைப் பெயருடன் கலந்து அதனுள் அடங்கி அதன் பெயரைப் பெற்று விளங்கும். அதனால் அதனைப் பாழ் என்பர். அதன்பின் திருவருட் பேரொளி உண்டாக ஆருயிர் அதனுள்க் கலக்கும்" என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**2424. பண்டை மறைகள் பரவான் உடலென்னுந்**
**துண்ட மதியோன் துரியாதீ தந்தன்னைக்**
**கண்டு பரனுமக் காரணோ பாதிக்கே**
**மிண்டி னவன்சுத்த னாகான் [1]வினவிலே.**

“சிவனடியார்களே, பண்டைய தொன்மையான மறைகள் தூமாயைக்குரிய மேல்வெளியாகிய பரவானைச் சிவபெருமானின் திருவுடலாகத் தெரியுமாறு கூறுகின்றன. அவற்றை ஏற்றுக் கொள்ளலாம். வளரும் பிறையாகிய துண்டமதி என்பதை விளங்க விளங்கும் அறிவினையுடைய ஆருயிரின் அடையாளமாகும். அப்பிறையைத் தாங்கும் சிவபெருமான் அப்பாலுக்கு அப்பாலாகவுள்ள துரியாதீதத்தினனாவான். அந்நிலையில் திருவருளின் நிலையால் தன்னைக்கண்டு காரணநிலையும் கடந்த நிலையே சிவபெருமானின் நிலையாகும். உலக காரணமாகிய தூமாயையைப் பொருந்திய உயிர் முழுநிலையாகிய தூநிலையை எய்தியதாகாது. இதை ஆராய்ந்தால் இதற்கும் அப்பாலாகிய மேனிலை புலனாகும்” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**2425. வெளிகால் கனலப்பு மேவுமண் ணின்ற**
**தளியா கியதற் பரங்கா ணவன்றான்**
**வெளிகால் கனலப்பு மேவுமண் ணின்ற**
**வெளியாய சத்தி யவன்வடி [2]வாமே.**

“சிவனடியார்களே, ஐம்பூதங்கள் என்று சொல்லப்படும் ஆகாயம், காற்று, தீ, நீர், மண் ஆகியனவற்றில் பரந்து நிற்கின்றவனே போற்றி. நீரிடை நான்காய் திகழ்ந்தாய் போற்றி. தீயிடை மூன்றாய் திகழ்ந்தாய் போற்றி. வளியிடை இரண்டாய் மகிழ்ந்தாய் போற்றி. போற்றி வெளியிடை ஒன்றாய் நின்றாய் போற்றி. இவ்வாறு மறைமுடிவின்படி சிவபெருமான் நின்றருள்கிறான். இவ்வாறு இவ்வைந்திலும் மரமும் காழ்ப்பும் போலப் பிரியாது நிற்பதற்குக் காரணம் திருவருளேயாகும். அது சக்தியேயாகும். அத்திருவானையாகிய சக்தியே சிவபெருமானின் திருமேனியாகும்” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**2426. மேருவி னோடே விரிகதிர் மண்டலம்**
**ஆர நினையும் அருந்தவ யோகிக்குச்**
**சீரார் தவஞ்செய்யிற் சிவனருள் தானாகும்**
**பேரவும் வேண்டாம் பிறிதில்லை தானன்றே.**

“சிவனடியார்களே, சிவபெருமானை மேரு என்பர். அத்தகைய மேருவான சிவபெருமானைப் பகலவன் மண்டிலமாகிய நெஞ்சில் இருத்தி வஞ்சனையில்லாமல் நினைக்கின்ற அருந்தவயோகிகளுக்குச் சிவனருள் வெளிப்படும். சிவபெருமானின் திருவானையாகிய திருவருளுக்கு மேற்பட்டது எதுவும் இல்லை” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

## 12. முத்துரியம்

**2427. நனவாகி மூன்றினிற் சீவ துரியந்**
**தனதாதி மூன்றினிற் பரதுரி யந்தான்**

**நனவாதி மூன்றி னிற்சிவ துரியமா**
**மினதாகுந் தொந்தத் தசிபதத் தீடே.**

“சிவனடியார்களே, துரியத்தின் கண் நனவு, கனவு, உறக்கம் என்ற மூன்றும் உண்டு. இவை ஆருயிர்த் துரியமாகும். தானே எல்லாவற்றிற்கும் வினைமுதற் காரணமாக விளங்கும் சிவபெருமான் மீது சார்ந்தவர் பொருட்டுக் கனவு முதலிய மூன்றும் உள்ளன. அவை மூன்றும் சார்ந்தவர் பொருட்டு நிலை பெறும். இவை ஆருயிர்த் துரியம் எனப்படும். இவை ஆருயிர்த் துரியம், திருவருட் துரியம், சிவ துரியம் என மூவகைப்படும். இவை பேருயிரின் குணமாகும். ஆருயிர் சிவனோடு சிவன் சேரும்நிலை தொம்பகத்துடன் அசிபதம் கூடிய கூட்டத்தால் பெறப்படும். அதாவது நீ அதுவாகிறாய் என்பது போன்றது” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**2428. தானா நனவில் துரியந்தன் தொம்பதந்**
**தானாந் துரிய நனவாதி தான்மூன்றில்**
**ஆனாப் பரபத மற்ற தருநனா**
**வானான மேன்மூன்றுந் துரியம் அணுகுமே.**

“சிவனடியார்களே, ஆருயிரானது தானாம் நனவில் பேருறக்கமாகிய துரியத்தில் நீ என்னும் முன் நினைப்பொருளாய்த் தொம்பமாக நிற்கும். ஆருயிரின் பேருறக்க நிலையில் பேசப்படும் நனவு, கனவு, உறக்கம் என்னும் மூன்றினில் நீங்காத அருட்பாடாம் பராவத்தை முடிந்த விடயமாகும். அதுதான் அந்நிலைக்குரிய அரிய நனவாகும். மிகவும் உயர்வாகச் சொல்லப்படும் சிவதுரியத்து உறக்கம், பேருறக்கம், உயிர்ப்படங்கல் என்பன வந்து பொருந்தும்” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**2429. அணுவின் துரியத்து நான்கும தாகிப்**
**பணியும் பரதுரி யம்பவி னான்குந்**
**தணிவிற் பரமாகிச் சார்முத் துரியக்**
**கணுவிலிந் நான்குங் கலந்தவீ ரைந்தே.**

“சிவனடியார்களே, அணுவாகிய ஆருயிர்த் துரியத்து நான்கும், பணிசெய்து போற்றும் பணிதலாகிய திருவருட்பாட்டில் நிகழும் துரியத்து நான்கும் நீங்காத சிவதுரியம் என்று சொல்லப்படும். பரமா அவத்தையில் நிகழும் இரண்டும் கூட்டி இந்நான்கின் கலப்பும் சேரப் அவத்தை பத்தாகும். ஆருயிர்த் துரியத்து நான்காவன நனவு, கனவு, உறக்கம், பேருறக்கம் என்பன. சிவநிலைக்கண் பேருறக்கமும், உயிர்ப்படங்கலும் ஆகிய துரியமும், துரியாதீதமுமாகிய இரண்டுடன் ஆக மொத்தம் பத்தாகும். இவையே கலந்த ஈரைந்தாகும்” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**2430. ஈரைந் தவத்தை யிசைமுத் துரியத்துள்**
**நோந்த மாக நெறிவழி யேசென்று**

**பாரந்த மான பரபாபரத் தைக்கியத்து**
**ஓரந்த மாமிரு பாதியைச் சேர்த்திடே.**

“சிவனடியார்களே, ஈனந்தவத்தையாகிய பத்துப்பாட்டின் கண் பொருந்திய ஆருயிர்த்துரியம், அருள்துரியம், சிவத்துரியம் என்னும் மூன்று அவத்தைகள் உள்ளன. திருவடிப்பேறு எய்தும் சிறந்த அந்தமாகிய சித்தாந்தத் திருநெறிப்படி சொல்லப்படும். சிவகுருவின் திருவாக்குப்படி வாழ்ந்து வந்தால் சிவனோடு கலக்கும் ஐக்கியம் கைகூடும். பெண்ணைத் தனது இடப்பாகத்தில் வைத்திருக்கும் சிவபெருமானோடு இரண்டறக் கலக்கும் பேரொடுக்கம் உண்டாகும்” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**2431. தொட்டே யிருமின் துரிய நிலத்தினை**
**எட்டா தெனினின் றெட்டும் இறைவனைப்**
**பட்டாங் கறிந்திடிற் பன்னா வுதடுகள்**
**தட்டா தொழிவதோர் தத்துவந் தானன்றே.**

“சிவனடியார்களே, துரிய நிலையாகிய திருவடியை நினைத்திருங்கள். தன்னை நினைப்பவர்களுடன் கலந்திருக்கும் சிவபெருமான் ஏனையவர்களுக்கு எட்டாதவனாகவே இருப்பான். சிவனைத் திருவருளால் உள்ளவாறு அறியுங்கள். அப்படி அறிந்தால் சொற்களுக்கு எட்டாது நிற்கும் அவன் நினைப்பவர்களுடன் கலந்து மெய்யின்பத்தைத் தந்தருள்வான்” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**2432. மனவு நனவு கனவது புந்தி**
**நினைவி லகந்தை சுழுதுனையுள் நிற்றல்**
**அதனை அறிசித்தந் துரியமிம் மூன்றின்**
**நினைவறல் மற்றது நேயத் தனவே.**

“சிவனடியார்களே, ஆருயிர்களுக்கு நேரும் நனவு, கனவு ஆகிய இரண்டு நிலைகளிலும் உட்கலனாகிய மனம், புத்தி, அகங்காரம் என்று சொல்லப்படும் மனம், இறுப்பு, எழுச்சி என்னும் மூன்றும் நன்றாகத் தொழிற்படும். உறக்கத்தின்போது அவ் உறக்க நிலையினை மட்டும் அறியக்கூடிய சித்தமாகிய எண்ணம் மட்டுமே உளதாகும். நனவு, கனவு, உறக்கம் ஆகிய இம்மூன்றின் நினைவும் அற்று நிற்றல் அருள்நிலையாகிய துரியமாகும். அப்பால் நிலையாம் அருளோன் உடனாம் நிலைநேயமாகிய சிவபெருமானுடன் கலந்து நிற்கும்நிலை. இதுவே துரியாதீதநிலை” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**2433. நனவின் நனவாதி நாலாந் துரியந்**
**தனதுயிர் தொம்பத மாமறு போல**
**வினையறு சீவன் நனவாதி யாகத்**

**தனைய பரதுரி யந்தற் பதமே.**

“சிவனடியார்களே, நனவின் கண் நனவு முதலாகச் சொல்லப்படும் ஐந்து நிலைகளுள் நான்காவது நிலை துரியமாகும். புணர்ப்பு நிலையில் தனது உயிர் தொம்பம் என்று நிற்குமாறு போன்று, வினைகள் அற மலமும் அற்றுப்போகும். இந்நிலையில் உயிர் தனித்து நிற்கும். அத்துடன் தானாகவே ஒப்பந்த நிலையாக நிற்கும். அதனால் அது அருளுடன் நிற்கும். அதன் பின் அருளோணோடு கலந்து சேர்ந்து நிற்கும். அதன்பின் சிவனோடு சேர்ந்து நிற்கும்” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**2434. தொம்பதந் தற்பதஞ் சொன்முத் துரியம்போல்**
**நம்பிய மூன்றாந் துரியத்து நன்றாகும்**
**அம்புவி யுன்னா அதிசூக்க மப்பாலைச்**
**செம்பொருள் ஆண்டருள் சீர்நந்தி தானன்றே.**

“சிவனடியார்களே, ஆருயிர்த்துரியம், அருள்த்துரியம், அருளோன் துரியம் ஆகிய மூன்று நிலைகளிலும் தொம்பமும், தற்பரமும் பேசப்படும். இதுபோல சிவத்துரியத்தில் நிலவுலகையும், உலக நுகர்வுப் பொருட்களையும் சிறிதும் நினைக்காது மீ நுன்மையாகிய அதிசூக்குமமும் அப்பாலைச் செம்பொருளுமாய் நின்று ஆண்டருளும். மெய்ப்பொருள் சீர் நந்தியாகும்” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

## 13. மும்முத்தி

**2435. சீவன்றன் முத்தி யதீதம் பரமுத்தி**
**ஓயுப சாந்தஞ் சிவமுத்தி யானந்த**
**மூவயின் மூச்சொருப முத்தமுப் பாலதாய்**
**ஓவுறு தூரத்தில் உள்ளுற்ந் தாந்தமே.**

“சிவனடியார்களே, ஆருயிர், பேறு துரியாதீதமாகிய அப்பால் நிலயாகும். பேறு என்பது முத்தியாகும். அருட்பேறு என்பது பரமுத்தி. உயிர் செயல்களை இழந்து அருளோடு நிற்கும். அருளோன் பேறாகிய சிவமுத்தி இயற்கை உண்மை அறிவு இன்பப் பெருவடிவாகும். இம்முறைப்படி மூவிடத்தும் முவ்வியற்கைப் பேறு முப்பாலதாகும். ஓங்காரத்தின் ஒலிமுடிவு நாதாந்தமாகும்” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**2436. ஆவ தறியார் உயிர்பிறப் பாலுறும்**
**ஆவ தறியும் உயிரருட் பாலுறும்**
**ஆவதொன் றில்லை யகம்புறத் தென்றகன்று**
**ஓவு சிவனுடன் ஒன்றுதன் முத்தியே.**

“சிவனடியார்களே, பிறப்பைப் பெற்ற ஆருயிர் பிறப்பற்று இன்பமாக வாழப் பிறந்தோம் என்பதை அறிந்து கொள்வதே ஆவதறிவாகும். இவ்வுண்மையை அறியாதவர்

தொடர்ந்து பிறப்பெடுப்பர். ஆவதறிந்த உயிர் திருவருளை அறிந்து அதைப் பற்றிப்பிடிக்கும். அதனால் அது உலகத்திலும் உடலிலும் பெறத்தக்கது எதுவும் இல்லையென்று அறிந்து நீங்கும். இவ்வகையினர் சிவபெருமானுடன் ஒன்றுதலாகிய திருவடிப் பேற்றினைப் பெறுவர்" என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**2437. சிவமாகி மும்மல முக்குணஞ் செற்றுத்**
**தவமான மும்முத்தி தத்துவத் துயிக்கியத்**
**துவமா கியநெறி சோகமென் போர்க்குச்**
**சிவமாம் அமலன் சிறந்தனன் தானே.**

"சிவனடியார்களே, முறைப்படி வாழ்ந்து சிவமாக விளங்கும் ஆருயிர் மும்மலங்களையும், அமைதி ஆட்சி அழுந்தல் என்னும் முக்குணங்களையும் அருள் நினைவால் அடக்கி அகற்றும். அவ்வாறு அகற்றியோர் ஆருயிர்ப்பேறு, அருட்பேறு, அருளோன்பேறு ஆகிய மூன்றின் வாயிலாகத் தத்துவத் தயிக்கியச்சார்பு வெளிப்படும். இந்நெறியே சோகம் என்னும் நெறியாகும். அது நான் என்னும் அருள்மறைப்பேறு ஆண்டான் அடிமை முறையை உணர்த்துவதாகும். பாசங்களில் இருந்து இயற்கையாகவே நீங்கிய சிவனை அமலன் என்பர். அவனே அறிவின்ப உருவினன் என்பதால் சிவன் என்றும் அழைக்கப்படுகின்றான். அத்தகைய சிவன் ஆருயிரைத் தூயவனாக்கிச் சிறந்தனன் ஆக்குவான்" என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**2438. சித்தியும் முத்தியுந் திண்சிவ மாகிய**
**சுத்தியும் முத்தீ தொலைக்குஞ் சுகானந்த**
**சத்தியும் மேலைச் சமாதியு மாயிடும்**
**பெத்தம் அறுத்த பெரும்பெரு மானன்றே.**

"சிவனடியார்களே, மெய்ப்பொருளான சிவம், சித்தி முத்தி, சிவமாம் சுத்தி என்று ஓதப்படும். இவை முறையே தன்னைப்பற்றி வருவன. பிற உயிர்களைப் பற்றி வருவன, தெய்வத்தைப்பற்றி வருவனவாகிய மூவகைத் துன்பங்களையும் போக்குவனவாகும். இம்மூன்றையும் தாபத்திரயம் என்பர். இதை முத்தீ என்றும் சொல்வர். இவை அற்றுப் போனால் பேரின்பப் பேரருள் உருவான பேரறிவாற்றல் உண்டாகும். அத்துடன் சமாதிநிலையும், கை கூடும். அதன்பின் சிவபெருமான் வெளிப்பட்டுத் திருவடியைத் தந்து பேரின்பத்துக்குள்ளாகுவான். அதனால் அவனே முழுமுதல்வன்" என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

## 14. முச்சொரூபம்

**2439. ஏறிய வாறே மலம்ஐந் திடைஅடைத்து**
**ஆறிய ஞானச் சிவோக மடைந்திட்டு**

**வேறு மெனமுச் சொரூபத்து வீடுற்றங்கு**
**ஈறதிற் பண்டைப் பரனுண்மை செய்யுமே.**

“சிவனடியார்களே, ஆருயிர்களின் ஆணவ மலப்பிணிப்பை அகற்ற வேறு நான்கு மலங்களைச் சேர்த்தல் வேண்டும். இச் செயற்கை திருவருளால் நிகழ்வது. கன்மம், மாயை, மாயேயாம், நடப்பாற்றல் ஆகிய மலங்களைத் திருவருள் ஆருயிருடன் சேர்த்து வைக்கும். அதன்பின் சிவபெருமான் ஐந்து மலங்களையும் அகற்றியருள்வான். அதனால் சிவஞானம் மேலோங்கும். அதனால் அவ்வுயிர் சிவலோகம் அடையும். அதனால் பந்த பாசங்களைத் திருவருளால் அகலும். அதன்பின் ஆருயிர்ப்பேறு, அருட்பேறு, அருளோன்பேறு என்னும் முப்பேறு கிடைக்கும். அதனால் அவ்வுயிர் வீடுபேற்றை அடையும். இஃது ஒப்பில் தலைவி தலைவனை மணந்து தன்னைத் துறந்து அவனாகவே நிற்கும் அருள் நிலையை ஒத்ததாகும்” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**2440. மூன்றுள மாளிகை மூவர் இருப்பிடம்**
**மூன்றினின் முப்பத் தாறு முதிப்புள**
**மூன்றினி னுள்ளே முளைத்தெழுஞ் சோதியைக்**
**காண்டலுங் காயக் கணக்கற்ற வாறன்றே.**

“சிவனடியார்களே, மூவகையான ஆருயிர்களுக்கும் மாளிகையை ஒத்த உடல்கள் மூன்று உண்டு. அவை பருவுடல், நுண்ணுடல், முதல் உடல் என்பனவாகும். முதல் உடலைப் பருவுடல் என்றும் கூறுவர். அத்துடன் காரண உடல் என்றும் கூறுவர். இம் மூன்று உடல்களிலும் சேர்ந்து நிலம் முதல் ஒலி ஈறாக முப்பத்தாறு மெய்களும் தோன்றும். இம் மூன்றுக்குள்ளும் கலந்து நிற்கும் சிவபெருமான் பேரொளிப் பிழம்பாகத் தோன்றுவன். அவனை அவனருளால் காணுதல் வேண்டும். கண்டதும் பிறப்பறும்” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**2441. உலகம் புடைபெயர்ந் தூழியும் போன**
**நிலவு சுடரொளி மூன்றுமொன் றாய**
**பலவும் பரிசொடு பான்மையுள் ஈசன்**
**அளவும் பெருமையு மாரறி வாரே.**

“சிவனடியார்களே, பேரூழிக்காலத்தில் உலகம் ஒடுங்கும். அத்தகைய ஊழிகள் பலவும் கடந்தன. ஆருயிர், அருள், அருளோன் என்னும் மூன்றும் அருள்வெளியில் ஒன்றாயின. இம்மூன்றையும் அன்பு, அருள், அருளோன் என்றும் கூறலாம். சிவன், பரம், சிவன் எனவும் கூறலாம். பலவும் முறைப்படி சிவபெருமானின் திருவடியன்கீழ் அடங்கிக் கலப்பால் ஒன்றாக இருப்பினும் சிவபெருமானின்

அளத்தற்கரிய அளவினையும், உணர்தற்கரிய பெருமையினையும் எவராலும் அளந்தறிந்து உரைக்க முடியாது" என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**2442. பெருவாய் முதலெண்ணும் பேதமே பேதித்து**
**அருவா யுருவாய் அருவுரு வாகிக்**
**குருவாய் வருஞ்சத்தி கோனுயிர்ப் பன்மை**
**உருவா யுடனிருந் தொன்றாயன் [2]றாமே.**

"சிவனடியார்களே, மாயாகாரிய உருக்களை மலை முதல் மண் ஈறாகவும், யானை முதல் எறும்பீறாகவும் கண்டு கருதப்படும் வேறுபாடுகளை ஆருயிர்களுக்குச் சிவன் காட்டியருள்கின்றான். அவன் எல்லாவற்றுடனும் கலந்து அருவாகவும் உருவாகவும் அருவுருவாகவும் தோன்றியருள்பவன். அருளே குருவின் திருமேனியாகும். அவனே தனிப்பெருந் தலைவனுமாவான். பலவுயிர்களோடும் கலந்து அவ்வவ் உயிராய் உடனிருந்து அருள்பவன்" என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**2443. மணியொளி சோபை யிலக்கணம் வாய்த்து**
**மணியென லாய்நின்ற வாறது போலத்**
**தனிமுச் சொருபாதி சத்தியாதி சாரப்**
**பணிவித்த பேர்நந்தி பாதம்பற் றாயே.[2]**

"சிவனடியார்களே, ஆருயிரானது படிகமணியின் நிறமும் ஒளியும் போன்ற தன்மை வாய்ந்தது. அதாவது வெண்மைநிறமும் ஏனைய நிறங்களை உட்படுத்தியபோது அவ்வவ் நிறங்களாகத் தோன்றி ஒளிரும் ஒளியை உடையது. படிகத்தைப்போல ஆருயிரும் சார்ந்ததன் வண்ணமாக நிற்கும். ஆணவத்தைச் சார்ந்தால் அறிவு விளங்காது அறியாமை உடையதாக விளங்கும். அருளால் படைத்தளிக்கப்பட்ட ஐம்புலன்களைச் சார்ந்தால் அறிவு விளங்காது. அறியாமையை உடையதாக விளங்கும். அருளால் படைத்தளிக்கப்பட்ட ஐம்புலன்களைச் சார்ந்ததால் சுட்டறிவும், அப்புலன்களின் வேறுதான் எனக்கருதும் சிற்றறிவும் உடையதாக நிற்கும். பின் அருள் வழியிற் சென்று உடல், கலன், உலகுகள், முற்றறிவு பெற்றுச் சிறப்புற்று வாழ்வதற்குச் சிவபெருமானால் அளிக்கப்பட்ட அருட்கொடை இரவல் பொருட்கள் என்று உணர வேண்டும். அதன்பின் சிவகுரு எழுந்தருளிவந்து திருவைந்தெழுத்தினை ஓதியருள்வான். அதன்பின் முற்றறிவு பெற்று சிவபெருமானின் திருவடியின்கீழ் இன்பமாக வாழும். இதுதான் ஆருயிரின் சர்ந்ததன் வண்ணமாக வாழும் வாழ்க்கையாகும்" என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**2444. கல்லொளி மாநிறஞ் சோபைக் கதிாதட்ட**
**நல்ல மணியொன்றி னாடியொண் முப்பதம்**
**சொல்லறு முப்பாழிற் சொல்லறு பேருரைத்து**
**அல்லறு முத்திராந் தத்தனு பூதியே.**

“சிவனடியார்களே, படிகத்தின் மேல் வைக்கப்படும் பல நிறமுடைய மணிகளைப் பொருந்த வைத்தால் தன்னால் சாரப்பட்ட மணியின் ஒளியாய்த் தான் விளங்குவதுபோல ஆருயிரும் தான் சாாந்ததன் வண்ணமாக நிற்கும். அவ்வுண்மையை தத்துவம் அசி என்றும் மும்மறை காட்டுவதாகும். உடல் மெய், உணர்வு மெய், உணர்த்து மெய் ஆகிய மூன்றும் அழிந்து நீங்குவதால் அதனை முப்பாழ் என்பர். அம் முப்பாழின் உண்மையினையும் கண்டு சொல்லொணாதபேர் என்னும் சிகரத்தைச் சொல்லுமாறு வகரம் காட்டியுரைத்தப் பிறப்பினால் வரும் துன்பங்களை அகற்றுவது கடவுளின் செயலாகும். அதுவே முத்திராந்தமாகும். இதுவே இறவாத இன்ப அன்பு அனுபூதியாகும்” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**2445. உடந்தசெந் தாமரை யுள்ளுறு சோதி**
**நடந்தசெந் தாமரை நாதந் தகைந்தால்**
**அடைந்த பயோதரி யட்டி யடைத்தல்**
**விடந்தரு வாசலை மேல்திற [1]வீரே.**

“சிவனடியார்களே, உடந்த செந்தாமரை என்பது உச்சிக்கு மேல் விளங்கும் ஆயிரம் இதழ்களையுடைய தாமரையாகும். இத்தாமரை மூலத்தாமரைக்கு எதிரானது. அத்தாமரையின் உள்ளிருக்கும் சோதியானது ஓசையாகிய நாதம் மூலத்தாமரை-யினின்றும் அகத்துவப் பயிற்சியால் நடப்பதாகும். ஓசையாகிய நாதம் பயில்வாருக்கு அருளால் கைகூடினால் அமிழ்தாகிய அன்னை வெளிப்பட்டு அருள்வாள். அவள் அன்பு அற்றவர்களுக்குத் தடையாக அமைந்த இன்பவீட்டின் கதவினைத் சிவனை வணங்கி அவனது அருளாலேயே திறக்குமாறு செய்யுங்கள்” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

## 15. முக்கரணம்

**2446. இடனொரு மூன்றி லியைந்த வொருவன்**
**கடனுறு மவ்வுரு வேறெனக் காணுந்**
**திடமது போலச் சிவபர சீலர்**
**உடனுறை பேதமும் ஒன்றென லாமே.**

“சிவனடியார்களே, திருவருளால் ஆருயிர் உடல், உணர்வு, உணர்த்து மெய் ஆகிய மூன்று இடங்களிலும் பொருந்தும். இம்முறையினையே பருவுடல், நுண்ணுடல், முதலுடல் என்பவற்றிற்குக் கூறினும் பொருந்தும். திருவருளால் மெய்யுணர்வு பெற்ற உயிர் அவை தனக்கு வேறானவை எனக் கருதும். அதுபோன்று அருளோன் அருள் ஆருயிர் என்று சொல்லப்படும். சிவ பஞ்சீவர்கள் உடனுறை வேறுபாடுகளும் ஒன்றாகும்” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**2447. ஒளியை யொளிசெய்து வோமென் றெழுப்பி**
**வளியை வளிசெய்து வாயத்திட வாங்கி**
**வெளியை வெளிசெய்து மேலெழ வைத்துத்**
**தெளியத் தெளியுஞ் சிவபதந் தானே.**

“சிவனடியார்களே, திருவருளின் நினைவாய் மூலத்தழல் ஒளியை ஓம் என்று அணிந்து எழுப்பி ஒளிரச் செய்தல் வேண்டும். அத்துடன் மேல்மூச்சையும் கீழ்மூச்சையும் அடக்குதல் வேண்டும். அதற்காக உயிர்ப்புப் பயிற்சியை மேற்கொள்ளுதல் வேண்டும். அதற்காக உயிர்ப்பினைக் குறைவாக வாங்கி உள்ளே நிரப்புதல் வேண்டும். அதன்பின் நெஞ்சை சிவநினைப்பால் நிரப்புதல் வேண்டும். அதனால் அது அருள்வெளியாகும். அதன்பின் குறிக்கோளை மேலெழச் செய்தல் வேண்டும். இவற்றைத் திருவருளினால் தெரிந்து கொண்டவர்கள் சிவனது திருவடியைச் சார்வர். அதுவே சிவநிலையாகும்” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**2448. முக்கர ணங்களின் மூர்ச்சைதீர்த் தாவதக்**
**கைக்கத ரணமென்னத் தந்தனன் காணந்தி**
**மிக்க மனோன்மணி வேறே தனித்தேக**
**ஒக்கும துன்மனி யோதுட் சமாதியே.**

“சிவனடியார்களே, உள்ளம், உரை, உடல் என்னும் மூன்று கருவிகளின் சோர்வினை அகற்றி அதனால் வரும் அருள் நிலையைக் கையில் தரும் கனிபோலத் தந்தருளினான். அவன் சிவபெருமானாகிய நந்தியாகும். ஆணை நிலையாகிய புருவ நடுவின்கண் விளங்கும் மனோன்மணி அங்கு நின்று மேலோங்க அதன்மேல் உன் மனையாகிய திருவருள் துணையாகும். அத்துணையால் ஒருமை உணர்ச்சி உண்டாகும். அவ்வுணர்ச்சியால் செயலற்ற திருநிலை கிடைக்கும். இதனை நிருவிகற்பசமாதி என்பர்” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

## 16. முச்சூனிய தொந்தத்தசி

**2449. தற்பதந் தொம்பதந் தானாம் அசிபதந்**
**தொற்பத மூன்றுந் துரியத்துத் தோற்றவே**
**நிற்ப துயிர்பர னிகழ்சிவ மும்மூன்றின்**
**சொற்பத மாகுமாந் தொந்தத் தசியன்றே.**

“சிவனடியார்களே, அது என்ற தற்பதமும், நீ என்ற தொம்பதமும் தான் அதுவாகின்ற தென்ற அசிபதமும் தொன்மையானவை. இம் மூன்றும் மேல்நிலையாகிய துரியத்தில் தோற்றமுறும். இத்தோற்றத்தின்போது ஆருயிரும், பரமும், சிவமும் ஆகிய மூன்றினதும் சொற்பொருளும் ஆகும். இவையே தொந்தத்தசி எனப்படும். இதில்

தொம்பமாகிய நீ, தத்பதமாகிய அது, அசி ஆகின்றாய் என்றும் பொருள் காணப்படும்" என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**2450. தொந்தத் தசிமூன்றில் தொல்கா மியமாதி**
**தொந்தத் தசிமூன்றில் தொல்தா மதமாதி**
**வந்த மலய்குண மாளச் சிவந்தோன்றின்**
**இந்துவின் முன்னிருள் ஏகுதல் ஒக்குமே.**

"சிவனடியார்களே, தொம்பதம், தற்பதம், அசிபதம் ஆகிய மூன்றையும் ஆராய்ந்து பார்த்தால் கன்மம், மாயை, ஆணவம் என்னும் மும்மல நிகழ்வும் நீக்கமாகும். அது போன்று அமைதி ஆட்சி அழுத்தம் என்னும் முக்குண நிகழ்வும் நீக்கமும் நடைபெறும். மலமும் குணமும் அகல தூய நிகழ்வும் நீக்கமும் ஆகும். அப்போது சிவபெருமான் தோன்றி அருள்வான். தினமும் சந்திரன் வார இருள் அழியும். பௌர்ணமியன்று இருள் சிறிதும் தோன்றாது. அதுபோல ஆருயிரின் கண் அருள் சிறிது சிறிதாக வளர மருள் சிறிது சிறிதாக அகலும். அப்போது முழு நிலவு போலச் சிவபெருமான் தோன்றி அருள்வான்" என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**2451. தொந்தத் தசியையவ் வாசியில் தோற்றியே**
**அந்த முறையீரைந் தாக மதித்திட்டு**
**அந்த மிலாத அவத்தையவ் வாக்கியது**
**உந்து முறையிற் சிவமுன்வைத் தோதிடே**

"சிவனடியார்களே, தொம்பத்தோடு காணப்படும் அசிபதப் பொருளை, உயிர்ப்பின் கண் தோன்றக்கண்டு, முன் ஓதியவாறு அவத்தைகள் பத்தினையும், கருதுக. முடிவில்லாத அவத்தையை அவ்வாக்கியத்தால் செலுத்து முறையில் வைத்து ஓதுதல் வேண்டும். அப்படி ஓதும்போது சிவனை முன்வைத்து ஓதுதல் வேண்டும். சிவ மந்திரமான சிவயநம என்று ஓதுதல் வேண்டும்" என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**2452. வைத்துச் சிவத்தை மதிசொரு பானந்தத்து**
**உய்த்துப் பிரணவ மாம்உப தேசத்தை**
**மெய்த்த இதயத்து விட்டிடு மெய்யுணர்ந்து**
**அத்தற் கடிமை யடைந்துநின் றானன்றே.**

"சிவனடியார்களே, சிவனை முன்வைத்து சிவயநம என்று ஓதுவதால் ஆருயிரின் அறிவு, சிவத்தின் இயற்கை உண்மை அறிவு இன்ப வடிவில் வெல்லும். அவ்வாறு செல்லுமாறு ஓதி ஓமொழிச் செவியறிவுறூவாம் உபதேசத்தை மெய்யுணர்வால் களங்கமற்ற உள்ளத்தின் உள்ளே செலுத்திவிடும். அதன்பின் திருவருளால் சிவபெருமானின் திருவடியுணர்வினை உணர்த்து அத்திருவடிக்கு என்றும் நீங்கா அடிமையாக அவ்வுயிர் பேரின்பமடையும்" என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**2453. தொம்பத மாயையுள் தோன்றிடுந் தற்பதம்**
**அம்பரை தன்னில் உதிக்கும் அசிபதம்**
**நம்புறு சாந்தியில் நண்ணுமவ் வாக்கியம்**
**உம்பர்உரை தொந்தத் தசிவாசி யாமே.**

"சிவனடியார்களே, துவம்பதப் பொருளாகிய நீ என்னும் உயிர்நிலை மாயையாகிய அறியாமையின் பிணிப்பில் கிடக்கும். அவ் அறியாமையை அகற்றச் சிவன் கலப்பால் ஒன்றாகத் திகழ்வான். அழகிய பிறையாகிய திருவருளின் மீது அசிபதப்பொருள் தோன்றும். அது விருப்புறும் அமைதி ஒடுக்கத்தின் கண் அச் சொற்பொருள் அமையும். மேலான பொருளுரை உயிர்ப்பின் கண் பயிலும் இரேசகமாகிய வெளிவிடுதற்குத் தொம்பதமும், பூரகமாகிய உள்ளிழுத்தற்குத் தத்பதமும், கும்பகமாகிய மூச்சை அசைவற நிறுத்துவதற்கு அசிபதமும் கொள்ளப்படும்" என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**2454. ஆகிய வச்சோயந் தேவதத் தன்னிடத்தே**
**ஆகிய வைவிட்டாற் காயம் உபதானம்**
**ஏகிய தொந்தத் தசியென்ப மெய்யறி**
**வாகிய சீவன் பரசிவ னாமன்றே.**

"சிவனடியார்களே, முப்பதங்களின் புணர்ப்பினை விளக்க அச்சோயமாகிய இவன் அவனே என்னும் முறைப்படி அவனே இத்தேவதத்தன் என்னும் பொருளின் கண் ஏற்படும் காலமும் இடமும் செய்தியும் நீங்கப் பெற்றால் அப்பெயருக்குரிய பொருளான உடம்பு காரணமளவாக நிற்கும். அக் காரண மாயையும் கடந்த நிலையில் தொந்தத்தசியாகிய முப்பதும் மெய்யுணர்வைத் தரும். அதனால் ஆருயிர் அருள் அருளோன் என்னும் மூன்றும் பெறப்படும். அவ்வுயிர் அருளோனுடன் கூடி அருளோனின் அடியை அடைந்து முடிவில்லாத பேரின்பத்தைப் பெறும்" " என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**2455. தாமத காமிய மாகித் தகுகுண**
**மாமல மூன்றும் அகார வுகாரத்தோடு**
**ஆமறு மவ்வுமவ் வாயுடன் மூன்றில்**
**தாதாந் துரியமுந் தொந்தத் [1]தசியதே.**

"சிவனடியார்களே, அமைதி, ஆட்சி அழுந்தலாகிய முக்குணங்களும் ஆணவம், கன்மம், மாயை ஆகிய மும்மலங்களும் சேர்வதும் நீங்குவதுமான செயல்கள் அகர உகர மகரங்களால் தான் ஆகும். அவ் அகர உகர மகரங்களே பத்தாய்ப் பகுத்த பாடுகளுள் மூன்றில் தமாம் துரியம் தோன்றும்.

## 17.முப்பாழ்

**2456. காரிய மேழ்கண் டறுமாயப் பாழ்விடக்**
**காரண மேழ்கண் டறும்போதப் பாழ்விடக்**
**காரிய காரண வாதனை கண்டறுஞ்**
**சீருப சாந்தமுப் பாழ்விடத் தீருமே.**

"சிவனடியார்களே, மாயாகாரியமாகிய உடலும், பொறிகளும், எண்ணம், மனம், எழுச்சி, இறுப்பு ஆகிய நான்கு கலன்களும் உயிர்ப்பும் ஆகிய ஏழும் மெய்யுணர்வால் கண்டவிடத்து காரியப்பாழ் என்று சொல்லப்படும். இப்பாழ் ஏழும் திருவருளால் அகலும். இப்பாழ் ஏழும் பின்வருமாறு: அனைத்தையும் உணர்ந்தவனாக இருக்கும் தன்மை, அனைத்திற்கும் காரணமாகும் தன்மை, அனைத்திற்கும் உயிர்க்குயிராய் உள்ளுறையும் தன்மை, அனைத்திற்கும் ஆணையிடும் தன்மை, அனைத்தையும் படைத்தல், அனைத்தையும் காத்தல், அனைத்தையும் அழித்தல் என்பன. இவ் ஏழும் அறிவுப்பாழ் ஆகும். இதுவும் திருவருளால் அகலும். காரிய காரண வருத்தங்கள் அகன்றதும் சிறந்த ஒழிவின் ஒடுக்கமாகிய உபசாந்தமும் அகலும். இம்மூன்றும் அகலப் பிறவிப்பிணியும் அகலும்" என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**2457. மாயப்பாழ் சீவன் வியோமப்பாழ் மண்பரன்**
**சேயமுப் பாழெனச் சிவசத்தி யிற்சீவன்**
**ஆய வியாப்த மெனுமுப்பா ழாம்அந்தத்**
**தூய சொரூபத்திற் சொல்முடி வாகுமே.**

"சிவனடியார்களே, மாயையின் உண்மை நிலையைக் கண்டு அதைக் கடப்பதை மாயைப்பாழ் என்பர். ஆருயிரின் உண்மைநிலையைக் கண்டு அகலல் சிவப்பாழ் எனப்படும். அருளின் உண்மையைக் கண்டு அப்பாலாதல் அருள் வெளிப்பாழ் எனப்படும். இம் மூன்றையும் முப்பாழ் எனச் சொல்வர். சிவசக்தியாகிய திருவருளில் ஆருயிர் அடங்கி நிறைவாக முப்பாழும் பேசப்படும். இவை அனைததும் தூயசிவனின் சொல்லிறந்த முடிபாகும்" என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**2458. எதிரற நாளும் எருதுவந் தேறும்**
**பதியெனும் நந்தி பதமது கூடக்**
**கதியெனப் பாழைக் கடந்தந்தக் கற்பின்**
**உதறிய பாழில் ஒடுங்குகின் றேனே.**

"சிவனடியார்களே, தினமும் ஆண் ஏற்றில் மகிழ்வுடன் சென்று உலகிற்கு அருள்பவன் சிவபெருமான். அவனே நந்தியெம் பெருமானாவான். அவனது திருவடியை அடைதற் பொருட்டு மாயை உயிர் அருள் என்னும் முப்பாழையும் கடந்து, அவை

அனைத்தும் நிலையானவை அல்ல என்று அவற்றை நீக்க எஞ்சிய உருவற்ற பாழில் ஒடுங்குகிறேன் என்று திருமூலர் கூறுகிறார்” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**2459. துரியம் அடங்கிய சொல்லறும் பாழை**
**அரிய பரம்பரம் என்பார்கள் ஆதர்**
**அரிய பரம்பரம் என்றே துதிக்கும்**
**அருநிலம் என்பதை யாரறி வாரே.**

“சிவனடியார்களே, செயலாற்றல் ஆகிய துரியம் அடங்கிய நிலையினைச் சொல்லறும் பாழ் என்பர். அப்பாழை அறிவில்லாதவர்கள் அறிதற்கரிய பெரும் பொருட்டுப் பெரும் பொருளான பரன்பரன் என்பார்கள். அப்பாழ் அறிதற்கரிய பரம்பரம் என்றே துதிக்கும் அருளாளர்களின் அருள்நிலையாகும். இவ் உண்மையை அறிபவர்கள் ஒரு சிலரே ஆவர்” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**2460. ஆறாறு நீங்க நமவாதி யகன்றிட்டு**
**வேறா கியபரை யாவென்று மெய்ப்பரன்**
**ஈறான வாசியிற் கூட்டு மதுவன்றோ**
**தேறாச் சிவாய நமவெனத் தேறிலே.**

“சிவனடியார்களே, அருஞ்சைவர்மெய் முப்பத்தாறு. இதன் உண்மையை உணர்வதற்குத் திருவருளுடன் கூடி நமசிவய என்ற தமிழ் மந்திரத்தை ஓதவேண்டும். அப்படி ஓதும்போது மெய்களுடன் சேர்ந்து நமசிவய என்ற மந்திரமும் அகலும். அப்பொழுது உணர்வினுள் சிவயநம என அமையும். இதனை அருளால் உணருதல் வேண்டும். நமசிவய என்பதில் உள்ள யகரம் நம என்பதைக் கடந்து நிற்கும் நிலையே சிவயநம ஆகும்” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**2461. உள்ளம் உருவென்றும் உருவம் உளமென்றும்**
**உள்ள பரிசறிந் தோரு மலர்கட்குப்**
**பள்ளமும் இல்லை திடரில்லை பாறில்லை**
**உள்ளமும் இல்லை உருவில்லை [1]தானன்றே.**

“சிவனடியார்களே, உடலினை உள்ளமாகிய உயிர் என்றும், உயிரையே உடல் என்றும் தடுமாற்றம் உள்ளவர்கள் கூறுவார்கள். அது கலப்பால் ஒன்றுபட்டுப் புணர்ந்து நிற்கும் நிலையால் கூறப்படுவதாகும். இந்த உண்மையைத் திருவருளால் உணர்பவர்களுக்குப் பள்ளமாகிய கருப்பைக்குள்ச் செல்லும் நிலை ஏற்படாது. திடராகிய உலகில் உறைந்து நிலவுவதும் இல்லை. பாழாகிய உருவற்ற நிலையில் வீழ்ந்து அழுவதும் இல்லை. ஆகவே உயிர் உடல் என்ற வேறுபாடு உண்டாவதில்லை” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

## 18. காரண காரிய உபாதி

**2462. செற்றிடுஞ் சீவ வுபாதித் திறனேழும்**
**பற்றும் பரோபாதி ஏழும் பகருரை**
**உற்றிடுங் காரிய காரணத் தோடற**
**அற்றிட வச்சிவ மாகும் [1]அணுவனே.**

“சிவனடியார்களே, காரிய உபாதியாகிய சிவ உபாதி ஏழும், காரண உபாதியாகிய அருள் உபாதி ஏழும், உள்ளவிடத்துத் தோன்றும் உபாதியாகிய வருத்தமும், அதனைச் சுட்டும் பெயர்களும் முற்றுமாக அழிதல் வேண்டும். அற்றவிடத்து அணுவாகிய ஆருயிர் பெரும் இன்பம் தந்தருளும். அதே சமயம் சிவனைச் சார்ந்து சிவமாக நிற்கும்” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**2463. ஆறாறு காரியோ பாதி யனக்றிட்டு**
**வேறாய் நனவு மிகுத்த கனாநனா**
**ஆறா றகன்ற சுழுத்தி யதில்எய்தாப்**
**பேறா நிலத்துயிர் தொம்பதம் பேசிலே.**

“சிவனடியார்களே, திருவருளால் உபாதிகள் யாவும் நீங்கும். நீங்கியதும் கனவின் கண் நிகழும் நனவு உண்டாகும். அதுபோல ஆறாறு நீங்கிய உறக்கம் வந்து சேரும். அதனால் தொம்பதப்பொருளான ஆருயிர் திருவடியின் கண் சாரும். இதுவே திருவடிப்பேறாகிய நிலம்” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**2464. உயிர்க்குயி ராகி யொழிவற் றழிவற்று**
**அயிர்ப்பறு காரணோ பாதி விதிரேகத்து**
**உயிர்ப்புறும் ஈசன் உபமிதத் தாலன்றி**
**வியர்ப்புறும் ஆணவம் வீடல்செய் யாவே.**

“சிவனடியார்களே, உயிர்க்குள் உயிராய் நிற்பவன் சிவன். மறுபாடற்ற காரண உபாதியின் கண் உடனாயும் நீங்காதும் நிற்கின்றனன். அவனது திருவருளான உபமிதியால் அன்றி வேறு எதனாலும் ஆவண மலம் நீங்காது” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**2465. காரியம் எழிற் கலக்கும் கடும்பசு**
**காரணம் எழிற் கலக்கும் பரசிவன்**
**காரிய காரணங் கற்பனை சொற்பதப்**
**பாரறும் பாழில் பராபரத் தானே.**

“சிவனடியார்களே, காரிய வருத்தம் ஏழாலும் மருள் வசப்பட்டுத் துன்பப்படும் ஆருயிர் கலக்கும். அவ்வாறு கலப்பதால் ஆருயிர் நீங்காத வருத்தத்தை அடையும்.

அப்போது காரண வருத்தம் ஏழினும் திருவருள் காக்கும். அதனால் துன்பப்படும் ஆருயிர் மகிழ்வடையும். இவ்வருத்தங்கள் வினைப்படி வருவதால் அவை திருவருளால் நீக்கப்படும். திருவருள் ஆருயிருக்குக் கற்பனையைக் கற்பிக்கும். இதன்படி மெய்ணுயர்வு பெற்றோர் திருவருள் காண்பித்த கற்பனையின்படி வாழ்வர். அறியாமை அகன்ற இடம் தான் கற்பனை. இதன் கண் திகழும் சிவபெருமானின் திருவடியை ஆருயிர் அடையும்" என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**19. உபசாந்தம்**

**2466. முத்திக்கு வித்து முதல்வன்றன் ஞானமே**
**பத்திக்கு வித்துப் பணிந்துற்றப் பற்றலே**
**சித்திக்கு வித்துச் சிவபரந் தானாதல்**
**சத்திக்கு வித்துத் தனதுப சாந்தமே.**

"சிவனடியார்களே, முத்திக்கு வித்தாகிய வாயில் சிவஞானமாகும். அச் சிவஞானத்தைப் பெறுவதற்கும், பெற்ற சிவஞானத்தை நீங்காது இருப்பதற்கும் வாயில் அவனது திருவடியையும், அவனது மெய்யடியார்களின் திருவடியையும் போற்றுவதும், பணிவும் இன்சொல் பேசுவதுமேயாகும். இத் தொடுகை பக்திக்கு வித்தாகும். இவை சித்தியடைய அருள் வழி நிற்றலும் அவ்வருளை மறவாமையும் ஆகும். திருவருள் தானாதல் என்பது அத்திருவருளை மறவாது உடலினுள் உயிர் விரவி அடங்கி நிற்குமாறு திருவருள் நினைவால் அத்திருவருள் அடங்கி நிற்பதாகும்" என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**2467. காரியம் ஏழுங் கரந்திடு மாயையுள்**
**காரணம் எழுங் கரக்குங் கடுவெளி**
**காரிய காரண வாதனைப் பற்றறப்**
**பாரண வும்முப சாந்தப் பரிசிதே.**

"சிவனடியார்களே, காரிய வருத்தம் ஏழும் துவாமாயையுள் ஒடுங்கும். காரண வருத்தம் எழும். தூமாயையின் கண் ஒடுங்கும். காரிய காரண வருத்தங்களின் வாதனைப் பற்றாகிய பசை அற்றுப்போக திருவருள் வந்து சேரும். அது வந்து சேரலே ஒடுக்கம் என்றும் உப சாந்தமாகும். இவ்விளக்கமே அதன் பிரிவாகும்" என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**2468. அன்ன துரியமே யாத்தும சுத்தியும்**
**முன்னிய சாக்கிரா தீதத் துறுபுரி**
**மன்னு பரங்காட்சி யாவ துடனுற்றுத்**
**தன்னின் வியாத்தி தனின்உப சாந்தமே.**

“சிவனடியார்களே, ஒடுக்கச் செயல் அற்றுப் போதலே துரியம் என்ற ஆவித் தூய்மையாகும். பொருந்திய நனவினில் அப்பால் சிவனது அருள் இன்பமாகும். நிலைபெற்ற ஆவிக்காட்சி என்பது சிவபெருமானின் திருவடி உணர்வில் கூட்டுவதாகும். அவ் உணர்வில் ஒடுங்கி நிற்பது உபசாந்தமாகும்” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**2469. ஆறா றரமந்தாண வத்தையுள் நீக்குதற்**
**பேறான தன்னை யறிதற்பின் றீர்சுத்தி**
**கூறாத சாக்கிரா தீதங் குருபரன்**
**பேறாம வியாத்தம் பிறழுப சாந்தமே.**

“சிவனடியார்களே, அருஞ்சைவர் மெய் முப்பத்தாறும் மலத்தோய்வின் பொருட்டு செய்யப்படும் நலத்தொண்டிற்கு எமக்கு அளிந்தருளப்பட்ட இரவல் பொருளாகும். இம் மெய்மையை உணர்ந்து வாழ்வதே தத்துவ சுத்தியாகும். அதன் மூலம் ஆணவத்தை நீக்குதல் மலத்தூய்மையாகும். ஆருயிர் அருளால் தன்னை அடக்கி அருளில் நிற்கும் நிலை மும்மலத் தூய்மையாகும். சாக்கிரதீதம் என்பது சிவகுருவின் திருவடிப்பேறாகும். சிவகுருவின் திருவடியில் அடங்குதல் ஒடுக்கமான உபசாந்தமாகும்” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**2470. வாய்ந்த வுபசாந்த வாதனை யுள்ளப்போய்**
**ஏய்ந்த சிவமாத வின்சிவா னந்தத்துத்**
**தோய்ந்தறல் மேதனச் சுகானுபவத் தோடே**
**ஆய்ந்ததில் தீருகை யானதீ ரைந்துமே.**

“சிவனடியார்களே, திருவருளின் துணையால் வாய்த்த ஒழிவில் ஒடுக்கம், பசைவறல், திருவருள் நினைவிற் சேரல், பொருந்தும் சிவமாதல், சிவ இன்பம், அதில் தோய்தல், தோய்வு நினைவறகல், மேன்மை நிலை இன்பத்தழுந்தல், அழிந்து நினைவகற்றல் ஆகிய பத்தும் நனவினைப்பால் நலப்பாடாகும். நினைவறல் என்பது ஆருயிர் ஒன்றைக் கண்டும் கேட்டும் வேட்கையுறும். வேட்கையுற்ற ஆருயிர் அதை நாடும். அதனால் அப்பொருளின் நினைவு அவ்வுயிரை விட்டு அகலாதிருக்கும். விரும்பியதும் ஆருயிர் அப்பொருளின் கண் தோயும். தோய்ந்ததும் அந்நினைவு தானாக அகன்றுவிடும்.” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**2471. பரையின் பரவ பரத்துடன் ஏகமாய்த்**
**திரையினின் றாகிய தெண்புனல் போலுற்று**
**உரையுணர்ந் தாரமு தொக்க வுணர்ந்துளோன்**
**கரைகண் டானுரை யற்ற கணக்கிலே.**

“சிவனடியார்களே, திருவருள் நிறைவாகிய பரவலினால் ஆருயிர் அருளுடன் பிரிப்பின்றி ஒன்றாய் நிற்கும். இதற்கொப்பாவது கடல்நீர் மழையாக வந்து ஆறாகி மணல் நிலம் யாவும் கடந்து மீண்டும் கடலை அடைவது. சிவகுருவின் அருளையே உணர்ந்து அவன் திருவாக்கின்படி நடப்பதேயாகும்” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

## 20. புறங்கூறாமை

**2472. பிறையுள் கிடந்த முயலை எறிவான்**
**அறைமணி யாட்கொண் டவர்தமைப் போலக்**
**கறைமணி கண்டனைக் காண்குற மாட்டார்**
**நிறையறி வோமென்பர் நெஞ்சிலர் தாமே.**

“சிவனடியார்களே, பிறையாக இருந்து வளர்ந்து முழுமதியாக விளங்கும் சந்திரனில் காணப்படும் கங்கத்தினை முயல் என்பர். அம் முயலினை அறிதலாகிய கொல்லற்பொருட்டு ஒலிக்கின்ற மணிகட்டிய கூர்வாளிகை நேர்படக் கொண்டவர், எல்லாராலும் நகைக்கப்படுவர். அதுபோலத் திருநீலகண்டப் பெருமானை அவன் திருவருளால் காணும் பேறு பெறாதார் ஒழிவிலொடுக்கம் உணர்ந்தோம் என்பர். இவர் மனம் அடங்காத வேடராவர்” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**2473. கருந்தாட் கருடன் விசும்பூ டிறப்பக்**
**கருந்தாட் கயத்திற் கரும்பாம்பு நீங்கப்**
**பெருந்தன்மை பேசுதி நீயொழி நெஞ்சே**
**அருந்தா அலைகட லாறுசென் றாவே.**

“சிவனடியார்களே, வானில் மிக்க உயரத்தில் கருடன் பறக்கிறது. அதைப் பார்த்த ஆழமான புற்றில் வாழும் பாம்பு மூச்சடங்கி ஒடுங்கிக் கிடக்கிறது. அதுபோல நெஞ்சமும் அருளை உணர்த்து அடங்குதல் வேண்டும். அதை உணராது உணந்தாரைப் போல நெஞ்சமே நீவின் பெருமை பேசுகிறாய். அதனால் எந்தப் பயனும் வராது. ஆறு கடலில் சென்று அடங்குவது போல அடங்கியிரு, என்கிறார் திருமூலர்” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**2474. கருதலர் மானக் கருவாயில் நின்ற**
**பொருதலைச் செய்வது புல்லறி வாண்மை**
**மருவலர் செய்கின்ற மாதவம் ஒத்தால்**
**தருவலர் கேட்ட தனியும்ப ராமே.**

“சிவனடியார்களே, போர் முனைக்குச் சென்று பகைவர்களை வெல்வது அறிவான்மை அல்ல. அது புல்லறிவான்மையாகும். திருவருளின் மகிமையால் மனதை அடக்கிய ஆண்மையர் மருவலர் எனப்படுவர். அவர்கள் செய்யும் நற்றவம் கைகூடினால்

கருதியது கிடைக்கும். அவர் கேட்டதைக் கற்பகதருபோல அளிக்கும் வள்ளல் சிவபெருமானாவார்" என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**2475. பிணங்கவும் வேண்டாம் பெருநில முற்றும்**
**இணங்கியெம் மீசனேன் மீசனென் றுன்னிற்**
**கணம்பதி னெட்டுங் கழலடி காண**
**வணங்கெழு நாடியங் கன்புற லாமே.**

"சிவனடியார்களே, ஒப்புயர்வில்லாத பெருங்கடவுளான சிவபெருமான்மீது பேரன்பு கொள்ளுங்கள். அவன்தான் எல்லா உலகங்களுக்கும் முழுமுதல்வன் என்று எண்ணுங்கள். அப்படி எண்ணினால் பதினெண்கணத்தலைவர்களும் பிறரும் உம்மை வணங்கிக் கேட்டதெல்லாம் தருவர்." என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**2476. என்னிலும் என்னுயி ராய இறைவனைப்**
**பொன்னிலு மாமணி யாய புனிதனை**
**மின்னிய வெவ்வுயி ராய விகிர்தனை**
**உன்னிலும் உன்னும் உறும்வகை யாவன்றே.**

"சிவனடியார்களே, என்னிலும் எனக்குச் சிறந்தவன் என் இறைவன். அவனை நீங்காத நினைவுடன் தொழுவது எனது கடனாகும். என் உயிரினும் உணர்விலும் குடிகொண்டிருக்கும் புனிதமானவனை நாயிற் கடையனான நான் தூய்மையுற அவனைப் பணிவேன். எல்லா உயிர்களுடனும் கலந்து நிற்கும் துமுடிவில்லாத ஆற்றல்களை உடையவனைத் தினமும் வணங்குவேன். என்கிறார். திருமூலர்" என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**2477. நின்றும் இருந்துங் கிடந்தும் நிமலனை**
**ஒன்றும் பொருள்கள் உரைப்பவ ராகிலும்**
**வென்றைம் புலனும் விரைந்து பிணக்கறுத்து**
**ஒன்றா யுணரும் ஒருவனு [2] மாகுமே.**

"சிவனடியார்களே, சிவனது திருவடியை நின்றும், இருந்தும், கிடந்தும் நன்றாக நினையுங்கள். அவன் இயல்பாகவே பாசங்களில் இருந்து நீங்கிய தூயவன். மெய்ப்பொருளை திருந்த உரைப்பவராயினும் தம் புலன்களை வெல்லுதல் வேண்டும். அதற்குத் திருவருளே உதவல் வேண்டும். முழுமுதல் தெய்வம் ஒன்றோ, பலவோ என்று மாறுபடாது ஒன்றே குலம், ஒருவனே தேவன் என்று நினையுங்கள். ஒரு மனப்பட்ட உள்ளத்தவராய்த் தொழுங்கள்" என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**2478. நுண்ணறி வாயுல காயுல கேழுக்கும்**
**எண்ணறி வாய்நின்ற எந்தை பிரன்றன்னைப்**
**பண்ணறி வாளனைப் பாவித்த மாந்தரை**
**விண்ணறி வாளர் விரும்புகின் [3]றாரன்றே.**

“சிவனடியார்களே, உணர்வுக்குள் உணர்வாகிய நுண்ணறிவாய் விளங்குபவன். சிவன் ஏழு உலகங்களையும் நீக்கமற நின்று இயக்குபவனும் அவனே. அவனே எந்தை பிரான். அவனே பண்ணறிவாளனாகிய கானத்தின் ஏழு பிறப்பின் காழில் கனியாவான்.” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**2479. விண்ணவ ராலும் அறிவறி யான்றன்னைக்**
**கண்ணற வுள்ளே கருதிடிற் காலையில்**
**எண்ணுற வாகமுப் போது மியற்றிநீ**
**பண்ணிடில் தன்மை பராபர [1]னாகுமே.**

“சிவனடியார்களே, விண்ணவர்கள் தமது சுட்டறிவாலும், சிற்றறிவாலும் அறிய முடியாத அன்புருவமான அண்ணலை வேறு இடங்களில் முனைத்து விளங்குகின்றான் என்ற பொது எண்ணத்தை விடுத்து நம்முள்ளத்தில் இருக்கின்றான் எனக்கருதி வணங்குங்கள். அப்படி வணங்கினால் உங்கள் உணர்வுக்குள் அவன் தோன்றியருளுவான். அவன் தோன்றியதும் அவனைத் தியானியுங்கள். முப்பொழுதும் தொழுங்கள். அவ்வாறு தொழுபவர்கள் காலகதியில் சிவனாவர்” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**2480. ஒன்றா யுலகுடன் ஏழும் பரந்தவன்**
**பின்றா னருள்செய்த பேரரு ளானவன்**
**கன்றா மனத்தார்தங் கல்வியுள் நல்லவன்**
**பொன்றாத போது புனைபுக ழானன்றே.**

“சிவனடியார்களே, தான் ஒருவனுமாய் ஒப்பில்லாதவனுமாய் கலப்பால் ஏழுலகுடனும் நீக்கமற நிறைந்து நிற்பவன் சிவபெருமான். அவனது திருவடியை அடைந்தவர்களுக்குப் பேரின்பத்தைக் கொடுப்பவன். கற்றவர்களுக்கு அக்கல்வியுள் நின்றருளும் செல்வன்” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**2481. போற்றியென் றேன்எந்தை பொன்னான சேவடி**
**ஏற்றியே தென்றும் எறிமணி தானகக்**
**காற்றின் விளக்கது காய மயக்குறும்**
**ஆற்றலுங் கேட்டது மன்றுகண் டேனன்றே.**

“சிவனடியார்களே, சிவபெருமானின் பொன்னான திருவடியை போற்றியெனப் புகழ்ந்தேன். பின்பு திருவடியைப் போற்றினேன். போற்றியதும் அகத்தே ஓர் ஓசை உண்டானது. அவ் ஓசை உயிர்ப்புப் பயிற்சியால் அகத்துள் தொடர்ந்து ஒலிக்கும் மணியோசையானது அகவிளக்காகத் தோன்றும். அவ்வோசை உடம்பெங்கும் கலந்து

பரவியது. அத் தன்மையையும், அதனால் விளங்கும் அருளாற்றலையும் அந்நாளில் கண்டேன் என்று திருமூலர் கூறுகிறார்" என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**2482. தேடிக்கொண் டென்னுள்ளே நேர்தரு நந்தியை**
**ஊடுபுக் காரும் உணர்ந்தறி வாரில்லை**
**கூடுபுக் கேறலுற் றேனவன் கோலங்கண்**
**மூடிக்கண் டேனுல கேழுங்கண் டேனன்றே.**

"சிவனடியார்களே, அடியேன் இருக்கும் இடம்தேடி வந்து அடியேனின் நெஞ்சத்தாமரையில் புகுந்து வீற்றிருக்கும் நந்தியை யாரும் உணர்வாரில்லை. எனது உணர்வை நானே அறிவதுபோல என்னுள் இருக்கும் சிவபெருமானை யான் அறிவேன். உச்சிதுளை வாயிலாகச் சென்றேன். அகத்தவம் செய்தேன். அங்கு மலர்ந்த முகத்துடன் வீற்றிருந்த சிவபெருமானைக் கண்டேன். அவனது திருக்கோலத்தையும் கண்டேன். கண்டு அவனைச் சிக்கெனப் பிடித்தேன். அதனால் ஏழு உலகங்களையும் என்னுள்ளே கண்டேன் என்று திருமூலர் கூறுகிறார்" என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**2483. ஆன புகழும் அமைந்ததோர் ஞானமுந்**
**தேனு மிருக்குஞ் சிறுவரை யொன்றுகண்டு**
**ஊனமொன் றின்றி யுணர்வூசெய் வார்கட்கு**
**வானகஞ் செய்யு மறவனு மாகுமே.**

"சிவனடியார்களே, சிவபெருமானின் திருப்புகழ் ஒன்றே இறைவன்சேர் புகழாகும். அவனது திருவடிப்பேறே சிவஞானமாகும். அவனது திருவடியே திருவாசகமென்னும் தேனாகும். இதுவே இனிய அமிழ்தாகும். இவை மூன்றும் முறையே உண்மை, அறிவு, இன்பமாம். இவற்றின் நிலைகளம் அகத்தே காணப்படும் சிறு உண்மையாகும். சிறுவரை என்பது மேடு என்ற பொன்மலையாகும். அதுவே புருவநடுவாகும். புருவநடுவை மேரு என்றும், முதுகெலும்பினை மேருதண்டம் என்றும் கூறுவர். இதை மெய்யென்று உணர்பவர்களுக்குச் சிவ உலகத்திலே சிறந்த இடத்தைச் சிவபெருமான் அமைத்துக் கொடுப்பான்" என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**2484. மாமதி யாமதி யாய்நின்ற மாதவர்**
**தூய்மதி யாகுஞ் சுடர்பர மானந்தத்**
**தாமதி யாகச் சகமுணச் சாந்திபுக்கு**
**ஆமல மற்றார் அமைவுபெற் றாரன்றே.**

"சிவனடியார்களே தலையின் ஆணைக்கண் விளங்கும் திங்களின் மதியிடத்துத் தாம் அறிவால் நிலை நின்றவர் அகப்பெருந் தவத்தோராவர். தூய மதியாகத் தம் மதிக்கும் மதி கொடுப்பவன் சிவன். அதை உணர்பவர்கள் ஒண்மையராவர்" என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**2485. பதமுத்தி மூன்றும் பழுதென்று கைவிட்டு**
**இதமுற்ற பாச இருளைத் துரந்து**
**மதமற் றெனதியான் மாற்றிவிட் டாங்கே**
**திதமுற் றவர்கள் சிவசித்தர் தாமே.**

“சிவனடியார்களே, அயன், அரி, அரனாகிய மூவரும் வாழும் உலகப் பேறுகள் பதமுத்திகள் என்று சொல்லப்படும். அவை துன்பத்தைத் தருவன. மீண்டும் பிறப்புக்களை உண்டாக்குவன. அதனால் அதனைக் காணவேண்டும் என்ற எண்ணங்கூடச் சிவனடியார்க்குத் தோன்றுவதில்லை. இவற்றைப் பழுதென்று கைவிடுவர். இஃது என்றும் சுட்டிற்குப் புலனாகக்கூடிய மாயாகாரியப் பொருட்கள். பாசம் அதற்கு மூலமாகும். ஆணவத்தால் உண்டாகும் மதமற்று யான் எனது என்னும் செருக்கற்று இவை அனைத்தும் அருள்நிலையால் மாறுதல் அடையும். அங்ஙனம் மாறியவர் திருவடியை அடைவர். இவரே திருவருளால் சிவத்தை உணர்ந்த ஒண்மையராவர்” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**2486. சித்தர் சிவத்தைக் கண்டவர் சீருடன்**
**சுத்தாசுத் தத்துடன் தோய்ந்துந்தோ யாதவர்**
**முத்தரம் முத்திக்கு மூலத்தர் மூலத்துச்**
**சத்தர் சதாசிவத் தன்மையர் தாமன்றே.**

“சிவனடியார்களே, சிவபெருமானை அருளால் உணர்வில் கண்டு உணர்ந்தவர்கள் சித்தர்களாவர். அவர்கள் திருவடியுணர்வை ஒருபோதும் விட்டு அகலாத சீரினர். தூமாயை தூவாமாயைகளுடன் தோய்ந்திருப்பினும் தாமரை இலை உள்ள நீர்போல ஒட்டுப்பற்றின்றி சிவனை நினைத்திருக்கும் திருவினர். திருவடிப்பேறு பெற்றவர்கள். ஏனையோரைத் திருவடிப் பேற்றிற்கு ஆளாக்குபவர்கள். குண்டலிக்கண்ணும், அகத்தவத்தால் ஐந்தெழுத்தால் ஓமம் செய்யும் தூயவர்கள். இவர்கள் அருளோனாகிய சதாசிவனின் தன்மையைப் பெற்றவர்கள்” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

## 21. எட்டிதழ் கமல முக்குண அவத்தை

**2487. உதிக்கின்ற இந்திரன் அங்கி யமனுந்**
**துதிக்கும் நிருதி வருணன்நல் வாயு**
**மதிக்குங் குபேரன் வடதிசை யீசன்**
**நிதித்தெண் டிசையு நிறைந்துநின் றாரே.**

“சிவனடியார்களே, புறத்தே அமைப்பதுபோல அகத்தேயுள்ள நெஞ்சத்-தாமரையிலும், எண்புலக் காவலர் அமைக்குமாறு ஓதியருள்கின்றனர். நெஞ்சத்தாமரை இதழ்களை எட்டாக அமைத்தல் வேண்டும். அதன் கீழ்ப்புறத்தில் தோன்றி வரும்

ஞாயிறும், தென்கீழ்ப்புலத்துக் கடவுளும், தென்புலத்து யமனும், தென்மேல் புலத்து நிருதியும், மேல்புலத்து வருணனும், வடமேற் புலத்துக் காற்றும், வடபுலதுக் குபேரனும், வடகீழ்ப்புலத்து ஆண்டானும் ஆக நிறைந்து நின்று காவல்புரியுமாறு திருவருளால் கட்டளையிட வேண்டும். சிவவழிபாட்டினர் சிவமேயாகும். சிறப்பினராகையால் அவர்களுக்குக் கட்டளை இடும் தன்மை உண்டு. அதனால் எண்புலத்தவர்களை அவர்கள் கட்டளையிட்டுக் காவலிலீடுபடுத்துவரே தவிர அவர்களை வணங்கமாட்டார்கள்" என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**2488. ஒருங்கிய பூவுமோ ரெட்டித ழாகும்**
**மருங்கிய மாயா புரியத னுள்ளே**
**சுருங்கிய தண்டின் சுழுனையி னூடே**
**ஒருங்கிய சோதியை ஓர்ந்தெழும் உய்ந்தே.**

"சிவனடியார்களே, நெஞ்சத் தாமரை எட்டிதழ்த் தாமரை என்று சொல்லப்படும். மாயாபுரி என்ற இந்த உடம்பின் அகத்தே முதுகம் தண்டாகிய கழுகுமுனைநாடி மிகவும் நுண்மையானது. அத்தண்டினூடே அடங்கிய அறிவுப் பேரொளியினை அகத்தவத்தால், அருளால் ஆராயுங்கள். அதுவே உய்யும் வழியாகும். அதன்பின் அப்பேரொளிப்பிழம்பினை நினைத்துத் தொழுங்கள்" என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**2489. மொட்டவர் தாமரை மூன்றுள மூன்றினும்**
**விட்டலர் கின்றனன் சோதி விரிசுடர்**
**எட்டல ருள்ளே இரண்டலர் உள்ளுறிற்**
**பட்டவர் கின்றதோர் பண்டங் கனாவன்றே.**

"சிவனடியார்களே, நெஞ்சத்தாமரையின் விரிவினை மூன்றாகப் பகுத்தல் வேண்டும். அவை முறையே இதழ், கொட்டை, கொட்டைநடு என்பனவாகும். இம் மூன்றையும் விட்டு நீங்காது தொன்மை உருவாக விளங்கும் ஆவியானது நிறைந்து நிற்கும். உலகத்தை உருவமாகக் கொண்ட இறைவன் சோதிவிரி சுடர் எனப்படுவன். அவனை விராட் எனவும் அழைப்பவர். எட்டிதழ்த் தாமரையாகிய இதன்கண் கொட்டையும் நடுவும் அகமுள்ளனவாகும். அவ் இரண்டினுள்ளும் விளங்குவது ஆவியாகும்" என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**2490. ஆறே யருவி யகங்குளம் ஒன்றுண்டு**
**நூறே சிவகதி நுண்ணிது வண்ணமுங்**
**கூறே குவிமுலைக் கொம்பனை யாளொடும்**
**வேறே யிருக்கும் விழுப்பொருள் தானன்றே.**

“சிவனடியார்களே, அகத்திலே அமுதப் பெருக்காகிய சிற்றாறு ஒன்று உண்டு. அவ்வாறு அருளால் சென்று நிறையக்கூடிய நெஞ்சக்குளமும் ஒன்று உண்டு. அங்கு இருப்பது சிவநிலையாகும். அது மிகவும் நுண்மையானது. அங்கு குவிந்த முனையை உடைய அன்னையை ஒரு கூறாகக் கொண்டு வீற்றிருப்பவன் சிவபெருமான். அவனே முழுவிழுப்பொருளாவான்” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**2491. திகையெட்டுந் தேரெட்டுந் தேவதை யெட்டும்**
**வகையெட்டு மாய்நின்ற ஆதிப் பிரானை**
**வகையெட்டு நான்குமற் றாங்கே நிறைந்து**
**முகையெட்டும் உள்நின் றுதிக்கின்ற வாறே.**

“சிவனடியார்களே, திசைகள் எட்டையும் காவல் புரிபவர்கள் ஞாயிறு முதலிய எண்மர். அவர்களது ஊர்த்திகளும் எட்டாகும். பூதங்கள் ஐந்து, ஞாயிறு, திங்கள் உயிர் மூன்றையும் சேர்த்த எண்பெரு வடிவமாக விளங்குபவன் சிவபெருமான். சிவபெருமானுடன் இணைந்து ஆதியும் நிற்பாள். இது அறிதற் பொறி ஐந்து, செய்தற் பொறி ஐந்து, மனம், புத்தி ஆகிய பின்னிரண்டும் புடை பெயராது நின்றால் அங்கே சிவபெருமான் நிறைந்திருப்பான். இதுதான் எட்டிதழ்த் தாமரையில் உயிர்க்குயிராக நிற்கும் சிவபெருமான் தோன்றி அருளும் நிலையாகும்” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**2492. ஏழுஞ் சகளம் இயம்புங் கடந்தெட்டில்**
**வாழும் பரமென் றதுகடந் தொன்பதில்**
**ஊழி பராபரம் ஓங்கிய பத்தினில்**
**தாழ்வது வான தனித்தன்மை தானன்றே.**

“சிவனடியார்களே, எட்டிதழ்த் தாமரையுள் கிழக்கு முதல் வடக்கு ஈறாக ஏழு இதழ்களும் ஆருயிர் ஏழினதும் நிலைக்களமாகும். வடகீழ்ப்பால் பேருறக்கமாகிய ஆண்டானின் நிலைக்களமாகும். மேல் இதழ் ஆருயிரும் பேருயிரும் வேற்றப் புணர்ந்து நிற்கும் நிலைக்களமாகும்” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**2493. பல்லூழி பண்பண் பசுவோன் இறையவன்**
**நல்லூழி ஐந்தினுள் ளேநின்ற வூழிகள்**
**செல்லூழி யண்டத்துச் சென்றவவ் வூழியுள்**
**அவ்வூழி யுச்சியு ளொன்றிற் பகைவனே.**

“சிவனடியார்களே, உலகிற்குப் பல ஊழிகளை அமைத்து வளர்ச்சியுறச் செய்பவன் சிவன். அவன் பகலோன் எனும் இறைவன் என்றும் அழைக்கப்படுபவன். நல்ல ஊழிகள் ஐந்து. அவை நீக்கல் முதலிய ஐவகைக் கலைகளில் நிகழும் ஐவகை ஒடுக்கமாகும். இவைகள் அண்டத்துச் செல்லும் ஊழிகளாகும். அவ்வூழியிலும், ஊழியின் உச்சியிலும் ஒன்றியிருப்பவன் சிவன்” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**2494. புரியும் உலகினிற் பூண்டவெட் டானை**
**திரியுங் களிற்றொடு தேவர் குழாமும்**
**எரியு மழையும் இயங்கும் வெளியும்**
**பரியுமா காசத்திற் பற்றது தானே.**

“சிவனடியார்களே, திருவருளால் உண்மைபுரியும் உலகத்திடத்து எண் பேருருவாகத் திகழ்பவன் சிவன். சுற்றித் திரியும் களிறுகளும், தேவர் கூட்டமும், தீயும், மழையும் இயங்குவதற்கு வழியாக உள்ளவெளியும் இவை அனைத்திற்கும் இடமளிக்கும் அறிவுப் பெருவெளியும் அருளால் நோக்குபவர்களுக்கு அறிவுப் பெருவெளியைப் பற்றாகக் கொண்டு நிகழ்வது புலனாகும்” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**2495. ஊறு மருவி யுயர்வரை யுச்சிமேல்**
**ஆறினிறிப் பாயும் அருங்குளம் ஒன்றுண்டு**
**சேறின்றிப் பூத்த செழுங்கொடித் தாமரைப்**
**பூவின்றிச் சூடான் புரிசடை யோரன்றே.**

“சிவனடியார்களே, நெற்றிப் புருவத்தில் ஆறு இல்லாமல் இடையறாது நீர் நிரப்பும் குளம் ஒன்று உண்டு. உலகியல் தாமரை சேற்றில் பூப்பது. ஆயிரம் இதழ்த் தாமரை அருள்வெளியில் பூப்பது. பின்னற் சடையையுடைய சிவபெருமான் பெருமகிழ்வோடு இப்பூவைச் சூடுவான். வேறெந்தப் பூவையும் சூடமாட்டான்” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**2496. ஒன்றும் இரண்டும் ஒருங்கிய காலத்து**
**நின்றும் இருந்தும் நிலம்பல பேசினும்**
**வென்று மிருந்து விகிர்தனை நாடுவர்**
**சென்றும் இருந்துந் திருவுடை யோரன்றே.**

“சிவனடியார்களே, ஒன்றும் இரண்டும் ஆகிய மூன்றும் முக்கரணங்களாகும். அவை முறையே உள்ளம், உரை, உடல் என்பனவாகும். இவற்றை மன, மொழி, மெய்கள் என்பவர். இம்மூன்றும் தன்வயப்பட்டு ஒடுங்கிய காலத்தில் எந்நிலத்தில் நின்றாலும் இருந்தாலும் மெய்ப்பொருளையே நாடுவர். அவர்கள் சென்றும் இருந்தும் சிவத்திருவுடையவர்களாவர்” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

## 22. ஒன்பான் அவத்தை ஒன்பான் அபிமானி

**2497. தொற்பத விசுவன் றைசதன் பிராஞ்ஞன்**
**நற்பத விராட்டன்பொன் கர்ப்பனவ் யாகிர்தன்**
**பிற்பதஞ் சொலிதையன் பிரசா பத்தியன்**
**பொற்புவி சாந்தன் பொருதபி மானியே.**

“சிவனடியார்களே, தொன்மையினைச் சிவபெருமான் எப்போதும் கலந்து நிற்கும் நிலையினைப் பலவாறு கூறுவர். அதில் இதுவும் ஒன்றாகும். அம்முறை விசுவன் முதலாகச் சாந்தன் ஈறாகக் கூறப்படும் நிலை ஒன்பதாகும். அவை வருமாறு. விசுவன் உலக உருவினன். தைசன் தழல்வண்ணன். பிராஞ்ஞன் பேரறிவாளன். விராடன் உலக முதல்வன். பொன்கர்ப்பன் பொன்மேனியன் அவ்யாகிர்தன் பிரிக்கப்படாதவன். இதயன் கலப்பையன். பிரசாபத்தியன் ஆருயிர்களின் முதல்வன். சாந்தன் கண்ணளியோன். இவ் ஒன்பது நிலைகளும் பற்று நிலைகளாகும்” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**2498. நவமா மலத்தை நனவாதி பற்றிற்**
**பவமா மலங்குணம் பற்றற்றுப் பற்றாத்**
**தவமான சத்திய ஞானப் பொதுவில்**
**துவமார் துரியஞ் சொரூபம தாமே.**

“சிவனடியார்களே, மூவகை அவத்தைகளும் தனித்தனி மூன்று வகையாகும். அவை ஒன்பதாகும். அவை ஆருயிரின் நனவாதி மூன்றும், பேருயிரின் நனவாதி மூன்றும், ஆரருளின் நனவாதி மூன்றும் என ஒன்பதாகும். இவற்றைச் சீவசாக்கிரம், பரசாக்கிரம், சிவசாக்கிரம் எனச் சொல்வர். ஆருயிர் நனவு, ஆருயிர்க் கனவு, ஆருயிர் உறக்கம் என மூன்று, பேருயிர் நனவு, பேருயிர்க் கனவு, பேருயிர் உறக்கம் என மூன்று” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**2499. சிவமான சிந்தையிற் சீவன் சிதைய**
**பவமான மும்மலம் பாறிப் பறிய**
**நவமான அந்தத்தின் நற்சிவ போதந்**
**தவமா மவையாகித் தானல்ல வாமே.**

“சிவனடியார்களே, திருவருளால் சிவனை இடையறாது வணங்குவோரின் உள்ளத்தில் சிவன் உறைவான். சிவனை வணங்க வணங்க ஆருயிரின் முனைப்புத்தன்மை அகன்று பேருயிருக்கு அடிமையாகும் தன்மை வெளிப்படும். பிறப்புக்குக் காரணமான மும்மலங்களும் முழுமையாக அகன்றுவிடும். அவை அகற்தும் சிவபோதம் ஏற்படும். அதனால் ஆருயிர் திருவருளால் தன்னைப் புனிதப்படுத்திக் கொள்ளும். இதனால் இவர்களைப் பெரியவர்கள் நல்லார் என அழைப்பர்.” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**2500. முன்சொன்ன வொன்பானின முன்னுறு தத்துவந்**
**தன்சொல்லில் எண்ணத் தகாவொன்பான் வேறுள**
**பின்சொல்ல வாகுமிவ் வீரொன்பான் பேர்த்திட்டுத்**
**தன்செய்த வாண்டவன் றான்சிறந் தானன்றே.**

“சிவனடியார்களே, முன்பு சொல்லப்பட்ட பொருவில் பற்றுச்சேர் ஒன் பதில் முன் பொருந்தும் மெய்கள் தனது சொல்லினால் கருதிச் சொல்லத்தகாதன

ஒன்பதுமாகும். பின் சொல்லப்படும் ஒன்பது மெய்களும் வேறு. இவ்வகையாகச் சொல்லப்படும் பதினெட்டையும் ஒழித்துவிட்டு ஆருயிர்களைத் தானாகச் சேர்த்தருளிய சிவபெருமானே சிறந்தவனாவான். உயிரிலும் மேலான அந்தச் சிவபெருமானை உள்ளன்புடன் தொழுதால் அவனை அடையலாம்” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**2501. உகந்தன ஒன்பதும் ஐந்தும் உலகம்**
**பகர்ந்த பிரானென்னும் பண்பினை நாடி**
**அகந்தெம் பிரானென்பன் அல்லும் பகலும்**
**இகந்தென வல்வினை யோடறுத் தானே.**

“சிவனடியார்களே உலக மக்களின் நலனுக்காகப் பதின்நான்கு நூல்களைப் பகர்ந்து அளித்த பெருமான் ஆலமர் சொல்வனாவன். அப்பெருமானை நாடி மனமொடுங்கி இடையறாது வணங்குபவர்களின் வல்வினைகளையும், பிறப்பையும் சிவன் அறுத்து அருள்வன். செந்தமிழ்த் தெய்வமான சிவபெருமானின் திருவருளால் மெய்கண்ட சாத்திர நூல்களான பதின்னான்கையும், ஓதி அகமகிழ்ந்து சிவனது திருவடிப் பேறைப் பெறுங்கள்.” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**2502. நலம்பல காலந் தொகுத்தன நீளங்**
**குலம்பல வண்ணங் குறிப்பொடுங் கூடும்**
**பலம்பல பன்னிரு கால நினையும்**
**நிலம்பல வாறின னீர்மையன் றானே.**

“சிவனடியார்களே, தொன்றுதொட்டு நாம் நலம்பெற்று வாழச் சிவபெருமானின் பேரருளே காரணமாகும். செம்பொருட் செல்வாரன சிவபெருமானை வாழ்த்தி வழிபடப் பல காலங்கள் ஆராய்ந்து அருளியவை ஆறு எனவும், நான்கு எனவும் கூறுவர். ஆறு சிறுபொழுது ஆறாகும். மாயை யாமம் வைகுறு விடியல், காலை, நண்பகல் ஏற்பாடென்ப நான்கு. காலை, கடும் பகல், மாலை, வீங்கிருள் என்பன இக்காலங்கள் பல்வேறு வகையான குடும்பத்தவரும் வணங்குவதற்கு வாய்ப்பானதாகும். அவற்றுள் பலனை இனிமையுடன் எளிமையுடனும் தரத்தக்க காலங்கள் இரண்டாகும். அவை உழைப்புறு பயனை உண்டு மேலும் உழைப்பதற்காகவாகும். உரம் பெறவும் இளைப்பாறுதலாகிய உறக்கத்திற்குச் செல்லும் காலம் ஒன்று. மற்றொன்று உறங்கி விழித்து சிவனின் நினைவுடன் உழைக்க எழுங்காலம். இவ்விருகாலங்களிலும் சிவனை வழிபடல் வேண்டும். அச் சிவபெருமானின் வழிபாட்டிற்குரிய நிலமும் உருவும் கலமும் பலவாகக் கொண்டு வழிபடுபவர்களுக்கு அவ்வவ்வாறே தோன்றி அருள் புரிபவன். இரு காலங்கள் எனும்போது ஒரு செயலுக்கு முன்பும் பின்பும் உள்ள காலம் என்று கூறுவதும் உண்டு” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**2503. ஆதி பராபர மாகும் பராபரை**
**சோதி பரமுயிர் சொல்லுநற் றத்துவம்**
**ஓதுங் கலைமாயை யோரிரண் டோர்முத்தி**
**நீதியாம் பேதமொன் பானுடன் ஆதியே.**

“சிவனடியார்களே, யாவர்க்கும், யாவைக்கும் ஆதிபரனான சிவனே வினைமுதற்காரணமாவான். அவன் கலப்பால் பராபரையாய், சோதியாய், பரமாய், உயிராய், கலையாய், மாயைகள் இரண்டாய், வீடாய். திருவடிப் பேறாய் விளங்குபவன். இத்தகைய முறைமையுடன் கூடி ஒன்பது வேறுபாடுகளுடன் விளங்கிருள்பவன் முழுமுதல்வனான சிவபெருமானே ஆவான்” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**2504. தேறாத சிந்தை தெளியத் தெளிவித்து**
**வேறா நரக சுவர்க்கமும் மேதினி**
**ஆறாப் பிறப்பும் உயிர்க்கரு ளால்வைத்தான்**
**வேறாத் தெளியார் வினையுயிர் பெற்றதே.**

“சிவனடியார்களே, ஆருயிர்களின் தெளியாத சிந்தையைத் தெளியும் பொருட்டு மாறுபட்டவற்றைப் படைத்தும் உய்த்துணர்ந்து தெளியுமாறும் தெளிவித்தருள்பவன். அவை ஒன்றோடொன்று பொருந்தாது ஒரே துன்பமாக இருக்கும். இருள் உலகமான நரகமும், ஒரே இன்பமாக ஒளியுலகமாகிய துறக்கமும், நிலவுலகில் செய்த இருவினைகளின் பயனாக வருவன. அவ்வுயிர்களுக்கு எஞ்சுவினை இருந்தால் நிலத்தில் மீண்டும் பிறக்கும். இவற்றைச் சிவபெருமான் திருவருளினால் அமைத்தருளியுள்ளான். இவற்றை உணராதவர்கள் மீண்டும் மீண்டும் பிறப்பெடுப்பர்” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**2505. ஒன்பான் அவத்தையுள் ஒன்பான் அபிமானி**
**நன்பாற் பயிலு நவதத் துவமாதி**
**ஒன்பானில் நிற்பதோர் முத்துரி யத்துறச்**
**செம்பாற் சிவமாதல் சித்தாந்த சித்தியே.**

“சிவனடியார்களே, ஒன்பது என்னும் பாடாகிய அவத்தையுள் ஒன்பான் அபிமானி என்னும் பொருளில் பற்றினார் உளர். இவர்களே அதி தெய்வமாவார். முறையாகப் பயிலப்பட்ட ஒன்பது மெய்கள் உள்ளன. இவற்றுடன் ஆருயிர் செயலை அறுத்தல், ஆரருட் செயலறல், பேரருட் செயலறல் என்னும் முத்துரியமும் பொருந்தும். இங்ஙனம் பொருந்துமாறு அருளிப் பொருந்தி நிற்பவன் சிவன். அவனே செம்பாற் சிவன். செம்பொருட் சிவன். இவ்வுண்மையைத் தெரிந்து வாழ்வோன் செம்பொருட் துணிவினனாவான். அவனே சித்தாந்தச் செல்வன். அவன் நீங்காத சிவநினைவால்

சிவமாவன். அந்நிலைதான் சித்தாந்த சித்தியாகும். அதுவே திருவடிப் பேறாகும்” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

## 23. சுத்தாசுத்தம்

**2506. நாசி நுனியின் நான்குமூ விரலிடை**
**ஈசன் இருப்பிடம் யாரும் அறிகிலர்**
**பேசி யிருக்கும் பெருமறை யம்மறை**
**கூசி யிருக்குங் குணமது வாகுமே.**

“சிவனடியார்களே, நாசி நுனியில் இருந்து வெளியே போகும் உயிர்ப்பு பன்னிரண்டு விரலளவில் ஓடும். அவ்வாறு ஓடும் அவ்வுயிர்ப்பின் இறுதியில் நிற்பவன் சிவபெருமான். அது தான் அவனது இருப்பிடமாகும். அந்த உண்மையை எவரும் அறியார். அங்ஙனம் இருப்பதாகப் பெருமறை பேசியிருக்கும். எனினும் அறுதியிட்டுக்கூற முடியாது. நாணி இருக்கின்றது” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**2507. கருமங்கள் ஒன்று கருதுங் கருமத்து**
**உரிமையுங் கன்மமும் முன்னும் பிறவிக்கு**
**அருவினை யாவது கண்டகன் றன்பிற்**
**புரிவன கன்மக் கயத்துட் புகுமே.**

“சிவனடியார்களே, ஆருயிர் செய்யும் இருவினைகளாகிய கன்மங்கள் பொருந்தும் கருத்தினால், அங்ஙனம் கருதுகின்ற கருமப்பயனின் உரிமையும் மீண்டும் பிறவிக்கு வித்தாம் கன்மமும் கருதப்படுகின்ற பிறவிக்கு அருவினையாகும். திருவருளால் இவ் உண்மையை உணர்ந்து அகன்ற பின்பு யான் எனது என்னும் செருக்கு அகலும். அது அகன்ற பின்பு அருள் முனைப்புடன் செய்யும் செயல்கள் யாவும் இறைபணியாகும். இப்பணியாகிய கன்மக்கயமாகிய வினை நீக்கத்துள் அவ்வுயிர் புகும்” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**2508. மாயை மறைக்க மறைந்த மறைப்பொருள்**
**மாயை மறைய வெளிப்படும் அப்பொருள்**
**மாயை மறையமறையவல் லார்கட்குக்**
**காயமும் இல்லை கருத்தில்லை தானன்றே.**

“சிவனடியார்களே, மாயாகாரிய உலகங்களாலும், உலகியற் பொருள்க-ளாலும் அறியாமையினாலும் உழலும் ஆருயிர் மாயையால் மறைக்கப்பட்டிருக்கும். அம் மறைப்புக்கு உட்பட்டமையால் அது சிவனை நினையாதிருக்கும். அதனால் அச்சிவன் அவ்வுயிருக்கு மறைபொருளாகவே இருப்பான். மாயையால் கொள்ளப்பட்ட மருள்

அகலத் திருவருளின் நினைவான தெருள் தோன்றும். அது தோன்றியதும் சிவன் வெளிப்படுவான். அதன்பின் ஆருயிர் சிவபெருமானின் திருவடியில் ஒடுங்கி மறையவல்லவராவர்" என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**2509. மோழை யடைந்து முழைநிறற் துளபுக்குக்**
**கோழை யடைக்கின்ற தண்ணற் குறிப்பினில்**
**ஆழ அடைத்தங் கனவிற் புறஞ்செய்து**
**தாழ அடைப்பது தன்வலி யாகுமே.**

"சிவனடியார்களே, புருவத்தின் நடுவில் தோன்றும் அருளமுத ஆற்றினை அடைந்து உச்சித்தொளையினைத் திருவருளால் திறந்து அகத்தே புகுதல் வேண்டும். அதன்பின் சிவபெருமானது திருவடியை நினைத்தல் வேண்டும். அந்நினைவு அறியாமையை நீக்கும். அதன்பின் திருவைந்தெழுத்தை முறைப்படி ஓதுதல் வேண்டும். இதுதான் அருளமுத ஆற்றைத் தக்க வைக்கும் வழியாகும்" என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**2510. ஆசூசம் ஆசூசம் என்பார் அறிவிலார்**
**ஆசூச மாமிடம் ஆரும் அறிகிலார்**
**ஆசூச மாமிடம் ஆரும் அறிந்தபின்**
**ஆசூச மானிடம் ஆசூச மாகுமே.**

"சிவனடியார்களே, ஆசூசமாகிய தீட்டுத்தீட்டு என்று சொல்பவர்கள் அதன் உண்மையை அறியாதவர்களே. அத்தீட்டு உண்டாகும் இடத்தின் ஒண்மையை உணரார். அது கருப்பையில் உண்டாவதாகும். அதனை அறிந்தபின் அதுவே திருவடிப் பேற்றிற்கு நேர்வாயிலாக வகுத்த மானிடப்பிறவியின் உடம்புக்கான காரண முதலாகும் என்ற உண்மை புலனாகும்" என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**2511. ஆசூச மில்லை அருநிய மத்தருக்கு**
**ஆசூச மில்லை அரனைஅர்ச் சிப்பவர்க்னு**
**ஆசூச மில்லையாம் அங்கி வளர்ப்போருக்கு**
**ஆசூச மில்லை அருமறை ஞானிக்கே.**

"சிவனடியார்களே, இப்போது நான் சொன்ன உண்மையை அருளாளறிந்தவர்கள் தீண்டாமை என்னும் தீட்டு உள்ளது என்று கூறமாட்டார்கள். இத்தீட்டுச் செந்நெறி நான்மையின் முதற்படியாகும். அருநி மயந்தர் சீலந்தார்க்கம் கிடையாது. அதுபோல அதனை அர்ச்சிக்கும் நோன்பினருக்கும் இல்லை. அங்கி என்னும் திருவைந்தெழுத்தால் அகத்தழல் ஓம்பும் செறிவினருக்கும் இல்லை. அருமறையாகிய

சிவசிவ என்னும் நான்மறையை ஓதும் செறிவினருக்கும் இல்லை" என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**2512. வழிபட்டு நின்று வணங்கு மவர்க்குச்**
**சுழிபட்டு நின்றதோர் தூய்மை தொடங்குங்**
**குழிபட்டு நின்றவர் கூடார் குறிகள்**
**சுழிபட் டவர்க்கன்றிக் காணவொண் ணாதே.**

"சிவனடியார்களே, செந்நெறி முதல்வர் திருமூலரும், நால்வரும், சித்தாந்த முதல்வர் நால்வரும் அருளிச் செய்த திருமறைத் திருமுறைகளாகிய முறையே புகழ்நூல்கள், பொருள்நூல்களை ஓதி வழிபட்டு நின்று சிவனை வணங்குபவர்களுக்குத் திருவருள் தூய்மைக்குத் துணை செய்யும். அதனால் திருவடியுணர்வு தொடங்கும். இந் நன்னெறியைப் பேணாதவர்கள் திருவெண்ணீறு, சிவமணி, திருவைந்தெழுத்து மூன்றும் முறையே உடல், உள்ளம், உணர்வு எனக்கருதிச் செய்யும் திருக்குறிப்பினைக் கைக்கொள்ளார். மனவடக்கம் இல்லாதவர்கள் சிவபெருமானைக் காணமாட்டார்" என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**2513. தூய்மணி தூயனல் தூய ஒளிவிடுந்**
**தூய்மணி தூயனல் தூரறி வாரில்லை**
**தூய்மணி தூயனல் தூரறி வார்கட்குத்**
**தூய்மணி தூயனல் தூயவு மாகுமே.**

"சிவனடியார்களே, தூய்மணியாகிய செம்மணி சிவபெருமான். தூய அனல் புறத்தணலுக்கு முதலாய் அகத்தணலாய் நிற்கும். ஒளி என்னும் பூத முதலாம் தன்மாத்திரையாகும். புறத்தணல் தீயாகும். இவ்விரண்டின் முதலாகிய பாய அருளையும் தூய மரயையும் அருளினால் அறிவார் பயனில்லை. அவ்விரண்டிற்கும் மூலமாகிய தூமாயையும் அருளால் அறிபவர்களுக்கு அவ்விரண்டும் நன்மையினாலும், தன்மையினாலும் தூயனவேயாகும்." என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**2514 தூயது வாளாக வைத்தது தூநெறி**
**தூயது வாளாக நாதன் திருநாமந்**
**தூயது வாளாக அட்டமா சித்தியுந்**
**தூயது வாளாகத் தூயடிச் [1]சொல்லன்றே.**

"சிவனடியார்களே, இயற்கையாகவே தூய்மையானவன் சிவபெருமான். அவன் ஆருயிர்களின் மேலுள்ள பேரன்பினால், கைமாறு கருதாது நன்னெறி நான்கை அமைத்துத் தூய்மைநெறியைத் தந்தருளினான். யாவற்றையும் தூய்மைப்படுத்துவது திருவருளாகும். அதுதான் சிவபெருமானின் திருமேனியும், திருப்பெயரும் ஆகும். அது சிவயநம என்பதாகும். அதை ஓதுவோர் தூய்மை அடைவர். அவர்களுக்கு

எண்பெரும்பேறு இலகுவாகக் கிட்டும். அதனால் திருவைந்தெழுத்தை இடையறாது ஓதுங்கள்" என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**2515. பொருளது வாய்நின்ற புண்ணியன் எந்தை**
**அருளது போற்றும் அடியவ ரன்றிச்**
**சுருளது வாய்நின்ற துன்பச் சுழியின்**
**மருளது வாச்சிந்தை மாள்குகின் றாரே.**

"சிவனடியார்களே, மெய்ப்பொருளான சிவபெருமான் புண்ணியவானாவான். அவனைத் திருவைந்தெழுத்தால் போற்றுபவர்கள் சீரிய அடியாராவார். சிவனைச் சாரும் நாட்டமில்லாதவர்கள் பிறவிகள் எடுத்துத் துன்பப்படுவர். அவர்கள் அம்மயக்கத்தில் இருந்து விடுபட முடியாது துன்பப்படுவர்" என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**2516. வினையா மசத்து விளைவ துணரார்**
**வினைஞானந் தன்னில் வீடலுந் தேரார்**
**வினைவிட வீடென்னும் வேதமும் ஓதார்**
**வினையாளர் மிக்க விளைவறி [1]யாரே.**

"சிவனடியார்களே, ஊழ்வினை காரணமாக ஒரே வழி மெய்யடியார்களுக்கும் அசத்து விளையும். அதனையும் உய்த்து உணரார். பிரார்த்தனையால் அசத்துக்கள் நீங்குவது இவர்களுக்குத் தெரியாமலே நடைபெறும். வினை திருவடியுணர்வாகிய சிவஞானத்தால் அகல திருவடிப் பேற்றைப் பெறுவர். இருவினைகளுக்கு அடிமைப்பட்டவர்களுக்கு இவை புரியாததால் செந்தமிழ் திருமறையான ஐந்தெழுத்தையும் ஓதார். சிவயநம என்பதில் உள்ள நம என்பது வினையின் முதன்மையகன்று அவ்வினைகிடையில் தடையாக நிற்பது சிவயசிவ என்பது அவ்வினை அகன்று அவ்வுயிர் சிவபெருமானுக்கு அடிமையாய் இறைபாணியில் ஒழுகும். இயல்பினைக் குறிக்கும் குறிப்பாகும்" என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

## 24. முத்திநிந்தை
## (பேற்றுப் பழிப்பு)

**2517. பரகதி யுண்டென இல்லையென் போர்கள்**
**நரகதி செல்வது ஞாலம் அறியும்**
**இரகதி செய்திடு வார்கடை தோறுந்**
**துரகதி யுண்ணத் தொடங்குவர் தாமே.**

"சிவனடியார்களே, திருவருளால் முப்பொருள் உண்மை விளங்கும். திருமறை திருமுறை முதலிய நூல்கள் அனைத்தும் திருவடிப்பேற்றை அருளுவன. இதைச் சிலர் இல்லை என்று மறுக்கின்றனர். இன்னும் சிலர் இல்லை என்று மறுக்கின்றனர். இன்னும் சிலர் ஒன்று மட்டும் உண்டு. ஏனையவை இல்லை என்கின்றனர். இன்னும் சிலர் தாங்களே கடவுள் என்கின்றனர். சிலர் உண்டென்று உரைத்துப்பின் இல்லை

என்கின்றனர். இவர்கள் அனைத்தும் இல்லை என்போராவர். இவர்கள் அனைவரும் இம்மமையிலும், மறுமையிலும் வல்லிருளில் உழல்பவர்களாவர். இதுவே நரக்கதி என்பதாகும். இவர்கள் பிச்சைக்குச் சென்றாலும் யாரும் கொடுக்க மாட்டார்கள்" என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**2518. புறப்பட்டுப் போகும் புகுதுமென் னெஞ்சில்**
**திறப்பட்ட சிந்தையைத் தெய்வமென் றெண்ணி**
**அறப்பட்ட மற்றப் பதியென் றழைத்தேன்**
**இறப்பற்றி னேன்இங் கிதெனனென்கின் [1]றானே.**

"சிவனடியார்களே, அகத்தே நின்று புறப்பட்டுப் போவதும் வருவதுமாகிய உயிர்ப்பினையும், நாட்டத்தினையும் திருவருளால் ஒழுங்குபடுத்தி ஒருமுகப்படுத்தப்பட்ட எண்ணத்தால் முழுமுதற் சிவபெருமானை இறைவனான பதி என்று எண்ணினேன். அதனால் யான் எனது எனும் செருக்கு அகன்றதால் சிவபெருமானின் திருவடியை அடைந்தேன். என்று திருமூலர் கூறுகிறார்" என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**2519. திடரிடை நில்லாத நீர்போல ஆங்கே**
**உடலிடை நில்லா உறுபொருள் காட்டிக்**
**கடலிடை நில்லாக் கலஞ்சேரு மாபோல்**
**அடவெரி வண்ணனும் அங்குநின் [2] றானே.**

"சிவனடியார்களே, மேட்டு நிலத்தில் வெள்ளம் தங்காது பள்ளத்தை நோக்கிப் பாயும். அதுபோல அன்பும் உடலில் நில்லாது சிவபெருமானை நாடிச் செல்லும். அப்போது திருவருள் சிவபெருமானை ஆருயிருக்குக் காட்டி அணைப்பித்தருளும். மரக்கலம் கடலில் நின்றுவிடாது கரைக்கு வந்து மக்களுக்கு அரும்பொருட்களைக் கொடுத்துதவும். அதுபோலச் சிவபெருமானும் ஆருயிர்கள் பிறவிப் பெருங்கடலை நீந்திக் கரை சேர்வதற்காக இணையில் புனையென அங்கு நின்று அருள்கின்றான்" என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**2520. தாமரை நூல்போல் தடுப்பார் பரத்தொடும்**
**போம்வழி வேண்டிப் புறமே யுழிதர்வர்**
**காண்வழி காட்டக்கண் காணாக் கலதிகள்**
**தீநெறி செல்வான் திரிகின்ற [1]வாறன்றே.**

"சிவனடியார்களே, தாமரை நூல்போன்று மிகவும் மென்மைத்தன்மை வாய்ந்த அன்பென்ற நாரால் ஐந்தெழுத்தைத் தொடுத்து சிவபெருமானது திருவடியில் சமர்ப்பிப்போர்க்குப் பரமாகிய சிவபெருமான் தனது திருவடியில் கூடச் செய்வர். அவர்களுக்கு அங்கையில் நெல்லிக்கனியை காட்டுவது போலத் திருவருளினால் காட்டியருளுவர். இதைத் தீவினையாளர்காணமாட்டார்கள்" என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**2521. மூடுதல் இன்றி முடியும் மனிதர்கள்**
**கூடுவா நந்தி யவனைக் குறித்துடன்**
**காடும் மலையுங் கழனி கடந்தோறும்**
**ஊடும் உருவினை யுன்னகி [2]லாரன்றே.**

“சிவனடியார்களே, திருவருளால் அறியாமையும், புலக்கோளறியும் தம்மை மூடுதலின்றி நன்னெறி நான்மை வழிசென்று தலைப்படும் பேரன்பு வாய்த்தோர் நந்தியின் திருவடியை அடைவர். எல்லாப் பக்கங்களிலும் சிவபெருமான் எழுந்தருளியிருக்கும் திருக்கோவில்களையும், திருவுருவினையும் சென்று தரிசிப்பர். இவற்றைத் தீவினையாளர்கள் கண்டும், கேட்டும் அந்த நினைவுகள் இல்லாது வாழ்கின்றனர்” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**2522. ஆவது தெற்கும் வடக்கும் அமரர்கள்**
**போவர் குடக்குங் குணக்குங் குறிவழி**
**நாவினின் மந்திர மென்று நடுவங்கி**
**வேவது செய்து விளங்கிடு வீரன்றே.**

“சிவனடியார்களே, சிறப்பினை வழங்கும் திசைகள் வடக்கும் தெற்குமாகும். வீடுபேறு, திருவடியுணர்வு ஆகியவற்றை இத்திசைகள் நல்கும். செந்நெறிச் செல்வர்கள் இப்புலம் சேர்வர். பிறப்பினைக் கொடுக்கும் பீடுடைய திசைகள் மேற்கும் கிழக்குமாகும். நிலையில்லா வாழ்வினை ஒர்த்துணராது அமரர்கள் விரும்புவர். அவர்கள் அப்புலஞ்சேர் சிறப்பினர் என்றும், ஒதுங்குறிவழி நாவினில் ஐந்தெழுத்தைத் தினமும் நவில்வர். இந்நிலைக்குப் பெருந்துணையாகவுள்ள நடுநாடியாகிய அங்கியின் வழி உயிர்ப்பினைச் செம்மைப்படுத்தி விளங்கிடுவீராக. தெற்கும் வடக்கும் செந்தமிழ்ச் செல்வர்களான செம்பொருட்றுணிவினர் சென்று வருவது திருமூலரது வரலாற்றாலும் பிறவற்றாலும் உணரலாம்.” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**2523. மயக்குற நோக்கினும் மாதவஞ் செய்வார்**
**தமக்குறப் பேசின தாரணை கொள்ளார்**
**சினக்குறப் பேசின தீவினை யாளர்**
**தமக்குற வல்வினை தாங்கிநின் றாரே.**

“சிவனடியார்களே, நன்னெறி நான்கும் நற்றவமாகிய அழிவில் மாதவஞ் செய்வார். நன்னெறிக்கண் வந்து கூடுமாறு அருளால் நோக்கினும், தமக்குப் பொருந்துமாறு, செவியறிவுறுக்கும் திருவைந்தெழுத்தின் திறத்தினைக் கொள்ளார். அவர் யாரெனின் பசுச் சொல்லிக் கேளிர்ப் பிரிக்கும் சினத்துடன் பேசும் தீவினையாளர். அவர்களுக்கு நீங்காத உறவாவது வல்வினையாகும். அதையே எங்கும் தாங்கி நிற்பவராவார்.” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

## 25. இலக்கணாத் திரயம்

**(மும்மை இலக்கணை)**

**2524. விட்ட விலக்கணை தான்போம் வியோமத்துத்**
**தொட்டு விடாத துபசாந்தத் தேதொகும்**
**விட்டு விடாதது மேவுஞ்சத் தாதியிற்**
**கூட்டு மிலக்கணா தீதஞ் சொரூபமே.**

"சிவனடியார்களே, இலக்கணை என்பது ஒரு பொருளின் இலக்கணத்தை மற்றொரு பொருளுக்கு தந்துரைப்பது. அது விட்ட விலக்கணை, விடாத விலக்கணை, விட்டும் விடாத விலக்கணை என மூவகைப்படும். நெஞ்சினைச் சென்றது என்று கூறின் அது விட்ட விலக்கணையாகும். புளித்தின்றான் என்பது விடாத விலக்கணையாகும். பாயிருள் பருகிப், பகல்காண்றெழுதரு பல்கதிர்ப்பருதி என்பது விட்டும் விடாத விலக்கணையாகும்"
என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**2525. வில்லின் விசைநாணிற் கோத்திலக் கெய்தபின்**
**கொல்லுங் களிறைந்துங் கோலொடு சாய்ந்தன**
**இல்லு ளிருந்தெறி கூரும் ஒருவற்குக்**
**கல்கலன் என்னக் கதிரெதி ராகுமே.**

"சிவனடியார்களே, ஓங்காரத்தை வில்லாகவும், திருவைந்தெழுத்தை நாணாகவும், ஆருயிரை அம்பாகவும் கொண்டு சிவனைக் குறியாக வைத்து அதனை எய்து ஐம்புலன்கள் என்ற மதயானைகளை அழித்தல் வேண்டும். இதனால் ஆருயிரின் முனைப்புத்தன்மை அழியும். அழிந்ததும் சமாதிநிலை ஏற்படும். சமாதிநிலையில் இருந்து அருளொளி பிறக்கும். அப்போது சிவபெருமான் தோன்றி இன்பமூட்டுவார்." என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

## 26. தத்துவமசி வாக்கியம்

**2526. சீவ துரியத்துத் தொம்பதஞ் சீவனார்**
**தாவு பரதுரி யத்தினில் தற்பதம்**
**மேவு சிவதுரி யத்தசி மெய்ப்பதம்**
**ஓவி விடுந்தத் துவமசி உண்மையே.**

"சிவனடியார்களே, ஆருயிர் செயலாற்றுதலாகிய சீவதுரியத்து நீ என்னும் தொம்பதநிலையே அவ்வுயிர்க்கு உள்ளது. அப்பாலாகும் அருள் செயல் அறல் என்னும் பரதுரியத்து அவ்வுயிர்க்கு அதுவாதல் என்னும் தத்பத நிலையே உளதாகும். சிவச்செயல் அறலாகிய சிவதுரியத்து சிவதழுத்தலாகிய துய்ப்புநிலை ஆகின்றாய் என்னும் அசிபத நிலையுளதாகும். இம்மூன்றும் சிவத்துய்ப்பில் அடங்கிவிடும். அதில்

ஆதல் பரத்துரியத்தும், அணைதல் சிவத்துரியத்தும், அருந்தல் ஒவிடும் தத்துவமசி உண்மையினுங் காண்க.” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**2527. ஆறா றகன்ற அணுத்தொம் பதஞ்சுத்தம்**
**ஈறான தற்பதம் எய்துப சாந்தத்துப்**
**பேறா கியசீவன் நீங்கிப்பிர சாதத்து**
**வீறான தொந்தத் தசிதத்வ மசியே.**

“சிவனடியார்களே, அருஞ்சைவர் தத்துவம் ஆறாறும் நாம் அல்ல நம் உரிமையும் அல்ல என்று உணரல் உண்மைகாண் சுத்தமாகும். இந்நிலையே தொம்பதச் சுத்தமாகும். ஒழிவொடுக்கத்துத் தற்பத உண்மையாகும். திருவடிப் பேற்றுக்குரிய ஆருயிர் சிவகுருவின் அருளால் சிறப்பான நீ அதுவாகிறாய் என்பதே தத்துவமசியாகும்.” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**2528. துவந்தத் தசியே தொந்தத் தசியும்**
**அவைமன்னா வந்து வயத்தேக மான**
**தவமுறு தத்துவ மசிவே தாந்த**
**சிவமா மதுஞ்சித் தாந்தவே தாந்தமே.**

“சிவனடியார்களே, துவந்தத் அசி என்னும் சொல்லே தொந்தத்தசியாம். அவற்றின் உண்மைநிலையைப் பெறுதற் பொருட்டு வந்த தன்மை உடையது. இவ்வுடம்பு தத்துவமசி வேதாந்த விளக்கமாகும். சிவயநம என்பது சித்தாந்த விளக்கமாகும். வேதாந்தம், சித்தாந்தம் ஆகிய இரண்டும் செம்பொருளாகும்.” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**2529. தொம்பதந் தற்பதஞ் சொல்லும் அசிபதம்**
**நம்பிய முத்துரி யத்துமே ணாடவே**
**யும்பத [1]மும்பத மாகும் உயிர்பரன்**
**செம்பொரு ளான சிவமென வாகுமே.**

“சிவனடியார்களே, தொம்பதம், தற்பதம், அசிபதம், சிவதுரியம், பரதுரியம், சீவதுரியம் என்பன முத்துரியங்களாகும். முப்பதங்களும் உயிர், அருள், சிவம் என்று சிறப்பாகச் சொல்லப்படும்.” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**2530. வைத்த துரிய மதிற்சொரு பானந்தத்து**
**உய்த்த பிரணவ மாமுப தேசத்தை**
**மெய்த்த விதயத்து விட்டிடு மெய்யுணர்**
**வைத்த படியே படைந்துநின் றானன்றே.**

“சிவனடியார்களே, மூவகையான துரியங்களின் உண்மை அறிவின்பமாகிய சொருபானந்தத்து உய்ப்பது ஓமொழி மறையாகும். அம்மறையினைப் பயிலத் திருவடியுணர்வு கைகூடும். அதனால் திருவடி இன்பம் கிடைக்கும்.” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**2531. நனவாதி ஐந்தையும் நாதாதியில் வைத்துப்**
**பிணமா மலத்தைப் பின்வைத்துப் பின்சுத்தத்**
**தனதாஞ் சிவகதி சத்தாதி சாந்தி**
**மனவா சகங்கெட்ட மன்னனை நாடே.**

“சிவனடியார்களே, நனவு, கனவு, உறக்கம், பேருறக்கம், உயிர்ப்படங்கல் ஆகிய ஐந்தையும் நாதமாகிய ஒலியின் முடிவில் தங்கவைக்கவும். அதன்பின் வேறுபாடு நீங்கிய மலத்தை வைக்கவும், அதன்பின் சிவநிலை வாய்க்கும். ஒலியாகிய நாதமுழவின்கண் செயலற்று ஒடுங்கும்நிலை சாந்த நிலையாகும். அதன்பின் சிவபெருமானை நாதமுடிவில் வைத்து போற்றல் வேண்டும்” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**2532. பூரணி யாது புறம்பொன்றி லாமையின்**
**பேரணி யாதது பேச்சொன்றி லாமையில்**
**ஓரணை யாதது வொன்றுமி லாமையில்**
**காரண மின்றியே காட்டுந் தகைமைத்தே.**

“சிவனடியார்களே, ஒப்பில்லாத சிவபெருமான் எல்லாவற்றையும் உள்ளடக்கிய அகல் பரப்பினை உடையது. அத்துடன் முழுவளர்ச்சிப் பான்மையினை உடையது. இவற்றால் அது புதுநிறைவோ, புதுவளர்ச்சியோ கொள்வதில்லை. ஆதலால் அது பூரணியாகாது. மேலும் அச்சிவம் பேச்சிறந்தது. ஒன்றாகலின் ஒரு பேரும் அணியாததாகும். அத்துடன் எவ்வகையான தொடக்கும் இல்லாததாகையால் அது நினைவுகளுக்கு அப்பாற்பட்டது. ஆருயிரின் மனப்பக்குவத்திற்கேற்ப வெளிப்பட்டு அருளும் தன்மை வாய்ந்தது” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**2533. நீயது வானா யெனநின்ற பேருரை**
**ஆயது நானேனேன் என்னைச் சமைந்தறச்**
**சேய சிவமாக்குஞ் சீர்நந்தி பேரருள்**
**ஆயது வாயனந் தானந்தி யாகுமே.**

“சிவனடியார்களே, வடமொழியாளர் நீ அதுவானாய் என்னும் தொம்தத்அசி என்பதே மகாவாக்கியம் என்பர். தென்மொழியாளர் அது நீ ஆனாய் என்னும் தத்துவம் அசி என்னும் பேருரையே சீர்மையும் முறைமையும் செறிந்து திகழ்வதாகும். அதனால் தென்மொழியாளர் கூறும் தத்துவமே சிறப்புடையதாகும். இம்முறைப்படி வாழ்ந்தால்

பெருநந்தியின் பேரருள் ஆருயிர்களைச் சிவபெருமானாக ஆக்குவிக்கும். அந்நிலையில் அவ்வுயிர் எல்லையில் வந்த பேரின்ப வடிவாகத் திகழும்" என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**2534. உயிர்பர மாக உயர்பர சீவன்**
**அரிய சிவமாக அச்சிவ வேதத்**
**திரியிலுஞ் சீராம் பராபரன் என்ன**
**உரிய உரையற்ற வோமய மாமே.**

"சிவனடியார்களே, ஆருயிர்து திருவருள் நிறைவால் பரமாகிய திருவருள் நிலையினை அடையும். அதன்பின் சிவபெருமானின் நிலையினைச் சாரும். அறிவுக்குப் பற்றுக்கேடாக விளங்கும் வேதத்தின் கண்ணும் சிவபெருமான் நிலையே சிறப்பு நிலையாகும். இந்நிலையினை உரையற்று உரைக்கும் நிலையில் ஓமொழி வண்ணம் என்பர்" என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**2535. வாய்நாசி யேபுரு மத்தகம் உச்சியில்**
**ஆய்நாசி யுச்சி முதலவை யாய்நிற்குந்**
**தாய்நாடி யாதிவாக் காதி சகலாதி**
**சேய்நா டொளியாச் சிவகதி யைந்துமே.**

"சிவனடியார்களே, வாய், நாசி, புருவம், மத்தகம், உச்சி என்னும் ஐந்து இடங்களும் சிவ விளக்கம் தோன்றும் இடங்களாகும். நெற்றியின் நடுப்பகுதியை மத்தகம் என்று அழைக்கப்படும். இவ் ஐந்தும் ஐந்தொழிலுக்கும் பகரலாம். மத்தகத்துக்குச் சமனான உன்மனை என்னும் திருவருள் நிலைகள் உள்ளது. இவை இரண்டையும் நடப்பாற்றல், வனப்பாற்றல் என்றும் கூறுவர். தாய் நாடியாகிய நடுநாடி முதலாக ஒளி முதலாய அனைத்தும் எளிதில் விளங்குவது மட்டுமல்லாது கழிபெருஞ்சேணொளியும் விழிமுன் தோன்றுவதுபோல அகத்தும் தோன்றும். அதுவே சிவநிலையாகும்" என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**2536. அறிவறி யாமை இரண்டு மகற்றிச்**
**செறிவறி வாய்எங்கும் நின்ற சிவனைப்**
**பிறிவறி யாது பிரானென்று பேணுங்**
**குறியறி யாதவர் கொள்ளறி யாரே.**

"சிவனடியார்களே, ஆருயிருக்கு சுட்டறிவும், சிற்றறிவும் ஏற்படுவது கூட்டுநிலையாகும். இவை அகலாவிட்டால் ஒட்டுநிலை ஏற்படாது. ஆணவத்தால் எதுவும் அறியாது இருத்தல் அறியாமையாகும். அறிவு அறியாமை இரண்டினையும் திருவருள் ஒழுங்ககற்றும். எங்கும் நிறைந்திருக்கும் சிவபெருமானை, எம்மைவிட்டு என்றும் பிரிவின்றி நீங்காது உறைந்திருக்கும் சிவனை அருளால் உணருதல் வேண்டும்.

அவ்வாறு உணராதவர்கள் திருவடிப் பேறடைய மாட்டார்கள்” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**2537. அறிவார் அறிவன அப்பும் அனலும்
அறிவார் அறிவன அப்புங் கலப்பும்
அறிவான் இருந்தங் கறிவிக்கி னல்லால்
அறிவான் அறிந்த அறிவறி யோமே.**

“சிவனடியார்களே, மெய்யுணர்வுள்ளவர்களே, நீரையும் தீயையும் அதன் தத்துவங்களையும் அறிவர். அவற்றின் பண்பும் கலப்பும் ஒடுக்கமும் முற்றுணர்வுள்ளோரே அறிவர். இவற்றை அறிவுறுத்துவது சிவபெருமான். அவன் அறிவித்தாலன்றி ஆருயிர் எதையும் அறியமாட்டாது. அப்பு என்னும் நீர் திருவருளையும் அனல் என்ற தீ சிவபெருமானையும் குறிக்கும். அவற்றின் கலப்புத்தான் அருளோன் என நின்று ஆருயிர்களையும் அனைத்துலகங்களையும் தொழிற்படுத்துவதாகும்” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**2538. அடிதொழ முன்னின் றமரர்க ளத்தன்
முடிதொழ ஈசனும் முன்னின் றருளிப்
படிதொழ நீபண்டு பாவித்த தெல்லாங்
கடிதொழக் காணென்னுங் கண்ணுத லானே.**

“சிவனடியார்களே, வானவர்கள் சிவபெருமானின் திருவடியைத் தொழ முன்நிற்பர். அவர்கள் தமது மணிமுடியினைச் சாய்த்து தனது திருவடியை வணங்குவதைக் கண்டு சிவபெருமான் மகிழ்வுடன் வரமளிப்பார். அதுபோல ஆருயிர்களும் தமது எட்டுறுப்புக்களையும் நிலத்தில் படுமாறு விழுந்து வணங்கித் திருமுறைகளைப் பாடினால் விரும்பிய வரங்களைப் பெறலாம்” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**2539. நின்பல மேனி நிமலன் பிறப்பிலி
என்னுளம் வந்திவன் என்னள யானென்று
பொன்வளர் மேனி புகழ்கின்ற வானவன்
நின்மல மாகென்று நீக்கவல் லானன்றே.**

“சிவனடியார்களே, சிவபெருமான் தூயமேனியன். பிறப்பில்லாதவன். இயல்பாகவே பாசங்களில் இருந்து நீங்கியவன். திருவருளால் உள்ளத்துள் எழுந்தருளுபவன். எழுந்தருளி இவன் எனது அடியவன் என்று அறிவித்தருளினன். பொன் போன்ற திருமேனியை உடைய பீடுசேர் வானவன் அவன். அவன் ஆருயிர்கள் உய்யும்

பொருட்டு அவற்றின் மேல் படிந்த மலத்தை நீங்கியருள்பவன். அத்தகைய சிறப்புக்களை உடையவன் சிவபெருமான்” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**2540. துறந்துபுக் கொள்ளொளி சோதியைக் கண்டு**
**பறந்ததென் உள்ளம் பணிந்து கிடந்தே**
**மறந்தறி யாவென்னை வானவர் கோனும்**
**இறந்து பிறவாமல் ஈங்குவைத் தானே.**

.

“சிவனடியார்களே, உலகியற் பொருட்களின் உண்மை நிலையைத் திருவருளால் உணர்ந்தேன். அதனால் பற்றும் மருளும் துனி தரு உரிமையும் இருளில் இருந்தும் நீங்கினேன். நீங்கியதும் திருவடியிற் புகுந்தேன். அதனால் உண்மையான பேரொளியைக் கண்டேன். அதன் பின் அதைப்பற்றிப் பணித்தேன். அதனால் பிறவாத நிலையை அடைந்தேன் என்று திருமூலர் கூறுகிறார்” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**2541. மெய்வாய்கண் மூக்குச் செவியென்னும் மெய்தோற்றத்**
**தவ்வாய அந்தக் கரணம் அகிலமும்**
**எவ்வா யுயிரும் இறையாட்ட ஆடலாற்**
**கைவா யிலாநிறை எங்குமெய் கண்டதே.**

.

“சிவனடியார்களே, மெய் வாய் கண் மூக்கு செவி என்னும் ஐம்பொறிகளும் நிலையில்லாத தோற்றத்தினை உடையவை. இதுபோல எண்ணம், மனம், எழுச்சி, இறுப்பு என்னும் கலன்களும் நிலையில்லாதவை. இவை யாவும் முழுமுதற் கடவுளான சிவபெருமானின் அருளால் இயங்குகின்றன. அதனால் ஆருயிர் இதை உணர்ந்து திருநெறியைப் பின்பற்றி வாழுதல் வேண்டும். அப்படி வாழ்ந்தால் கேடின்றிச் சிவபெருமானைச் சார்ந்து அவனுடன் செறிந்து பெரும் சிறப்புப் பெறும்” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

## 27. விசுவக் கிராசம்
### (உலகுயிரொடுக்கம்)

**2542. அழிகின்ற சாயா புருடனைப் போலக்**
**கழிகின்ற நீரிற் குமிழியைக் காணில்**
**எழுகின்ற தீயிற்கர்ப் பூரத்தை யொக்கப்**
**பொழிகின்ற இவ்வுடற் போமப் பரத்தே.**

“சிவனடியார்களே, பளிங்கின் நிழலும், உடலின் நிழலும், பிற நிழலும் உச்சிக் காலத்துக் கதிர்ச்சாய்வு இல்லாமையால் புறத்தே தெரிவதில்லை. ஆனால் கதிரும் உருவும் கலந்து ஒன்றாக இருக்கின்றது. அதுபோல ஆருயிரும் பிறவாத நிலையை அடைந்தபோது திருவருளுடன் கலந்துவிடும். இம்முறையினைச் சாயபுருடன்

அழிகின்ற நிலை என்பர். வானவெளியை ஒருகணம் உற்றுநோக்கினால் முதலில் நிழலுருவம் தோன்றிப் பின் பயிற்சி மிகுதியால் அது தன்னிற் கரைந்து அழிந்துவிடும். நீரில் தோன்றும் நீர்க்குமிழ் நீரில் கரைவது போன்று இவ்வுடலும் அண்டத்திலுள்ள மெய்யாகிய தத்துவங்களின் இனமாகத் தோன்றுவதால் அவ்வவ் மெய்கள் அவ்வவற்றோடு சேர்ந்துவிடும். அதன்பின் உயிர் திருவருளோடு கலந்துவிடும். கற்பூரம் எரியும்போது அது பற்றுக்கோடுள்ள பருப்பொருளாகத் தோன்றுகிறது. எண்ணெயும் திரியும் எரியும்போது திரி பற்றுக்கோடாகவும் எண்ணெய் அதன் சார்பாகவும் எரிவதால் திரியின் எச்சம் தென்படுகிறது. ஆனால் அவ்வெண்ணெய் தனியாக எரியும்போது எச்சம் காணப்படாது. அதுபோன்றதுதான் கற்பூரம் எரிவதும். அதுபோல உடம்பும் திருவருளால் நுண்தன்மைஎய்தி, நுண்மெய்க்கண் அடங்கும். அடங்கவே ஆருயிர் திருவருளில் அடங்கும். இம்மூவகை ஒப்புக்களாலும் திருவருளால் உடல் நுண்மயமாகப் பிரிந்து நுண்மெய்கண் அடங்குவதும் ஆருயிர் திருவருளில் காப்பதும் சொல்லப்பட்டது" என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**2543. உடலும் உயிரும் ஒழிவற ஒன்றிற்**
**படருஞ் சிவசத்தி தாமே பரமாம்**
**உடலைவிட் டிந்த உயிரெற்கு மாகிக்**
**கடையுந் தலையுங் கரக்குஞ் [1]சிவத்தே.**

"சிவனடியார்களே, திருவருளால் உடலும் ஆருயிரும் நீக்கமற ஒன்றியிருக்கும். அதற்குக் காரணம் அவ்வுயிர் சிவனின் திருவடியை அடைய வேண்டும் என்பதற்காகவே. தேனையும், அமுதமான பாலையும் தேக்கிலையில் கல்லை அமைத்துக் குடித்தபின் தேக்கிலையை மண்ணில் வீசிவிடுவர். அது பின் மண்ணோடு சேர்ந்துவிடும். அதுபோல உடம்பின் அகத்தே உள்ள ஆருயிரும் சிவத்தை அடைந்தபின் உடலும் மண்ணுடன் சேர்ந்துவிடும். சிவத்தை அடைந்த உயிர்க்குச் சிவமும், சிவையும் புகலிட மெய்யாகி விடும். ஆருயிர் எங்குமாய் பரம்பும் இயல்புடையது அல்ல. அது வினைக்கீடாக உடம்பினுள்ச் சென்றுவிடும். ஆற்றுநீர் பரந்து பாயும் இயல்புடையது. அதற்கு அணைகட்டினால் அது ஒரு வழிப்படும். அதுபோல அடுப்பினது புகையானது எங்கும் பரந்து செல்லும். அதற்குப் புகைக்கூண்டை அமைத்தால் அது கட்டுப்பட்டு மேல்நோக்கிச் செல்லும். அதுபோல ஆருயிரும் உடலினுள் கட்டுப்பட்டு ஒரு வழிச்செல்லும். அருளால் அதன் கட்டு அவிழ்ந்ததும் அது எங்கும் பரந்து நிற்கும். திருவருளோடு கலந்து செறிந்து எங்குமாய் நிற்கும். அது சிவனின் அடியில் ஒடுங்கும்." என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**2544. செவிமெய்வாய் கண்மூக்குஞ் சேரிந் திரியம்**
**அவியின் றியமன மாதிகள் ஐந்தும்**
**குவிவொன் றிலாமல் விரிந்து குவிந்து**
**தயிர்வொன் றிலாத சராசரத் தானே.**

“சிவனடியார்களே, செவி, மெய், வாய், கண், மூக்கு என்று சொல்லப்படும் அறிதற்கருவியாகிய புறப்பொறிகள் ஐந்தையும் கொண்டு விளங்கும் பருவுடல் வினைக்கீடாக அமைந்தது. அது அழியும் தன்மையானது. மனம், எழுச்சி, இறுப்பு என்னும் கலன்கள் மூன்றும் ஓசை, உறு, சுவை, ஒளி, நாற்றம் என்னும் தன்மாத்திரைகள் ஐந்தும், ஆகிய எட்டு உறுப்புக்களால் அமைந்தது நுண்ணுடல். இவ்வுடல் மலத்தை அகற்ற அமைந்தது. அதனால் இவ்வுடல் மலத்தேய்வின் முடிவில் அழியும் தன்மை வாய்ந்தது. அதற்கிடையில் ஊழிமுடிவு நேருமாயின் அது அழிந்துவிடும். அதனால் இறைவனைத் தொழுதல் வேண்டும். அதன்பொருட்டு மனம் குவிதல் வேண்டும். அவ்வாறு குவியாது உலகியல் பொருட்களை நாடுகிறது. அதனால் உலகில் பெரும் துன்பங்களை அடைகிறது. இவ்வுயிர் உயர்ந்த நிலையை அடைவதற்காகப் பிறந்தும், அதற்கான வழிகளை அறியாமையால் உயர்வல்லாத ஓர் அறிவு உயிராகத் துன்பப்படுகிறது.” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**2545. பரனெங்கு மாரப் பரந்துற்று நிற்குந்**
**திரனெங்கு மாகிச் செறிவெங்கு மெய்தும்**
**உரனெங்கு மாயுல குண்டு உமிழ்க்கும்**
**வரமிங்னன் கண்டியான் வாழ்ந்துற்ற வாறே.**

“சிவனடியார்களே, முழுமுதற் சிவபெருமான் எங்கும் நீக்கமற நின்று அருள்கின்றான். அவன் உயிருக்கள் உயிராக உறைந்து நிற்கின்றான். அத்துடன் உலகை ஒடுக்கிப் பின் தோற்றுவிக்கின்றான். திருவருளால் இவ் உண்மைகளை உணர்ந்து அவனது திருவடியைச் சேர்வதே உயிர்களின் கடனாகும்.” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**2546. அளந்து துரியத் தறிவினை வாங்கி**
**உளற்கொள் பரஞ்சகம் உண்ட தொழித்துக்**
**கிளர்ந்த பரஞ்சிவஞ் சேரக் கிடைத்தால்**
**விளங்கிய வெட்ட வெளியனு மாமே.**

“சிவனடியார்களே, சிவபெருமானே ஆருயிரின் செவ்வியினை அளந்தறிந்து செயலற்று நிலையாகிய துரிதநிலையில் அவ்வுயிரின் சிற்றறிவினைத் தனது முற்றறிவின்கண் அடங்குதலாகிய வாங்குதலைச் செய்வான். அதனால் அவ்வுயிரின் தூய்மையும், மெய்யறிவும், சிவநிலையும் ஒருங்கமையச் சிவபெருமான் மேலோங்கித் திகழ்வான். அதனால் அவ்வுயிர் மன்னன், மனைவி, மன்னி என்று அழைக்கப்படுவது போல பரமன் தாழ்சோர் அடிமை பரன் என அழைக்கப்படுகிறது. இந்நிலையில் அவ்வுயிர்க்கு உலக இன்பங்களை ஒழித்து விடும். இதனால் ஆருயிர் அறிவு வெளியனாவான்.” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**2547. இரும்பிடை நீரென என்னையுள் வாங்கிப்**

**பரம்பர மான பரமது விட்டே**
**உரம்பெற முப்பாழ் ஒளியை விழுங்கி**
**இருந்தஎன் நந்தி இதயத்து ளானே.**

“சிவனடியார்களே, சிவபெருமான் இரும்பிடையே சுரந்த நீர்போன்று அடிமையாகிய என்னைத் தனது திருவடிக்குக்கீழ் ஒடுக்கிக் கொண்டான். அவன் பரமாகிய மேனிலைப்பாடு அல்லது அப்பால் நிலையையும் கடத்தியருளினான். திருவடி அடிமை உரம் பெறுதற்பொருட்டு முப்பாழ் வெளியையும் ஒடுக்குவித்தருளினான். அங்ஙனம் செய்தருள்பவன் நந்தி. அவன் என்னுள்ளத்தில் உறைந்து நிறைந்து நின்றருள்கின்றான் என்று திருமூலர் கூறுகின்றார்.” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

2548. **கரியுண் விளவின் கனிபோல் உயிரும்**
**உரிய பரமுமுன் னோதுஞ் சிவமும்**
**அரிய துரியமேல் அண்டமும் எல்லாந்**
**திரிய விழுங்குஞ் சிவபெரு [1]மானே.**

“சிவனடியார்களே, யானை உண்ட விளாம்பழம் உருவம் மாறாதிருந்தாலும் அதனுள்ளே எதுவும் இராது. அதுபோல உயிரும் திருவருளும் முன்னோதும் சிவனும் அனைத்துலகங்களும் பின் ஓதும் சிவனாம் செம்பொருளினால் மாறுதல் செய்து ஒடுக்கப்படும். முன்னோதும் சிவனுக்குத் திரிபு ஆருயிர் அருள்களாகிய இவற்றுடன் தானும் செம்பொருளாய் நிற்றல். உலகிற்குத் திரிபாபது காரியப்பாட்டால் பருமையாகத் தோன்றுவது. நுண்மையாய்க் காரணத்தின் கண் ஒடுங்குவது. செம்பொருளான சிவன் ஒருபோதும் திரிபு எய்தாதவன்.” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

2549. **அந்தமும் ஆதியும் ஆகும் பராபரன்**
**தந்தம் பரம்பரன் தன்னிற் பரமுடன்**
**நந்தமை யுண்டுமெய்ஞ் ஞானநே யாந்தத்தே**
**நந்தி யிருந்தனன் நாமறி யோமன்றே.**

“சிவனடியார்களே, சிவன் எல்லாவற்றிற்கும் அந்தமாகவும் ஆதியாகவும் உள்ளவன். தன்னினின்று வெளிப்படுத்தப்படும் வழிவழியாகவுள்ள அருளாற்றல்களையும், அவ்வாற்றல்களுடன் சேர்ந்த நன்மைகளையும், தன் திருவடிக்கீழ் ஒடுக்கியருள்பவன். ஞானத்தால் அறியப்படும் ஞேயாந்தத்தில் நந்தி இருந்து அருளினான். அவ்விருப்பினை எம்மால் நுகரமுடியும். ஆனால் நுவல முடியாது” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

## 28. வாய்மை

2550. **அற்ற துரைக்கில் அருளுப தேசங்கள்**
**குற்ற மறுத்தபொன் போலுங் கனலிடை**
**அற்றற வைத்திறை மாற்றற ஆற்றிடில்**
**செற்றம் அறுத்த செழுஞ்சுட ராகுமே.**

“சிவனடியார்களே, பற்றற்றவனாகிய சிவன்மீது பற்று வைப்பதன்மூலம் ஏனைய பற்றுக்களை அகற்றலாம். இந்நெறி திருநெறியாகும். இந்நெறியாவது நமசிவய முதல் சிவசிவ ஈறாகக் கூறப்படும் நான்மைத் திருவைந்தெழுத்தும் செவியறிவுறூஉ வாகிய நல்லுபதேசங்களாகும். அம்மறையால் ஆருயிர் பொன்போல ஒளிவிடும். அவ்வேளையில் சிந்தையைச் சிவபெருமான்மீது நிறுத்துங்கள். அதனால் சமாதிநிலை கைகூடும். எல்லாத் தொடக்குகளும் அகன்று நான்மைச் சிவமறையே நற்குளிகை பொன்னார்க்க மேன்மையான சிவசிவ என வேண்டுதல் வேண்டும்” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**2551. எல்லாம் அறியும் அறிவு தனைவிட்டு**
**எல்லாம் அறிந்தும் இலாபமங் கில்லை**
**எல்லாம் அறிந்த அறிவினை நானென்னில்**
**எல்லாம் அறிந்த இறையென லாமே.**

“சிவனடியார்களே, திருவடியுணர்வு ஒருவருக்குத் திருவருளினால் கைகூடினால் அவர் இருந்த இடத்தில் இருந்து கொண்டே அனைத்தையும் காண்பர். அதை உணராதவர்கள் உலகப் பொருள்களை விரும்புகின்றனர். இதனால் எந்தப் பயனும் வந்து சேராது. அதனால் சிவனை அவனருளால் அறிந்து கொண்டால் திருவடிப்பேறு உண்டாகும். சிவனடியார்களைச் சிவனென்று எண்ணி வழிபடும் செந்நெறி முறைமையால் சிவனது திருவடியை அடையலாம்” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**2552. தானே யுலகில் தலைவ னெனத்தகுந்**
**தானே யுலகுக்கோர் தத்துவ மாய்நிற்கும்**
**வானே மழைபொழி மாமறை கூர்ந்திடும்**
**ஊனே யுருகிய வுள்ளமொன் றாகுமே.**

“சிவனடியார்களே, திருவடியுணர்வு கைவரப்பெற்ற ஒருவர் உலக முதல்வர் எனப்படுவர். அவரே உலகில் உள்ள மக்களுக்கு மெய்ப்பொருளை உணர்த்தும் மெய்மையாளராவார். செந்தமிழ் மாமறைகள் வானே பொழிவிக்கும் வண்மை வாய்ந்தவை. அம்மறையின்மூலம் திருவைந்தெழுத்தைக் கணிப்பதால் உயிர் ஒப்பில்லாச் சிவனுடன் ஒன்றாய் ஒடுங்கி விடும்” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

2553. **அருள்பெற்ற காரணம் என்கொல் அமரில்**
**இருளற்ற சிந்தை இறைவனை நாடி**
**மருளுற்ற சிந்தையை மாற்றி அருமைப்**
**பொருளுற்ற சேவடி போற்றுவர் தாமே.**

"சிவனடியார்களே, திருவருள் கைவரப் பெற்ற காரணம் என்னவென ஆராய்ந்தால் திருவருள் விளக்கால் சிந்தை இருள்கின்றபின் அவ்வுள்ளத்தின்கண் இறைவனை நாடி அதுவே விருப்பமாக இருப்பதாகும்" என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

2554. **மெய்கலந் தாரொடு மெய்கலந் தான்மிகப்**
**பொய்கலந் தார்முன் புகுதா ஒருவனை**
**உய்கலந் தூழித் தலைவனு மாய்நிற்கும்**
**மெய்கலந் தின்பம் விளைந்திடும் [1]மெய்யர்க்கே.**

"சிவனடியார்களே, சிவபெருமான் மீது மெய்யாக அன்பு பூண்டவர் மெய்கலந்தாராவர். சிவபெருமானும் அவருடன் மெய்கலந்து வெளிப்பட்டு அருளுவன். சிவனை நினையாது உலகப் பொருட்களில் பற்று வைத்தவர்கள் தமது வாழ்வைப் பாழேகழிக்கும் பொய்யராவர். இவர்கண் முன்செல்லவே அவன் கூசுவன். அத்தகைய முதல்வனான சிவன் ஆருயிர்கள் உய்தற்பொருட்டு அவற்றுடன் கலந்து பேரொடுக்கப் பெருமுதல்வனாய் நிற்கின்றனன். அவன் மெய்யடியார்களுக்கு அவர்களது மெய்யன்பில் கலந்து மாறாவின்பம் கொடுத்தருள்வன்" என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

2555. **மெய்கலந் தாரொடு மெய்கலந் தான்தன்னைப்**
**பொய்கலந் தாருட் புகுதாப் புனிதனைக்**
**கைகலந் தாவி எழும்பொழு தண்ணலைக்**
**கைகலந் தார்க்கே கருத்துற லாமன்றே**

"சிவனடியார்களே, மெய்யன்பினருடன் மெய்கலந்து விளங்குபவன் சிவன். அப்படியானவனை இடையறாது நினையுங்கள். அத்துடன் திருவைந்தெழுத்தை ஓதி அவனது திருவடியை அடையுங்கள். அவ்வாறு வாழ்வோரே அவனது திருவடியினை எய்தியோராவர்" என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

2556. **எய்திய காலத் திருபொழு துஞ்சிவன்**
**மெய்செயின் மேலை விதியது வாய்நிற்கும்**
**பொய்யும் புலனும் புகலொன்று நீத்திடில்**
**ஐயனும் அவ்வழி யாகிநின் றானன்றே.**

"சிவனடியார்களே, இளமைக்காலத்தில் இருந்தே காலையும் மாலையும் சிவனை வணங்குங்கள். அதனால் ஊழ்வினையால் வரும் துன்பங்களும், ஐம்புலன்களால் உண்டாகும் பற்றுக்களும் நீங்கும். அவை நீங்கினால் சிவன் வெளிப்பட்டருள்வன்" என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

2557. **எய்துவ தெய்தா தொழிவ திதுவருள்**

**உய்ய அருள்செய்தான் உத்தமன் சீர்நந்தி**
**பொய்செய் புலன்நெறி யொன்பதுந் தாட்கொளின்**
**மெய்யென் புரவியை மேற்கொள்ள லாகுமே.**

"சிவனடியார்களே, திருவடி மீது பேரன்பு கொள்வது காரணமாகத் திருவருள் வந்து சேரும். அதனால் நந்தியின் அருள் கிட்டும். அவனது திருவருள் பொய்ப் பொருளை உணர்த்தும். புலன்களது வாயில்கள் ஒன்பது அடைக்கப்படும். அங்ஙனம் அடைத்தால் மெய்யுயிர்ப்பு என்று சொல்லப்படும். புரவியாகிய குதிரையை மேற்கொண்டு செலுத்தும் மேன்மை உண்டாகும். அதாவது அகத்துவப் பயிற்சி உண்டாகும்" என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**2558. கைகலந் தானைக் கருத்தினுள் நந்தியை**
**மெய்கலந் தான்தன்னை வேத முதல்வனைப்**
**பொய்கலந் தார்முன் புகுதாக் புனிதனைப்**
**பொய்யொழிந் தார்க்கே புகலிட மாமன்றே.**

"சிவனடியார்களே, ஆருயிரின் நல்லொடுக்க நெறியில் உடனாய்க் கலந்து நிற்கும் கடவுளை, அன்பு நிறைந்த உள்ளத்து அவர் நினைத்தவுடன் வெளிப்பட்டருளும் நந்தியை வணங்குங்கள். அவனே மறைமுதல்வன். அவனே மெய்ப்பொருளாம் உலகியற் பொருட்களை நிலையானவை எனப்பற்றித் துன்பப்படும் நெஞ்சினராகிய பொய்கலத்தார் முன் புகுந்தறியாத புண்ணியன். அவனே இயற்கைத் தூயோன். அவன் மெயப்பொருட்களில் பற்றில்லாதவர்களுக்கே புகலிடமாவன்" என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**2559. மெய்த்தாள் அகம்படி மேவிய நந்தியைக்**
**[1]கைத்தாழ்கொண் டாருந் திறந்தறி வாரில்லை**
**[1]பொய்த்தாழ் இடும்பையைப் பொய்யற நீவிட்டங்கு**
**[1]அத்தாழ் திறக்கில் அரும்பேற தாமன்றே.**

"சிவனடியார்களே, சிவபெருமானின் திருவடியை உள்ளத்தில் இருத்துதல் யாவர்க்கும் மிகவும் எளிதான செயல். சிவனது திருவடியை நெஞ்சினுள் பதித்தால், நந்தி தேவையானவற்றை அருளுவான். நிலையாத பொருட்களைச் சேர்த்து நிறைந்துள்ளது இவ்வுடம்பு. அத்தகைய நிலையில்லாத உடம்பின் மேல்வைத்த பற்றை விட்டுவிட்டால் திருவருள் பெருகும். அதனால் திருவடி கிடைக்கும். அதுதான் கிடைத்தற்கரிய பெரும் பேறாகும்" என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**2560. உய்யும் வகையால் உணர்வினால் ஏத்துமின்**
**மெய்யன் அரனெறி மேலுண்டு திண்ணெனப்**
**பொய்யொன்று மின்றிப் புறம்பொலி வார்நடு**
**ஐயனும் அங்கே அமர்ந்துநின் றானன்றே.**

"சிவனடியார்களே, உய்யும்வழி நன்னெறி நான்மையாகும். அந்த நான்குள் அறிவாகிய உணர்வு நெறியே சிறந்தது. அந்நெறியால் சிவனை வணங்குங்கள். அதில்

சிவனின் திருவடியை அடையும் மேன்னெறி உண்டு. அத்தகைய பேறு பெற்றவர் சிவப் பொலிவாகத் திகழ்வர். அவரது உள்ளத்தில் சிவபெருமான் வெளிப்பட்டு அருள்வான்" என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**2561. வம்பு பழுத்த மலர்ப்பழம் ஒன்றுண்டு**
**தம்பாற் பறவை புகுந்துணத் தானொட்டாது**
**அம்புகொண் டெய்திட் டகலத் துரத்திடிற்**
**செம்பொற் சிவகதி சென்றெய்த [2]வாகுமே.**

"சிவனடியார்களே, நறுமலரின் வாசம் எங்கும் பரவியுள்ளதுபோல் திருவடி மலரின்கண் கற்றவர்களுள்ளும் காழில் கனியாகிய சிவம் ஒன்றுண்டு. அச்சிவப் பழத்தினை ஆருயிர் உண்ணாவண்ணம் ஊறு செய்யும் காமம் வெகுளி கடும் பற்று முதலிய பறவைகளும் அங்குள்ளன. அதனை அப்பறவைகள் உண்ணாவிடத்து திருவடியுணர்வான திருவருளின் துணைகொண்டு நுண்கணையினால் எய்தல்வேண்டும். அவ்வாறு கணைகளை எய்து துரத்தினால் சிவனிலையினை அடையலாம்" என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**2562. மயக்கிய ஐம்புலப் பாசம் அறுத்துத்**
**துயக்கறுத் தானைத் தொடர்மின் தொடர்ந்தால்**
**தியக்கஞ்செய் யாதே சிவனெம் பெருமான்**
**உயப்போ எனமனம் ஒன்றுவித் தானே.**

"சிவனடியார்களே, செந்நெறிப்படி வாழும் செம்பொருட்டுணிவினரை மயக்கும் பொருட்டு முனைந்தெழும் ஐம்புலன்களையும் அருளால் அறுத்தருள்வான் சிவன். அவனே ஆருயிரின் பிறப்பை அறுப்பவன். அவனது திருவடியை வணங்குங்கள். அப்படி வணங்கினால் ஆருயிர்களுக்கு வரும் மயக்கத்தைத் தெளிவித்து அவ்வுயிர் உய்வதற்கான வழிவகைகளைச் செய்தருளுவான்" என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**2563. மனமது தானே நினையவல் லாருக்கு**
**இனமெனக் கூறு மிருங்காய மேவல்**
**தனிவினி னாதன்பால் தக்கன செய்யில்**
**புனிதன் செயலாகும் போதப் [1]புவிக்கே.**

"சிவனடியார்களே, சிவபெருமானின் திருவடியை மறவாது நினைக்கும் திருநெறி வல்லார்க்கு அவரது தொண்டிற்குத் துணையாக இனமாக உதவுவது அவரது உடம்பேயாகும். அவ்வுடம்பைச் சிவபெருமானிடம் ஒப்படைத்தல் வேண்டும். அதுதான் தக்கோர் செய்யும் தவமாகும். அத்தவத்தினைச் செய்து வந்தால் சிவன் தனது திருவடியுணர்வான அறிவு நிலத்தில் உய்ந்து போகுமாறு அருள்வான்" என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

## 29.ஞானி செயல்

**2564. முன்னை வினைவரின் முன்னுண்டே நீங்குவர்**

**பின்னை வினைக்கணார் பேர்ந்தறப் பார்ப்பர்கள்**
**தன்னை யறிந்திடுந் தத்துவ ஞானிகள்**
**நன்மையில் ஐம்புலன் நாடவி [1]னாலன்றே.**

“சிவனடியார்களே, ஞானமெய்ந்நெறிதான் யார்க்கும் நமசிவய என்னும் சொல். அதனால் அந்நெறிப்படி வாழ்வதே ஆருயிரின் அருங்கடனாகும். அப்படி வாழ்பவர்களுக்கு ஊழிவினை உடலோடு சேர்ந்து அழியும். அதற்குக் காரணம் அவர்கள் இடையறாது திருவைந்தெழுத்தை ஓதுவதே. திருவருளால் வரும் திருவடியுணர்வு ஊழ்வினையை ஆருயிரின்மீது படியவிடாது. ஊழை வெல்ல முடியாது என்றும் கொள்கை பீழைப்பிழைப்பாடுடையது என்பதை உணர்த்தவும், தாளாண்மையிற் தலைநிற்கும் சிவனடியார்க்கு மட்டும் முடியும் என்பதை நாட்டிற்குக் கூரான அம்பானது உளத்துள்புகாது உடம்பில்பட்டு மீள்வது ஊழும் மீளும் என்பதில் இருந்து அறிந்து கொள்ளலாம். ஊழை செல்ல விரும்புவோர் ஐந்தெழுத்தை முறைப்படி ஓதுதல் வேண்டும். மேலும் பாடம் படியாத மாணவர்களை அச்சுறுத்துவதற்காகப் பிரப்பங் கோலைக் கையில் ஆசிரியர் வைத்திருப்பார். அக்கோல் படிப்பவர்களை அச்சுறுத்தாமையும் இதற்கு ஒப்பாகும். சூரிய ஒளிமூலம் தன்னையும், பிறவற்றையும் காண்பதுபோலவே திருவடியுணர்வுள்ளவர்கள் சிவபெருமானைக் கண்டபின்பு தம்மைக் காண்பர்” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**2565. தன்னை யறிந்திடுந் தத்துவ ஞானிகள்**
**முன்னை வினையின் முடிச்சை யவிழ்ப்பர்கள்**
**பின்னை வினையைப் பிடித்துப் பிசைவர்கள்**
**சென்னியில் வைத்த சிவனரு [1]ளாலன்றே.**

“சிவனடியார்களே, ஆருயிருக்கு இருவினையொப்பும் மலமும் அகன்றபின்பு திருவருள் வீழ்ச்சியடையும். அருள்வீழ்ச்சியினைச் சத்திநிபாதம் என்பர். இவ்வீழ்ச்சியைச் சென்னியில் வைத்த திருவருள் என்பர். திருவடியுணர்வு பெற்ற தத்துவஞானிகள் எஞ்சுவினையின் முடிச்சை அவிழ்த்து விலக்குவர்” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**2566. மனவாக்குக் காயத்தால் வல்வினை மூளும்**
**மனவாக்கு நேர்நிற்கில் வல்வினை மன்னா**
**மனவாக்குக் கெட்டவர் வாதனை தன்னால்**
**தனைமாற்றி யாற்றத் தகுஞானி [2]தானே.**

“சிவனடியார்களே, உள்ளம், உரை, உடல் என்ற மூன்றும் மனம், வாக்கு, காயம் எனப்படும். இவை மூன்றும் சிவநினைவின்றிச் செயல்படுமானால் பவவினை உண்டாகும். அதனால் பிறப்புக்கள் தொடரும். அவை மூன்றும் சிவநினைவுடன் செயற்பட்டால் வெயிலைக்கண்ட பனியைப்போல அழிந்துவிடும். அகத்துவப் பயிற்சியாகத் தன் முனைப்பை மாற்றி அருள்முனைப்பாகத்

திருவடியுணர்வுள்ளோர் மாற்றுவர். அவர்கள் தத்துவஞானியாவர்" என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**2567. நிற்ற லிருத்தல் கிடத்தல் [1] நடையோடல்**
**பெற்றவக் காலுந் திருவருள் பேராமற்**
**சற்றியன் ஞானந்தத் தானந்தந் தங்கவே**
**உற்ற பிறப்பற் றொளிர்ஞான நிட்டையே.**

"சிவனடியார்களே, நிற்றலும், இருத்தலும், கிடத்தலும், நடத்தலும், ஓடலும் செய்யும்போது திருவருளின் நினைவோடு செய்தல் வேண்டும். இயற்கை மெய்யுணர்வுள்ளவர்களுக்குச் சிவபெருமான் திருவருளைத் தந்தருளுவான். அதனால் அவனை அந்தம் என்பார்கள். ஆருயிர் அந்தமாகிய தன்பால் தங்கி அருளினால் பிறப்பற்று ஞானநிட்டையினைப் பெற வேண்டும் என்பதே அவனது விருப்பமாகும்" என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

## 30 அவாவறுத்தல்

**2568. வாசியு மூசியும் பேசி வகையினால்**
**பேசி யிருந்து பிதற்றிப் பயனில்லை**
**ஆசையும் அன்பும் அறுமின் அறுத்தபின்**
**ஈசன் இருந்த இடம்எளி தாகுமே.**

"சிவனடியார்களே, வாசியாகிய உயிர்ப்பும், ஊசியாகிய நடுநாடியும் அவற்றின் தன்மைகளும் பயனும் பயிற்சியும் பேசுவதால் பயனில்லை. தாமே வாழவேண்டும் என்ற ஆசையையும், தம்மை மதிக்க வேண்டும் என்ற செருக்கையும் அறுத்தல் வேண்டும். அறுத்தபின் சிவனை அடைதல் எளிது. உள்ளத்தை அன்பால் தூய்மைப்படுத்தி அருளினால் ஒளிரச் செய்தால் சிவன் விருப்புடன் வந்தமர் வான்" என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**2569. மாடத்து ளானலன் மண்டபத் தானலன்**
**கூடத்து ளானலன் கோயிலுள் ளானலன்**
**வேடத்து ளானலன் வேட்கைவிட் டார்நெஞ்சில்**
**மூடத்து ளேநின்று முத்திதந் [1]தானன்றே.**

"சிவனடியார்களே, பற்றுக்களை விட்டவர்களின் நெஞ்சின் உள்ளே மகிழ்வுடன் அமர்ந்திருக்கும் சிவபெருமான் திருவடிப்பேற்றை அருளுவான். அங்ஙனம் அருள்வதற்கான வாயில்கள் சிவப்பொலிவு மிக்க மாடங்கள், மண்டலங்கள், கூடங்கள், கோவில்கள், வேடங்களாகும். இவை அனைத்தும் அவனை நினைவூட்டும் கருவிகளான நூல் போன்றன" என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**2570. ஆசை யறுமின்கள் ஆசை யறுமின்கள்**
**ஈசனோ டாயினும் ஆசை யறுமின்கள்**
**ஆசை படப்பட ஆய்வருந் துன்பங்கள்**
**ஆசை விடவிட ஆனந்த மாகுமே.**

“சிவனடியார்களே, ஆசைகளை அறுங்கள். ஆசைகள் உண்டாக உண்டாகப் பெரும் பெரும் துன்பங்கள் வந்து சேரும். ஆசையை விட்டொழிந்தால் பெரும் பெரும் இன்பங்கள் வந்தடையும்” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**2571. அடுவன பூதங்கள் ஐந்தும் உடனே**
**படுவழி செய்கின்ற பற்றற வீசி**
**விடுவது வேட்கையை மெய்ந்நின்ற ஞானந்**
**தொடுவது தம்மைத் தொடர்தலு மாமே.**

“சிவனடியார்களே, பூதங்கள் தம்முள் ஒன்றோடொன்று மாறுபட்டு ஒன்றை ஒன்று அழிக்கும் தன்மை வாய்ந்தவை. அப்பூதங்களால் விளைவதும், வேறுபடுவதும் ஆகிய ஊண், உடை, உறையுள், உறை முதலியவற்றில் கொண்டுள்ள பற்றுக்களை அறவே அகற்றி எல்லாவகையான வேட்கைகளையும் விடுவதே மெய்நெறியாகும். மெய்மையான திருவடியுணர்வைப் பெறுவதே சிறப்பானது. அவ்வுணர்வு ஆருயிரைத் திருவடியில் அமர்த்தும்” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**2572. உவாக்கடல் ஒக்கின்ற வூழியும் போன**
**துவாக்கட லுட்பட்டுத் துஞ்சினர் வானோர்**
**அவாக்கட லுட்பட் டழுந்தினர் மண்ணோர்**
**தவாக்கடல் ஈசன் தரித்துநின் றானே.**

“சிவனடியார்களே, பௌர்ணமியின்போது கடல் அலைகள் அளவின்றிப் பொங்கி உலகினை அழித்த நீரூழிகள் பல அழிந்தன. இதைக் கடலூழி என்பர். தேவர்கள் முதலானோர் இன்ப துன்பக்கடலில் மூழ்கி, அழிந்து போயினர். மண்ணில் வாழ்வோர் அவாக்கடலுள் அழுந்தி பிறப்புக்களை எடுத்துத் துன்பப்படுகின்றனர். சிவபெருமான் என்றும் அழிவில்லாத அருட் கடலுட் தங்கி நிற்கின்றான்” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**2573. நின்ற வினையும் பிணியும் நெடுஞ்செயல்**
**உன்தொழி லற்றுச் சுத்தம தாகலும்**
**பின்றைங் கருமமும் பேர்த்தருள் நேர்பெற்றுத்**
**துன்ற அழுத்தலும் ஞானிகள் தூய்மையே.**

“சிவனடியார்களே, நெடுநாட்களாக நீங்காது நிற்கும் இரு வினைகளும், மும்மலப்பசையும் தொடர்ந்து வராதிருக்க வேண்டுமானால் தியானம் செய்தால் திருவருளால் ஆருயிர் தூய்மையடையும். அதன்பின் ஐம்புல ஆசைகளும் அறும். அதன்பின் திருவருள் வெளிப்படும். அத்திருவருள் ஆருயிரைத் தன்னுடன் சேர்த்துக் கொள்ளும். அதனால் ஆருயிர் திருவடியுணர்வைப் பெறும். அந்த நிலைதான் சிவஞானநிலை. அவர்கள்தான் ஞானிகள். அந்தநிலையை மெய்யுணர்வுத் தூய ஞானநிலை என்பர்” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**2574. உண்மை யுணர்ந்துற ஒண்சித்தி முத்தியாம்**
**பெண்மயல் கெட்டறப் பேறட்ட சித்தியாந்**
**திண்மையின் ஞானி சிவகாயங் கைவிட்டால்**
**வண்மை யருள்தான் அடைந்தன்பில் ஆறுமே.**

“சிவனடியார்களே, திருவடியுணர்வாகிய உண்மையினைத் திருவருளால் உணர்ந்து நன்னெறியில் வாழ்ந்தால் முத்தி கிட்டும். பொண்மயக்கம் நீங்கினால் அட்ட சித்தியாகிய பேறு கிடைக்கும். நல்லவர்கள் தாம் ஒடுங்கி நிற்பதாகிய சிவதுரியத்தைக் கைவிட்டால் திருவருள் கைகூடும். அதனால் ஆருயிர் திருவடியுணர்வில் அழுந்தும். அவ் அன்பிலே இன்புற்றமையும் திண்மை வைராக்கியமாகும்” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**2575. அவனிவன் ஈசனென் றன்புற நாடிச்**
**சிவனிவன் ஈசனென் றுண்மையை யோரார்**
**பவனிவன் பல்வகை யாமிப் பிறவி**
**புவனிவன் போவது பொய்கண்ட [1]போதே.**

“சிவனடியார்களே, தாம் சிவனாகத் திருவடியுணர்வால் திருநீறு இடுவர். அவரைச் சிவனாகவே மெய்யன்பினர் எண்ணுவர். அம்முறையில் ஆருயிராகிய இவன் அவனாகிய முறையால் இவனை ஆண்டானாகிய ஈசனென்று அன்புடன் வணங்குவர். அவ் வகையாக நாடிச் சிவனே இவன். இவனே ஆண்டான். இவ் உண்மையை அருளால் உணரல் வேண்டும். இவ் உண்மையை உணராதவர்கள் பிறவிகளுக்காளாவார். உலகின் பொய்யான நிலையை அருளால் உணர்ந்தால் பல்வேறு புவனங்களில் போய்ப் பிறக்க நேரும். வினைகள் யாவும் அகன்று விடும்” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**2576. கொதிக்கின்ற வாறுங் குளிர்கின்ற வாறும்**
**பதிக்கின்ற வாறிந்தப் பாரக முற்றும்**
**விதிக்கின்ற ஐவரை வேண்டத துலகம்**
**நொதிக்கின்ற காயத்து நூலொன்று மாமே.**

“சிவனடியார்களே, சிவபெருமான் உலகங்களையும், உடல்களையும் படைத்தருளலை கொதிக்கின்றவாறு என்றும், அப்பொருட்களைக் காத்தருளலைக் குளிர்கின்றவாறு என்றும், அழித்தருளலைப் பதிக்கின்றவாறு என்றும் சொல்வர். ஆருயிர்களின் உணர்வின் மாட்டுச் செய்யப்படும் மறைத்தல் அருளலோடு கூடிய ஐந்தொழில்களையும் அயன், அரி, அரன், ஆண்டான், அருளோன் என அழைக்கப்படும் ஐவரும் செய்வர். அருளாளர்கள் இவ் ஐவரையும் ஒருபோதும் விரும்பமாட்டார்கள். ஐவரையும் விரும்புவோருக்குப் படைக்கப்பட வேண்டிய உடம்பிற் புகுவதற்குக் காரணமாகிய வினையை நூல் என்று கூறுவர். ஏனெனில் வினைத்தொடர்பு நேர்மை செய்யும் நூல்போல இருப்பதால் இப் பெயர் வந்தது” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

## 31. பத்தியுடைமை

**2577. முத்திசெய் ஞானமுங் கேள்வியு மாய்நிற்கும்**
**அத்தனை மாயா அமரர் பிரன்தனைச்**
**சுத்தனைத் தூய்நெறி யாய்நின்ற சோதியைப்**
**பத்தர் பரசும் பசுபதி தானென்றே.**

“சிவனடியார்களே, வீடுபேற்றினைத் தரும் திருவடியுணர்வாகவும், அவ்வுணர்வினைத்தரும் திருவைந்தெழுத்து மறையாகவும் நிற்பவன் சிவபெருமான். அவனே அனைத்து உயிர்களுக்கும் அத்தனுமாவான். அவனே வானவர் தலைவனுமாவான். அவன் இயல்பாகவே தூயோன். அத்துடன் என்றும் மங்காத அறிவுப் பேரொளியுமாவான். அவனே மெய்யன்பர்களால் போற்றிப் புகழ்ந்து வழிபடும் பசுபதியுமாவான்” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**2578. அடியார் அடியார் அடியார்க் கடிமைக்கு**
**அடியனாய் நல்கிட் டடிமையும் பூண்டேன்**
**அடியார் அருளால் அவனடி கூட**
**அடிய னிவனென் றடிமைகொண் டானே.**

“சிவனடியார்களே, சீலம், நோன்பு, செறிவு என்னும் முத்திறப் பாகுபாடுள்ள மெய்யடியார்க்குத் திருவருளால் அடிமையாகும் தன்மை உண்டாகும். இது அறிவு நெறியாகும். அத்தகைய சிவனடியார்க்கும் அடியேன் திருவருளால் அடிமையானேன். அதனால் சிவபெருமானின் திருவடியைக் கூடும்பேறு பெற்றேன். பெற்றதும் சிவபெருமான் இவன் எனது அடிமை என்று நினைத்து என்னை அடிமையாக்கிக் கொண்டான் என்று திருமூலர் கூறுகின்றார்” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**2579. நீரிற் குளிரும் நெருப்பினிற் சுட்டிடும்**
**ஆரிக் கடனந்தி யாமா றறிபவர்**
**பாரிற் பயனாரைப் பார்க்கிலும் நேரியர்**

**ஊரில் உமாபதி யாகிநின் றானன்றே.**

“சிவனடியார்களே, மெய்யடியார்க்குச் சிவபெருமான் நீரிலும் பார்க்கத் தண்ணியராய்க் குளிர்ந்து இன்பமளிப்பான். தன் முனைப்புடன் தீயவழியில் வாழ்வோருக்குத் தீயைப்போல வெம்மையான துன்பங்களைக் கொடுத்தருள்வான். அவ்வாறு நடந்து கொள்வது திருவடியின்பத்தினைக் கொடுப்பதற்காகவே. அத்தகைய நடுநிலை நின்று அருளுபவனான நந்தியை நாமாகவே அறிந்து கொள்ள முடியும். இதைத் திருவருளுள்ளவர்களால் தான் அறிந்து கொள்ள முடியும். உலகனைத்தையும் நன்னெறிப்படுத்தும் நாடு தென்னாடாகும். அதுவே பொன்நாடாகும். அந்நாடு திருவூர் என்று அழைக்கப்படும். அத்தகைய திருவூரில் அம்மையப்பராக இருப்பவன் சிவன்” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

2580. **ஒத்துல கேழும் அறியா ஒருவனென்று**
**அத்தன் இருந்திடம் ஆரறி வார்சொல்லப்**
**பத்தர்தம் பத்தியிற் பாற்படில் அல்லது**
**முத்தினை யார்சொல்ல முந்துகின் றாரன்றே.**

“சிவனடியார்களே, எழு உலகங்களில் வாழ்பவர்களும் ஒன்று சேர்ந்தாலும், ஏழு உலகங்கள் முழுவதிமாயினும் அறிதற்கு அரியவன் சிவன். அவன் ஒருவன். அவனே அத்தன். அவன் மறைந்து நின்றருளும் மாண்பினன். அத்தகையவனை உள்ளவாறு அறிந்து சொல்லக்கூடியவர்கள் யார்? ஒருவரும் இல்லை. அவன் மெய்ப்பக்தர்களது பக்தியில் விளங்குபவன்” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

2581. **ஆன்கன்று தேடி யழைக்கு மதுபோல்**
**நான்கன்றாய் நாடி யழைத்தேனென் நாதனை**
**வான்கன்றுக் கப்பாலாய் நின்ற மறைப்பொருள்**
**ஊன்கன்றா னாடிவந் துள்புகுந் தானன்றே.**

“சிவனடியார்களே, பசுக்கன்று தன் தாயை நினைத்து ‘அம்மா’ என்று அழைப்பது போன்று அடியேனும் கன்றைப்போலப் பாசத்துடன் கனிந்து சிவனை அழைத்தேன். அவனும் பாசமிகுதியோடு என்னைத்தேடி வந்தான் என்று திருமூலர் கூறுகிறார்” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

2582. **பெத்தத்துந் தன்பணி இல்லை பிறத்தலான்**
**முத்தத்துந் தன்பணி இல்லை முறைமையால்**
**அத்தற் கிரண்டும் அருளால் அளித்தலாற்**
**பத்திப்பட் டோர்க்குப் பணியொன்றும் [2] இல்லையே.**

“சிவனடியார்களே, ஆருயிர்கள் கட்டுநிலையில் அருள்வழியொழுகி இணைபணி புரிகின்றன. அப்போது அப்பணி சிவப்பணியாக மாறும். பெற்றோரின் வழிப்பிள்ளைகளும், கற்பிப்பார் வழி கற்பாரும், முதியோர் வழி இளைஞரும், மருத்துவன் வழி நோயாளரும், தெய்வத்தின் வழி தெய்வமுற்றோனும் இன்னும் இவர்கள் போன்ற பிறரும் தொழுது வணங்கும் செம்மை இதனை வலியுறுத்தும். ஒட்டுநிலையாகிய திருவடிப் பேற்றின்கண் ஆருயிர்களின் அறிவு, அன்பு, ஆற்றல் ஆகிய மூன்றும் சிவனை நோக்கிச் செல்லும். அச்சிவத்தின்மீது செலுத்தும் அன்பு காரணமாக அழிவில்லாத இன்பம் கிடைக்கும். இந்நிலையில் ஆருயிரின் அறிவு முற்றறிவாகத் திகழும். அதனால் ஆருயிர் செய்யும் பணிகள் திருப்பணிகளாக மாறும். அதன்பின் அவர்களுக்குப் பணி என்று எதுவும் இல்லை. இதுவே மெய்ப்புணர்ப்பின் மெயப்பொருளாகும்” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**2583. பறவையிற் கற்பமும் பாம்புமெய் யாகக்
குறவஞ் சிலம்பக் குளிர்வரை யேறி
நறவார் மலர்கொண்டு நந்தியை யல்லால்
இறைவனென் றென்மனம் ஏத்தகி [1]வாவே.**

“சிவனடியார்களே, ஆருயிரின் உடல் பறவை என்று சொல்லப்படும். அவ்வுடலை நெடுநாள் வாழவைக்கச் சிலர் காயகற்பம் தேடி அலைவர். பாம்பு என்று உருவகிக்கப்படும் குண்டலினியும், உயிர்ப்பும் பயிற்சியால் உண்டாகும் பத்து வகையான இன்னிசையும் அகத்தே முழங்கும். அம் முழக்கத்தினூடே குளிர்வரையாகிய அமிழ்த ஊற்று பெருகும். அது புருவநடுவின் கண் ஏறுதல் வேண்டும். ஏறித்தினமும் திருவடித்தேனை இடைவிடாது பருகிக்கொண்டே இருத்தல் வேண்டும். அத்துடன் ஐந்து எழுத்தை ஓதுதல் வேண்டும். அப்போது நந்தியை அல்லாது எனது மனம் வேறெதையும் நாடாது என்று திருமூலர் கூறுகிறார்” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**2584. உறுதுணை நந்தியை உம்பர் பிரானைப்
பெறுதுணை செய்து பிறப்பறுத் துய்ம்மின்
செறிதுணை செய்து சிவனடி சிந்தித்து
உறுதுணை யாயங்கி யாகிநின் றானே.**

“சிவனடியார்களே, வாழ்க்கையில் உறுதுணையாக நின்று ஆருயிருக்கு நன்மை செய்பவன் நந்தி. அவனே தேவர்களின் தலைவன். அவனது திருவடிப் பேறாகிய எட்டுநிலையை அடைவதற்கு அவனது திருவருளையே துணையாகக் கொள்ளுதல் வேண்டும். இது கதிரவனை அவனது கதிர்கள் மூலம் காணுவதை ஒக்கும். ஆருயிர்க்கு என்றும் நெருங்கிய துணையாக இருப்பது திருவருள். அதனால் திருவருளை நாடி

நில்லுங்கள். திருவடியை வணங்குவதால் அவன் சிறந்த துணையாக என்றும் நிற்பான்" என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**2585. வானவர் தம்மை வலிசெய் திருக்கின்ற**
**தானவர் முப்புரஞ் செற்ற தலைவனைக்**
**கானவன் என்றுங் கருவரை யானென்றும்**
**ஊனத னுள்நினைந் தொன்றுபட் டாரன்றே**

"சிவனடியார்களே, அருளால் பெற்ற உயர்ந்த பண்புகளை உடையவர் வானவர். பொருளால் உண்டான மருளான பண்புகளை உடையவர்கள் தானவர். வானவர்களைத் துன்புறுத்தும் தானவர்கள் முப்புரத்தாராவர். அவர்கள் வாழும் முப்புரங்களையும் சிரித்து எரித்தவன் சிவன். அவனே முழுமுதல்வன். அவனை வேடர்கோன் என வழிபடுவோமாக. அவ்வாறு வழிபடுவோரது உடம்பிலும், உயிரிலும் திடம்பட வீற்றிருந்து ஆள்பவன் சிவன். அவனை வழிபடுவோர் அவனுடன் ஒன்றுபட்டு இறவா இன்பத்தைப் பெறுவர்" என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**2586. நிலைபெறு கேடென்று முன்னே படைத்த**
**தலைவனை நாடித் தயங்குமென் உள்ளம்**
**மலையுளும் வானகத் துள்ளும் புறத்தும்**
**உலையுளும் உள்ளத்து மூழ்கிநின் றேனே.**

"சிவனடியார்களே, உலக உயிர்கள் இன்பமடைவதற்காக மாயையில் இருந்து உலகத்தைப் படைத்தவன் சிவன். அவன் உலகங்களைப் படைத்தன்றே அவை இத்தினை காலம் நிலை பெறுக என்றும், பின் நிலை மாறிக் காரணத்தினால் உறுக என்றும் ஆணை பிறப்பித்தான். அத்தகைய சிவனை மலையுள்ளும் நாடினேன், வானகத்தும் நாடினேன், பிற இடங்களிலும் நாடினேன். அவனை அன்பர்களின் அகத்துள்த்தான் உண்மையான வடிவில் காணமுடியும். அங்ஙனம் கண்டு அவனது திருவடியைச் சார்ந்தேன். அவனைப் புறத்தே காண்பது அவனது சார்பு வடிவமாகும். அகமாகிய உணர்வில் காண்பதே அவனது உண்மையான வடிவமாகும்" என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

## 32. முத்தியுடைமை

**2587. முத்தியில் அத்தன் முழுத்த அருள்பெற்றுத்**
**தத்துவ சுத்தி தலைப்பட்டுத் தன்பணி**
**மெய்த்தவஞ் செய்கை வினைவிட்ட மெய்யுண்மைப்**
**பத்தியி லுற்றோர் பரானந்த போதரே**

“சிவனடியார்களே, ஒட்டாகிய வீடுபேறு முத்தி எனப்படும். அங்கு சிவபெருமானின் முழுமையான திருவருளைப் பெற முடியும். அதனால் முப்பத்தாறு மெய்களும் எமக்கு வேறானவை எனவும், கருவி எனவும், அவை ஆண்டவனின் உரிமை எனவும், மீண்டும் அதன்பால் வருதல் வேண்டத்தகாதது எனவும் அருளால் உணர்ந்து உண்மையை உணரல் தத்துவ சுத்தியாகும். அந்நிலைக்குட்பட்டோர் செய்வதெல்லாம் சிவப்பணியாகும். அப்பணியே மெய்த்தவமாகும். அதனால் இருவினைகளும் அகலும். அதனால் உண்மையான பக்தி உண்டாகும். அத்தகையோர் பேரின்பப் பேரறிவினர் ஆவர்” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**2588. வளங்கனி தேடிய வன்றாட் பறவை**
**உளங்கனி தேடி யுழிதரும் போது**
**களங்கனி யங்கியிற் கைவிளக் கேற்றி**
**நலங் கொண்ட நால்வரும் நாடுகின் றரே.**

“சிவனடியார்களே, ஆருயிர்களை வலிய இருபெரும் தாள்களையுடைய அரிய பறவையாக உருவகம் செய்தனர். இரு கால்கள் என்பது உழைப்பும் ஒடுக்கமும் ஆகும். வளப்பமிக்க திருவடிப்பேறாகிய கனியைத் தேடிய ஆருயிர்கள் உள்ளம் கனிந்து ஓவாது திரியும். அவ்வாறு திரியும்போது காமவசப்பட்டு விட்டில் பூச்சியின் நிலையை அடைந்து பின் இழவினைத் தரும் விளக்கினைப்போல் வருத்தம் கொடுக்கும் உலகப் பற்றாம் கைவிளக்கினை ஏற்றி எண்ணம், மனம், இறுப்பு என்னும் அந்தக்கரணங்கள் அவ்வுயிரைத் தன்வழிக்கு இழுக்க நாடுகின்றன” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

## 33. சோதனை

**2589. பெம்மான் பெருநந்தி பேச்சற்ற பேரின்பத்து**
**அம்மா னடிதந் தருட்கடல் ஆடினோம்**
**எம்மாய மும்விடுத் தெம்மைக் கரந்திட்டுச்**
**சும்மா திருந்திடஞ் சோதனை யாகுமே.**

“சிவனடியார்களே, சிவனே நந்தியாவான். பேரின்பத்தைத் தரும் அம்மானும் அவனே. அவனருளால் எல்லாவகையான மாயமருள்களும் அதற்கு ஆக்கம் தரும் இருவினைகளையும் யாம் எனது என்னும் பற்றுக்களையும் அகற்றினேன். அதனால் எம்மை கனம்திட்டனம் என்றனர். அதனால் என் உயிர் சும்மா இருக்கின்றது. செயலொழிவு பெற்று இருக்கும் இடமே திருந்திய இடமாகும். இதனை அறுவழி ஆய்வு என்பர். அதனை அத்துவ சோதனை என்றும் சொல்லலாம்” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**2590. அறிவுடை யானரு மாமறை யுள்ளே**
**செறிவுடை யான்மிகு தேவர்க்குந் தேவன்**
**பொறியுடை யான்புலன் ஐந்துங் கடந்த**

**குறியுடை யானொடுங் கூடுவன் நானே.**

“சிவனடியார்களே, உண்மைப் பேரறிவுடைய சிவன் அருமறையாகிய திருவைந்தெழுத்தில் நிறைந்துள்ளான். அவன் புண்ணிய வடிவினவன். அவனின் திருவடியின்கண் திருவருளால் அடியேன் அன்பால் கூடியின்புறுகிறேன் என்று திருமூலர் கூறுகிறார்” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

2591. **குறியாக் குறியினிற் கூடாத கூட்டத்து**
**அறியா அறிவில் அவிழ்ந்தேக சித்தமாய்**
**நெறியாம் பராநந்தி நீடருள் ஒன்றுஞ்**
**செறியாச் செறிவே சிவமென லாமே.**

“சிவனடியார்களே, மறவர் நினைவாய், மலரும் மணமும் போன்று ஓர் இடம் புணர்ப்பாய், ஒருணர் நினைவாய், ஓய்வில்லா உணர்வாய், மெயப்புணர்வாய் நன்னெறி நிற்கும் பெரும் பொருளான நந்தியை உணர்ந்தேன். உணர்ந்ததும் அவனது அழிவில்லாத திருவருள் என்னை வந்து அடைந்தது. அதனால் வேறறப்புணரும் புணர்ப்பாய்ப் புணர்ந்தேன். அப்புணர்ப்பின் மணத்தால் சிவம் என்னும் திருப்பெயரைப் பெற்று உய்ந்தேன். என்று திருமூலர் கூறுகிறார்” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

2592. **காலினில் ஊறுங் கரும்பினிற் கட்டியும்**
**பாலினுள் நெய்யும் பழத்துள் இரதமும்**
**பூவினுள் நாற்றமும் போலுஎன் எம்மிறை**
**காவலன் எங்குங் கலந்துநின் றானன்றே.**

“சிவனடியார்களே, காற்றினில் உண்டாம் ஊறும், கரும்பினில் உண்டாகும் கட்டியும், பாலினுள் உண்டாகும் நெய்யும், பழத்தினில் உண்டாகும் சுவையும், பூவினில் உண்டாகும் மணமும் போலப் பிரிவற நின்று அருளுபவன் சிவபெருமான். அவனே அனைத்து உயிரினங்களுக்கும், உலகங்களுக்கும் நீங்காத காவலன். அவன் அகல் நிறைவாகவும், ஆருயிர்கள் அமைதி நிறைவாகவும் அமையுமாறு கலந்து நிற்பவன்” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

2593. **விருப்பொடு கூடி விகிர்தனை நாடிப்**
**பொருப்பகஞ் சேர்தரு பொற்கொடி போல**
**விருப்பர் மனத்திடை எங்கள் பிரானார்**
**நெருப்புரு வாகி நிகழ்ந்துநின் றாரே.**

“சிவனடியார்களே, சிவபெருமானை நற்றவத்தால் நாடுதல் வேண்டும். நாடி நலம்பெறவெனத் திருவருளம்மை அருள் செய்வாள். அவள் மேரு மலையில் தனித்துத் தவம் புரிந்தவள். அதனால் அவளைச் சிவபெருமான் திருமணம் புரிந்தவர். தனது

திருமேனியில் ஒரு பாகத்தில் அமர்த்தினார். அவரும் அம்மையும் ஒன்றாய் வேறாய் உடனாய் நின்று அருளுகின்றனர். ஆருயிர் பெண்மைத் தன்மை எய்துவது ஆண் என்பதில் இருந்து ஒரு மாத்திரை குறைவானது" என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**2594. நந்தி பெருமான் நடுவுள வியோமத்து**
**வந்தென் அகம்படி கோயில்கொண் டான்கொள்ள**
**எந்தைவந் தானென் றெழுந்தேன் எழுதலுஞ்**
**சிந்தையி னுள்ளே சிவனிருந் தானன்றே.**

"சிவனடியார்களே, நந்தியெம்பெருமானாகிய சிவபெருமான் உறக்கத்து எழுந்தருளிவந்து அடியேனது அகத்தைக் கோவிலாக்கிக் கொண்டான். அடியேன் திருவிளக்கேற்றியதும், திருமனை புகுவார் போன்று எந்தை வந்தானென்று திருவருளால் உணர்ந்து நெல்லும் மலரும் இட்டுத் தொழுதேன். தொழுதவுடன் சிவபெருமான் நிலையாக இருந்து கொண்டான் என்று திருமூலர் கூறுகிறார்" என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**2595. தன்மைவல் லோனைத் தவத்துள் நலத்தினை**
**நன்மைவல் லோனை நடுவுறை நந்தியைப்**
**புன்மைபொய் யாதே புனிதனை நாடுமின்**
**பன்மையில் உம்மைப் பரிசுசெய் வானன்றே.**

"சிவனடியார்களே, உண்மை அறிவும், இன்பப்பண்பும் உள்ள தன்மை வல்லானை, நற்றவத்துள் நடுநின்றருளும் நலத்தினை அனைத்துயிர்க்கும் அகலாது நின்று அருளால் இன்பம் அளித்து வரும் நல்லோனை, நடுநிலை குன்றாது நயம் புரிந்தருளும் நந்தியை, புன்மையும், பொய்யும் ஒரு சிறிதும் இல்லாத புனிதனை அன்புடன் தொழுங்கள். அப்படித் தொழுதால் அளவில்லாத ஆருயிர்களுள் நும்மைச் சிறப்பாகத் தெரிந்து திருவடிப்பேற்றைத் தந்தருள்வான்" என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**2596. தொடர்ந்துநின் றானென்னைச் சோதிக்கும் போது**
**தொடர்ந்துநின் றானல்ல நாதனும் அங்கே**
**படர்ந்துநின் றாதிப் பராபரன் எந்தை**
**கடந்துநின் றவ்வழி காட்டுகின் றானன்றே.**

"சிவனடியார்களே சிவகுருவாக எழுந்தருளி வந்து எனக்கெய்திய மலங்களை அழித்தபோது அச் சிவபெருமான் உடனாகும் தன்மையினால் நல்ல நாதனாகி உள்ளத்தில் நின்று அருளினான். ஒன்றாகும் தன்மையில் ஆதிப் பெரும் பொருளான அவன் நீக்கமற நிறைந்து நின்றருளினான். எந்தையாகிய அவன் பொருள்

தன்மையினால் கடந்து நின்று திருவடியைச் சேரும் அரும்பெரும் வழியைக் காட்டியருளினான் என்று திருமூலர் கூறுகிறார்” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**2597. அவ்வழி காட்டும் அமரர்க் கரும்பொருள்**
**இவ்வழி தந்தைதாய் கேளியான் ஒக்குஞ்**
**செவ்வழி சேர்சிவ லோகத் திருந்திடும்**
**இவ்வழி நந்தி இயல்வது தானன்றே.**

“சிவனடியார்களே, அமரர்களும் அறியமுடியாத அரும்பொருளான சிவபெருமான் திருவடிப் பேற்றிற்காக அவ்வழியினைக் காட்டியருளினான். இவ்வழியாக இவ்வுலகத்திற்கு எனக்குத் தந்தையாய் தோன்றாத்துணையாய் நின்று துணை செய்தருளுகின்றான். அவன் செம்பொருள், விழுப்பொருள் சென்று சேர்வதற்குரிய சிவபோகமாகிய அம்மைக்கண் திருத்த இருந்திடும் அரும்பொருள். இதுவே நந்திப் பெருமானின் நல்லியல்பாகும்” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**2598. எறிவது ஞானத் துறைவாள் உருவி**
**அறிவது னோடேயல் வாண்டகை யானைச்**
**செறிவது தேவர்க்குந் தேவர் பிரானைப்**
**பறிவது பல்கணப் பற்றுவி டாரே.**

“சிவனடியார்களே, மும்மலங்களையும் திருவருளாகிய உறையுள் இருக்கும் திருவைந்தெழுத்தென்ற ஞானவாளால் வெளியே எடுத்தெறிவது திருவானைப்படி வாழும் அடிமையினது தலையாய கடனாகும். எறியவே மும்மலங்களும் அஞ்சி அகலும். அதனால் திருவடி உணர்வு மேம்படும். அதனால் சிவபெருமானை அறிந்து கொள்ளலாம். அச் சிவபெருமானுடன் இரண்டறக் கலந்து செறிந்திருப்பது அவ்வழிப் பேறாகும். அப்பேறு எய்தியதும், மாயாகாரியப் பற்றுக்கள் அகன்றுவிடும்” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**2599. ஆதிப் பிரான்தந்த வாளங்கைக் கொண்டபின்**
**வேதித்து என்னை விலக்கவல் லாரில்லை**
**சோதிப்பன் அங்கே சுவடு படாவண்ணம்**
**ஆதிக்கட் டெய்வ மவனிவ னாமன்றே..**

“சிவனடியார்களே, சிவகுருவாக எழுந்தருளி வந்த சிவபெருமான் திருவைந்தெழுத்தாகிய ஞானவாளைத் தந்தருளினான். அதை உயிரிலும் மேலானதாக நினைத்துக் கைக்கொண்டேன். அந்நிலை வந்தபின் என்னைத் தீய வழியிற் செல்ல வைக்க யாரும் இல்லை. மாயாகாரியக் குற்றப்பசைகள் எவையும் நெருங்க அவன் விடமாட்டான். அவனருளால் அவனது திருவடியைச் சேரும் இவனும் அவனாவான்” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**2600. அந்தக் கருவை யருவை வினைசெய்தற்**
**பந்தம் பணியச்சம் பல்பிறப் பும்வாட்டிச்**

**சிந்தை திருத்தலுஞ் சேர்ந்தாரச் சோதனை**
**சந்திக்கத் தற்பர மாகுஞ் சதுரர்க்கே.**

“சிவனடியார்களே, தொன்றுதொட்டு பிறப்புக்கு வித்தாக இருக்கின்ற இருள் மலத்தை, அது காரணமாக வரும் மாயாகரியங்களை, அவற்றால் ஏற்படும் இருவினைத் தொக்கினை, அப்பணியால் ஏற்படும் அச்சத்தை, அவ்வச்சத்தால் வரும் பிறப்புக்களால் வரும் துன்பங்களையும் சிவகுருவானவர் திருவருளால் அகற்றுவார். அதனால் மனம் தூய்மையடையும். அதனால் திருவடியைச் சேரும் நிலை உண்டாகும். அதனால் சிவனருளால் பெருவாழ்வு உண்டாகும். அதனால் செயற்கரிய செயல்களைச் செய்யும் பெரும்பேறு கிட்டும். அதனால் அவர்கள் சதுரர் ஆகினர்” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

***எட்டாம் தந்திரம் முற்றும்.***